விழுப்புரம்
இராமசாமிப் படையாட்சியார்
மாவட்ட வரலாறு



ஆசிரியர்

கு. தாமோதரன் எம்.ஏ.,

துணை இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

சென்னை-600 113

1994

விழுப்புரம் இராமசாமிப் படையாட்சியார் மாவட்ட வரலாறு

ஆசிரியர்

கு. தாமோதரன் எம்.ஏ.,

துணை இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

சென்னை-600 113

1994

முதற் பதிப்பு-1994 (500 பிரதிகள்)
தொ. பொ. ஆ. துறை வெளியீடு எண் : 120

95482
நாகம

© தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

விழுப்புரம் இராமசாமிப் படையாட்சியார் மாவட்ட வரலாறு

ஆசிரியர்

கு. தாமோதரன், எம்.ஏ.,
துணை இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை



விலை : ரூ.

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

அணிந்துரை

விழுப்புரம் இராமசாமிப் படையாட்சியார் மாவட்டம் உருவாக்கப்-பட உள்ளது என்று தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அம்மாவட்ட வரலாறு பற்றிய நூல் வெளியிட இத்துறையால் தீர்மானிக்கப்பட்டது. முதலில் நால்வர் கொண்ட குழு அமைக்கப் பெற்று அவர்கள் நால்வரும் ஒவ்வொரு பகுதி பற்றிய செய்தியைத் தொகுத்துப் பின்னர் அனைத்தையும் ஒன்றாக வெளியிட முடிவெடுக்கப்பட்டது. இடையில் ஏற்பட்ட சில அலுவல் சூழ்நிலைகள் காரணமாக இத்துறையின் துணை இயக்குநர் திரு. கு. தாமோதரன் அவர்கள் மட்டுமே இப்பணியில் ஈடுபடும் நிலைமை ஏற்பட்டது. இவர் தாம் எடுத்துக் கொண்ட பணியைத் திறம்படச் செய்துள்ளார்.

இம்மாவட்டம், தொல்பழங்காலம், சங்ககாலம் ஆகிய காலங்களிலும்; பல்லவர், சோழர், காடவராயர், பாண்டியர், சம்புவராயர், விசயநகரர், செஞ்சி நாயக்கர், ஐரோப்பியர் ஆகியோர் காலங்களிலும் எவ்வாறு சிறப்புடன் விளங்கியது என்பதைத் தெரிவிக்கும் நூலாக வெளிக்கொணர வேண்டும் என்பது என் அவாவாக இருந்தது. பிற்பகுதியில் ஆசிரியர் செய்திகள் சிலவற்றை மேலும் சேர்த்திருக்கிறார்.

இருப்பினும், மாவட்டம் பற்றிய பல செய்திகளையும் உள்ளடக்கி இந்நூல் வெளி வருகிறது. ஆசிரியர் களப்பணியின் போது திரட்டிய செய்திகளோடு வேறு சிலரது கருத்துக்களையும் தம் நூலில் சேர்த்துள்ளார். இவர் இந்நூல் எழுதுவதற்கு உறுதுணை புரிந்த நூல்களையும் அவற்றின் ஆசிரியர்களையும் பட்டியல் இட்டு இந்நூலில் சேர்த்துள்ளார். இது வரவேற்கத் தக்கது.

தம் களப்பணியின் போது புதிதாகக் கண்டுபிடித்த சில சிற்பங்களின் படங்களையும் அவை பற்றிய வரலாற்றுக் குறிப்புக் களையும் சேர்த்திருப்பது பாராட்டுதற்குரியது.

தாம் பிறந்த மாவட்டத்தின் வரலாற்றை எழுத வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டு அதைச் செவ்வனே செய்து முடித்திட்ட ஆசிரியரை உளமார வாழ்த்துகிறேன். விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம் பற்றி அறிந்து கொள்வதற்கு இந்நூல் ஒரு துணை நூலாக ஆய்வாளர்களுக்கும் பொது மக்களுக்கும் அமையும் என்பதில் ஐயமில்லை.

அன்பன்,

நடன. காசிநாதன்

இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

ஆசிரியர் உரை

விழுப்புரம்-இராமசாமிப் படையாட்சியார் மாவட்ட வரலாறு என்ற நூலில், நூன்முகம் என்ற தலைப்பில் இந்த மாவட்டத்தின் பெயர்க் காரணம், பெயருக்கு உரியவரின் சிறப்பு, மற்றும் இம்மாவட்டத்தில் பிறந்த பெரியவர்களைப் பற்றிய சிறுகுறிப்பும், மாவட்டச் சிறப்பும் கொடுக்கப் பெற்றுள்ளன.

இந்நூலின் தொடக்கமாகத் தொல்பழங்காலம் என்ற தலைப்பு அமைந்துள்ளது. அதனை அடுத்து சங்க காலம், தொடர்ந்து பல்லவர், சோழர், காடவராயர், சம்புவராயர், விசயநகர், செஞ்சி நாயக்கர், பீஜப்பூர் சுல்தான், மராத்தியர், மொகலாயர், சிங்குகள், ஐரோப்பியர்கள் காலவரையிலான வரலாறு தரப்பெற்றுள்ளது.

இதனை அடுத்து இம்மாவட்டத்தில் உள்ள சிறப்பு வாய்ந்த கோயில்களைப் பற்றி ''வரலாறு கூறும் வண்டமிழ்த் தலங்கள்'' என்ற தலைப்பில் கூறப்பட்டுள்ளது.

இவை தவிர, பிற சமயங்களான சமணம், இசுலாமியம் கிறித்துவம் ஆகியவைகளைப் பற்றியும் அவர்களால் எடுக்கப்பெற்ற, பள்ளிகள், கோயில்கள், மடங்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் பற்றியும் எழுதி உள்ளேன். இம்மாவட்டத்தில் அமைந்துள்ள மலைகள், கோட்டைகள், ஆறுகள், ஏரிகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளேன். இதன் பின்னர், இம்மாவட்டத்தில் உள்ள வரலாற்றுச் சின்னங்கள், அரிய சிற்பங்கள், அரிய கல்வெட்டுகள், ஓவியங்கள், செப்பேடுகள் பற்றியும் குறிப்புகள் தரப்பட்டுள்ளன. பெருமுக்கல் கல்வெட்டு உள்ள பகுதி ஆசியவியல் நிறுவனத்தினரால் கண்டு பிடிக்கப்பட்டது. குறியீடு என்று அவர்கள் குறிப்பிட்டிருந்ததை இத்துறை இயக்குநர் அவர்கள் வட்டெழுத்துக் கல்வெட்டு என்று வாசித்தளித்துள்ளார்.

இக்குறிப்புக்களைக் கொண்டு இம்மாவட்டத்தின் ஒட்டு மொத்த வரலாற்றினை வாசகர்கள் அறிந்து கொள்ள முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நூலை நான் எழுதுவதற்கு என்னுடைய விருப்பத்தை இயக்குநரிடம் தெரிவித்தேன். தெரிவித்த உடனேயே எழுதுவதற்கு அனுமதியும், நூல் நல்ல முறையில் வெளியிடுவதற்கு ஊக்கமும், ஆலோசனையும் நல்கியதுடன் நல்ல முறையில் வெளிவருவதற்கு பல்லாற்றானும் உதவி புரிந்த எங்கள் துறை இயக்குநர் திரு. நடன. காசிநாதன், எம்.ஏ., அவர்களுக்கு முதற்கண் என்னுடைய பணிவு கலந்த நன்றியினை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாவட்டத்தில் திருக்கோயிலூர் வட்டம், எரளூர் என்ற கிராமத்தில் பிறந்த நான் இத்துறையில் சேர்ந்த பொழுது என்னுடைய தந்தை திரு. க. குப்புசாமி அவர்கள் இந்த மாவட்டத் தின் வரலாற்றை நல்ல முறையில் உங்கள் துறையினர் எழுதுதல் வேண்டும் என்று தன்னுடைய விருப்பத்தைத் தெரிவித்தார்கள். அவர் கூறியது என்னுடைய எண்ணத்தில் நீண்ட நாளாக ஆழப்பதிந்திருந்தது. அதன் வெளிப்பாடே இப்புத்தகம். ஆனால் அவர் இயற்கை எய்திய பின்னர் இந்நூல் வெளிவருவது அவருடைய எண்ணத்திற்கு அஞ்சலி செலுத்துவதாக அமைந்துள்ளது.

இந்த மாவட்டத்தின் வரலாற்றை இதற்கு முன்னர் பல வரலாற்று அறிஞர்கள் வேறு கோணத்தில் எழுதியிருந்தாலும், அண்மையில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையும், மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறையும், தனிப்பட்டவர்களும் கள ஆய்வு செய்து கண்டறிந்துள்ள செய்திகளையும் தாங்கி இந்நூல் வெளிவருகிறது. இந்நூலில் செப்பேடு என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள கட்டுரை, இத்துறையின் இயக்குநர் திரு. நடன. காசிநாதன், எம்.ஏ., அவர்கள் இத்துறையின் வெளியீடான 'கல்வெட்டு காலாண்டு இதழ்' — தொகுதி 37-ல் எழுதியுள்ள 'முதலாம் இராசேந்திரனின் எசாலம் செப்பேடு' எனும் கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டுள்ளது. அத்துடன் என்னுடைய தனிப்பட்ட கள ஆய்வின் போது கண்டறிந்துள்ள புதிய கண்டு பிடிப்புகளையும் இயக்குநரின் அனுமதியுடன் இந்நூலில் இணைத்துள்ளேன்.

இந்நூலில் செய்திகளை ஒழுங்கமைத்து உதவிய டாக்டர் திருமதி. நா. மார்க்சியகாந்தி அவர்களுக்கும், பிழை திருத்தி உதவிய இத்துறைக் கல்வெட்டு ஆய்வாளர் திரு. கோ. முத்துசாமி அவர்களுக்கும், புகைப்படங்களை நல்ல முறையில் எடுத்தளித்த

இத்துறையின் நிழற்படக்காரர் திரு. மு. த. ஸ்ரீதரன் அவர்களுக்கும், அட்டைப் படத்தை அழகுற அமைத்துக் கொடுத்த திரு. முரளிதரன் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்புத்தகத்தைச் சீரிய முறையில் அச்சிட்டு அளித்த அச்சுப் பிரிவு உதவிப் பணி மேலாளர் திரு. ச. செங்கல்வராயன் மற்றும் போர்மேன்கள் திருவாளர்கள் அ. அரங்கநாதன், மு. சீனிவாசன் ஆகியோருக்கும், ஏனைய அச்சுபிரிவு அலுவலர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூல் வெளி வர உதவி புரிந்த இத்துறையின் ஏனையத் தொழில் நுட்பப் பிரிவு அலுவலர்களுக்கும் நன்றி உடையேன். குறை நீக்கி நிறை கொண்டருளுமாறு வாசகர்களை அன்புடன் வேண்டுகிறேன்.

அன்பன்,

கு. தாமோதரன்

நான்முகம்

மாவட்ட பெயர்க் காரணம்

வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் ஆர்க்காடு என்ற நகரம் அமைந்துள்ளது. ஆத்தி மரங்கள் நிறைந்த சிறிய பகுதியின் தலைநகரம் ஆர்க்காடு என்று பெயர் பெற்றதாகக் கூறுவர். கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் ஆர்க்காடு தென்னிந்திய வரலாற்றில் தனிச் சிறப்பைப் பெற்று விளங்கியுள்ளது. ஆர்க்காட்டைத் தலை நகராகக் கொண்டு நவாபுகள் ஆட்சி செய்தனர். அவர்களின் உதவியோடு நம் நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சியை அமைத்தனர். ஆர்க்காட்டின் வட பகுதியினை, வட ஆர்க்காடு மாவட்டம் என்றும் தென் பகுதியினைத் தென்னார்க்காடு மாவட்டம் என்றும் பிரித்து ஆட்சிபுரிந்தனர். தற்பொழுது வட ஆர்க்காடு மாவட்டம் வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டம் என்றும், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் என்றும் பிரிக்கப்பட்டுள்ளது. அது போலவே தென் ஆர்க்காடு மாவட்டம், தென் ஆர்க்காடு வள்ளலார் மாவட்டம் என்றும், விழுப்புரம் இராமசாமிப் படையாட்சியார் மாவட்டம் என்றும் பிரிக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம் - இராமசாமிப் படையாட்சியார் மாவட்டம்

கடலூரைத் தலைமையிடமாகக் கொண்டு விளங்கிய தென் ஆர்க்காடு மாவட்டம், இரண்டாக பிரிக்கப்பெற்று, கடலூரைத் தலைமையிடமாகக் கொண்ட மாவட்டம் தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டம் என்றும், விழுப்புரத்தைத் தலைமையிட மாகக் கொண்ட மாவட்டம் விழுப்புரம் இராமசாமிப் படையாட்சியர் மாவட்டம் என்றும் அமைக்கப் பெற்றுள்ளன. இம்மாவட்டங்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களால் 30-9-93 அன்று கடலூரில் தொடங்கி வைக்கப்பெற்றன.

மாவட்ட அமைவிடம்

விழுப்புரம் இராமசாமிப் படையாட்சியார் மாவட்டத்திற்கு வடக்கே செங்கை எம்.ஜி.ஆர். வடமேற்கே வடார்க்காடு அம்பேத்கார், மேற்கே திருவண்ணாமலை சம்புவராயர், தென் மேற்கே சேலம், தெற்கே தென்னார்க்காடு வள்ளலார் ஆகிய மாவட்டங்கள் எல்லைகளாக அமைந்துள்ளன.

வட்டப் பிரிவுகள்

இம்மாவட்டம் விழுப்புரம், செஞ்சி, திண்டிவனம், வானூர், உளுந்தூர்ப்பேட்டை, திருக்கோயிலூர், கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் ஆகிய எட்டு வட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

மாவட்டப் பெயருக்குரியவர்

திருவமை இராமசாமிப் படையாட்சியார் அவர்கள் 16-9-1918-இல் பிறந்தார். 3-4-1992-இல் இயற்கை எய்தினார்.

இராமசாமிப் படையாட்சியார் மிகவும் பின்தங்கிய வகுப்பில் பிறந்திருந்தாலும், பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, சமுதாயத்தில் மிகவும் பின்தங்கிய ஏழை எளிய மக்களுக்காகத் தொண்டாற்றிய வராவார். அவர் பெயரில் விழுப்புரம்-இராமசாமிப் படையாட்சியார் மாவட்டம் என்ற ஒரு புதிய மாவட்டத்தை தமிழ்நாடு அரசு தோற்றுவித்துள்ளது சிறப்புடையதாகும்.

மாவட்டச் சிறப்பு

மலை வளமும், மருதநிலவளமும், நீர்வளமும், கலை வளமும் ஒருங்கே நிறைந்த மாவட்டமே விழுப்புரம் இராமசாமிப் படையாட்சியார் மாவட்டமாகும்.

இம்மாவட்டத்தில் புதிய கற்காலக் கருவிகளும், பெருங் கற்காலத் தடையங்களும் கிடைத்துள்ளதால், இம்மாவட்டம், 3,500 ஆண்டுகளுக்கு முந்தைய தொல்பழங்கால வரலாற்றைப் பெற்று விளங்குகிறது.

சோழ நாட்டிற்கும் தொண்டை நாட்டுக்கும் இடைப்பட்ட இப்பகுதி நடு நாடு என்று அழைக்கப் பெற்றுள்ளது. இம்மாவட்டத் தின் பெரும் பகுதி நடு நாட்டில் அமைந்துள்ளது.

இப்பகுதி ஒரு போர்முனையாக இருந்ததாலும், 'பாடிவீடு' போன்று அமைந்திருந்ததாலும் திருமுனைப்பாடி நாடு என்று வழங்கப் பெற்றுள்ளது. சேர, சோழ, பாண்டியராகிய மூவர்க்கும் உரியதாக நடுநிலைமையில் இருந்ததால் நடு நாடு என்றும் குறிக்கப்பட்டது.

சைவ சமயப் பயிர் வளர்த்த சமயக்குரவர் நால்வருள் சுந்தரமூர்த்தி, அப்பர், சம்பந்தர் ஆகிய மூவராலும் பாடப் பெற்ற தலங்கள் இம்மாவட்டத்தில் உள்ளன. இவர்களுள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் இம்மாவட்டத்தில் பிறந்தவராவார்,

ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற வைணவத் தலங்களும் இப்பகுதியில் உள்ளன.

பிற சமயங்களான சமணம், இசுலாம், கிறித்துவம் ஆகிய சமயங்களும் இப்பகுதியில் சிறந்து விளங்கியுள்ளன.


கவிச்சக்ரவர்த்தி கம்பனை ஆதரித்த சடையப்ப வள்ளல் தோன்றிய திருவெண்ணெய் நல்லூர் இந்த மாவட்டத்தில் உள்ளது.

மறைந்த காஞ்சிப் பெரியவர் சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள், விழுப்புரத்தில் 'சாமிநாதன்' என்ற பெயரில் அவதரித்தவராவார்.

திருக்குறளார் வீ. முனுசாமி விழுப்புரத்தில் பிறந்தவராவார். 50 ஆண்டுகள் திருக்குறள் நெறி பரப்புவதில் பெரும் தொண்டு புரிந்து திரு.வி.க., கலைமாமணி விருதுகளைப் பெற்றவர். இவர் இயற்கை எய்திய பின்னர், தமிழக அரசு திருக்குறள் விருதினை வழங்கிச் சிறப்பித்தது.

உள்ளடக்கம்

	பக்கங்கள்
தொல்பழங்காலம்	1
சங்க காலம்	5
பல்லவர் காலம்	9
சோழர் காலம்	16
காடவராயர் காலம்	32
பாண்டியர் காலம்	39
சம்புவராயர் காலம்	40
விசயநகரர் காலம்	44
செஞ்சி நாயக்கர் காலம்	45
பீஜப்பூர் சுல்தான், மராத்தியர், மொகலாயர்	46
செஞ்சி சிங்குகள்	46
ஐரோப்பியர்கள்	47
வரலாறு கூறும் வண்டமிழ்த் தலங்கள்	48
வைணவத் தலங்கள்	83
விழுப்புரம் கோயில்கள்	86
விழுப்புரம் நகரச் சத்திரங்கள்	94
திண்டிவனம் கோயில்கள்	96
செஞ்சிக் கோட்டையும் கோயில்களும்	98
சமணம்	103
சமணக்கோயில்கள்	108
சமண ஓவியங்கள்	111
சமண மடங்கள்	112
இசுலாமும் - கிறித்துவமும்	114
மலைகளும் - கோட்டைகளும்	115
ஆறுகள்	117
ஏரிகள்	120
வரலாற்றுச் சின்னங்கள்	124
அரிய சிற்பங்கள்	128
அரிய கல்வெட்டுகள்	142
ஓவியங்கள்	151
செப்பேடு	153



விழுப்புரம் – இராமசாமிப் படையாட்சியார் மாவட்ட வரைபடம்.

தொல்பழங்காலம்

புதிய கற்காலம்

தற்பொழுது புதிதாக உருவாகும் இம்மாவட்டத்தில் பல தொல்பழங்காலச் சான்றுகள் கிடைத்துள்ளன. விழுப்புரம் - திருவண்ணாமலை நெடுஞ்சாலையில் ஒதியத்தூருக்கு அருகில் கீழ் வாலை என்ற இடத்தில் இயற்கையாக அமைந்துள்ள பாறைகளில் தொல்பழங்கால ஓவியங்கள் தீட்டப்பெற்றுள்ள இடத்திற்கு அருகில் புதிய கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் கிடைத்துள்ளன. இப்பகுதியில் புதிய கற்காலக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு, கி. மு. 1000 ஆண்டுகளுக்கு முன்னரே இப்பகுதியில் மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது தெரிகிறது.

கீழ்வாலை மட்டுமல்லாமல், இம்மாவட்டத்தில் திருக்கோயி லூருக்கு அருகிலுள்ள கொல்லூர், ஜம்பை ஆகிய இடங்களிலும் புதிய கற்காலக் கருவிகள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பெருங்கற்காலம்

இப்பகுதியில் புதிய கற்காலத்தைத் தொடர்ந்து பெருங் கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான தடையங்கள் கிடைத்துள்ளன. கீழ்வாலை, கொல்லூர், ஜம்பை போன்ற இடங்களில் கருப்பு சிவப்பு பானை ஓடுகளும் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். பெருங்கற்காலத்தைச் சார்ந்த ஓவியங்கள் செத்தவரை, கீழ்வாலை, ஒதியத்தூர், பாடியேந்தல், கொல்லூர், ஆலம்பாடி முதலிய இடங்களில் கிடைத்துள்ளன.

செத்தவரை

கீழ்வாலையிலிருந்து 15 கி.மீ. தொலைவில் செத்தவரை என்ற இடத்தில் பெருங்கற்கால ஓவியங்களை தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை கண்டுபிடித்துள்ளது. இவ்வோவியங் கள் பாறைகளில் தீட்டப்பெற்றுள்ளன. இப்பாறை 'ஐயனார் மலை' என வழங்கப்படுகின்றது. இவ்வோவியங்களில் குறிப்பிடத் தக்கவை மிகப்பெரிய அளவில் வரையப்பட்டுள்ள 'மான்' மற்றும்

'மீன்' உருவங்களாகும். சிவப்பு நிற காவியின் வண்ணத்தில் வரையப்பட்ட வெளிக் கோடுகளுக்கு உட்புறம் வெள்ளை வண்ணம் தீட்டப்பெற்றுள்ளது. காட்டெருமை ஒன்றின் ஓவியத்தின் முதற் பகுதி சிவப்பு நிற காவியிலும், பின்புறம் எலும்புகளைக் காட்டும் விதத்தில் வரிகளும் காட்டப்பட்டுள்ளன. இவற்றுடன் காட்டுப் பன்றி, புலி ஆகிய உருவங்களும் தீட்டப்பெற்றுள்ளன. மான் உருவத்தின் அருகில் மாமிசத்துண்டு, ஒரு கம்பில் சொருகப்பட்டு தீயில் வாட்டப்படுவது போன்று காட்டப்பட்டுள்ளது. இவ்வோவியங்கள் கி.மு. 1500 ஆண்டுகளுக்கு முற்பட்டவைகளாகும்.

கீழ்வாலை

கீழ்வாலை ஓவியங்கள் 'சிவப்பு வண்ணத்தில்' தீட்டப் பெற்றுள்ளதால், இப்பாறைகள் 'இரத்தப் பாறை' 'இரத்தக் குடைக்கல்' 'ஏத்தப் பாறை' என்றெல்லாம் இப்பகுதி மக்களால் அழைக்கப்படுகிறது. இவை பாண்டிச்சேரியைச் சார்ந்த பள்ளி ஆசிரியர்களால் கண்டுபிடிக்கப் பெற்றதாகும்.

இவ்வோவியங்கள் நான்கு தொகுதிகளாகத் தீட்டப் பெற்றுள்ளன. முதல் தொகுதியில் குதிரையின் மீது அமர்ந்த நிலையில் ஒரு மனிதனும், குதிரையின் கடிவாளத்தைப் பிடித்த நிலையில் குதிரையை நடத்திச் செல்லும் வகையில் மற்றொரு உருவமும், இவர்கள் இருவரையும் வரவேற்கும் வகையில் கைகளை விரித்த நிலையில் மூன்றாவதாக ஒரு உருவமும் தீட்டப் பெற்றுள்ளன. இவர்களின் மூக்கு பறவையின் அலகு போன்று காணப்படுகின்றன. நடுவில் காணப்படும் மனிதனின் தலையில் மகுடம் உள்ளது. குதிரையின் மீது அமர்ந்துள்ள மனிதனின் இடையிலும், குதிரையைச் செலுத்துபவன் இடையிலும் குறுவாள்கள் காட்டப்பட்டுள்ளன.

இரண்டாவது தொகுதியில் நான்கு மனிதர்கள் படகு ஒன்றில் ஏறிச் செல்லும் காட்சி தீட்டப்பெற்றுள்ளது. இவர்களின் மூக்கும் பறவையின் அலகு போன்றே காட்டப்பெற்றுள்ளது. ஒருவன் கையில் நீண்ட துடுப்பினைப் பிடித்தவாறு படகைச் செலுத்துவது போன்று காட்டப்பட்டுள்ளது.

மூன்றாவது தொகுதியில் வரிசையாக ஐந்து சின்னங்கள் உள்ளன. முதல் சின்னம் கூரை போன்றும், இரண்டாவது மத்தள வடிவிலும், மூன்றாவது சீப்பு வடிவிலும், நான்காவது மத்தள

வீடிவிலும், ஐந்தாவது வட்டத்தினுள் குறுக்குக் கோடுகளும் காணப் படுகின்றன. இவை ஹரப்பன் எழுத்துக்கள் அல்லது வரி வடிவங்களை ஒத்துள்ளது.

நான்காவது தொகுதியில் ஆறு மனிதர்கள் வரிசையில் நிற்பது போன்று தீட்டப் பெற்றுள்ளது இவ்வோவியங்கள் கி. மு. 1000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்.

ஒதியத்தூர்

ஒதியத்தூருக்கு அருகில் அமைந்துள்ள உயரமான பாறையில் சிவப்பு வண்ணத்தில் புலி, மான் போன்ற உருவங்களும், குறியீடு களும் காணப்படுகின்றது. இது 'புறாக்கல்' என்று அழைக்கப் படுகிறது.

பாடியேந்தல்

இம்மாவட்டத்தில் திருக்கோயிலூருக்கு அருகில் உள்ள 'பாடியேந்தலில்' ஒரு குன்றின் குகைச் சுவரிலும் விதானத்திலும் வெள்ளை மற்றும் சிவப்பு வண்ணத்தில் உருவங்கள் தீட்டப் பெற்றுள்ளன.

கொல்லூர்

திருக்கோயிலூருக்கு அருகில் 'கொல்லூர்' என்ற ஊரில் பாறையின் மீது சிவப்பு வண்ணத்தில் ஓவியங்கள் காணப்படுகிறது. இவ்வோவியங்கள் வரைகோடுகள் போன்று பல அமைப்புகளுடன் காட்சியளிக்கிறது. இப்பகுதியில் பெருங் கற்காலச் சின்னங்களும் காணப்படுகின்றன.


ஆலம்பாடி

இதே மாவட்டத்தில் 'ஆலம்பாடி'யில் கற்பாறையின் மீது சிவப்பு வண்ணத்தில் ஓவியங்கள் தீட்டப்பெற்றுள்ளன. இவ் வோவியங்களில் மரம், செடி கொடிகளுக்கு இடையே மறைந்துள்ள மான், காளைமாடு, பன்றி போன்ற விலங்குகளின் உருவங்கள் வரையப்பட்டுள்ளன. இவ்வோவியத்தின் மீது பின்னர் வேறு ஓவியம் தீட்டப்பெற்றுள்ளது.

உடையாநத்தம்

கீழ்வாலைக்கு வடக்கே உடையாநத்தம் என்ற இடத்தில் பெருங்கற்காலச் சின்னங்களுக்கு இடையில் பறவை போன்ற


அமைப்பினை உடைய உருவம் ஒன்று காணப்படுகின்றது. இதனை 'தாய் தெய்வம்' என சில அறிஞர்கள் கருதுகின்றனர். இப்பகுதி மக்கள் இதனை "விசிறிப் பாறை" என வழங்குகின்றனர். அக்கால மக்கள் வழிபாடு செய்த இறை உருவாக இருக்கலாம் எனவும், சிலர் 'பெருங்கற்காலத்தில் அப்பகுதியில் ஆட்சி புரிந்த தலைவனின் ஈமச் சின்னத்தினைப் பிற ஈமச் சின்னங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்ட இது அமைக்கப்பட்டிருக்கலாம் எனவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.



மான் ஓவியம், செத்தவரை, காலம் : கி.மு. 1500, பக்கம் : 1.




கீழ்வாலை ஓவியங்கள், காலம் : கி.மு. 1000, பக்கம் : 2.



தாய் தெய்வம், பெருங்கற்காலம், உடையாநத்தம்,

பக்கம் : 128.



திரிமூர்த்தி, திருவாமாத்தூர், காலம் : கி.பி. 6-7-ஆம் நூற்றாண்டு, பக்கம் : 129.

சங்ககாலம்

மலையமான்களும் - ஓய்மான்களும்

இம்மாவட்டம் சங்க காலத்தில் மலையமான்கள் மற்றும் ஓய்மான்கள் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தது. மலையமான் திருமுடிக்காரியைப் பற்றியும் அவன் மகன் சோழியஏனாதி திருக்கண்ணனைப்பற்றியும் சங்க இலக்கியங்களில் குறிப்புகள் காணப்படுகின்றன. இப்பகுதி சங்ககாலத்தில் பெண்ணையம் படப்பை நாடு என்றும், ஓய்மா நாடு என்றும் இரண்டு பெரும் பிரிவுகளாக விளங்கியுள்ளது. மலையமான்களின் ஆட்சிக்குப் பிறகு ஓய்மான்கள் சிறப்புற்று விளங்கினர்.

மலையமான் நாடு இன்றைய கள்ளக்குறிச்சி, திருக்கோயிலூர், சங்கராபுரம், விழுப்புரம், உளுந்தூர்பேட்டை ஆகிய பகுதி களையும் சேர்வராயன் மலையையும் தன்னகத்தே கொண்டிருந் திருக்கிறது. ஓய்மாநாடு கடற்கரைப் பகுதியை அடுத்த புதுச்சேரி, திண்டிவனம், செஞ்சி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய தாக விளங்கியிருக்கிறது.

மலையமான் நாட்டை அடுத்துள்ள வேணாட்டுப் பகுதியில் ஆநிரை கோடலிலும், மீட்டலிலும் ஈடுபட்டு இறந்த வீரர் களுக்கு எடுக்கப் பெற்ற நடுகற்கள் மிகுதியாகக் கிடைத்துள்ளன. அவற்றில் சில நடுகற்கள் கோவல் (கோவலூர்) மறவர்கள் போரில் ஈடுபட்டனர் என்பதற்குச் சான்றாக விளங்குகின்றன.

மலையமான் திருமுடிக்காரி

கபிலர், பேரிசாத்தனார், மாறோக்கத்து நப்பசலையார் ஆகிய புலவர்கள் இம்மன்னனைப் புகழ்ந்து பாடியுள்ளனர். கோவலூர் மலையமானின் தலைநகராக விளங்கியது. மலையமான் நாட்டில் பல சிறிய ஊர்கள் சிறப்புப் பெற்று இருந்தன. மலையமான் திருமுடிக்காரி முள்ளூர் மலைக்குத் தலைவன் ஆவான்.

கோவல் பண்டைக்காலத்தில் பெருவழியில் அமைந்திருந்ததால் அவ்வூர் வாணிபத்தில் சிறந்து விளங்கியது. ஆதலால் இப்பகுதியில்

இன்று பல்வகை காசுகள் கிடைக்கின்றன. சங்க கால சேரர் காசுகளும், பாண்டியர் காசுகளும், சோழர் காலத்தைச் சார்ந்த முத்திரை குத்தப்பெற்ற காசுகளும் மற்றும் குஷானர், சாதவாகனர் காசுகளும் கிடைக்கின்றன. அண்மையில் கோவலூருக்கு அருகிலுள்ள கரையப்பட்டு என்ற இடத்தில் இருநூறு ரோமானிய தங்ககாசுகள் கிடைத்துள்ளதிலிருந்து கோவல் ரோமானியர்களோடு வாணிகத் தொடர்பு கொண்டிருந்தமை தெரிய வருகிறது. இங்கு கிடைத்துள்ள மலையமான் காசுகளைப் பற்றி ஆய்வு நூல்களும் வெளிவந்துள்ளன.

அதியமானின் கோவலூர் வெற்றி

வளமிக்க இப்பகுதியினை தன்னுடைய ஆதிக்கத்தில் கொண்டு வருவதற்கு அதியமான் கோவலூரை (திருக்கோயிலூர்) முற்றுகை யிட்டு வெற்றி கொண்டான். திருக்கோயிலூருக்கு அருகிலுள்ள ஜம்பை மலையில் சமண முனிவர்களுக்கு படுக்கை அமைத்து கொடுத்துள்ளான் என்பதை ஒரு கல்வெட்டு ''ஸதியபுதோ அதியந் நெடுமான் அஞ்சி ஈத்த பாளி'' என்று குறிக்கிறது. இக்கல்வெட்டு தமிழக வரலாற்றுக்கு பெரிதும் துணைபுரிவதோடு அசோகன் கல்வெட்டுகளில் கூறப்படும் சதிய புத்திரர் யார் என்பதை உறுதிப் படுத்த உதவுகிறது. மலையமான் திருமுடிக்காரி கொடைத்திறன் மிக்கவன். இவனுக்குப்பின் இவன் மகன் சோழிய ஏனாதி திருக்கண்ணன் ஆட்சிக்கு வந்தான். இவன் காலத்தில் மலையமான் நாடு சோழர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. சோழமன்னன் முள்ளூர் மலையில் மலையமான் படையுடன் தங்கியிருந்தான் என்று புறநானூறு குறிக்கிறது.

கபிலருக்கும் மலையமான்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. பாரி இறந்த பிறகு, கபிலர் பாரி மகளிரை, மணந்து கொள்ளும்படி பல வேளிரை வேண்டி நின்றார். ஆனால் மூவேந்தர்களுக்கு அஞ்சி பாரி மகளிரை யாரும் மணம் செய்து கொள்ள முன்வரவில்லை. ஆனால் மலையமான் திருமுடிக்காரி பாரியின் மகளிரை தன் மகனுக்கு மணமுடித்தான் என்பது மரபு வழிக்கதைகளின் மூலம் அறிய முடிகிறது. கோவலூரில் உள்ள முதலாம் இராசராசனின் கல்வெட்டு ''பாரி மகளிரைப் பார்ப்பார் படுத்து எரியில் தன்னை மாய்த்துக் கொண்ட கபிலக்கல்'' என்று குறிக்கப்படுகிறது. இதன் மூலம் சங்ககால வரலாற்றினை தெரிந்து கொள்ள முடிகிறது.

மலையமான் நாட்டில் கொடுங்கால் என்ற நகரம் சிறந்து விளங்கியது. மலையமான் கொல்லியை ஆண்ட ஓரியைக் கொன்று கொல்லிக் கூற்றத்தை சேரனுக்கு அளித்தான். மலையமான்கள் செல்வாக்கு இழந்தபோது ஓவியர் குடியைச் சார்ந்த நல்லியக் கோடன் என்பான் சிறந்து விளங்கியுள்ளான்.

ஓவியர் குடியும் - ஓய்மா நாடும்

ஓவியர்குடி தற்பொழுதுள்ள திண்டிவனம் பகுதியில் சிறப்புற்று விளங்கியது. அப்பகுதி சங்க காலத்தில் ஓய்மாநாடு என்று வழங்கியது. இக்குடியில் நல்லியாதன், வில்லியாதன், நல்லியக் கோடன் ஆகிய மூன்று மன்னர்கள் ஆட்சி புரிந்துள்ளனர். இவர்களில் நல்லியக்கோடன் சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத்தலைவனாவான். ஓவியர்குடி நாக மரபினைச் சேர்ந்தது கிரேக்க நிலநூல் வல்லுநர் தாலமியும் அப்பகுதியை பசரோநாகர்கள் ஆட்சி செய்தார்கள் என்று கூறியுள்ளார். ஓய்மான்களின் தலைநகர் கிடங்கில் ஆகும். இது இன்று திண்டிவனத்தின் ஒரு பகுதியாக விளங்குகிறது. கிடங்கில் நகரில் சங்கப் புலவர்களாகிய காவிதிப் பெருங்கொற்றனார் கிடங்கில் குலபதி நக்கண்ணனார் ஆகியோர் இப்பகுதியில் வாழ்ந்துள்ளனர் என்பது தெரிகிறது.

ஓய்மா நாடு கடற்கரைப்பகுதியை ஒட்டி இருந்ததால் அந்நாடு கடல் வாணிபத்தில் சிறந்து விளங்கியது. எயிற்பட்டினம், மாவிலங்கை, ஆமூர், வேலூர் ஆகிய ஊர்கள் சிறுபாணாற்றுப் படையில் குறிக்கப்படுகின்றன.

நல்லியக்கோடன்

எயிற்பட்டினம் இன்றைய மரக்காணமே என்று ஒரு சில வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர். ஆனால் அது கடலில் மூழ்கி யிருக்கக்கூடும் என்று ஒரு சில அறிஞர்கள் கருதுகின்றனர். தாலமியால் சோபட்டினம் என்று கூறப்படுவது எயிற்பட்டினம் என்று கருத வாய்ப்புண்டு. வேலூர் இன்று உப்பு வேலூர் என்றழைக்கப்படுகிறது. ஆமூர் கிடங்கில், வேலூர் பெருவழியில் கொண்டாமூர், நல்லாமூர், சித்தாமூர் என்ற மூன்று ஊர்கள் உள்ளன. இந்த ஆமூரில் ஏதேனும்ஒரு ஆமூர் நல்லியக்கோடனின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த ஆமூராக இருக்கலாம். நல்லாமூர் என்பது பழைய ஆமூராக இருந்திருக்கலாம் என்று வரலாற்று அறிஞர் இராசமாணிக்கனார் கூறியுள்ளார்.

மாவிலங்கை, 'தொன்மாவிலங்கை கருவொடு பெயரிய நன்மாவிலங்கை' என்று கூறப்பெறுவதால் இந்த மாவிலங்கைக்கு முன் ஒரு மாவிலங்கை இருந்துள்ளது என்பது தெரியவருகிறது. மாவிலங்கை மருதவளம் மிக்க நகரமாக விளங்கியுள்ளது. தற்காலத்தில் கீழ்மாவிலங்கை, மேல்மாவிலங்கை என்று அழைக்கப் பெறும் சிறிய ஊராக விளங்குகிறது. சங்க இலக்கியத்தில் கூறப் பெறும் ஊர்கள் மட்டுமன்றி தொல்லியல் சான்றுகளாலும் பண்டைய ஊர்கள் என்று கருதத்தக்க சில ஊர்கள் ஓய்மா நாட்டில் உள்ளன.

பல்லவர் காலம்

முதலாம் மகேந்திரவர்மன்

இம்மாவட்டம் சங்ககாலத்திற்குப் பிறகு பல்லவர்கள் ஆட்சிக் குட்பட்டிருந்தது. சிம்மவர்மனின் வழித்தோன்றலாகிய சிங்க விண்ணபருமன் என்று குறிக்கப்பெறும் சிம்மவிஷ்ணுவின் மகனான முதலாம் மகேந்திரவர்மன் கல்வெட்டுகளில் மயீந்திர வருமர், மயேந்திரபருமர், மசீந்திரபருமர் என்று குறிக்கப்படுகிறான் இவன் பல துறைகளில் சிறந்து விளங்கினான். தர்க்க சாத்திரத்தில் நன்கு தேர்ச்சி பெற்றவன் சங்கீர்ணஜாதி என்ற பண்ணை அமைத்து சிறந்த இசைப்பித்தனாக விளங்கினான். இவன் கலைப்பித்தனாகயிருந்த காரணத்தால் கலைத்துறையிலும் மிகுந்த ஆர்வம் காட்டினான். இதன் பயனாகத் திருச்சி, மாமண்டூர், திருக்கழுக்குன்றம், மண்டகப்பட்டு, தளவானூர் மேலச்சேரி, சிங்கவரம், கீழ்மாவிலங்கை, வல்லம், பல்லாவரம் முதலிய இடங் களில் முதன்முதலில் குடைவரைக் கோயில்களைத் தோற்று வித்தான். ஓவியக்கலையிலும் இவன் சிறந்து விளங்கியதால் 'சித்ர காரப் புலி' என்று அழைக்கப்பெற்றான். மகாசேத்தாகாரி, லலிதாங்குரன், விசித்திரசித்தன் போன்ற பட்டங்களைப் பூண்டு விளங்கினான். சமயப்பற்று மிகுந்த இவன் முதலில் சமண சமயத்தில் ஈடுபாடு கொண்டிருந்தான். பின்னர் அப்பர் பெருமானால் சைவ சமயத்திற்கு ஈர்க்கப்பட்டான்.

பல்லவர்கால முதல் குடைவரைக் கோயில்

இத்தகைய சிறப்புக்கள் வாய்க்கப் பெற்ற முதலாம் மகேந்திர வர்மன் தன்னுடைய ஆட்சிக்காலத்தில் இம்மாவட்டத்தில் தளவானூர், மண்டகப்பட்டு, மேலச்சேரி, சிங்கவரம், கீழ்மாவிலங்கை ஆகிய ஊர்களில் குடவரைக் கோயில்களை எடுப்பித்துள்ளான். இவற்றுள் செஞ்சி வட்டத்தில் அமைந்துள்ள 'மண்டகப்பட்டு' என்ற ஊரில் எடுக்கப்பட்ட குடைவரைக் கோயில் சிறப்புடைய தாகும். இவன் வடமொழியில் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்த காரணத்தால் தன்னுடைய பட்டப்பெயர்களைப் பல குகைக் கோயில்களில் வடமொழியில் பொறித்து வைத்துள்ளான். இக்குடை வரைக் கோயில் நான்முகன், திருமால், சிவன் மூவருக்கும்

செங்கலின்றி, மரமின்றி உலோகமின்றி, கதையின்றி விசித்ர சித்தனாகிய அரசனால் தோற்றுவிக்கப்பட்டது என்று அவனுடைய வடமொழிக் கல்வெட்டு கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறது.

ஏதத் அனிஷ்டகம் அத்ருமம் அலோகம்

அஸ்தம் விசித்ரசித்தேன I

நிர்மாபிதம் ந்ருபேண

ப்ரும்மேச்வர விஷ்ணு லக்ஷிதாயதனம் II

இதிலிருந்து பல்லவர் காலத்திற்கு முன்பு செங்கல், மரம், கதை, உலோகம் ஆகியவற்றால் கோயில் எடுக்கப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. இவற்றால் எடுக்கப்பெற்ற கோயில்கள் விரைவாக அழிந்துவிடும் என்ற காரணத்தால் கருங்கல்லால் கோயில்களை எடுப்பித்தால் நீண்ட நாட்களுக்கு நிலைத்திருக்கும் என்ற அடிப்படையில் மேற்கண்ட பொருள்களை நீக்கி கோயில்கள் எடுக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. பல்லவர் கால கட்டடக்கலைக்கு இதுவே தொடக்கம் எனலாம். மகேந்திரவர்மனால் எடுக்கப்பட்ட குடைவரைக் கோயில்கள் எளிய முறையில் அமைக்கப்பட்டன. கருவறைப்பகுதி சதுரமாகவும் மண்டபங்களைத் தாங்கி நிற்கும் தூண்கள் மிகவும் எளிமையாகவும் இருத்தலே இவனுடைய பாணியாகும்.

இராஜசிம்மன்

இவனுக்கு பின்னர் ஆட்சிக்கு வந்த அத்யந்தகாமன் என்று புகழ்பெற்ற இரண்டாம் நரசிம்மனாகிய இராஜசிம்மன் பல்லவர் கலைக்கு பெருந்தொண்டாற்றியுள்ளான். பல்லவர்கால கட்டடக் கலையினை, ஒரே கல்லில் செதுக்கப்பெற்ற இரத கோயில்கள், குடைவரைக் கோயில்கள், கட்டடக் கோயில்கள் என மூன்று வகை யாகப் பிரிக்கலாம். இந்த மூன்றுவகை கோயில்களில், கட்டடக் கோர்யில்களை கடற்கரைப் பகுதியிலும் (கடற்கரை கோயில், மாமல்லபுரம்) மருத நிலப் பகுதியில் (கைலாசநாதர் கோயில், காஞ்சிபுரம்) மலையின் உச்சியிலும் (தாலகிரீஸ்வரர் கோயில் பனை மலை) கட்டியப் பெருமை இராஜசிம்மனையேச் சாரும்.

தாலகிரீஸ்வரர் கோயில்

விழுப்புரம் வட்டம், விழுப்புரத்திலிருந்து வடமேற்கே 22 கி.மீ. தூரத்தில் பனைமலை என்ற ஊர் உள்ளது. இங்கு இயற்கையாக

அமைந்த குன்றின் மீது 'தாலகிரீஸ்வரர் கோயில்' எடுக்கப் பட்டுள்ளது. தாலகிரி என்ற வடமொழிச்சொல் தமிழில் 'பனைமலை' என்று வழங்குகிறது.

இக்கோயிலை முதன்முதலில் கண்டு ஆய்வு செய்து பல்லவர் கலைப்பணியினை உலகுக்கு அறிவித்தவர் பிரெஞ்சுப் பேராசிரியர் கபிரியேல் முவோ துப்ராய் ஆவார்.

இக்கோயில் குன்றின் மீது தென்கிழக்காக அமைந்துள்ளது. சதுரமாக அமைக்கப்பட்டுள்ள கோயிலின் உண்ணாழி பகுதியில் லிங்கம் வைக்கப்பட்டுள்ளது. சோமாஸ்கந்தர் புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. சோமாஸ்கந்தர் உருவத்தினை உண்ணாழியில் அமைக்கின்ற பாணி பல்லவர்களுக்கே உரிய சிறப்பு அம்சமாகும். இக்கோயில் பீடத்திலிருந்து கூரைப்பகுதி வரை கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. அதற்கு மேல் அமைந்துள்ள விமானப் பகுதி முழுவதும் சுதையினால் ஆனது. இப்பகுதியில் எடுக்கப்பட்டுள்ள சிற்பங்களும் சுதையினால் ஆனவை.

விமானம் மூன்று தளங்களை உடையது. இவற்றில் சாலைகளும் கூடுகளும் அமைக்கப்பட்டுள்ளன. மூன்று தளத்திலும் யாளி வரிகள் காட்டப்பட்டுள்ளன. இவ்விமான அமைப்பு காஞ்சியிலுள்ள கைலாசநாதர் கோயிலையும் மாமல்லையிலுள்ள கடற்கரைக் கோயிலையும் ஒத்துக் காணப்படுவது சிறப்புடையதாகும். கட்டட அமைப்பினைப் பார்க்கும் பொழுது இக்கோயில் இராசசிம்மனின் இறுதிக் காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது தெரிகிறது.

சிற்றாலயங்கள்

உண்ணாழியின் வெளிப்பக்கத்தில் தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய மூன்று பக்கங்களில் சிற்றாலயங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. இச்சிற்றாலயங்களில் லிங்கங்கள், வைக்கப் பட்டுள்ளன. இது போன்று காஞ்சி கைலாசநாதர் கோயிலிலும் சிற்றாலயங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இக்கோயிலில் நிற்கும் நிலை யில் சிம்மங்களின் உருவங்களை உடைய தூண்கள் அமைக்கப் பெற்றுள்ளன. இச்சிம்மங்கள் பின் கால்களை பீடத்தில் ஊன்றி முன் கால்களை மேலே தூக்கி நிமிர்ந்து நிற்கின்ற காட்சி மிகவும் அழகாகக் காட்டப்பட்டுள்ளது.

இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகள் பல்லவ கிரந்தத்தில் காஞ்சி கைலாசநாதர் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளது போன்று

காணப்படுவதுடன் செய்திகளும் ஒன்றாகவே உள்ளன. பல்லவ மன்னர்களின் வழிமுறைகளையும் அவ்வழியில் வந்தவன் இராஜ சிம்மன் என்று புகழப்படுகிறான். பரமேஸ்வரன் குகனை பெற்றெடுத்தது போன்று பரமேஸ்வரன் (பல்லவ மன்னன்) இராஜ சிம்மனை பெற்றெடுத்துள்ளான் என்று கல்வெட்டு உவமித்து கூறுகின்றது. இராஜசிம்மன் சிங்கங்களின் அரசன் என்றும் யானை களை அடக்கியாள்பவன் என்றும் பல பட்டப் பெயர்களால் குறிக்கப் படுகின்றான்.

வண்ண ஓவியம்

பல்லவர் காலத்தில் கோயில்களில் ஓவியங்களை வரையும் மரபு முதலாம் மகேந்திரவர்மன் காலத்திலே தொடங்கப் பெற்றிருந் தாலும் இராஜசிம்மன் காலத்தில் சிறப்புற்று விளங்கியது. இவன் காலத்திய ஓவியங்கள் காஞ்சி கைலாசநாதர் கோயிலிலும் பனை மலை தாலகிரீஸ்வரர் கோயிலிலும் தீட்டப் பெற்றுள்ளது.

உண்ணாழியின் வடக்குப் பக்கமுள்ள சிற்றாலயத்தின் சுவரில் லிங்கத்தின் பின்புறத்திலும் பக்கச் சுவர்களிலும் முறையே சிவபெருமான், பார்வதி ஓவியங்கள் தீட்டப் பெற் றுள்ளன.

சிவபெருமானின் ஓவியம்

சிவபெருமான் வலது காலை ஊன்றி இடது காலை மேலே உயர்த்தி ஊழிக்கூத்து ஆடும் காட்சியினை ஓவியமாக தீட்டியுள் யுள்ளனர். வலது முன்கை கஜஹஸ்த்தத்திலும் கழுத்தில் அணிகலன் களும் கைகளில் காப்பும் காட்டப்பட்டுள்ளது. அண்ணல் ஆடுகின்ற கூத்தை பார்வதி பக்கத்தில் நின்று பார்ப்பது போன்று ஓவிய மாக தீட்டப்பட்டுள்ளது.

பார்வதி ஓவியம்

பார்வதி இடதுகாலை மடக்கி வைத்து வலது காலை ஊன்றி, வலது கையினை மடித்து வைத்த நிலையில் இடது கையினை ஊன்றி, கண்களை அகல விரித்து இறைவன் ஆடுகின்ற கூத்தினை அமைதி யாக காண்பது போன்று தீட்டப்பெற்றுள்ள காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். தலையினை சற்று வலப்புறம் சாய்த்தும் கழுத்தில் அணியும் தோள்களில் தோள் வளையும் முழங்கைகளில் வளையல் களும் காட்டப்பட்டுளது. இடையில் அணிந்துள்ள மேலாடை

சிவப்பும் மஞ்சளும் கலந்த வண்ணத்தில் தீட்டப்பட்டுள்ளது. முகம் இளமஞ்சள் நிறத்தில் உடல் இளஞ்சிவப்பு நிறத்திலும் காணப் படுகிறது. தலைமுடியின் பாங்கு அரசமாதேவி போன்று காட்சி யளிக்கிறது. கருப்பு நிற மென்மையான கோடுகளால் மகுடம் வரையப் பெற்றுள்ளது. தலைக்கு மேல் நீல வண்ணத்தில் பூச்சரக் குடை தீட்டப்பெற்றுள்ளது.

இவ்வோவியங்கள் கி. பி. 2ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அமராவதி சிற்பங்களைப் போன்றும், கி. பி. 5ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அஜந்தா ஓவியங்களையும் ஒத்து காணப்படுகின்றன இலங்கையில் உள்ள சிக்கிரியா ஓவியப் பாணி இவ்வோவியத் தோடு மிகவும் நெருக்கமாக உள்ளது.

சிற்பங்கள்

பல்லவர் காலத்தில் விநாயகர், துர்க்கை ஆகிய சிற்பங்கள் பெருமளவில் எடுக்கப்பெற்று வழிபாட்டிற்கு வைக்கப்பட்டுள்ளன. இவ்வகை சிற்பங்கள் இயற்கையாக அமைந்த குகைப்பகுதியிலும் வரலாற்றுச் சிறப்பும், தொன்மையும் வாய்ந்த கோயில்களிலும் வைக்கப்பட்டுள்ளன. இங்கு குன்றின் கீழ்ப்பகுதியில் உள்ள குகையில் துர்க்கையின் சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. இதன் அருகில் பல்லவ கிரந்தத்தில் இராஜசிம்மனின் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

ராஜஸிம்ஹோ ரண ஜயஃ
ஸ்ரீ பரஸ் சித்ர கார்முகஃ
ஏக வீரஸ்சிரம் பாது
சிவ சூடாமணிஃ மஹீம்

போர்களில் வெற்றியைத் தழுவுபவனும் செல்வத்தின் இருப்பிடமும் வில்லாளியும் தனியொரு வீரனும் (ஏகவீரன்) சிவ சூடாமணியுமான ராஜஸிம்ஹன் பூமியை நெடுங்காலம் (பாதுகாக்கட்டும்) புரக்கட்டும். என்பது இதன் பொருள்.

இவன் கிரந்த எழுத்துகளைப் பல்வேறு அமைதிகளில் எழுதி யுள்ளான். நான்குவகை கிரந்த எழுத்துக்களை இவன் எடுத்துள்ள கோயில்களில் பொறித்துள்ளான். எழுத்துகளை மயில் போலும், அன்னபறவை போலும், பாம்பு போலும், கொடி போலும், சித்திரம் போலும் எழுதியுள்ளான். இந்த கல்வெட்டும் இவ்வகையிலேயே எழுதப்பட்டுள்ளது.

துர்க்கை

பல்லவர் காலத்தில் எடுக்கப்பட்டுள்ள துர்க்கையின் சிற்பங்களில் இது மாறுபட்டு விளங்குகின்றது. இடது முன்காலை ஊன்றி வலது முன்காலை தூக்கி பாயும் நிலையில் உள்ள சிம்மத்தின் மீது இட்து காலை தூக்கி வைத்து வலது காலை கீழே ஊன்றி திரிபங்க நிலையில் இடது கையில் நீண்ட வில்லினை ஏந்தியும் மற்ற கைகளில் சங்கும் கேடயமும் நான்காவது கை துடையின் மீது வைக்கப்பட்டுள்ளது. வலது கைகளில் சக்கரம் நீண்ட வாள் கடக முத்திரையிலும் கடி கஸ்தத்திலும் காட்டப்பட்டுள்ளது. உயர்ந்த மகுடமும் காதுகளில் தடித்த வட்டமான பத்திர. குண்டலமும் கழுத்தில் அணியும் கைகளில் தோள் வளையும் உள்ளன. மார்பகங்களில் கச்சு காட்டப்படவில்லை. மார்பில் புரிநூலும் கைகளில் கை வளையமும் இடையில் சிம்மமுக கச்சும் இடையின் முன்புறம் உள்ள கச்சு அரைவட்டமாகவும் இடையின் பக்கவாட்டில் ஆடை தொங்குவது போன்றும் காலில் பாதசரமும் காட்டப்பட்டுள்ளது. அழகு வாய்ந்த இப் பெண் தெய்வம் கொற்றவை என்றும் துர்க்கை என்றும் சிம்மவாஹினி என்றும் அழைக்கப்படுகின்றது. இச்சிற்பம் காஞ்சி கைலாசநாதர் கோயிலில் உள்ள சிம்மவாஹினியின் சிற்பத்துடன் ஒத்துக் காணப்படுகின்றது. இது பல்லவர் கால சிற்பக் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

ஏரி அமைத்த ஏந்தல்

இக்கோயில் அமைந்துள்ள குன்றின் மேற்கு, வடக்குப் பக்கங்களில், குன்றுகளை இணைத்து மிகப்பெரிய ஏரி ஒன்றினையும் இவன் எடுத்துள்ளான். இவ்வேரி பனைமலைப் பேட்டை ஏரி என்று அழைக்கப்படுகிறது. 80 மில்லியன் கன அடி கொண்ட மிகப் பெரிய ஏரியாகும். இதற்கு துரிஞ்சலாற்றிலிருத்து, நந்தன் கால்வாய் வழியாக நீர்வரத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வேரி தற்பொழுது பொதுப்பணித்துறையின் பொறுப்பில் உள்ளது.

நீர்நிலைக் கடவுள்

கோயில்கள் மட்டுமல்லாமல், பல்லவர் காலத்தில் திண்டிவனம் வட்டம், விக்கிரவாண்டி ஏரியிலும், விழுப்புரம் வட்டம் கோலியனூர் அருகிலும், திருக்கோயிலூர் வட்டம் மேலமங்கலம் ஏரியிலும், துர்க்கையின் சிற்பங்கள் நீர்நிலைக் கடவுளாக வைத்து வழிபாடு

செய்யப்படுகிறது. இது தவிர செஞ்சி வட்டம், சிங்கபுரம் என்ற இடத்தில் வயல் வெளியிலும், திருக்கோயிலூர் வட்டம், பெண்ணை யாற்றின் தென்கரையிலுள்ள எரளூர் என்ற கிராமத்தில் பல்லவர் காலத்தை சார்ந்த துர்க்கைச் சிற்பங்கள் வழிபாட்டிலுள்ளன.

கண்டம்பாக்கம்

விழுப்புரம் திருச்சி நெடுஞ்சாலையில் ஜானகிபுரத்திற்கு மேற்கே ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கண்டம்பாக்கம் என்ற ஊரில் குளக்கரையில் ஒரு சிவன் கோயில் இருந்து தற் பொழுது அழிந்துள்ளது. குளக்கரையில் விநாயகர் சண்டிகேசுவரர் ஆகிய சிற்பங்கள் மட்டும் தற்பொழுது வழிபாட்டில் உள்ளன. இச்சிற்பங்கள் பல்லவர் கால கலைப்படைப்பிற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றன. இச்சிற்பங்கள் இந்நூல் ஆசிரியரால் கண்டுபிடிக்கப்பட்டவையாகும்.

கோயில்களில் பல்லவர் சிற்பங்கள்

இந்த மாவட்டத்தில் சோழர் காலத்தில் எடுக்கப்பெற்ற பல்வேறு கோயில்களில் பல்லவர் கால சிற்பங்கள் வழிபாட்டில் வைக்கப்பட்டுள்ளன. இந்த வரிசையில் விழுப்புரத்தை அடுத்த திருவாமாத்தூர் அபிராமேஸ்வரர் கோயிலில் விநாயகர், சண்டி கேசுவரர், மும்மூர்த்திகள் சிற்பங்கள் வழிபாட்டில் உள்ளன. திருக்கோயிலூர் வட்டம், திருநாவலூரில் அமைந்துள்ள திருத் தொண்டீசுவரர் கோயில் முதல் திருச்சுற்றில் திருச்சுற்று மாளிகைப் பகுதியில் பல்லவர் காலத்தைச் சார்ந்த விநாயகர். விஷ்ணு, பிரம்மா, சண்டிகேசுவரர் ஆகிய சிற்பங்களும், தாரா லிங்கம் ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது. இதே கோயிலில் இரண் டாவது திருச்சுற்று சுவரில் மேற்குப் பக்கத்தில் கலிநாரை என்று பல்லவ கிரந்தத்தில் எழுதப் பெற்றுள்ள யானையின் மீது குழந்தையின் உருவம் ஒன்று வடிக்கப்பட்டுள்ளது. இது சுந்தர மூர்த்தி நாயனாரின் உருவமாக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

திருநாவலூருக்கு அருகில் உள்ள, கிராமம் என்ற ஊரில் சிவலோகநாதசுவாமி கோயிலில் பல்கலைக் கல்லில் புடைப்புச் சிற்பமாக துர்க்கையின் சிற்பம் ஒன்று உள்ளது. இதே வட்டத்தில் உள்ள சித்தலிங்க மடம் என்ற ஊரில் உள்ள வியாக்கிரபாதேஸ்வரர் கோயிலிலும், பல்லவர் காலத்தை சார்ந்த சிற்பங்கள் உள்ளன.

சோழர் காலம்

விஜயாலயன்

''தஞ்சை கொண்ட கோப்பரகேசரி'' என்று குறிக்கப்படுகின்ற விஜயாலய சோழன் முத்தரையர்களிடமிருந்து தஞ்சையை கைப் பற்றி, முற்கால சோழர் ஆட்சியை நிறுவியவன் ஆவான். தமிழ் நாட்டில் அவனுடைய ஆட்சிப் பரப்பு தஞ்சைக்கு வடக்கே நடுநாடு வரை (சோழ நாட்டுக்கும் தொண்டை நாட்டுக்கும் இடைப்பட்ட பகுதி) பரவியிருந்தது என்பதை அப்பகுதியில் கிடைக்கின்ற அவனுடைய கல்வெட்டுக்கள் உறுதிப்படுத்துகின்றன.

இந்த மாவட்டத்தில், விழுப்புரம் வட்டத்தில் எண்ணா யிரம் என்ற ஊருக்கு வடமேற்கே அமைந்துள்ள 'மேல் கூடலூர் மலையில்' இயற்கையாக அமைந்துள்ள குகைத்தளத்தில், சமணப் படுக்கைகள் உள்ள இடத்தில் 'கோப்பரகேசரி பன்மர்க்கு யாண்டு நான்காவது, என்று கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல் வெட்டை ஒட்டினாற்போல் பல்லவ மன்னன் நிருபதுங்கனின் இரண்டாவது ஆட்சியாண்டு கல்வெட்டும் பொறிக்கப் பட்டுள்ளது. இக்கல்வெட்டின் துணை கொண்டும், எழுத்து அமைதியைக் கொண்டும் 'கோப்பரகேசரி பன்மர்' என்று குறிக்கப்படுகின்ற இக்கல்வெட்டு விஜயாலயனுடையதாகக் கொள்ளலாம்.

இக்கல்வெட்டு மழநாட்டு குளத்தூரைச் சார்ந்த செம்பியன் காடவதியரையன் என்கிற தாழி இழிவைகுந்தன் என்பவன் பனையூர் நாட்டுச் சேந்தமங்கலத்தில் உள்ள அவனிதிலகத்துத்தேவர் கோயிலுக்கு விளக்கெரிக்க ஆடுகள் கொடை கொடுத்ததைக் குறிக்கிறது.

சேந்த மங்கலம்

இந்தப் பகுதியில் சேந்தமங்கலம் என்ற ஊர் எங்குள்ளது என்பது தெரியவில்லை. பண்டைக்காலத்தில் சேந்தமங்கலம் என்ற பெயர் எண்ணாயிரம், பிரமதேசம், எசாலம் ஆகிய ஊர்களை சேர்த்து விளங்கியதால் இப்பெயர் பெற்றிருக்கலாம். இதே மாவட்டதில் திருக்கோயிலூர் வட்டம் வீரசோழபுரத்திலும் தஞ்சை கொண்ட கோப்பரகேசரியின் கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது.

எனவே இப்பகுதியில் இவன் காலத்தைச் சார்ந்த கல்வெட்டுகள் மட்டுமே காணப்படுகின்றன. இவன் காலத்தில் எடுக்கப் பெற்ற கோயில்கள் ஏதும் காணப்பெறவில்லை.

முதலாம் ஆதித்தன்

விஜயாலயனுக்குப் பிறகு அவனுடைய மகன் முதலாம் ஆதித்தன் பல்லவ மன்னன் அபராஜிதனை வெற்றி கொண்டு தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றினான். காவிரியின் இரு மருங்கிலும் பல சிவாலயங்களை எடுப்பித்த ஆதித்தன், இப் பகுதியில் பெருமளவில் கோயில்களை எடுக்காவிட்டாலும், ஒரு சில கோயில்களை எடுத்துள்ளான்.

சந்திரமௌலீஸ்வரர் கோயில்

விழுப்புரம் வட்டம் திருவக்கரையிலுள்ள சந்திரமௌலீஸ்வரர் கோயிலில் இராஜகேசரிவர்மனின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக் கல்வெட்டுகளை முதலாம் ஆதித்தன் காலத்தைச் சார்ந்தன வாகக் கொள்ளலாம். எனவே இக்கோயில் முதலாம் ஆதித்தன் காலத்தில் எடுக்கப்பட்டிருக்கலாம். இங்கு எழுந்தருளியுள்ள இறைவனைக் 'திருவக்கரை கற்றளி பெருமானடிகள்' என்று இக்கல்வெட்டு குறிக்கிறது.

வாலீஸ்வரர் கோயில்

விழுப்புரம், பேருந்து நிலையத்துக்கு அருகில் உள்ள பூந் தோட்டம் பகுதியில், குளத்தின் தென்கரையில் வாலீஸ்வரர் கோயில் உள்ளது. இக்கோயிலில் கருவறைப் பகுதி மட்டும் எஞ்சி நிற்கிறது. மற்ற பகுதிகள் சிதைந்து போய்ப் பிற்காலத்தில் கட்டி யுள்ளனர். இக்கோயிலில் இராஜகேசரிவர்மனின் கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டு மற்றும் கோயில் கட்டட அமைதி யினையும், கோயில் கோட்டங்களில் வைக்கப் பெற்றுள்ள சிற்பங்களையும் ஆய்வு செய்வோமானால் இக்கோயில் முதலாம் ஆதித்தன் காலத்தில் எடுக்கப்பட்டுள்ளது என்பது தெளிவு.

இந்த மாவட்டத்தில் திருக்கோயிலூர் வட்டத்தில் 'ஆதிச் சானூர்' என்ற ஓர் ஊர் உள்ளது. இவ்வூர் ஆதித்தசோழன் பெயரை நினைவூட்டுவதாக உள்ளது.

முதலாம் பராந்தகன்

முதலாம் பராந்தகன் ஆட்சிக்காலத்திலும் இந்த மாவட்டம் சிறப்புற்று விளங்கியது. இப்பகுதியில் சோழ நாட்டிற்கு அடுத்ததாக பல கோயில்களைக் கற்றளியாக்கிய பெருமை முதலாம் பராந்தகனையே சாரும். திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருநாவலூர், கிராமம், பேரங்கியூர், சித்தலிங்கமடம், திருக்கோயிலூர், கரடி, திருவாமாத்தூர் ஆகிய இடங்களில் பராந்தகன் கோயில்களை எடுத்துள்ளான். இக்கோயில்களில் உள்ள கல்வெட்டுகள் மூலம் அக்கால அரசியல் சூழ்நிலையையும், கலை வரலாற்றையும் அறிந்து கொள்ள முடிகிறது.

பராந்தகனின் பிற்கால ஆட்சியின் பொழுது சோழர்களுக்கும் இராட்டிர கூடர்களுக்கும் (மூன்றாம் கிருட்டினன்) தக்கோலம் என்ற இடத்தில் போர் மூண்டது. இப்போரில் பராந்தகனின் மூத்த மகனான இராசாதித்தன் இறந்து பட்டான்.

கண்டராதித்தன்

இதன் பின்னர் பராந்தகனின் இரண்டாம் மகனான கண்டராதித்தன் ஆட்சிக்கு வந்தான். இவன் காலத்திலும் இப் பகுதி சிறந்து விளங்கியுள்ளது. விழுப்புரம் வட்டத்தில் உள்ள கண்டாச்சிபுரம், கண்டமங்கலம் ஆகிய ஊர்கள் கண்டராதித்தன் பெயரை நினைவூட்டுவதாக உள்ளன. இவ்வூர் பெயர் ஸ்ரீ கண்டராதித்த மதுராந்தக மங்கலம் என்னும் சோழர் காலத்து பெயரின் திரிபாகும். இவ்வூர்களில் அவனால் எடுக்கப் பெற்ற கோயில்கள் உள்ளன. இப்பகுதியில் உள்ள பள்ளிச்சந்தல் என்ற ஊரில் இவன் பெயரால் கண்டராதித்தப் பெரும்பள்ளி என்னும் சமணப்பள்ளியும் இருந்திருக்கிறது.

சுந்தர சோழன் (இரண்டாம் பராந்தகன்)

கண்டராதித்தனுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த இரண்டாம் பராந்தகனாகிய சுந்தர சோழன் தன் ஆட்சிக்காலத்தில் இம்மாவட்டத்தில் திண்டிவனம் (கிடங்கில்) என்ற ஊரில் திருத்திண்டீசுவரதேவர் கோயிலை எடுத்துள்ளான். இக்கோயில் முதலாம் இராசராசன் காலத்திலும் சிறந்து விளங்கி உள்ளது.

உத்தமசோழன்

கண்டராதித்தன் மகனான உத்தமசோழன் மதுராந்தகன் என்பவன் இம்மாவட்டத்தில் திருவெண்ணைநல்லூர் திருஅருட்

துறை உடைய மகாதேவர் கோயிலுக்குத் திருப்பணிகள் செய்துள்ளதை கல்வெட்டுகள் குறிக்கின்றன. திருவக்கரையிலுள்ள சந்திரமௌலீஸ்வரர் கோயிலிலுள்ள உத்தமசோழனின் பத்தாவது ஆட்சி ஆண்டு கல்வெட்டு கோயில் வழிபாட்டிற்காக நிலம் கொடைகொடுத்ததைக் குறிக்கிறது.

செம்பியன் மாதேவியார்

திருவக்கரையில் சிதைந்த நிலையில் உள்ள சிவன் கோயிலின் அடிப் பீடத்தில் முதலாம் இராசராசனின் பதினாறாவது ஆட்சி யாண்டுக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு இந்தக் கோயில் செம்பியன் மாதேவியால் எடுக்கப்பட்டது என்பதை "ஸ்ரீ கண்டராதித்ததேவர் தம்பிராட்டியார் ஸ்ரீஉத்தம சோழரை, திருவயிறு வாய்த்த உடையபிராட்டியார் செம்பியன் மாதேவியார் எடுப்பித்தருளின ஸ்ரீ திருவக்கரை திருக்கற்றளி சிவலோகம் உடைய பரமசுவாமிகளுக்கு தேவதானமாகச் செய்த ஊர்" என்று குறிக்கிறது. ஓய்மா நாட்டின் ஒரு பகுதியாக விளங்கிய ஆமூர் நாட்டு மணலி என்ற ஊரை ஒரு தேவதானமாக சிவலோகமுடைய பரமசுவாமிகளுக்கு கொடுத்ததும் குறிக்கப்படுகிறது. கண்ட ராதித்தன் மனைவியும் உத்தம சோழனின் தாயுமான செம்பியன் மாதேவியார் சோழநாட்டுப் பகுதியிலும் தொண்டை நாட்டுப் பகுதியிலும் கோயில்களை எடுத்துள்ளார். இவ்வம்மையார் எடுப் பித்த கோயில்களில் இதுவே கடைசிக் கோயிலாகும். இதன் பிறகு இவ்வம்மையார் உயிர் வாழ்ந்ததாகத் தெரியவில்லை.

உளுந்தூர்ப் பேட்டை வட்டத்தில் உள்ள செம்பிமாதேவி என்ற ஊர் செம்பியன் மாதேவியின் பெயரை நினைவூட்டுவதாக அமைந்துள்ளது.

முதலாம் இராசராசன்

தமிழக வரலாற்றில் சோழமன்னன் முதலாம் இராசராசனின் ஆட்சிக்காலம் ஒரு பொற்காலமாகும். இவனுடைய ஆட்சிக்காலத் தில் தஞ்சையில் பெரிய கோயிலை எடுத்துள்ளான். விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில் உலகாபுரம், எண்ணாயிரம், மதகடிப்பட்டு, அகரம், பிரமதேசம், ஏமப்பேரூர், திருவக்கரை ஆகிய ஊர்களில் கோயில்களை எடுத்துள்ளான்.

உலகாபுரம்

திண்டிவனம் வட்டத்தில், திண்டிவனத்திலிருந்து உப்புவேலூர் செல்லும் வழியில் 18 கி.மீ. தூரத்தில் இவ்வூர் உள்ளது. இவ்வூர் இராசராசசோழனின் பட்டத்தரசியான தந்திசக்திவிடங்கி என்னும் உலோகமகாதேவி பெயரில் உலோகமகாதேவிபுரம் என்று வழங்குகிறது.

கைலாசமுடையார் கோயில்

இங்கு எடுக்கப்பட்டுள்ள சிவன்கோயில் கைலாசமுடையார் கோயில் என்றும், அரிகுலகேசரி ஈஸ்வரம் உடையார் கோயில் எனவும் கல்வெட்டுகள் குறிக்கின்றன. இவ்வூர் ஓய்மா நாட்டுத் தனியூரான உலோகமகாதேவிபுரம் ஸ்ரீ கைலாயத்து பரமசுவாமி கோயிலுக்கு அம்பலவன் கண்டராதித்தன் என்பவன் ஆடுகள் கொடை அளித்ததை முதலாம் இராசராசன் கல்வெட்டு குறிக்கிறது. இவனே இக்கோயிலைக் கட்டினான் என்றும் கல்வெட்டு குறிக்கிறது. பிற்காலச் சோழர்கள் காலத்தில் இவ்வூர் ஓய்மாநாட்டின் ஒரு பிரிவான பேரையூர் நாட்டில் அடங்கி யிருந்ததாகக் குறிக்கப்படுகிறது, இவ்வூரைச் சார்ந்த நகரத்தார் இக்கோயிலில் இராசேந்திர சோழ விடங்கர் சந்நிதி கட்டுவதற்கு நிலம் கொடையளித்ததை மற்றொரு கல்வெட்டு குறிக்கிறது. இக்கோயில் உண்ணாழி, அர்த்த மண்டபம், மகாமண்டபம் ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளது. இக்கோயிலைச் சுற்றி அஷ்டபரிவார தேவதைகளின் சந்நிதிகள் இருந்து அழிந்துள்ளன.

அரிஞ்சய விண்ணகர் வீற்றிருந்த ஆழ்வார்

இவ்வூரின் மேற்குப் பகுதியில் பெருமாள் கோயில் ஒன்று உள்ளது. இக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனை அரிஞ்சய விண்ணகர் வீற்றிருந்த ஆழ்வார் என்று கல்வெட்டு குறிக்கிறது.

இவ்வூரில் தெற்கில் வாசல் மகாசாத்தனார் என்ற ஐயனார் கோயிலும், கோகர்ணீஸ்வரமுடைய மகாதேவர் கோயில் ஒன்றும் இருந்ததாக கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இவ்வூரில் இருந்த ஏரிகளின் பெயர்கள் குறிக்கப்படுகின்றன. பெருமாள் கோயிலில் உள்ள இராசமகேந்திரனின் மூன்றாவது ஆட்சியாண்டு கல்வெட்டு மூலம் சுந்தரசோழப் பெரும்பள்ளி என்றழைக்கப்பட்ட சமணக் கோயில் இருந்ததையும் அறிய முடிகிறது.

சப்தமாதர்கள் கோயில்

விஜயாலயன், ஆதித்தன், பராந்தகன் மற்றும் முதலாம் இராசராசன் காலத்தில் எண்ணாயிரம் என்ற ஊர் சிறப்புற்று விளங்கியுள்ளது. இங்கு சப்தமாதர்களுக்கென்று தனியாக ஒரு கோயில் எடுக்கப்பட்டுள்ளது. இக்கோயிலுக்கு அருகில் ஒரு பலகைக் கல்லில் முதலாம் இராசராசனின் 23ம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து பிரமதேயம் தனியூர் ஸ்ரீ இராசராசச்சதுர்வேதி மங்கலத்தைச் சார்ந்த ஊர்ச்சபையார் நூற்றிரு பதின்மர் (கிராமகாரியம் திருத்துவார்) பிரம்மஸ்தானத்து ஸ்ரீ இராசராசன் தண்ணீர்ப் பந்தலில் கூட்டமாய் இருந்து இராசராசதேவர் திருவாய் மொழிந்தருளினபடி ஊர் காரியத்தை நிறைவேற்றியதைக் கல்வெட்டு குறிக்கிறது. இங்கு எடுக்கப்பட்டுள்ள சப்த மாதர்களுக்கு திருநந்தா விளக்கு ஒன்றுக்கும் சந்தி விளக்கு ஒன்றுக்கும் 68 ஆடுகள் கொடை கொடுத்தது குறிக்கப்படுகிறது. இந்த ஆடுகளைக் கொண்டு இவ்வூர் இராசராச சோழியோடொக்கும் உழக்கால் நித்தபடி நெய் அளக்க வேண்டுமென்று நேரிடையாக அரசனே ஆணையிட்டுள்ளது சிறப்புடையதாகும். இராசராசன் காலத்தில் சப்தமாதர்களுக்குத் தனியாகக் கோயில் எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் இக்கல்வெட்டு வாயிலாக அறிய முடிகிறது.

பலிபீடம்

எண்ணாயிரத்திலுள்ள நரசிங்கப்பெருமாள் கோயிலுக்கு எதிரில் உள்ள பலிபீடத்தின் அடிப்பகுதியில் முதலாம் இராசராசனின் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டின் துணை கொண்டும் கட்டட அமைப்பினைக் கொண்டும் இது இராசராசனால் எழுப்பிக்கப்பட்டதாகக் கொள்ளலாம்.

மதகடிப்பட்டு

விழுப்புரம்-பாண்டிச்சேரி நெடுஞ்சாலையில் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூரை வடகரை ஜயங்கொண்ட சோழ மண்டலத்துத் தனியூர் ஸ்ரீ திரிபுவன மஹாதேவிச் சதுர்வேதி மங்கலத்து ஸ்ரீ குண்டாங்குழி என்று கல்வெட்டு குறிக்கிறது. இங்கு ஸ்ரீ குண்டாங்குழிமகாதேவர் கோயில் உள்ளது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் திருக்குண்டாங்குலச்சேரி ஒழுகரை மகாதேவர் என்று குறிக்கப்படுகிறார். இக்கோயிலை ஸ்ரீராஜராஜதேவர் எடுப்பித்தருளின திருக்கற்றளி என்றும் கல்வெட்டு குறிக்கிறது. பூரிபட்டன்

என்பவன் இக்கோயிலைக் கட்டியுள்ளான் என்ற குறிப்பும் காணப் படுகிறது. இக்கோயில் சிகரம்' நார்த்தாமலை கடம்பவனேஸ்வரர் கோயிலையும் மேல் பாடியில் உள்ள அரிஞ்சிகை ஈஸ்வரத்தையும் ஒத்துக் காணப்படுகிறது.

அகரம்

கையிரூர் அகரம் (அய்யூர்) விழுப்புரத்திலிருந்து வடமேற்கே 4 கி.மீ. தூரத்தில் விழுப்புரம்-சென்னை நெடுஞ்சாலையில் அமைந் துள்ளது. இங்கு அபிராமேஸ்வரர் கோயில் உள்ளது. நிருபதுங்க ஜெயந்தங்கி சதுர்வேதிமங்கலம் என்று வழங்கிய இவ்வூர் முதலாம் இராச்சராசன் காலத்தில் ஜனநாத (முதலாம் ராசராசன் பட்டப்பெயர்) சதுர்வேதி மங்கலம் என்று அழைக்கப் பட்டது. ஜெயங்கொண்ட சோழமண்டலத்து வடகரை ராஜேந்திர சிம்ம வளநாட்டில் இவ்வூர் அமைந்திருத்தது. இது ஒரு பிரமதேய மாகும். இக்கோயில் முதலாம் இராசராசனால் எடுப்பிக்கப்பட்ட தாகும்.

பிரம்மதேசம்

இவ்வூர் எண்ணாயிரம், எசாலம், தாதாபுரம் ஆகிய ஊர்களுக்கு அருகிலுள்ளது. இது ஒரு தனி ஊராகும்; தனி ஊர் என்பது "தன்னிறைவு கொண்ட நிர்வாக அமைப்புடைய" ஊராகும். இது இராஜராஜசதுர்வேதி மங்கலம் என்றும் அழைக்கப்பெற்றது. இங்கு பிரம்மேஸ்வரர், பாடலீஸ்வரர் ஆகிய கோயில்கள் உள்ளன. இவ்விரண்டு கோயில்களும் முதலாம் இராசராசனால் கட்டப் பெற்றவைகளாகும்.

ஏமப்பேரூர்

ஏமப்பூர் என்று தற்பொழுது வழங்கும் இவ்வூர் திருக்கோயிலூர் வட்டத்தில் உள்ள திருவெண்ணெய்நல்லூருக்கு வடக்கே மலட் டாற்றின் வடகரையிலும், பெண்ணையாற்றின் தென்கரையிலும் அமைந்துள்ளது. ஏமப்பேரூர் ஒரு தனி நாடாக விளங்கி உள்ளது. இது இராசேந்திர சிம்ம வளநாட்டு திருமுனைப்பாடியின் ஒரு பகுதியாகும்.

திரு ஆலந்துறையுடைய பரமசுவாமி கோயில்

இங்கு வேதபுரீஸ்வரர் கோயில் உள்ளது. (திரு ஆலந்துறை யுடைய பரமசுவாமி கோயில்) இறைவன் பெயர் வேதபுரீஸ்வரர்

என்பது. அப்பர் பெருமான் இக்கோயிலைப் பற்றிப் பதிகம் பாடி உள்ளார்.

இக்கோயிலில் முதலாம் பராந்தகன், கன்னரதேவன் (மூன்றாம் கிருட்டினன்) இரண்டாம் ஆதித்தன், முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் ஆகிய மன்னர்களின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

உண்ணாழியின் சுவற்றில் முதலாம் இராசராசனின் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளதிலிருந்து, இக்கோயில் முதலாம் இராசராசன் காலத்தில் எடுக்கப் பெற்றதாகக் கொள்ளலாம். அல்லது இவன் காலத்தில் இக்கோயில் புதுப்பிக்கப்பட்டிருக்கலாம்.

திருவக்கரை

இங்குள்ள சிவலோகமுடைய பரமசுவாமி கோயில் முதலாம் இராசராசனின் (16ஆவது ஆட்சியாண்டில்) ஆட்சிக்காலத்தில் செம்பியன் மாதேவியாரால் எடுக்கப் பெற்றதாகும். இக்கோயிலைப் பற்றி 'செம்பியன் மாதேவியார், என்ற தலைப்பில் முன்னமே கூறப் பட்டுள்ளது.

முதலாம் இராசேந்திரன்

முதலாம் இராசேந்திரன் ஆட்சிக் காலத்தும் இம்மாவட்டம் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுத் திகழ்ந்திருக்கிறது. இவன் காலத்தில் எண்ணாயிரம், எசாலம், பனையவரம் ஆகிய ஊர்களில் கோயில்கள் எடுக்கப் பெற்றுள்ளன.

எண்ணாயிரம்

எண்ணாயிரத்தில் அழகிய நரசிங்கப் பெருமாள் கோயில் உள்ளது. இக்கோயிலில் உள்ள முதலாம் இராசேந்திரன் கல்வெட்டு ஸ்ரீமூலஸ்தானம் உடையார், இராஜராஜ விண்ணகர் ஆழ்வார், குந்தவை விண்ணகர் ஆழ்வார், சுந்தர சோழ விண்ணகர் ஆழ்வார், ஆகிய கோயில்களைக் குறிக்கின்றது.

இராசராச விண்ணகர் ஆழ்வார் கோயில் தற்பொழுது அழகிய நரசிங்கப் பெருமாள் கோயில் என்று வழங்குகிறது. முதலாம் இராசேந்திரன் காலத்தில் எண்ணாயிரத்தில் ஒரு வேதக்கல்லூரி இருந்ததை அவனுடைய கல்வெட்டு குறிக்கிறது. இக்கல்லூரியில் வேதம், வியாக்கரணம், மிமாம்சம், வேதாந்தம் ஆகியவை கற்பிக்கப்

பட்டன. இக்கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்குத் தனியாக விடுதியொன்றும் இருந்துள்ளது.

இக்கோயில் மற்ற கோயில்களிலிருந்து தனித்து விளங்குகிறது. நான்கு அடி உயரமுள்ள பீடத்தின் மீது இக்கோயில் உயர்ந்து நிற்கிறது. கிடந்த நிலையில் பெருமான் காட்சியளிக்கின்றார். திருநெல்வேலி மாவட்டம் சேரன்மாதேவியில் உள்ள இராமசாமி கோயில் அமைப்பினை இது ஒத்துள்ளது.

எசாலம்

இவ்வூர் விழுப்புரம்-செஞ்சி நெடுஞ்சாலையில் நேமூரிலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூரைக் கல்வெட்டுகள் 'எய்தார்' என்றும் 'எய்திரி' என்றும் குறிக்கின்றன. பனையூர் நாட்டுத் தனியூர் இராசராச சதுர்வேதிமங்கலத்தில் எசாலம் அமைந்திருந்தது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் 'திருவிராமேஸ்வரம் உடையார்' என்று குறிக்கப்படுகிறார். தற்பொழுது வாலீஸ்வரர் கோயில் என்று அழைக்கப்படுகிறது.

இக்கோயில் திருப்பணியின் போது, பூமிக்கடியிலிருந்து செப்பேடு ஒன்றும் செப்புத்திருமேனிகளும் கண்டெடுக்கப்பட்டன. இங்கு கிடைத்துள்ள செப்பேடு முதலாம் இராஜேந்திரனின் 24-வது ஆட்சியாண்டில் வெளியிடப் பெற்றதாகும். செப்பேட்டில் முதலில் சமஸ்கிருதப் பகுதியும் அடுத்து தமிழ்ப்பகுதியும் பொறிக்கப் பட்டுள்ளன.

இராசேந்திர சோழனின் குருவான சர்வ சிவபண்டிதர் என்பவர் இக்கோயிலைக் கட்டி உள்ளார். அதற்கு இராசேந்திர சோழன் அளித்த நிவந்தங்களும் குறிக்கப்படுகின்றன. தஞ்சையில் இராச ராசன் பெரிய கோயில் எடுத்ததையும் கங்கை கொண்ட சோழ புரத்தில் முதலாம் இராசேந்திரன் கோயில் எடுப்பித்ததையும் இச்செப்பேடு குறிக்கிறது. 15 செப்புத் தகடுகளுடன் கூடிய இச்செப்பேடு முத்திரையுடன் கூடிய வளையத்தில் கோர்க்கப் பட்டுள்ளது. முத்திரையில் ஒரு புலியும் அதனருகில் இரண்டு மீன் களும் கீழே ஒரு வில்லும் அதற்கு அடியில் ஒரு பன்றியும், ஸ்வஸ்திகம், தாமரை மலர் போன்ற சின்னங்களும் பொறிக்கப் பட்டுள்ளன. இதிலிருந்து இராசேந்திர சோழன், பாண்டியர், சேரர் மற்றும் சாளுக்கியர்களையும் வென்று அவர்கள் பகுதியினைத்

தன்னுடைய குடைக் கீழ் கொண்டு வந்துள்ளான் என்பது தெரி கிறது. முத்திரையின் விளிம்பில் பரகேசரிவர்மனாகிய இராசேந்திர சோழன் ஆணை இது என்று கிரந்த எழுத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலிலிருந்து அழகு வாய்ந்த பல செப்புத் திருமேனிகளும் கண்டெடுக்கப்பட்டன. நார்த்தாமலை கடம்பவனேஸ்வரர் கோயில், மதகடிப்பட்டு ஸ்ரீ குண்டாங்குழி மகாதேவர் கோயில், மேல்பாடி அரிஞ்சிகை ஈஸ்வரம் கோயில் ஆகிய கோயில்களை ஒத்துக் காணப்படுகிறது.

இரண்டாம் இராசேந்திரன்

ஜெயங்கொண்டார் கலிங்கத்துப்பரணியில் 'கொப்பையிற் பெரு களத்திலே முடி கவித்தவன்' என்று புகழப்படும் இரண்டாம் இராசேந்திரன் காலத்தில் இம்மாவட்டத்தில் திருக்கோயிலூர், ஓலக்கூர் ஆகிய இடங்களில் கோயில்கள் எடுக்கப்பட்டுள்ளன.

ஓலக்கூர்

திண்டிவனம்-செங்கற்பட்டு நெடுஞ்சாலையிலிருந்து 3 கி.மீ. தொலைவில் ஓலக்கூர் அமைந்துள்ளது. ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து ஓய்மா நாடான விஜயராஜேந்திர வளநாட்டு உலக்கையூரான இராஜமகேந்திரநல்லூர் என்று இவ்வூரை கல்வெட்டு குறிக்கிறது. இரண்டாம் இராசேந்திரனின் மகனும், பட்டத்து இளவரசனுமான இராசமகேந்திரன் பெயரில் இவ்வூர் வழங்கப் பெற்றுள்ளது.

அகத்தீச்சுரர் கோயில்

இங்குள்ள அகஸ்தீஸ்வரர் கோயிலில் எழுந்தருளியுள்ள இறை வனை திருவகஸ்தீஸ்வரம் உடைய மகாதேவர் என்று கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இரண்டாம் இராசேந்திரன் அகஸ்தீஸ்வரம் கோயிலைக் கற்றளியாக எடுப்பதற்கு 100 கழஞ்சு பொன்னை உலக்கையூராரிடம் கொடுத்ததை இரண்டாம் குலோத்துங்கனின் கல்வெட்டு கூறுகின்றது.

இக்கோயிலின் அடித்தளம் கருங்கல்லால் இரண்டாம் இராசேந்திரன் காலத்தில் கட்டப்பட்டதாகும். அதன் மேற்பகுதி செங்கல்லால் கட்ட ப்பட்டுள்ளது. இக்கோயில் உண்ணாழி, அர்த்த மண்டபம், மகாமண்டபம் ஆகிய பகுதிகளைத் தன்னகத்தே கொண் டுள்ளது. கோயில் விமானம் வட்டமாகவும் (வேசரம்), ஒரு நிலை யுடனும் விளங்குகிறது.

அதிராசேந்திரன்

திருவக்கரையில் உள்ள சந்திரமௌலீஸ்வரர் கோயில் வளாகத்தில் வரதராசப் பெருமாள் சந்நிதி உள்ளது. இச்சந்நிதியில் முதலாம் குலோத்துங்கனின் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஒரு கல்வெட்டு உடையார் அதிராசேந்திர தேவரின் இரண்டாவது ஆட்சியாண்டைக் குறிக்கிறது. இக்கல்வெட்டின் துணைகொண்டு தற்பொழுதுள்ள வரதராசப் பெருமாள் சந்நிதி அதிராசேந்திரன் காலத்தில் கட்டப்பட்டதாகக் கொள்ளலாம். இவன் ஒரு சில மாதங்களே ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும் தன்னுடைய பங்காக பிற்கால சோழர் கோயில் கட்டடக் கலைக்கு சிறப்புச் செய்துள்ளான்.

முதலாம் குலோத்துங்கன்

அதிராசேந்திரனுக்கு பிள்ளை இல்லாத காரணத்தால் சோழ நாட்டில் முடி சூட்டிக் கொள்வதற்கு வேறு சோழ அரசகுமாரன் இல்லாத நிலையில், விஜயாலயனால் தோற்றுவிக்கப்பட்ட முற்கால சோழர் ஆட்சி கி.பி. 1070-இல் முடிவுற்றது. இவனுக்குப் பின்னர் பட்டத்திற்கு வந்த முதலாம் குலோத்துங்கச் சோழன் தந்தை வழியில் கீழை சாளுக்கிய மரபையும், தாய் வழியில் சோழ மரபையும் சேர்ந்தவனாவான்.

கங்கைகொண்ட சோழபுரத்தைத் தலைநகராகக் கொண்டு சாளுக்கிய சோழ இளவரசனான முதலாம் குலோத்துங்கன் ஆட்சிக்கு வந்தான். இவன் காலம் தொடங்கி மூன்றாம் இராசேந்திரன் காலம் வரை இப்பகுதி பிற்காலச் சோழர்கள் ஆட்சிக்குட்பட்டிருந்தது.

முதலாம் குலோத்துங்கன் இம்மாவட்டத்தில் நெய்வணை, சித்தலிங்கமடம், அரகண்டநல்லூர், கனியமூர், எலவானாசூர், சிந்தாமணியகரம் ஆகிய ஊர்களில் கோயில்களை எடுத்தும் இப்பகுதியில் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ள கோயில்களுக்குக் கொடையும் அளித்துள்ளான்.

நெய்வணை

இவ்வூர் உளுந்தூர்ப்பேட்டை வட்டத்தில், சென்னை-திருச்சி இரயில் பாதையில், உளுந்தூர்ப்பேட்டை இரயில் நிலையத்திற்கு (நகர்) வடமேற்கே 7. கி.மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

சம்பந்தரால் பாடப்பெற்ற இவ்வூர் திருநெல்வெண்ணெய் என்றும் நெல்வணை என்றும் வழங்கியுள்ளது. இவ்வூர் கிளியூர் மலையமான்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. இங்கு வெண்ணெயப் பருக்கும், நீலமலர் கண்ணம்மைக்கும் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் கோயில்கள் எடுக்கப்பட்டுள்ளன.

கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் 'திருநெல்வெண்ணெய்' என்ற ஊர் திருமுனைப்பாடி நாட்டில் உள்ள குறுக்கைக் கூற்றத்தின் ஒரு பிரிவாகிய அதனூர்ப் பற்றில் அமைந்திருந்தது.

முதலாம் குலோத்துங்கனின் கல்வெட்டு கங்கை கொண்ட சோழவள நாட்டுத் திருமுனைப்பாடி கிளியூரைச் சார்ந்த இராசேந்திர சோழ சேதியரையன் என்பவன் கூத்தாடும் தேவரை இக்கோயிலில் எழுந்தருளிவித்ததைக் குறிக்கிறது.

இரண்டாம் குலோத்துங்கன் காலத்திலும் இக்கோயிலுக்கு கொடையளிக்கப் பெற்றுள்ளதை இவனுடைய கல்வெட்டு குறிக்கிறது.

நெய்வணை கோப்பெருஞ்சிங்கன் காலத்திலும் சிறப்புற்று விளங்கியது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவனை 'பொற்குடம் குடுத்து அருளிய நாயனார்' என்று இவனுடைய கல்வெட்டு குறிக்கிறது.

தினசிந்தாமணிநல்லூர்

விழுப்புரம் வட்டத்தில் விழுப்புரம் - சென்னை நெடுஞ்சாலையில், விழுப்புரத்திலிருந்து 12 கி.மீ. தூரத்தில் சிந்தாமணியகரம் என்ற ஊர் அமைந்துள்ளது.

முதல் குலோத்துங்கன் 'மதுராந்தகியை மணந்தான். இவள் புவனமுழுதுடையாள் என்றும் அழைக்கப்பெற்றாள். இவளுக்கு 'தினசிந்தாமணி' என்ற பட்டப்பெயரும் உண்டு. குலோத்துங்கனின் முதல் பட்டத்து அரசியாக இவ்வம்மையார் விளங்கியுள்ளார். இவள் பெயரில் இவ்வூர் 'தினசிந்தாமணி நல்லூர்' என்று அழைக்கப்பட்டது. இவ்வூர் முதலாம் குலோத்துங்கனால் உருவாக்கப் பட்டதாகும். தற்பொழுது சிந்தாமணி அகரம் என்று அழைக்கப் படுகின்ற தினசிந்தாமணி நல்லூர் முதலாம் இராசராசன் காலத்தில் இராசராச வளநாட்டின் ஒரு பகுதியாக விளங்கிய பனையூர்

நாட்டில் அமைந்திருந்தது. முதலாம் இராசேந்திரன் காலத்தில் வடகரை இராசேந்திரசிம்ம வளநாட்டு நிருபதுங்க ஜெயதங்கி சதுர்வேதி மங்கலத்தின் ஒரு பிரிவாக தினசிந்தாமணி நல்லூர் விளங்கியுள்ளது. இங்கு ஸ்ரீகைலாயம் குலோத்துங்க சோளீஸ்வர முடைய மகாதேவர் கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் விக்கிரம சோழன் காலத்தில் சோளீஸ்வரம் உடைய மகாதேவர் என்று குறிக்கப்பட்டது.

நிருபதுங்க ஜெயதங்கி சதுர்வேதி மங்கலம் பெண்ணை ஆற்றின் வடகரையில் அமைந்திருந்தது ஐயன் கோயில் பத்து, ஐயூர் அகரம், சிந்தாமணி அகரம், பூந்தோட்டம் (விழுப்புரம்) ஆகிய நான்கு ஊர்களும் இப்பகுதியில் அமைந்திருந்த பிரம்ம தேய ஊர்களாகும். இவ்வூர்கள் பிற்காலப் பல்லவர் (நிருபதுங்கன்) காலத்தில் சிறப்புற்று விளங்கியுள்ளது.

வைத்தீஸ்வரர் கோயில் (ஈஸ்வரர் கோயில்)

சிந்தாமணி அகரத்தில் உள்ள இக்கோயில் உண்ணாழிப் பகுதி சிறிய அளவில் சதுரமாக அமைந்துள்ளது. இக்கோயில் உண்ணாழிப் பகுதியும் அர்த்த மண்டபப் பகுதியும் ஒன்றாகவே அமைந்துள்ளது. முதலாம் குலோத்துங்கனுக்கு முன்பு தேவ கோட்டங்களில் பலவகைச் சிற்பங்கள் வைக்கப்பட்டிருந்தாலும் இவன் காலத்தில் ஊர்த்துவ தாண்டவமூர்த்தி, உமா ஆலிங்கன மூர்த்தி, பைரவர் ஆகிய சிற்பங்கள் கோட்டங்களில் வைக்கப் பெற்றுள்ளது சிறப்புடையதாகும்.

முஞ்ஞூர்

இரண்டாம் குலோத்துங்கன் காலத்திலும் இம்மாவட்டத்தில் ஒரு சில கோயில்கள் எடுக்கப்பட்டுள்ளன. திண்டிவனத்துக்கு அருகில் முஞ்ஞூர் என்ற ஊர் உள்ளது. இவ்வூரை ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து விஜயராஜேந்திர வளநாட்டு ஓய்மா நாட்டு, இராஜநாராயண சதுர்வேதி மங்கலமான முஞ்ஞூர் என்று கல்வெட்டு குறிக்கிறது. இங்குள்ள ஆடவல்லீஸ்வரர் கோயில் இரண்டாம் குலோத்துங்கன் காலத்திலும் அருளாளர்ப் பெருமான் கோயில் பிற்கால பாண்டியர் காலத்திலும் கட்டப் பெற்றவை களாகும். ஆடவல்லீஸ்வரர் கோயிலில் உள்ள இரண்டாம் இராசேந்திரனின் கல்வெட்டுகளில் ஒன்று இரண்டாம் குலோத்துங் கனைச் சொக்கப் பெருமாள் என்று குறிக்கிறது.

இரண்டாம் இராசராசன் காலத்தில் கைரூரை சார்ந்த பெரிய நாச்சியார் என்பவர் இக்கோயிலில் பெரியவினாயகப் பிள்ளை யாரை தோற்றுவித்து நிவந்தங்களுக்கும், விளக்கெரிக்கவும் கொடை கொடுத்துள்ளார். தக்ஷ்ணாமூர்த்தி சன்னதிக்கு முன் உள்ள சோபான மண்டபத்தையும் எடுத்துள்ளார்.

இரண்டாம் இராசாதிராசனின் ஆட்சிக் காலத்தில் செங்கேணி அம்மையப்பன் சியன் பல்லவ வேந்தனாகிய இராசநாராயண சம்புவராயன் என்பவன் எதிரகநாயன் திருமாளிகையைப் பழுது பார்ப்பதற்குக் கொடையளித்தது குறிக்கப்படுகிறது. மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் கீரனூரைச் சார்ந்த ஒருவன் 'மாதவரையன் மண்டபச்' சுவரைக் கட்டி நந்தவனம் வைப்பதற்கு நிலமும் கொடுத்துள்ளான். காடவரையனாகிய கூடல் ஆளப் பிறந்தான் அழகிய பல்லவன் காலத்தில் வட்டரையன் என்பவனின் வேண்டுகோளுக்கு இணங்க வன்னியநல்லூரில் ஆவணி மாதம் திருவிழாவுக்கும், முஞ்ஞூரில் உள்ள ஆடவல்ல நாயனார் கோயிலை பழுது பார்ப்பதற்கும் நிலம் கொடையளித்தது குறிக்கப்படுகின்றது.

திருக்காமக் கோட்டமுடைய பெரிய நாச்சியார்

முன்றாம் குலோத்துங்கன் காலத்தில் ஆடவல்லார் கோயிலில் திருக்காமக்கோட்டமுடைய பெரிய நாச்சியாரை எழுந்தருளி வித்ததை இவனுடைய கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

ஆடவல்லீஸ்வரர் கோயில்

ஆடவல்லீஸவரர் (ஆடவல்ல நாயனார்) கோயில் கிழக்குப் பார்த்து அமைந்துள்ளது. சதுரமான உண்ணாழியுடன் அந்த ராளம், அர்த்த மண்டபம் மகா மண்டபம் ஆகிய பகுதிகளுடன் திருச்சுற்று மாளிகையும் பெற்று, விளங்குகிறது.

ஆடவல்லீஸ்வரர் கோயில் உண்ணாழியின், நுழைவாயிலில் இரண்டு பக்கங்களிலும் சிறிய புடைப்புச் சிற்பங்களாக லிங்கம் மற்றும் ஜேஷ்டாவின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவ் வுருவங்கள் சி.பி. 5-6 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல்லவர் காலச் சிற்பங்களாக இருக்கலாம் என்று டாக்டர். இரா. நாகசாமி கூறுகின்றார்.

சித்திரமேழி விண்ணகர் எம்பெருமான் கோயில்

ஜடாவர்மன் திருபுவன சக்கரவர்த்தி வீரபாண்டியன் கல்வெட்டு முஞ்ஞூரைச் சார்ந்த ஒரு பிடாகையான சிங்கவனேந்தல் என்ற

ஊர் வரியிலியாக அளிக்கப்பட்டுள்ளதைக் குறிக்கிறது. இக்காலத்தில் முஞ்ஞூர் என்ற பெயர் புருஷோத்தமநல்லூர் என்று வழங்கியது. ஓய்மா நாட்டைச் சார்ந்த மக்கள் புருஷோத்தமனாகிய சித்திர மேழி விண்ணகர் எம்பெருமான் கோயில் வழிபாட்டிற்கும் திருப் பணிக்கும் கொடை கொடுத்துள்ளனர். வீரபாண்டியன் காலத்தில் இக்கோயில் அருளாளப் பெருமான் கோயில் என்று அழைக்கப் பெற்றது. இக்கோயிலில் உள்ள மற்றொரு கல்வெட்டு 'அம்பிர தேவன் என்பவனுடைய மகனான தட்சின கபிலேஸ்வர குமார மஹாபத்ரன்' என்ற கஜபதியைச் (ஓரிஸா) சார்ந்த ஒரு குறுநில மன்னன் அகம்வீரபோக விழாவிற்கு (தந்தையின் பெயரால்) நிலம் கொடை கொடுத்தது குறிக்கப்படுகின்றது. இக்கோயில் ஜடாவர்மன் வீரபாண்டியன் காலத்தில் எடுக்கப் பெற்றதாகும்.

மூன்றாம் குலோத்துங்கன்

இப்பகுதியில் இவன் காலத்தில் திருவக்கரை, திருவெண்ணெய் நல்லூர், பழங்கூர் ஆகிய இடங்களில் கோயில்களை எடுப்பித்தும். மண்டபங்களை கட்டுவித்தும் நிவந்தங்களை அளித்துமுள்ளான்.

திருவக்கரை

திருவக்கரையிலுள்ள சந்திரமௌலீஸ்வரர் கோயிலின் இரண் டாம் திருச்சுற்றில் கூட்டுத் தூண்களால் எடுக்கப் பெற்ற மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தின் தெற்குப் பக்கச் சுவரில் மதுரையும், பாண்டியன் முடித்தலையும் கொண்ட குலோத்துங்க சோழ தேவனின் இரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (மூன்றாம் குலோத்துங்கன்) பாண்டிய நாட்டை கொண்டருளிய அம்மையப்பன் கண்டர சூரியன் சம்புவராயன் என்பவன் நூற்றுக்கால் மண்டபத்தை எடுப்பித்ததை குறிக்கிறது.

கண்டர சூரியன் என்பவன் இக்கோயில் வெளிப்புறக் கோபுரத்தையும் கட்டியுள்ளான்.

பழங்கூர்

திருக்கோயிலூர் வட்டத்தில் இவ்வூர் அமைந்துள்ளது. மிலா டாகிய ஜனநாதவள நாட்டின் ஒரு பகுதியான குறுக்கை கூற்றத் தில் பழங்கூர் அமைந்திருந்தது என்று மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டு குறிக்கிறது. இங்கு கைலாசநாதர் கோயில் எடுக்கப் பட்டுள்ளது.

மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் பழங்கூரைச் சார்ந்த பெரியநாட்டார் இக்கோயிலைக் கட்டியுள்ளனர். கைலாசநாதர் கோயிற் சுவரின் ஒரு பகுதி துளா உடையான் நம்பியாள்வான் வீதிவிடங்கன் என்பவனால் கட்டப்பெற்றதாகும். இக்கோயிலுக்கு கடியாறு என்ற கிராமத்தின் ஒரு பகுதியை அறக்கொடையாக அளித்துள்ளனர்.

மூன்றாம் இராசராசன்

மூன்றாம் இராசராசன் காலத்தில் பிற்காலச் சோழர் ஆட்சி முடிவுற்றதெனலாம். திருவயிந்திபுரக் கல்வெட்டும் காலகளப என்பவர் எழுதிய, ''கத்யகர்ணாமிர்தம்'' என்ற நூலும் மூன்றாம் இராசராசனுக்கும் காடவ மன்னன் கோப்பெருஞ்சிங்கனுக்கும் தெள்ளாற்றில் நடைபெற்ற போரில் கோப்பெருஞ்சிங்கன் வெற்றி பெற்றதையும் மூன்றாம் இராசராசனையும் அவனது பட்டத்தரசியையும் சேந்தமங்கலத்தில் சிறை வைத்ததையும் குறிக்கின்றன.

சடையவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் சேந்த மங்கலம் கோட்டை முற்றுகைக்குள்ளாகியது. பின்னர் இக்கோட்டை கோப் பெருஞ்சிங்கனிடமே திருப்பி அளிக்கப்பெற்றது.

காடவரர்யர் காலம்

காடவராயர்

சோழர்களின் ஆட்சியை நிறுவிய விசயாலயனின் மகனான முதலாம் ஆதித்தன் தொண்டை மண்டலத்தை வெற்றி கொண்டு பல்லவர் ஆட்சியினை ஒரு முடிவுக்கு கொண்டு வந்தான். சோழர்கள் நானூறு ஆண்டுகள் ஆட்சி புரிந்துள்ளனர். இவர்களில் இரண்டாம் இராசராச சோழன் காலத்தில் குறுநில மன்னர்களாக விளங்கியவர் கள் தங்களைப் பல்லவர்கள் அல்லது காடவர்கள் என்று கூறிக் கொண்டனர். இவர்கள் 'காடவராயர்' என்ற பட்டப் பெயருடன் விளங்கினர்.

காடவராயர் தலைமுறை

கி.பி. 1186-இல் அரச நாராயண கூடல் ஆளப் பிறந்தானாகிய வீரசேகரனான காடவராயனால் விருத்தாசலம், திருவெண்ணெய் நல்லூர், முதலிய இடங்களில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு ஐந்து தலைமுறையைச் சார்ந்த காடவர்களைப் பற்றிக் குறிப்பிடு கின்றன. மூன்றாம் தலைமுறையில் வந்தவர்கள் ஏழிசை மோகன் என்ற பட்டம் பூண்டு விளங்கினர் என்று கல்வெட்டு குறிக்கிறது அரசநாராயண கூடல் ஆளப் பிறந்தானாகிய வீரசேகரனான காடவராயன் என்பவன் ஐந்தாவது தலைமுறையைச் சார்ந்தவனா வான். இவன் மூன்றாம் குலோத்துங்கனின் தொடக்க காலத்தில் வாழ்ந்தவனாவான். இவனுக்கு பின் வந்தவர்களும் இப்பட்டப் பெயர் கொண்டு விளங்கினர்.

இவனுக்கு அடுத்து வந்தவன் தொண்டை மண்டலம் கொண் டருளிய பல்லவாண்டாரான விரைவிரன் காடவராயன் என்பவ னாவான். இவன் கூடல் ஆளப்பிறந்தானாகிய காடவராயனின் மகனாவான்.

அழகிய பல்லவனாகிய மணவாளப் பெருமாள்

திண்டிவனத்தை அடுத்துள்ள முஞ்ஞூர் கல்வெட்டு கூடல் ஆளப்பிறந்தான் அழகிய பல்லவனாகிய காடவராயன் என்று குறிக்கிறது.

சேந்தமங்கலம் கல்வெட்டும் இதே பெயரைக் குறிப்பதுடன் கூடல் ஆளப்பிறந்தான்' அழகிய சியன் என்று குறிக்கிறது. கூடல் ஏழிசை மோகனான மணவாளப் பெருமாள் வானிலை கண்டானான காடவராயன் என்றும் குறிக்கப்படுகிறான்.

திருவெண்ணைநல்லூர் கல்வெட்டு இவனை அழகிய பல்லவனாகிய மணவாளப்பெருமாள் என்று குறிக்கிறது. இவன் ஜீய மகீபதி என்றும் அழைக்கப்பெற்றான்.

மணவாளப்பெருமாளுக்குப் பிறகு அவனுடைய மகனான மகாராசசிம்மன் சகலபுவனசக்ரவர்த்திகள் கூடல் அவனியாளப் பிறந்தானான கோப்பெருஞ்சிங்கன் பட்டத்திற்கு வந்தான்.

கோப்பெருஞ்சிங்கன்

சம்புகுலக் காடவராயர் மரபில் வந்த கோப்பெருஞ்சிங்கன் காடவர்கோன் என்றும், அவனி ஆளப்பிறந்தான் என்றும், காடவர் கோன் கழற்சிங்கன் என்றும், பேணு செந்தமிழ் வாழப்பிறந்த காடவன் என்றும் புகழப்பெற்றான்.

கோப்பெருஞ்சிங்சுன் சோழமன்னன் மூன்றாம் இராசராசனை வெற்றி கொண்டு கி.பி.1243-ல் மீண்டும் காடவர் ஆட்சியை நிறுவியவனான இவன் சேந்தமங்கலத்தில் அரசனாக முடிசூட்டிக் கொண்டான்.

பாண்டியர், போசளர் ஆகிய மன்னர்களையும் வெற்றி கொண்டான். இவனுடைய தந்தை மணவாளப் பெருமாள் காலத் தில் தலைநகராக விளங்கிய மதுரையிலிருந்து, சேந்தமங்கலத்திற்கு தலைநகரை மாற்றி இங்கு படைவீடு அமைத்த பெருமை கோப்பெருஞ்சிங்கனையேச் சாறும்.

பின்னர் மாறவர்மன் குலசேகர பாண்டியன் சோழநாடு, திருமுனைப்பாடி நாடு முதலிய நாடுகளை வெற்றி கொண்டு பாண்டிய நாட்டுடன் இணைத்துக் கொண்டதன் மூலம் கோப்பெருஞ்சிங்கனின் ஆட்சி முடிவுற்றதெனலாம்.

சேந்தமங்கலம்

உளுந்தூர்பேட்டை வட்டத்தில் விழுப்புரம் - திருச்சி நெடுஞ் சாலையில், திருநாவலூருக்கு அருகில் கெடில ஆற்றின் தென் கரையில், சேந்தமங்கலம் அமைந்துள்ளது. இவ்வூர் சேர்ந்த மங்கலம், சேந்தவன் மங்கலம், செயந்த மங்கலம் என்று பல பெயர்களில் அழைக்கப் பெற்றுள்ளது.

விசயநகர மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் இவ்வூர் மிலாடாகிய சனநாதவள நாட்டுக் குறுக்கை கூற்றத்தில் அமைந்திருந்தது. வீர பிரதாபதேவர் ஆட்சிக்காலத்தில் இவ்வூர் நடுவில் மண்டலத்தி லுள்ள இராசராச வள நாட்டைச் சேர்ந்த திருமுனைப்பாடி நாட்டில் அமைந்திருந்தது.

சேந்தமங்கலம் பல பெருநகரங்களோடு தொடர்பு கொள்ளும் வகையில் பெருவழிகள் அமைக்கப்பெற்றன. இவ்வூரிலிருந்து சென்ற பெருவழி ஒன்றுக்கு 'சேந்தமங்கலம் பெருவழி' என்று பெயர் வழங்கி யுள்ளதை கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

கலையார்வம் மிகுந்த காடவர்கள் ஆட்சிக் காலத்தில் கோயில் கள் எடுக்கப் பெற்றன. இவர்களின் தலைநகரான சேந்தமங்கலத்தில் சிறந்த கோட்டையினை அமைத்து அதற்குள் 'ஆபத்சகாயேச்சுரர்' கோயிலையும் எடுத்துள்ளனர்.

ஆபத்சகாயேச்சுரர் கோயில்

மணவாளப் பெருமாள் என்றழைக்கப்படும் காடவராயன் தன் பெயரால் 'வானிலை கண்டேசுவரம்' என்னும் இக்கோயிலை கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் எடுத்துள்ளான். இங்கு எழுந்தருளி யுள்ள இறைவன் ஆபத்துக்காத்தருளிய நாயனார் என்றும், 'சேந்தவன் மங்கலம் உடையார்' என்றும் குறிக்கப்படுகின்றார்.

காடவர்களின் கட்டடக் கலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக இக்கோயில் விளங்குகிறது. பெரும் பரப்பளவில் எடுப்பான தோற்றத்துடன் விளங்கிய இக்கோயில் தற்பொழுது சிதைந்து காணப்படுகிறது.

கிழக்குப் பார்த்து அமைந்துள்ள இக்கோயிலில் இரண்டு திருச் சுற்றுகள் உள்ளன. இரண்டாம் திருச்சுற்றில் உள்ள கிழக்குப் பக்க கோபுரம், அடித்தளத்திலிருந்து மேலே கூரைப் பகுதி வரை கருங்கல்லால் கட்டப்பெற்றுள்ளது. அதற்கு மேலே உள்ள கட்டடப்

பகுதி முழுவதுமாக சிதைத்து விட்டது. திருச்சுற்றும் ஆங்காங்கே இடிந்து காணப்படுகிறது.

ஆலால சுந்தரன் கூடம்

இரண்டாம் திருச்சுற்றில் நுழைந்தவுடன், வடபுறம் தெற்குப் பார்த்த நிலையில் ஒரு மண்டபம் உள்ளது. இம்மண்டபம் உருளைத் தூண்களால் கட்டப் பெற்றுள்ளது. இதுவே கல்வெட்டு களில் குறிக்கப்படும். 'ஆலால சுந்தரன் கூடமாக' யிருக்கலாம். தற்பொழுது இக்கூடம் இடிந்த நிலையில் காணப்படுகிறது.

இதனை அடுத்து முதல் திருச்சுற்று நுழைவாயில் வழியாக உள்ளே செல்லலாம். நுழைவாயிலில் நிலைத்தூண்கள் பெரிய அளவில் அமைக்கப் பெற்றுள்ளன. இதன் மீது அமைந்துள்ள கோபுரமும் சிதைந்துள்ளது. இதனையொட்டி திருச்சுற்று மாளிகை அமைந்துள்ளது. இந்த மாளிகையை உருளைத்தூண்கள் தாங்கி நிற்கின்றன. திருச்சுற்று மாளிகைப் பகுதியும் இடிந்து காணப் படுகிறது. நுழைவாயிலின் எதிரில் நந்தியுடன் கூடிய மண்டபம் உள்ளது. தற்பொழுது இதன் முன்பு இலிங்கோத்பவர் சிற்பத்தை வைத்து மக்கள் வழிபடுகின்றனர்.

முகமண்டபம்

நந்தி மண்டபத்திற்கு எதிரில் உள்ள முகமண்டபத்தின் வட புரம் ஆறுமுகனுக்கு சந்நிதி எடுக்கப் பெற்றுள்ளது. இந்த சந்நிதியின் நுழைவாயிலின் மேல்பகுதியில் பல்வேறு இசைக் கருவிகளை வாசிக்கின்ற உருவங்களும் நாட்டிய சிற்பங்களும் புடைப்புச் சிற்பங்களாக பொறிக்கப்பட்ட கருங்கல் துண்டுகள் பதிக்கப் பெற்றுள்ளன. இது வேறு இடத்திலிருந்து கொண்டு வரப் பெற்று எந்தவித தொடர்புமில்லாமல் இச்சந்நிதியில் வைத்து கட்டப்பட்டுள்ளது.

இதனையடுத்துள்ள மகாமண்டபத்தின் தென்பக்கச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு இம்மண்டபத்தை அகங்கார குட்டராயன் திருமண்டபம் என்று குறிக்கிறது. மகாமண்டபத்தின் தென்புறத்தில் விநாயகர் சிற்பமும் வடபுறத்தில் உமா மகேஸ்வரர், அம்மன், சண்டிகேஸ்வரர் ஆகிய சிற்பங்களும் தனித்தனியாக வைக்கப் பட்டுள்ளன.

இம்மண்டபத்தின் வடகிழக்கு மூலையில் கால பைரவர், சூரியன், சம்பந்தர் ஆகிய சிற்பங்கள் வழிபாட்டில் உள்ளன.

சண்டிகேஸ்வர் சந்நிதி

கோயிலின் வடக்குப்பக்கம் அமைந்துள்ள இச்சந்நிதி 'ராஜக்கணை' என்ற பட்டப்பெயரை உடைய பாண்டிய மன்னனால் கட்டப்பட்டது என்பதை இங்குள்ள கல்வெட்டு உறுதிப் படுத்துகிறது.

அர்த்த மண்டபம்

தேவகோட்டத்தில் வைக்கப்பட வேண்டிய தக்ஷணாமூர்த்தி பிரம்மா ஆகிய சிற்பங்கள் தற்பொழுது அர்த்த மண்டபத்தில் வைக்கப் பெற்றுள்ளது.

உண்ணாழி

இதனையடுத்து உண்ணாழி பகுதியில் இலிங்க வடிவில் ஆபத்சகாயீச்சுரர் காட்சியளிக்கின்றார். உண்ணாழியின் மீது அமைந்துள்ள விமானம் இரண்டு நிலைகளைக் கொண்டதாக விளங்குகிறது. அடிபீடத்திலிருந்து கொடுங்கை பகுதி வரை கருங்கல்லால் கட்டப்பெற்றுள்ளது. அதன் மேல் பகுதி முழுவதும் செங்கல்லால் கட்டப் பெற்றுள்ளது. விமானத்தின் மேல் வட்ட வடிவமான (வேசரம்) சிகரம் உள்ளது. விமானத்தின் மீது கலசம் காணப்பெறவில்லை.

தேவகோட்டங்கள்

இக்கோயிலில் உள்ள தேவகோட்டங்களில் வைக்கப் பெற்றிருந்த சிற்பங்கள் ஏதும் தற்பொழுது காணப்பெறவில்லை. உண்ணாழியின் தென்பக்கத்தில் உள்ள தக்ஷணாமூர்த்தி கோட்டத்திற்கு எதிரில் தூண்களுடன் கூடிய மண்டபம் உள்ளது. இந்த மண்டபமும் காடவர்கள் காலத்தில் எடுக்கப்பெற்றதாகும். இது காடவர் கலைப் பாணிக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

கூட்டுத் தூண்கள்

உண்ணாழியின் தென்மேற்கு வடமேற்கு பகுதியில் மூன்று எண்பட்டைத் தூண்கள் இணைத்து கூட்டுத் தூண்களாக அமைக்கப்பட்டுள்ளன. அதன் மீது உள்ள பலகை பெரிய அளவில் அமைக்கப்பட்டுள்ளது. அதன் மீது உள்ள போதிகை முப்பட்டை போதிகையாகும். இந்தப் போதிகைப் பகுதிக்கு

மேல் பூதவரியும் அதன் மீது உள்ள கட்டடத்தின் கூரைப்பகுதியை தாங்கி நிற்கிறது. இதே போன்று கோயிலின் முகமண்டபத்தில் வடகிழக்கு தென்கிழக்கு மூலையில் மூன்று எண்பட்டைத் தூண்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு கட்டப்பட்டுள்ளன. இதுபோன்ற கூட்டுத் தூண்களை காடவர்கள் கோயில் கட்டடக்கலையில் அமைத்துள்ளது, அவர்களுக்கே உரிய சிறப்பாகும்.

திருக்காமக்கோட்டமுடைய நாச்சியார் கோயில்

அன்னைக்காக எடுக்கப்பெற்ற திருக்காமக் கோட்டமுடைய நாச்சியார் கோயிலும், இறைவனுக்கு கோயில் எடுக்கப்பெற்ற காலத்திலே எடுக்கப் பெற்றிருக்கலாம்.

கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் அரையன் உதையப் பெருமாள் என்னும் தொண்டைமான் வானிலை கண்டீஸ்வரமுடையார் கோயிலுக்கும், திருக்காமக் கோட்டமுடைய நாச்சியார் கோயிலுக்கும் ஒரே சமயத்தில் விளக்கு அளித்துள்ளதிலிருந்து இந்த இரண்டு கோயில்களும் வழிபாட்டில் இருந்தமை தெரிய வருகிறது.

பல்வகை சந்திகள்

இக்கோயிலை எடுப்பித்த மணவாளப் பெருமாள் கோயிலில் தன் பெயரால் 'ஏழிசை மோகன் சந்தி' என்ற ஒரு சந்தி வழிபாட்டிற்கும் வழிவகை செய்துள்ளான்.

இவனுடைய மகன் கோப்பெருஞ்சிங்கன் தன்னுடைய மற்றொரு பெயரால் 'அய்யணங்காரன் சந்தி' என்ற ஒரு சிறப்பு வழிபாட்டினையும் இக்கோயிலில் ஏற்படுத்தியுள்ளான். இதுமட்டுமல்லாமல் இவனுடைய பெயரில் 'எல்லாந்தலையான பெருமாள்'' என்ற ஒரு திருநாளையும் ஏற்படுத்தியுள்ளான்.

அறக்கொடைகள்

இக்கோயிலுக்கு பாண்டிய மன்னர்களும், விஜய நகர மன்னர்களும் பல்வகை அறக்கொடைகளை அளித்துள்ளனர், இவர்களால் ஏற்படுத்தப் பெற்ற சிறப்பு வழிபாட்டிற்கும் திருநாளுக்கும் செலவுக்காக நிலங்களையும், பசுக்களையும், பொன்னையும் கொடையளித்துள்ளனர். இக்கோயிலுக்கு விளக்கினையும் கொடையளித்துள்ளனர் என்பதை கல்வெட்டுகள் குறிக்கின்றன.

வீரபாண்டிய தேவர் என்பவர் தன்னுடைய பெயரால் 'பூமி புத்திரன் சந்தி' என்ற ஒரு வழிபாட்டையும் ஏற்படுத்தியுள்ளார்.

பராக்கிரம பாண்டியனின் காலத்தில் ஒரு குறுநிலத் தலைவனாக விளங்கிய 'ஸ்ரீ ரங்கநாத நாயக்கர்' என்பவர் தன்னுடைய பெயரான 'கண்டரகண்டன்' என்ற பெயரால், ஒரு வழிபாட்டிற்கும் ஏற்பாடு செய்துள்ளார்.

கோட்டைக் கோயில்

கோயில் கட்டடக் கலையில் இது வரை கையாளப் பெறாத ஒரு வகை கட்டடக் கலையைக் காடவர்கள் புதிதாக தோற்றுவித்துள்ளனர். கோயில் திருச்சுற்றில் உள்ள மதில்கள், கோயிலுக்கு அரணாக மட்டுமல்லாமல், போர்க் காலத்தில் பாதுகாப்பினை யொட்டி கோட்டையாகவும் பயன்பட்டுள்ளது என்பது சிறப்புடையதாகும்

இக்கோயில் இரண்டாம் திருச்சுற்று சுவரின் மீது வடமேற்கு மூலையில் இடைவெளிகளுடன் கூடிய தனித்தனி செங்கற்கட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. மற்ற மூன்று பக்கங்களிலும் இது போன்று அமைக்கப் பட்டிருக்க வேண்டும். இந்த இடைவெளிப் பகுதியில் படைக்கலத்தினை ஏந்திய வீரர்கள் நின்று காவல் புரிந்துள்ளனர். இப்படை வீரர்கள் முன்கூட்டியே வரும் பகைவர்களை அறிந்து அரசனுக்கு தெரிவிக்கவும், பகைவர்கள் கோட்டையை தாக்கி உள்ளே நுழையமுடியாதபடி தடுக்கவும், இது போன்ற அமைப்பு அக்காலத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

துர்க்கை கோயில்

சேந்தமங்கலத்தின் தெற்குப்பக்க வாயிலின் அருகில் துர்க்கை கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் விஜயநகர மன்னன் வீர பிரதாப மகாராயர் காலத்தில் (கி.பி 1430) புதுப்பிக்கப் பட்டதாகும். தற்பொழுதுள்ள கோயில் பிற்காலத்தில் கட்டப்பட்டதாகும். இதில் வைக்கப் பெற்றுள்ள துர்க்கையின் சிற்பம் கி பி. 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

இக்கோயிலுக்கு வடபுறத்தில் தற்பொழுது புதிதாக ஆகம விதிப்படி மாமல்லபுரம், திரு. கணபதி ஸ்தபதி அவர்கள் அமைத்துக் கொடுத்த அமைப்பில் கோயில் கட்ட, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வண்டிப்பாளையம் திரு. சுப்பிரமணியம் அவர்கள் ஏற்பாடுகள் செய்து, கோயிலில் ஒரு பகுதியை கட்டி முடித்துள்ளார். இக்கோயில் இன்னமும் முழுமையாக கட்டி முடிக்கப் பெறவில்லை. இக்கோயிலை கட்டி முடிப்பதற்கு வேண்டிய பணிகளை ஊர் மக்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

அழகிய பல்லவ விண்ணகர் எம்பெருமான் கோயில்

திருக்கோயிலூர் வட்டத்தில் உள்ள திருவெண்ணெய் நல்லூரிலும் கோப்பெருஞ்சிங்கன் கோயில் எடுத்துள்ளான். இக் கோயில், வைகுந்தப்பெருமாள் கோயில் என்றும் அழகிய பல்லவ விண்ணகர் என்றும் அழகிய பல்லவனாகிய தன்னுடைய தந்தை மணவாளப்பெருமாள் பெயரில் அமைத்துள்ளான். மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் கோப்பெருஞ்சிங்கன் இக் கோயிலை புதுப்பித்துக் கட்டியுள்ளான். புதுப்பிக்கப்பட்ட இக் கோயிலில் முன்னரே பொறிக்கப்பட்டிருந்த கல்வெட்டுகளை படி யெடுத்து மீண்டும் பொறித்துள்ளான். இக்கோயிலில் அழகிய பல்லவ கோப்பெருஞ்சிங்கனின் தாயார் பெயரில் பெரிய பிராட்டியார் திருமேனிக்குத் திருவிடையாட்டமாக செஞ்சி என்ற ஊரில் நிலம் கொடை கொடுத்ததை இக்கோயில் கல்வெட்டு குறிக்கிறது. இக்கோயில் கட்டும் பணி தொடக்கத்தில் தன்னுடைய தாயாரால் தொடங்கப்பெற்று இருந்தாலும் தன்னுடைய தந்தை இறந்துபட்ட காரணத்தால் இப்பணி தடைபட்டது. பின்னர் கோப்பெருஞ்சிங்கன் கி.பி. 1254ல் இக்கோயிலை கட்டி முடித்து இக்கோயிலுக்கு அழகிய பல்லவ விண்ணகர் எம்பெருமான் என்று பெயரையும் சூட்டினான்.

பாண்டியர் காலம்

காடவர் ஆட்சிக்குப் பிறகு திருமுனைப்பாடி நாடு பாண்டியர் ஆட்சிக்குட்பட்டது. இவர்கள் 70 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி புரிந்துள்ளனர். இவர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன், முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் ஆகியோ ராவார்கள்.

சம்புவராயர் காலம்

சம்புவராயர் தோற்றம்

சம்புவராயர்கள் சம்புவை (சிவன்) தங்களின் குல முதல்வனாகக் கொண்டிருந்தனர், என்பதை இலக்கியங்கள், கல்வெட்டுகள் வாயிலாக அறிய முடிகிறது. சம்புவராயர்களின் வரலாற்றைத் தெரிந்து கொள்வதற்குத் தமிழ் இலக்கியங்கள், வடமொழி இலக் கியங்கள், பிற குல அரசர்களைப் பற்றி எழுதப்பெற்றுள்ள வரலாற்று நூல்கள், மெக்கன்சி என்னும் ஆங்கிலேய அதிகாரி திரட்டிய ஹைபீது, கல்வெட்டுகள் ஆகியவை பெரிதும் துணை புரிகின்றன. இவர்கள் வீர சம்பன், சம்புகுல பெருமாள், செங்கேணி, பள்ளிகள், வன்னியர் ஆகிய பட்டங்களைப் பெற்று விளங்கினர்.

சம்புவராயர்கள் சோழமன்னன் அதிராஜேந்திரன் காலந் தொடங்கி மூன்றாம் இராசராசன் காலம் வரை அவர்களின் கீழ் சிற்றரசர்களாகவும், படைத்தலைவர்களாகவும், அதிகாரி களாகவும், விளங்கி உள்ளனர். இவர்கள் சேனாபதி, நாடாழ்வான் என்ற பட்டங்களும் பூண்டு விளங்கினர். இவர்கள் வில்லாற்றலில் சிறந்து விளங்கியதால் வில்லிகள் என்றும் அழைக்கப்பெற்றனர்.

சமுதாய அமைப்பில் சம்புவராயர்கள்

தொடக்கக் காலத்தில் காடுகளில் வேட்டைத் தொழிலை மேற்கொண்ட இவர்கள் பள்ளிகள் என்று அழைக்கப் பெற்றனர். பின்னர் இவர்கள் சோழர்களின் படைகளில் சேர்ந்து செல்வந்தர் களாகவும், நில உடைமையாளர்களாகவும் மாறினர்.

பள்ளி நாட்டவர்

பள்ளிகளுக்குள் ஏற்படுகின்ற பல்வேறு குலச்சிக்கல்களை தீர்ப்பதற்கும் அவர்களை வழிநடத்திச் செல்வதற்கும் தங்களுக்கு என்று தனியாக ஒரு குழுவை அமைத்துக் கொண்டனர். இக் குழுவைப் பள்ளி நாட்டவர் அல்லது பன்னாட்டார் என்று கல்வெட்டு குறிக்கிறது.

சம்புவராயர்களின் ஆட்சிப்பரப்பு

விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில் திண்டிவனம் வட்டத்தில் உள்ள முஞ்ஞூறு என்ற இடத்தை

தலைமை இடமாகக் கொண்டு, சுற்றியுள்ள பகுதிகளையும் தங்களுடைய ஆளுகையின் கீழ் கொண்டு வந்தனர். சம்புவராயர்களின் ஆட்சிப்பரப்பு இன்றைய செங்கை எம்.ஜி.ஆர், வடார்க்காடு அம்பேத்கார், தென்னார்க்காடு வள்ளலார், தற்பொழுது புதிதாக தொடங்கப்படுகின்ற விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாக விளங்கியது.

சம்புவராயர்களின் தனி அரசு

இந்தக் கால கட்டத்தில் வீர சம்பன் சம்புவராயர் என்பவன் சிறப்புற்று விளங்கியுள்ளான். இவனை அடுத்து இரண்டாவது தனி அரசை ஏகாம்பர நாதன் குலசேகர சம்புவராயனும், இவனுடைய மகன் வென்று மண்கொண்ட சம்புவராயனும் நிறுவி உள்ளனர். இவனுடைய மக்களான திருமல்லிநாதன், இராச நாராயண சம்புவராயன் (முதலாம் இராசநாராயணன்) பொன்னின் தம்பிரான் இராசநாராயண சம்புவராயன் (இரண்டாம் இராச நாராயணன்) ஆகியோர் பட்டத்திற்கு வந்தனர்.

சம்புவராயர்களின் வீழ்ச்சி

கி.பி. 14ம் நூற்றாண்டில் சம்புவராயர்களை விஜயநகர மன்னனான கம்பணன் தோற்கடித்ததை இவனுடைய மனைவி கங்காதேவி எழுதிய மதுரா விஜயம் என்னும் நூல் குறிப்பிடு கின்றது. இந்தப் போரில் இரண்டாம் இராசநாராயணன் வீர மரணம் அடைந்தான். கம்பணன் மீண்டும் சம்புவராயர்களை ஆளும்படி செய்தது மட்டுமல்லாமல் அவர்களுடன் திருமண உறவை யும் ஏற்படுத்திக் கொண்டான். அப்பொழுது முதலாம் இராச நாராயணன் இறந்து பட்டதால் இவனுக்குப் பின்னர் மூன்றாம் இராசநாராயணன் ஆட்சிக்கு வந்தான். அவனும் இறந்த பிறகு சம்புவராயர் ஆட்சி முடிவுற்றது.

சம்புவராயர் கலைத்தொண்டு

சம்புவராயர்கள் தங்களுடைய ஆட்சிக் காலத்தில் கலைக்கு ஆற்றியுள்ள தொண்டு போற்றுதற்குரிய ஒன்றாகும். குறிப்பாக விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில் சம்புவ ராயர்கள் காலத்தில் கோலியனூர், கண்டாச்சிபுரம், தேவனூர், திருவாமாத்தூர், மாரங்கியூர், திருவெண்ணெய்நல்லூர், திருவக்கரை ஆகிய ஊர்களில் கோயில்களை எடுத்தும் மண்டபங்களைக் கட்டு வித்தும், கோபுரங்களை எடுப்பித்தும் உள்ளனர். இவர்கள்

ஏற்கனவே எடுக்கப் பெற்ற கோயில்களுக்குக் கொடையும் அளித்து உள்ளனர் என்பதைக் கல்வெட்டுகள் வாயிலாக அறிய முடிகிறது.

கோலியனூர்

விழுப்புரம் வட்டத்தில், விழுப்புரம் - பாண்டிச்சேரி நெடுஞ் சாலையில் இவ்வூர் அமைந்துள்ளது. முதலாம் இராசநாராயணச் சம்புவராயர் கல்வெட்டு இவ்வூரை கோலியபுரநல்லூர் என்று குறிக்கிறது. விஜயநகர மன்னன் விருப்பண்ணன் கல்வெட்டு 'இராசராச வளநாட்டுப் பனையூர் நாட்டு நகரம் அருமொழி தேவபுரம் என்று இவ்வூரைக் குறிக்கிறது.

திருவாலீஸ்வரமுடைய நாயனார் கோயில்

கோலியனூரில் அமைந்துள்ள திருவாலீஸ்வரமுடைய நாயனார் கோயில் முதலாம் இராசநாராயண சம்புவராயர் காலத்தில் கட்டப் பட்டுள்ளது என்பதை இக்கோயில் உண்ணாழியில் பொறிக்கப் பட்டுள்ள இவனுடைய கல்வெட்டு மூலம் உறுதிப்படுத்தலாம். இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் பெயர் திருவாலீஸ்வரமுடைய நாயனார் என்பதாகும். இறைவியின் பெயர் பெரியநாயகி என்ப தாகும்.

இவ்வூரில் உள்ள கைக்கோளர்களில் அகிலாத்திரை தேவர் மகள் திருமேனி அழகியாரான நாற்பத்தெண்ணாயிர மாராயர் என்பவர் இக்கோயிலில் திருப்பணி செய்துள்ளார் இவரே கோயில் திருவாசலையும், இடபதேவர் சந்நிதியையும், பலி பீடத்தையும் கட்டுவித்துள்ளார்.

சோழர் காலத்தில் எடுக்கப்பெற்ற இக்கோயில் சிதைந்த நிலையில் சம்புவராயர் காலத்தில் மீண்டும் புதுப்பித்துக் கட்டப் பெற்றுள்ளது என்பது தெரிகிறது.

கண்டாச்சிபுரம்

திருக்கோயிலூர் வட்டம், விழுப்புரம் திருவண்ணாமலை நெடுஞ்சாலையில் கண்டாச்சிபுரம் அமைந்துள்ளது. இவ்வூரை மலாடாகிய ஜனநாத வளநாட்டுக் குறுக்கைக் கூற்றத்துத் திரு முனைப்பாடி நாட்டுப் பெண்ணை வடகரை உழைக்காட்டு நாட்டுத் திருக்கோவிலூர்ப் பற்று வீரதுங்கப் புரப்பற்று நெற்குப்பையான கண்டராதித்தபுரம் என்று விஜயநகர மன்னன் கம்பணனின் கல்வெட்டு குறிக்கிறது.

இங்கு திருவிராமீசுவரமுடையார் கோயில் உள்ளது. இக் கோயிலில் முதல் இராசநாராயண சம்புவராயார் கல்வெட்டுக்கள் காணப்படுவதால் இக்கோயில் இவன் காலத்தில் கட்டப் பெற்றிருக்க லாம்; அல்லது சோழர்கள் காலத்தில் எடுக்கப் பெற்ற இக்கோயில் சிதைந்த நிலையில் சம்புவராயர் காலத்தில் புதுப்பித்துக் கட்டப் பட்டிருக்கலாம்.

தேவனூர்

செஞ்சி வட்டம், செஞ்சி சேத்துப்பட்டு நெடுஞ்சாலையில் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூர் ஒரு சோழர் தலைவன் பூலோக தேவேந்திரன் என்பவனால் தோற்றுவிக்கப்பட்டதாகும். எனவே இவன் பெயரில் இவ்வூர் தேவனூர் என்று வழங்கியது. இங்கு திருநாகீசுவரமுடைய நாயனார் கோயில் உள்ளது. இக்கோயிலில் உள்ள இரண்டாம் குலோத்துங்கன் கல்வெட்டு செங்கேணி நாலாயிரவன் அம்மையப்பனான இராசேந்திர சோழ சம்புவராயர் இக்கோயிலுக்குக் கொடுத்த கொடையினைக் குறிக்கிறது. இவன் காலத்தில் இக்கோயில் கட்டப்பட்டிருக்கலாம். இக்கோயில் தேவரடியார் அடியார்க்கு நல்லான் யாதவராயர் என்பவர் கோயிலைச் சுற்றி திருநடை மாளிகை கட்டியதையும், திருப்பணி செய்வித்ததையும் குறிக்கிறது. மற்றொரு தேவரடியாரான ஆசிரி யங்காத்தாரான மன்னரை முடிசூட்டும் பெருமாள் என்பவர் திருமதிளும், திருக்கோபுரமும், திருமடைப்பள்ளியும், திருவோலக்க மண்டபமும் கட்டுவித்ததைக் கல்வெட்டு குறிக்கிறது.

திருவக்கரை

இங்கு எடுக்கப் பெற்றுள்ள சந்திர மௌலீஸ்வரர் கோயில் திருஞானசம்பந்தரால் பாடப்பெற்றதாகும். இக்கோயில் முதலாம் இராசராசன் காலம் தொடங்கி பாண்டியர்கள், காடவர்கள், விஜயநகர, சம்புவராயர் காலம் வரை சிறப்புற்று விளங்கியுள்ளது.

இங்குள்ள ஆளுடையார் கோயில் திருக்கோபுரத்தை அம்மை அப்பன் பாண்டிய நாடு கொண்டானான கண்டர் சூரியன் சம்பு வ ராயன் என்பவன் கட்டியுள்ளான். இவன் பெயரில் இக்கோபுரம் 'கண்டர் சூரியன் திருக்கோபுரம்' என்று அழைக்கப்பெற்றது. இவனே இக்கோயிலில் 'திருமண்டபமும் எடுத்துள்ளான். இம் மண்டபமும் இவன் பெயரில் கண்டர் சூரியன் திருமண்டபம் என்று வழங்கியது.

இக்கோயிலுக்கு ஐந்து நிலைக்குத்து விளக்கு ஒன்றினையும் கொடை அளித்துள்ளான்.

திண்டிவனத்திற்கு அருகில் உள்ள 'முஞ்ஞூறு' பகுதியில் குறுநில மன்னனாக விளங்கிய 'முஞ்ஞூற்றுக் குடிப்பள்ளி செங் கேணி அம்மையப்பன் என்பவன் இக்கோயிலுக்கு தேவதானமாக நிலம் வழங்கியதையும் கல்வெட்டு குறிக்கிறது.

விசயநகர் காலம்

அரியரன், புக்கன் சகோதரர்கள் விசயநகர அரசை கி.பி.14-ஆம் நூற்றாண்டில் தோற்றுவித்தனர். அப்பொழுது தமிழ்நாட்டின் வடபகுதியினைச் சம்புவராயர்களும், தென் பகுதியில் இசுலாமியர் களும் ஆட்சி புரிந்து வந்தனர். விசயநகர மன்னர்கள் படிப்படியாக சம்புவராயர்களையும் இசுலாமியர்களையும் வென்று ஆட்சியினைக் கைபற்றினர்.

விசயநகர ஆட்சியைத் தமிழ்நாட்டில் தோற்றுவிப்பதில் புக்கனின் மகன் கம்பணனும், அவனுடைய மகன் வீரசாயணனும் அவர்களுடைய தளபதிகளும் மிகுந்த ஈடுபாடு கொண்டு விளங்கினர். தமிழகத்தின் வடபகுதியில் தங்களுடைய ஆட்சியினை முதலில் தொடங்கினர். பின்னர் திருண்ணாமலை சம்புவராயர் மாவட்டப் பகுதிகளையும், தற்பொழுது புதிதாகத் தொடங்கப்படுகின்ற மாவட்டத்தின் தென்பெண்ணையாற்றின் தென்கரைப் பகுதிவரை இவர்களுடைய ஆட்சி பரவியது. கம்பணன் திருக்கோயிலூர், விழுப்புரம், செஞ்சி ஆகிய பகுதிகளைத் தன்னுடைய ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தான்.

கலைப் பணிகள்

விசயநகர மன்னர்கள் இப்பகுதியில் பல கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்வித்தும், கொடை கொடுத்தும், மண்டபங் களைக் கட்டுவித்தும், கோபுரங்களை எடுப்பித்துமுள்ளனர்.

இம்மாவட்டத்தில் அரகண்டநல்லூர், சித்தலிங்கமடம்' கண்டாச்சிபுரம், மாரங்கியூர், தளவானூர், திருவாமாத்தூர், திரு நறுங்கொண்டை, பிரம்மதேசம், தேவனூர், திருவடிகுன்றம். அண்ணமங்கலம், நெற்குணம், எயில், திருப்பாலப்பந்தல், சேந்த மங்கலம், எலவானாசூர் ஆகிய ஊர்களில் பலத் திருப்பணிகளைச் செய்துள்ளனர்.

திருக்கோயிலூர் வட்டம், மாரங்கியூரில் உள்ள கோயிலில் வீரசம்பன் பெயரால் கட்டளை ஏற்படுத்தியுள்ளதை அக்கோயில் கல்வெட்டுக் குறிக்கிறது. இதே வட்டத்திலுள்ள அரகண்ட நல்லூர், சித்தலிங்கமடம் ஆகிய இடங்களிலுள்ள கோயில்களுக்கு நிலம் கொடையளித்ததும் குறிக்கப்படுகிறது.

செஞ்சி நாயக்கர் காலம்

செஞ்சிநாயக்கர்கள் கி.பி. 1370 முதல் 1640 வரை விசயநகர மன்னர்களின் ஆட்சியின் கீழ் சிற்றரசர்களாகச் செஞ்சியைத் தலைநகராகக் கொண்டு சிறப்புடன் ஆட்சி செய்துள்ளனர். இவர்கள் திருமுனைப்பாடி நாட்டின் சில பகுதிகளைத் தங்களுடைய ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தனர்.

இவர்களில் முதன் முதலாக வேங்கடபதி நாயக்கர் என்பவர் கி.பி. 1464-ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.

கிருஷ்ணப்ப நாயக்கர்

செஞ்சிநாயக்கர்களில் சிறப்புற்று விளங்கியவர் துபாக்கி கிருஷ்ணப்ப நாயக்கராவார்.

செஞ்சிக் கோட்டையிலுள்ள பெரிய நெற்களஞ்சியங்கள், கல்யாண மஹால், செஞ்சியிலுள்ள மூன்று மலையைச் சுற்றி சுவர் எழுப்பிய பெருமை கிருஷ்ணப்ப நாயக்கரையேச் சாரும். இவருடைய உருவம் ஸ்ரீமுஷ்ணம், திருக்கோயிலூர் கோயில் தூண்களில் வடிக்கப்பட்டுள்ளன.

அச்சுத விசயராமச்சந்திர நாயக்கர்

கிருஷ்ணப்ப நாயக்கரை அடுத்து அச்சுத விசயராமச்சந்திர நாயக்கர் என்பவர் செஞ்சி ஆளுனராகப் பொறுப்பேற்றார். இவரைத் அடுத்து, வந்த, முத்தியாலு நாயக்கர் செஞ்சியிலுள்ள வெங்கடரமணசுவாமி கோயிலைக் கட்டியுள்ளார்.

வெங்கடப்ப நாயக்கர் காலத்தில் செஞ்சிக்கோட்டை வலுப்படுத்தப்பட்டது. நகரமும் விரிவுபடுத்தப்பட்டது.

இவருக்குப் பின்னர் வந்த வரதப்ப நாயக்கர், அப்பநாயக்கர் ஆகியோர் வலிமை குன்றியிருந்த காரணத்தாலும், விசயநகர அரசு சீர் குலைந்த காரணத்தாலும், பீஜப்பூர் சுல்தான்கள் செஞ்சியை கி. பி. 1649ல் கைப்பற்றினர்.

பீஜப்பூர் சுல்தான்

பீஜப்பூர் சுல்தான்கள் தங்கள் பிரதிநிதியாக கில்லேதார் ஒருவனை செஞ்சியில் நியமித்து அவனிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தனர். இவர்களுடைய ஆட்சியின் கீழ் சுமார் 30 ஆண்டுகள் திருமுனைப்பாடி நாடு இருந்துள்ளது.

மராத்தியர்

இதன் பின்னர் இப்பகுதியினை மராத்திய அரசன் சிவாஜியின் உதவியாளர்களான சந்தாஜி, சம்பாஜி ஆகியவர்கள் ஆட்சி செய்தனர்.

மொகலாயர்

மராத்தியர்களிடமிருந்து, ஔரங்கசீப் இப்பகுதியை கைப் பற்றினார். இவருடைய ஆணையர்கள் இப்பகுதியை ஆண்டனர். ஔரங்கசீப்பின் ஆணையின்படி கருநாடகத்தின் தலைமை நவாப் பாக 'தாவுத்கான்' என்பவர் ஆர்க்காட்டை தலைநகராகக் கொண்டு ஆட்சிப் பொறுப்பேற்றார். அவரது தலைமையின் கீழ் செஞ்சிப் பகுதியின் ஆணையராக 'சரூப்சிங்' என்ற இந்து மத வீரன் அமர்த்தப்பட்டான்.

செஞ்சி சிங்குகள்

இந்தக் காலக் கட்டத்தில் ஔரங்கசீப் காலமானார். இதன் காரணமாக செஞ்சிப் பகுதியை ஆண்டு வந்த சரூப்சிங் ஆர்க்காட்டு நவாப்புக்குக் கட்டுப்படாமல் தன்னுரிமை பெற்றவராக விளங்கினார். இம்மாவட்டத்தின் பெரும்பகுதி இவர் ஆட்சியின் கீழ் வந்தது. இவர் இறந்த பிறகு இவருடைய மகன் தேசிங்கு பட்டத்துக்கு வந்தார். இவரும் தந்தையைப் போல கர்நாடக நவாப்புக்களுக்கு கப்பம் கட்டாமல் அவர்களை எதிர்த்துப் போரிட்டு இறந்து பட்டார். இவருக்குப் பிறகு இப்பகுதி மீண்டும் முகலீம் ஆணையரின் ஆட்சிக்குட்பட்டது.

கி. பி. 1780-இல் ஐதர்அலி இம்மாவட்டத்தைத் தாக்கினான். ஆனால் ஆங்கிலேயர்கள் ஐதர் அலியின் தாக்குதலை முறியடித்தனர். ஐதர் அலி இறந்தவுடன் அவர் மகன் திப்புசுல்தான் போர் தொடுத்தார். அவரையும் ஆங்கிலேயர்கள் வெற்றி கண்டனர். கி.பி. 1799-ல் திப்பு இறந்தார். பின்னர் ஆங்கிலேயரின் துணையுடன் முகமது அலி 1748 முதல் 1795 வரை கர்நாடக நவாப்பாக

ஆட்சி புரிந்தார். பின்னர் அவருடைய மகன் உமதத் உல்உமர் கி.பி. 1801 வரை ஆட்சி புரிந்தார். கி.பி. 1698 முதல் 1801 வரை 18-ஆம் நூற்றாண்டு முழுவதும் ஔரங்கசீப்பின் வழிவந்த முகலாயர் களின் ஆட்சியின் கீழ் இம்மாவட்டம் இருந்தது. இந்தக் கால கட்டத்தில் முகலாயர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் போர்கள் நடை பெற்றன. மூன்று கருநாடகப் போர்கள் மூண்டன. இதில் இந்த மாவட்டம் பெரும்பங்கு வகித்துள்ளது.

ஐரோப்பியர்கள்

கி. பி. 17ஆம் நூற்றாண்டில் மொகலாய மன்னர்களையும் இந்து மன்னர்களுக்குள்ளும் பிளவுபடுத்தி ஐரோப்பியர்கள் நாட்டைக் கைப்பற்றினர். டச்சுக்காரரையும் போர்ச்சுகீசியரையும் விட ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரருமே பெரும்பங்கு கொண்டிருந் தனர். ஆங்கிலேயருள் ராபர்ட் கிளைவ் என்பவரும், பிரெஞ்சுக்கார ரான டுப்ளேவும் முக்கியமானவர்கள். கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இம்மாவட்டத்தில் ஐரோப்பியர் நன்கு வேரூன்றினர், கி.பி. 1744-ல் ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் போர் மூண்டது. இம்மாவட்டத்தில் விழுப்புரம், செஞ்சி, பெரு முக்கல் ஆகிய ஊர்களில் போர் மூண்டது. இப்பகுதிகள் ஆங்கிலேயர்களுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்குமாக மாறி மாறி ஆட்சிக்குட்பட்டது.

கி.பி. 18-ம் நூற்றாண்டில் திருமுனைப்பாடி நாடும் ஆங்கிலே யரின் ஆட்சிக்குட்ப்பட்டது. 1947-ஆம் ஆண்டு வரை அவர்கள் ஆட்சிக்கு இப்பகுதி உட்பட்டிருந்தது. விடுதலைக்காக அண்ணல் காந்தியடிகள் நடத்திய போராட்டங்கள் அனைத்திலும் இம் மாவட்டம் முழுப்பங்கேற்றுள்ளது. திண்டிவனம், விழுப்புரம் பகுதியில் பல கிளர்ச்சிகள் நடைபெற்றுள்ளன. 1930 சனவரி 26-ஆம் நாள் உரிமை நாள் கொண்டாடப்பட்டது. காந்தியடிகள் இருமுறை தமிழகம் வந்துள்ளார். இவர் வந்ததின் நினைவாக திருக்கோயிலூர் வட்டத்தில் திருவெண்ணெய்நல்லூரில் காந்தி நினைவு உயர்நிலைப் பள்ளி ஒன்று தொடங்கப்பெற்றது. எனவே இம்மாவட்டம் வரலாற்றுக்கு முந்தைய காலம் தொட்டு பாரததேசம் ஆங்கிலேயர்களிடமிருந்து விடுதலை பெற்ற காலம் வரை வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்று விளங்கி உள்ளது.

வரலாறு கூறும் வண்டமிழ் தலங்கள்

சமயம்

விழுப்புரம் - இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில் சைவம், வைணவம், சமணம், இசுலாம், கிறித்தவம் ஆகிய சமயங்கள் சிறந்து வளர்ந்துள்ளன. இதன் பயனாக சைவ, வைணவத் தலங்களும், சமண குகைப் பள்ளிகளும், சமணக் கோயில்களும், மசூதிகளும், தேவாலயங்களும் உருவெடுத்தன.

சைவத் தலங்கள்

அப்பர், சம்பந்தர். சுந்தரர் ஆகிய மூவராலும் பாடப்பெற்ற தலங்களும் பிற வரலாற்றுத் தலங்களும் இப்பகுதியில் மிகுதியாக அமைந்துள்ளன.

முக்கிய சிவத்தலங்கள்

ஊர்கள்		தலங்களின் பெயர்
திருநாவலூர்	...	திருத்தொண்டீஸ்வரம் கோயில்
கிராமம்	...	சிவலோகநாதசுவாமி கோயில்
எலவானாசூர்	...	அமரபுயங்கர தேவர் கோயில்
பேரங்கியூர்	..	திருமூலஸ்தானமுடையார் கோயில்
திருவெண்ணெய்நல்லூர்	...	அருள்துறை நாயனாற் கோயில்
சித்தலிங்கமடம்	..	வியாக்ரபாதேஸ்வரர் கோயில்
திருக்கோயிலூர்	...	வீரட்டானேஸ்வரர் கோயில்
அரகண்டநல்லூர்	...	ஒப்பிலாமணீஸ்வரர் கோயில்
ஆனாங்கூர்	...	அகத்தீஸ்வரர் கோயில்
திருவாமாத்தூர்	...	அபிராமேஸ்வரர் கோயில்
பனையபுரம்	...	பரவை ஈஸ்வரம் உடைய மகாதேவர் கோயில்
தாதாபுரம்	...	1. இரவிகுலமாணிக்கேஸ்வரர் கோயில்

... 2. குந்தவை விண்ணகர் ஆழ்வார் கோயில்

... 3. ஜினாலயம்

திருத்தொண்டீஸ்வர முடையார் கோயில்

திருநாவலூர்

இம்மாவட்டத்தில் திருக்கோயிலூர் வட்டத்தில் விழுப்புரத்திலிருந்து 22 கி.மீ தொலைவில் சென்னை - திருச்சி நெடுஞ்சாலையின் கிழக்கே இரண்டு கி. மீ. தூரத்தில் கெடிலம் ஆற்றின் வடகரையில் திருநாவலூர் அமைந்துள்ளது. சைவப் பயிர் வளர்த்த நாயன்மார்கள் நால்வருள் ஒருவராகிய சுந்தரமூர்த்தி நாயனார் இவ்வூரில் அவதரித்ததால் மேலும் பெருமை அடைகிறது. திருமுனைப்பாடி நாட்டு மேலூர் நாட்டில் திருநாவலூர் அமைந்திருந்தது என்று இவ்வூர் கல்வெட்டுகள் குறிக்கின்றன.

சுந்தரமூர்த்தி நாயனார்

அறுபத்து மூன்று நாயன்மார்கள் வரிசையில் வைத்துப் போற்றப்படுகின்ற சடையனார் சுந்தரமூர்த்தியின் தந்தையாவார், இசை ஞானியார் தாயாவார்கள். திருக்கோயில்களுக்கு பூசை செய்து வந்த குருக்கள் மரபில் வந்த சுந்தரரை அப்பொழுது அரசனாக விளங்கிய நரசிங்க முனையரையர் என்பவர் எடுத்து வளர்த்து ஆளாக்கியதாகக் கூறப்படுகிறது. சுந்தரமூர்த்தியின் இளமைப் பெயர் நம்பியாரூரர் என்பதாகும். இம்மாவட்டத்தில் சுந்தரரால் பாடப்பெற்ற முக்கிய தலங்கள் திருநாவலூர், திருவெண்ணை நல்லூர், திருவாமாத்தூர் ஆகியவைகளாகும்.

திருநாவலூரில் உள்ள கோயில்கள்

திருநாவலூரில் மூன்று சிவன் கோயில்களும், ஒரு விஷ்ணு கோயிலும் இருந்ததாகப் பராந்தகன் காலத்து கல்வெட்டுகள் குறிக்கின்றன. கலிநாரீஸ்வரம் கோயில், அகஸ்தீஸ்வரத்து மகாதேவர் கோயில், திருத்தொண்டீஸ்வரமுடையார் கோயில் ஆகிய சிவன் கோயில்களும், திருமேற்றளி மகாவிஷ்ணு கோயில் ஒன்றும் இவ்வூரில் இருந்ததாக அறிய முடிகிறது.

கலிநாரீஸ்வரம் கோயில்

பல்லவ மன்னன் 'கலிநாரை' என்பவன் பெயரில் பல்லவர்கால கோயில் ஒன்று கலிநாரீஸ்வரம் என்ற பெயரில் இருந்துள்ளது. இக்கோயில் தற்பொழுது முழுவதுமாக அழிந்துவிட்டது. திருத் தொண்டீஸ்வரம் கோயில் திருச்சுற்றில் மேற்குப்பக்கச் சுவரில் ஸ்ரீகலிநாரை என்று பல்லவ கிரந்தத்தில் பொறிக்கப்பட்ட சிற்பம் ஒன்று வைத்துக் கட்டப்பட்டுள்ளது. இச்சிற்பத்தில் மண்டி யிட்டுள்ள ஒரு யானையின் அம்பாரத்தின் மீது டருமனான ஒரு ஆண் உருவம் வடிக்கப்பட்டுள்ளது. இவ்வுருவம் பல்லவ அரசனாக இருக்கலாம் என்று, இவனால் எடுக்கப் பெற்ற இந்த ஈஸ்வரர் கோயில் ''கலிநாரீஸ்வரம்'' என்று அழைக்கப் பெற்றிருக்கலாம் என்றும் சில வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

ஆனால் சிற்ப அமைதியைப் பார்க்கும்போது இது ஒரு இளம் வயதுடைய குழந்தை போன்று காட்சியளிப்பதால் இச்சிற்பம் சுந்தரமூர்த்தியுடன் தொடர்புடையதாகயிருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

திரு அகஸ்தீஸ்வரத்து மகாதேவர் கோயில்

முதலாம் பராந்தகனின் 29-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டு திரு அகஸ்தீஸ்வரத்து மகாதேவர் என்ற ஒரு கோயிலைப் பற்றிக் குறிக்கிறது. இக்கோயில் இருந்ததற்கான தடையங்கள் ஏதும் தற்போது காணப் பெறவில்லை.

திருமேற்றளி மகாவிஷ்ணு கோயில்

திருமேற்றளி மகாவிஷ்ணு கோயில் ஒன்று திருநாவலூரில் இருந்ததை முதலாம் பராந்தகனின் 32-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு குறிக்கிறது. ஆனால் இக்கோயில் தற்பொழுது எங்குள்ளது என்பது தெரியவில்லை.

திருத்தொண்டீஸ்வரம் உடையார் கோயில்

திருநாவலூரில் தற்பொழுது திருத்தொண்டீஸ்வரம் உடையார் கோயில் மட்டும் உள்ளது. இது மிகப் பெரிய அளவில் அமைந் துள்ளது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் உடையார் திருத் தொண்டீஸ்வரமுடைய நாயனார் என்று குறிக்கப்படுகின்றார்.

9438

கல்வெட்டுகள்

இக்கோயிலில் முதலாம் பராந்தகன், இராஜாதித்தன், இராஜராஜன், இராஜேந்திரன், முதலாம் குலோத்துங்கன் ஆகிய சோழ மன்னர்களின் கல்வெட்டுகளும், இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருட்டிணனின் கல்வெட்டுகளும், காடவ மன்னன் கோப்பெருஞ் சிங்கனின் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன.

இராஜாதித்ய ஈசுவரம்

திருத்தொண்டீசுவரம் கோயில் முதலாம் பராந்தகனின் 28-ஆம் ஆட்சியாண்டில், இராஜாதித்த தேவர் என்பவரால் கற்றளியாக மாற்றப்பட்டதை ஒரு கல்வெட்டு குறிக்கிறது. இக்கோயிலை கட்டிய தச்சனின் பெயர் முழுவதும் கிடைக்கப் பெறவில்லை. "இச்சா தகஞ் சேதான் கற்றளி செய்த தலைச்சங்..... ..... இவையென் எழுத்து" என்று கல்வெட்டு குறிக்கிறது. இராஜாதித்தன் இக்கோயிலை எடுப்பித்ததிலிருந்து இக்கோயில் இராஜாதித்த ஈசுவரம் என்ற பெயரில் வழங்கியுள்ளது.

சந்நதிகள்

இக்கோயிலுக்கு விநாயகர் சந்நதி, சுந்தர மூர்த்தி சந்நதி, அம்மன் சந்நதி ஆகிய சந்நதிகள் அழகூட்டுகின்றன.

விநாயகர் சந்நதி

கி பி. 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த விநாயகருக்கு தனியாக ஒரு சந்நதி எடுக்கப் பெற்றுள்ளது.

சுந்தரமூர்த்தி சந்நதி

இக்கோயிலின் தென்கிழக்கு மூலையில் சுந்தரமூர்த்தியின் சந்நதி உள்ளது. இச்சந்நதியின் உண்ணாழியில் சுந்தரமூர்த்தி மனைவியர்களான சங்கிலி பரவை நாச்சியருடன் காடசியளிக் கின்றார். இச்சந்நதியின் கட்டட அமைதியைப் பார்க்கும்பொழுது இது கி.பி. 13-14 -ஆம் நூற்றாண்டில் கட்டப்பெற்றிருக்கலாம்.

அம்மன் சந்நதி

கோயில் திருச்சுற்றின் வடமேற்கு மூலையில் அம்மன் சந்நதி அமைந்துள்ளது. இக்கோயில் அம்மன் சந்நதியின் மகாமண்ட

பத்தின் வடக்குப் பக்க சுவரில் ''கோப்பெருஞ்சிங்க தேவர் திருமுகப் படி திருபிரதிஷ்டை பண்ணியருளின உடையார் சோழனாக'' என்று கல்வெட்டு குறிப்பதிலிருந்து அம்மன்சந்நதி இவன் காலத்தில் எடுக்கப்பட்டதாகக் கொள்ளலாம். இது கி. பி. 13-14 ஆம் நூற்றாண்டில் கட்டப் பெற்றதாகும்.

வரதராசப்பெருமாள் கோயில்

இராஜாதித்த ஈஸ்வரம் கோயிலுக்கு அருகில் வடக்கு பக்கத்தில் பெருமாளுக்காக எடுக்கப்பட்டுள்ள வரதராசப்பெருமாள் கோயில் அமைந்துள்ளது, சிறப்புடையதாகும். இக்கோயிலின் கட்டட அமைதியை பார்க்கும்போது இது கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் எடுக்கப் பட்டதாகக் கொள்ளலாம்.

திருத்தொண்டீஸ்வரம் கோயில் அமைப்பு

இக்கோயில் உண்ணாழி, விமானம், இடைக்கட்டு, அர்த்த மண்டபம், நந்திமண்டபம், மகா மண்டபம், திருச்சுற்று மாளிகை, திருச்சுற்று, கோபுரம் ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது.

கோபுரங்கள்

இக்கோயிலில் இரண்டு நுழைவாயில்கள் மட்டும் உள்ளன. கிழக்குப் பார்த்து அமைந்துள்ள இக்கோயிலின் முதல் நுழை வாயிலின் மேல் அமைந்துள்ள கோபுரம் பீடத்திலிருந்து கூரைப் பகுதிவரை கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. அதற்கு மேல் செங்கல் சுண்ணாம்பு கொண்டு சுதையால் பிற்காலத்தில் கட்டப் பட்டுள்ளது. ஐந்து நிலைகளை உடையது.

இரண்டாவது நுழைவாயிலுக்கு மேல் பகுதியில் கோபுரம் ஏதும் அமைக்கப்படவில்லை. இந்த நுழைவாயிலுடன் சேர்த்து கட்டப்பெற்றுள்ள திருச்சுற்று சுவரில் குலோத்துங்கனுடைய கல் வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளதிலிருந்து இது இவன் காலத்தில் எடுக்கப்பட்டிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

திருச்சுற்று மாளிகை

இரண்டாவது திருச்சுற்றில், திருச்சுற்று மாளிகை அமைந் துள்ளது இதில் பல்லவர் காலத்தைச் சார்ந்த தாராலிங்கம், விநாயகர், விஷ்ணு, பிரம்மா, சண்டிகேசுவரர் ஆகிய சிற்பங்கள்

உள்ளன. சோழர் காலத்தைச் சார்ந்த அன்னையர் எழுவர் சிற்பங்களும், விஜயநகர காலத்தைச் சார்ந்த முருகன், கஜலட்சுமி ஆகிய சிற்பங்களும் வழிபாட்டில் உள்ளன.

திருச்சுற்று மாளிகையின் மேற்குப் பக்கத்தின் கீழ்ப்பகுதியில் பல்வகை இசைக்கருவிகளை வாசிக்கின்ற சிற்பங்களும். கோலாட்டம் போடுகின்ற சிற்பங்களும் புடைப்புச் சிற்பங்களாகக் காணப்படு கின்றன. இச்சிற்பங்கள் முதலாம் குலோத்துங்கன் காலத்தைச் சார்ந்தவைகளாகும்.

விமானம்

சதுரமாக அமைந்துள்ள உண்ணாழியின் மேல் பகுதியில் விமானம் அமைந்துள்ளது. அதிட்டானத்தின் மீது பத்மம் காட்டப் பட்டுள்ளது. அதன் மீது கண்டம் காட்டப்பட்டுள்ளது. கண்டத் தின் மீது சுவர் பகுதி அமைந்துள்ளது. சுவரின் மேல் கூரை யில் இரண்டு நிலைகளில் விமானம் காட்டப்பட்டுள்ளது. நிலைகளில் தெற்குப்பக்கும் தட்சிணாமூர்த்தியும், மேற்குப் பக்கம் திருமாலும், வடக்குப் பக்கம் நான்முகனும் காட்டப்பட்டுள்ளனர். விமானத்தின் மேல் நாகரசிகரமும் அதற்கு மேல் கலசமும் அமைந் துள்ளன. உண்ணாழி மற்றும் அர்த்த மண்டபத்தின் சுவர் பகுதியில் தூணின் பலகைக்கு மேல் நாட்டிய சிற்பங்களும் பல்வகை இசைக் கருவிகளை வாசிக்கும் சிற்பங்களும் காட்டப்பட்டுள்ளன. இந்த சிற்பங்கள் கும்பகோணம் நாகேசுவரசுவாமி கோயிலிலுள்ள நாட்டிய சிற்பங்களை ஒத்துள்ளன.

கோட்டச் சிற்பங்கள்

இக்கோயில் உண்ணாழியின் கோட்டச் சிற்பங்களில் தென் பக்கத்தில் மட்டும் ரிஷபாந்தக தட்சிணாமூர்த்தியின் சிற்பம் உள்ளது. மேற்கு வடக்குக் கோட்டங்களில் எந்தவித சிற்பமும் காணப்பெறவில்லை. வடக்குப் பக்க அர்த்த மண்டப கோட்டத்தில் துர்க்கையின் சிற்பம் உள்ளது.

தட்சிணாமூர்த்தி சிற்பம்

தட்சிணாமூர்த்தி பெரும்பாலும் அமர்ந்த நிலையில் காட்டப் பட்டிருப்பார். ஆனால் இங்குள்ள தட்சிணாமூர்த்தி நின்ற நிலையில் ரிஷபத்துடன் காட்சி அளிப்பது சிறப்புடையதாகும். இது கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

நந்திமண்டபம்

சோழர் காலத்தில் எடுக்கப் பெற்ற இந்த நந்தி மண்டபத்தில் அமர்ந்துள்ள நந்தி மிகவும் அழகாக வடிக்கப்பட்டுள்ளது.

சிம்ம மண்டபம்

நந்தி மண்டபத்திற்கு எதிரில் உள்ள மண்டபம் சிம்ம மண்டபம் என்றழைக்கப்படுகிறது. இம்மண்டபத்தில் இரண்டு சிம்ம தூண்கள் வைத்து கட்டப்பட்டுள்ளதால் இம்மண்டபத்தை சிம்ம மண்டபம் என்று அழைக்கின்றனர். இந்த இரண்டு தூண்கள் மட்டும் பல்லவர் காலத்தைச் சார்ந்தவையாகும். இம்மண்டபம் கி பி 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

கீழைத்திரு வசலும் - மண்டபங்களும்

இராஜாதித்த ஈசுவரம் கோயிலில் உள்ள கீழைத்திரு வாசலையும், மண்டபங்களையும் திருநாவலூர் வியாபாரி வேளூர் கிழவன் பள்ளி பட்டணகவாமி என்பவர் எடுத்துள்ளார். மண்டபங்கள் என்று கல்வெட்டுப் பொதுவாகக் குறிப்பிடுவதால் எந்தெந்த மண்டபங்கள் எடுப்பிக்கப்பட்டன என்பது தெளிவாகத் தெரியவில்லை.

மகாமண்டபச் சிற்பங்கள்

கோயில் மகாமண்டபத்தின் வடக்குப் பக்க வெளிப்புற சுவரில் அப்பர், ஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி, மாணிக்க வாசகர் ஆகிய நால்வரின் உருவங்களும் புடைப்புச் சிற்பங்களாக வடிக்கப் பெற்றுள்ளன. இதன் கீழ் பகுதியில் சண்டேச அனுக்கிரக மூர்த்தியின் சிற்பமும் பொறிக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலில் உள்ள பைரவர், சூரியன் ஆகிய சிற்பங்களும் சோழர்கள் காலத்தைச் சார்ந்தவைகளாகும்.

செப்புத்திருமேனிகள்

இக்கோயிலில் உள்ள செப்புத்திருமேனிகள் மிகவும் அழகு வாய்ந்தவை. இராஜராஜன் ஆட்சிக் காலத்தில் நடராசர், பிச்சைப் புகும் பெருமான், சுந்தரமூர்த்தி, பரவை நாச்சியார், சங்கிலி நாச்சியார் மற்றும் இராமர் செப்புத்திருமேனிகள் செய்யப் பெற்றுள்ளன. மற்ற செப்புத்திருமேனிகள் கி.பி. 13-14 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவைகளாகும்.

மரத்தேர்

கோயிலின் முன்பு தேர் நிறுத்தப்பட்டுள்ளது. இத்தேர் 16-17 ஆம் நூற்றாண்டில் செய்யப் பெற்றதாகும். இதில் உள்ள சிற்பங்கள் மிகவும் அழகு வாய்ந்தவை. பல்வகைக் கடவுளரின் உருவங்களும், காமசிற்பங்களும் இத்தேரில் செதுக்க பெற்றுள்ளன. இத்தேருக்கு அருகில் உள்ள தேர்முட்டு பல்லவர் காலத்தை சார்ந்த சிம்மத்தூண்களால் கட்டப் பெற்றுள்ளது.

சிவலோகநாதசுவாமி கோயில்

கிராமம்

விழுப்புரம் - திருக்கோயிலூர் நெடுஞ்சாலையில் பெண்ணை யாற்றின் தென்கரையில் (மலட்டாறு) கிராமம் என்ற ஊர் அமைந்துள்ளது.

வரலாற்றில் கிராமம்

அப்பர் பெருமான் இவ்வூரை 'திருமுண்டீச்சரம்' என்று குறிக் கின்றார். இவ்வூர் கல்வெட்டுகளில் திருமுடீச்சரம், மௌலிகிராமம், கிராமம் என்று குறிக்கப்பட்டுள்ளது. இவ்வூர் பல்வேறு மன்னர் கள் ஆட்சிக் காலங்களில் பல்வேறு நாட்டில் அமைந்திருந்தது என்பதைக் கல்வெட்டுகள் வாயிலாக அறிய முடிகிறது. முதலாம் பராந்தகன் காலத்தில் ''முடியூர் நாட்டுத் திருமுடியூர்'' என்று வழங்கியுள்ளது. ''இராசேந்திர சோழ வளநாட்டு, முடியூர் நாட்டுப் பராந்தகச் சதுர்வேதி மங்கலம்'' என்று இராசேந்திரன் கல்வெட்டு குறிக்கிறது. இராசராச வளநாட்டுத், திருமுனைப்பாடி முடியூர் நாட்டு, ஸ்ரீ குலோத்துங்க சோழ சதுர்ப்பேதி மங்கலம், என்று திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராச தேவர் கல்வெட்டுக் குறிக்கிறது. சுந்தரபாண்டிய தேவர் கல்வெட்டு 'நடுவில் மண்டலத்து முடியூர் நாட்டுக் கிராமம்' என்று குறிப்பிடுகிறது. இவ்வூர் ஒரு நாட்டின் தலைநகராக விளங்கியுள்ளது என்பது தெரிகிறது.

முடியூர், முடிச்சரம், முண்டீச்சரம் என வழங்கிய இவ்வூர் தற்பொழுது கிராமம் என்ற பெயரில் வழங்குகிறது.

சிவலோகநாத சுவாமி கோயில்

இங்கு 'சிவலோகநாத சுவாமி கோயில் உள்ளது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவன், கல்வெட்டுகளில் 'அருட்தளிமகாதேவர்' என்றும் ஆற்றுத் தளிப் பெருமானடிகள், ஆற்றுத்தளி ஸ்ரீ மூலட்டானத்துப் பெருமானடிகள், திருமுடியூர் மூலட்டானத்து மகாதேவர், திருவாற்றுத்தளி ஆளுடையார், ஸ்ரீ ஆற்றுத்தளி மூலஸ்தானமுடைய பொக்கணங் கொடுத்தருளிய நாயனார் என்று பல பெயர்களில் அழைக்கப்படுகிறார்.

இங்கு எழுந்தருளி உள்ள இறைவி, கானார் குழலியம்மை, செல்வ நாயகி, சௌந்தர்ய நாயகி என்று அழைக்கப்படுகிறார். அப்பர் பெருமான் இங்கு எழுந்தருளியுள்ள இறைவனை புகழ்ந்து பாடியுள்ளார். தற்பொழுது சிவலோக நாதசுவாமி என்று இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் அழைக்கப்படுகின்றார். கோயில் தீர்த்தம் முண்டகத்தீர்த்தம் (பிரமதீர்த்தம்) என்று வழங்குகிறது. திண்டி வழிபட்ட தலம் திண்டீச்சுரம் என்றும் முண்டி வழிபட்ட தலம் முண்டீச்சுரம் என்றும் வழங்கியதாகவும் கூறுவர். தலவிருட்சம் வன்னி. பிரமன், தேவேந்திரன் ஆகியோர் பூசித்துப் பேறு பெற்றோராவர்.

முதலாம் பராந்தகனின் பிற்கால ஆட்சியில் கிராமம் சிறந்து விளங்கியுள்ளது சோழ நாட்டின் வடபகுதியினை இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணனின் படையெடுப்பிலிருந்து பாதுகாப்பதற்காக, முதலாம் பராந்தகனின் மகனான இராஜாதித்தன் பொறுப்பேற்று மெளலி கிராமத்தில் முடிசூட்டிக் கொண்டான்.

இக்கோயில் கல்வெட்டு இராஜாதித்தனின் "பெரும்படை நாயகன் மலைநாட்டு நந்திக்கரைப்புத்தூர் வெள்ளங்குமரன்" என்பவன் இக்கோயிலை எடுப்பித்து விளக்கெரிக்க நிலம் கொடை கொடுத்ததைக் குறிக்கிறது. இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணன் இக்கோயிலுக்கு கொடை கொடுத்துள்ளான்.

கோயில் அமைப்பு

கோயில் உண்ணாழி சதுரமாகவும் அதிஷ்ட்டானப் பகுதி எளிமையாகவும் அமைந்துள்ளது. அர்த்த மண்டபம், உண்ணாழிப் பகுதியில் தேவகோட்டங்கள் அமைந்துள்ளன. தேவ கோட்டங்களில் கணேசர், தென்திசைக் கடவுள், திருமால், நான்முகன், துர்க்கை ஆகிய சிற்பங்கள் அழகு செய்கின்றன.

ஆதிகேசவப் பெருமாள் கோயில்

கிராமத்தில் ஆதி கேசவப் பெருமாள் கோயில் ஒன்றும் உள்ளது இறைவியின் பெயர் கமலவல்லித் தாயார் என்பதாகும். குலோத்துங்க சோழ சதுர்ப்பேதி மங்கலத்து நடுவில் திருமுற்ற மான வீற்றிருந்த பெருமாள் என்று கல்வெட்டு குறிக்கின்றது. "வீற்றிருந்த பெருமாள்" என்பது பழமையான பெயராகும்.

எலவானாசூர் - கோயில்கள்

எலவானாசூர்

விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில், உளுந்தூர்பேட்டை வட்டத்தில், எலவானாசூர் அமைந்துள்ளது. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தொன்மையான ஊர்களில் இவ்வூரும் ஒன்றாகும். ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மலையமான் நாட்டு (ஜனநாத வளநாடு) பரனூர் கூற்றத்தில் எலவானாசூர் அமைந் திருந்தது என்று கல்வெட்டு குறிக்கிறது. இவ்வூர் இறையானரையூர் என்று குறிக்கப்படுகின்றது. இவ்வூர் பிரமதேயமாகவும் விளங்கிய காரணத்தால் பிரமதேயம் இறையானரையூர் என்று குறிக்கப் படுகிறது. இவ்வூரை இராஜ மகேந்திர சோழன் கல்வெட்டு சோழ கேரளச் சதுர்வேதிமங்கலம் என்று குறிக்கிறது. சோழ கேரளன் என்பது முதலாம் இர்ராஜேந்திரனின் சிறப்புப் பெயர்களுள் ஒன்றாகும். முதலாம் இராஜேந்திரனின் மகனான இராஜ மகேந்திரன் தன்னுடைய தந்தையின் நினைவாக இவ்வூருக்கு இந்தப் பெயரை சூட்டியுள்ளான் என்று தெரிகிறது. விக்கிரம சோழன் கல்வெட்டு இவ்வூரை சோழ கேரள நல்லூர் என்று குறிக்கிறது. இவ்வூர் பிடாகைப் பற்று என்ற பெயரிலும் குறிக்கப் பட்டுள்ளது. இவ்வூரில் சிவனுக்கும், திருமாலுக்கும் கோயில்கள் எடுக்கப்பட்டுள்ளன.

சிவன் கோயில்

இக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனை அமரபுயங்கர தேவர் என்று முதலாம் இராசராசன் கல்வெட்டு குறிக்கிறது. இவ்விறைவனை ஊர்ப்பாகன் கொண்டருளிய மகாதேவர் என்றும் ஊர்ப்பாகன் கொண்டருளிய நாயனார் என்றும் பிற்கால கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. ஊர்ப்பாகன் கொண்டருளிய தம்பிரானார் என்று பாண்டிய விஜயநகர மன்னர்களின்

கல்வெட்டுகள் குறிக்கின்றன. இக்கோயிலில் ஞாயிற்றுக்கிழமை தோறும் மாணிக்க வாசகர் அருளிய 'திருச்சூழல்' என்னும் திருப் பதிகம் பாடப்பட்டது.

இறைசைப் புராணம் என்னும் ஸ்தல புராணம் எலவானாசூரில் அமைந்திருந்த சிவத்தலத்தின் பெருமைகளை விளக்கிக் கூறுகிறது. இதனை திருமலை நயினார் சந்திரசேகரர் என்பவர் இயற்றியுள்ளார். அவர் மெய்கண்டார் சந்தானத்து திருவண்ணாமலை, சத்திய ஞான தெரிசினிகளின் மாணாக்கர் ஆவார்.. இப்புராணம் கிருஷ்ண தேவ ராயர் காலத்தில் இயற்றப்பட்டதாகும்.

திருப்பள்ளியறை நம்பிராட்டியார்

இங்கு எழுந்தருளியுள்ள இறைவி திருப்பள்ளியறை நம்பிராட்டி யார் என்று குறிக்கப்படுகின்றார். விக்கிரம சோழனின் கல்வெட்டு திருப்பள்ளியறை ஆளுடையார் என்று குறிப்பிடுகிறது.

கோயில் அமைப்பு

இக்கோயில் ஒரு மாடக்கோயிலாகும். இது உண்ணாழி, அர்த்த மண்டபம், முக மண்டபம் ஆகிய பகுதிகளைக் கொண்ட தாகும். உண்ணாழியை அடைவதற்கு படிகள் அமைக்கப்பட்டுள்ளன. உண்ணாழி சதுரமாகவும், அர்த்தமண்டபம் நீள் சதுர வடிவத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. அர்த்தமண்டபத்துக்கு முன்பு முக மண்டபம் அமைந்துள்ளது. இக்கோயில் முதலாம் இராசராசனின் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டுள்ளது என்பதை இவனுடைய கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன.

வைணவக்கோயில்கள்

இவ்வூரில் வானவன் மாதேவி விண்ணகர், இராச நாராயண விண்ணகர் ஆகிய இரண்டு கோயில்கள் சிறப்புற்று விளங்கியுள்ளன.

வானவன் மாதேவி விண்ணகர்

இரண்டாம் பராந்தகனாகிய சுந்தர சோழனின் பட்டத்தரசி யான வானவன் மாதேவியின் பெயரால் இவ்விண்ணகர் தோற்று விக்கப்பட்டுள்ளது.

இராசநாராயண விண்ணகர்

முதலாம் குலோத்துங்கனுக்கு 'இராசநாராயணன்' என்ற சிறப்பு பெயரும் உண்டு. இவ்வூரில் உள்ள நாராயண விண்ணகர்.

எனப்படும் திருமால் கோயில் இம்மன்னன் பெயரால் நிறுவப் பட்டுள்ளது.

வீரராசேந்திரனின் கல்வெட்டு திருமுற்றத்தாழ்வார், திருமேற் கோயிலாழ்வார் ஆகிய வேறு இரண்டு வைணவக் கடவுளரின் பெயர் களைக் குறிக்கிறது.

எலவானாசூர் கோட்டை

18-ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியாவிற்கு வந்த ஐரோப்பிய வணிகக் குழுக்களில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி, பிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனி குறிப்பிடத்தக்கவை. அப்பொழுது ஐதரா பாத் நிஜாமுக்கும் கர்நாடக நவாபுகளுக்கும் போர் மூண்டது. கர்நாடக நவாபான அன்வருதீன் என்பவருக்கும் அவருடைய மகன் முகம்மது அலிக்கும் ஆங்கிலேயர்கள் துணையாக நின்றனர். இதன் காரணமாக தென்னிந்தியாவில் பல இடங்களில் புதிய கோட்டைகள் தோன்றின. அக்காலத்தில் எலவானாசூரிலும் கோட்டை ஒன்று தோன்றியது அதிலிருந்து இவ்வூர் எலவானாசூர் கோட்டை என்று வழங்குகிறது. எலவானாசூர்க் கோட்டை மீர் உசைன்கான் சாகிப்பின் கண்காணிப்பிலிருந்தது. இவன் கர்நாடக நவாபின் பிரதிநிதியாகவும் ஆங்கிலேயருக்கு நண்பராகவும் பிரெஞ்சுக்காரர்களுக்கு பகைவனாகவும் விளங்கினான்.

பிரெஞ்சுக்காரர்கள்

பின்பு செஞ்சிக் கோட்டை பிரெஞ்சுக்காரர்களின் பொறுப்பில் வந்தது. பிரெஞ்சுக்காரர்கள் எலவானாசூர் கோட்டையை அழிக்கத் திட்டமிட்டிருந்தனர்.

பிரெஞ்சுப் படை, தொத்தேய் தலைமையில் எலவானாசூர் கோட்டையை முற்றுகையிட்டது. மீர் உசைன் கானுக்கும் பிரெஞ்சுப் படைகளுக்கும் போர் மூண்டது. இதில் பிரெஞ்சுப்படை முற்றிலுமாக அழிக்கப்பட்டது. ஆனால் படுகாயம் அடைந்த மீர் உசைன்கான் இறந்த பிறகு எலவானாசூர் கோட்டையை பிரெஞ்சுக்காரர்கள் எளிதாகக் கைப்பற்றினர்.

ஆங்கிலேயர்களும், முஸ்லீம்களும்

மீர் உசைன்கான் இப்பகுதியில் கர்நாடக நவாபின் பிரதி நிதியாக இருந்த காரணத்தால் இப்பகுதியில் முஸ்லீம்கள் மிகுந்த

அளவில் குடியேறினர். ஆங்கிலேயரின் நண்பரான முகம்மது அலி, கர்நாடக நவாபாக நியமிக்கப்பட்டார். முகம்மது அலி இறந்த பிறகு அவர் மகன் உம்தத்-உல்-உமாரா பட்டத்திற்கு வந்தார். வெல்லெஸ்லி ஆளுநகராகப் பொறுப்பேற்றவுடன் எலவானாசூர் உள்ளிட்ட பகுதிகள் ஆங்கிலக் கம்பெனிக்கு வழங்கப்பட்டன. ஆர்க்காட்டுப் பகுதிக்கு காப்டன் கிரகாம் ஆட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார். இவருடைய ஆட்சிக்குட்பட்ட பகுதி 21 கோட்டங்களாக பிரிக்கப்பட்டன. அவற்றுள் எலவானாசூர் கோட்டமும் ஒன்றாகும்.

திருமூலஸ்தானமுடையார் கோயில்

பேரங்கியூர்

சென்னை-திருச்சி நெடுஞ்சாலையில் விழுப்புரத்திலிருந்து தெற்கே பத்து கி.மீ. தொலைவில், பெண்ணையாற்றின் தென் கரையில் பேரங்கியூர் அமைந்துள்ளது. கல்வெட்டுகளில் இவ்வூர் ''பேரிங்கூர்'' என்று குறிக்கப்படுகின்றது. முதலாம் இராஜேந்திரன் கல்வெட்டு இராஜேந்திர சோழ வளநாட்டில் திருமுனைப்பாடி நாட்டில், பேரிங்கூர் பிரம்மதேயம் அமைந்திருந்தது என்று குறிக்கிறது.

திருமூலஸ்தானமுடையார் கோயில்

இவ்வூரில் மூலஸ்தானமுடையார் கோயில் உள்ளது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் திருமூலஸ்தானமுடைய மகாதேவர் என்று குறிக்கப்படுகிறார். இக்கோயில் அளவில் சிறியதாக இருந்தாலும் கலையழகு வாய்ந்த சிற்பங்கள் நிறைந்து காணப்படுகின்றன. இக்கோயிலில் முதலாம் பராந்தகன், இராஜராஜன், இராஜேந்திரன், இராஜாதிராஜன், குலோத்துங்கன் ஆகிய சோழ மன்னர்களின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கோயிலில் காணப்படுகின்ற கல்வெட்டுகளில் காலத்தால் முந்தியது பராந்தகனின் கல்வெட்டாகும். எனவே இக்கோயில் இவன் காலத்தில் எடுக்கப்பட்டிருக்கலாம். முதலாம் இராஜராஜன் காலத்தில் விளக்கெரிக்க கொடை அளிக்கப்பட்ட செய்தியினையும், கோயில் காரியங்களை கவனிக்க 'ஸ்ரீருத்ரகணப்பெருமக்கள்' நியமிக்கப்பட்டிருந்ததையும் மற்றொரு கல்வெட்டு குறிக்கிறது.

கோயில் அமைப்பு

இக்கோயில் உண்ணாழி, அர்த்த மண்டபம், முக மண்டபம் ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. உண்ணாழியின் தேவகோட்டங்களை, விநாயகர், தட்சணாமூர்த்தி, துர்க்கை ஆகிய சிற்பங்கள் அழகு செய்கின்றன. இவற்றில் விநாயகர் தட்சிணா மூர்த்தி ஆகிய சிற்பங்கள் மிகவும் கலையழகு வாய்ந்தவை.

மானேந்திய விநாயகர்

கோயிலின் தெற்குச் சுவர் தேவகோட்டத்தில் விநாயகர் சிற்பம் காணப்படுகின்றது. இடக்காலை குத்திட்டு வைத்து வலக் காலை மடக்கி அமர்ந்த நிலையில் காட்சியளிக்கின்றார். தலையில் கரண்ட மகுடம். தலைக்கு மேலே குடையும், இருபக்கமும் சாமரங் களும் காணப்படுகின்றன. தன் நான்கு கரங்களில் மேலிரு கரங் களில் அங்குசமும், மானும் ஏந்தியிருக்கிறார். பொதுவாக சிவ பெருமான் கையில்தான் மானின் உருவத்தைக் காணலாம். இக்கோயிலில் பிள்ளையார் மானை ஏந்தியிருப்பது தனிச் சிறப் பாகும். தமிழகத்தில் இதுபோன்ற அமைப்பு வேறு எந்த கோயிலிலும் காணப்படவில்லை. இச்சிற்பம் காண்பவர் கருத்தையுர கண்ணையும் கவரும் வண்ணம் அமைந்துள்ளது.

தட்சிணாமூர்த்தி

தெற்குச் சுவர் கோட்டத்தில் உள்ள தட்சிணாமூர்த்தி இடக் காலை மடித்து வலது தொடையின் மீது வைத்தும், வலக்காலைத் தொங்கவிட்டு அமர்ந்த நிலை, தலையில் குழல் போன்ற முடி அலங்காரத்துடன், மேற்கரங்களில் அட்சமாலையும், உடுக்கையும், கீழ்க்கரங்களில் சுவடியினை ஏந்தியும், சின்முத்திரை தாங்கியும் உள்ள திருக்கோலம் கலையழகுடன் காட்சி அளிக்கிறது.

கோயில் திருச்சுற்றில் பிராமி, இந்திராணி, வைஷ்ணவி, வாராகி, கௌமாரி, சாமுண்டி ஆகிய சப்தமாதர்கள் சிற்பங்களும் பிள்ளை யார், சண்டேசுவரர், ஜேஷ்டாதேவி, தனி அம்மன், சிற்பங்களை யும் காணலாம்.

அளவுகோல்

உண்ணாழியின் மேற்குச் சுவரில் அதிட்டானப் பகுதியில் அளவுகோல் ஒன்று காட்டப்பட்டுள்ளது. இது ஒரு கோடு போன்றும் அதன் இருமுனைகளிலும் செங்குத்தான கோடுகளும்

காணப்படுகின்றன. இக்கோல் 3 மீட்டர் 6·5 செ.மீ. நீளம் உடையது இந்த அளவுகோல் பொது அளவு கோலாக அக்காலத்தில் (முதலாம் இராஜராஜன் காலம்) பயன்பாட்டில் இருந்தமை புலனாகிறது.

அருள்துறை நாயனார் கோயில்

திருவெண்ணெய்நல்லூர்

இவ்வூர் விழுப்புரம் திருக்கோயிலூர் நெடுஞ்சாலையில் பெண்ணையாற்றின் (மலட்டாறு) தென்கரையில் திருக்கோயிலூர் வட்டத்தில் அமைந்துள்ளது. 'இராஜராஜ வளநாட்டு திருமுனைப் பாடி, திருவெண்ணெய்நல்லூர் நாட்டு பிரமதேயம், திருவெண்ணை நல்லூர்' என்று கல்வெட்டு குறிப்பதிலிருந்து இவ்வூர் ஒரு நாட்டின் தலைநகராக விளங்கியுள்ளது தெரிகிறது. இவ்வூர் நல்லூர் என்றும் வழங்கியுள்ளது. வெண்ணெய் கோட்டை கட்டி அன்னை மங்களாம்பிகை தவம் செய்த ஊரானதால் இதற்கு வெண்ணெய் நல்லூர் என்ற பெயர் வந்ததாகக் கூறுவர். சுந்தரரை தடுத்து ஆட்கொண்ட ஊரும், மணம் தவிர்த்த புத்தூரும் இவ்வூருக்கு அருகில் உள்ளது சிறப்புடையதாகும். கவிச்சக்ரவர்த்தி கம்பனை ஆதரித்த சடையப்ப வள்ளல் தோன்றியதும் இவ்வூரில்தான்.

அருள்துறை நாயனார் கோயில்

இங்கு சுத்தரமூர்த்தி சுவாமிகளை ஆட்கொண்ட அருள்துறை நாயனார் கோயில் உள்ளது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் திரு அருள்துறை உடைய மகாதேவர் என்றும், தடுத்தாட்கொண்ட நாதர் என்றும் குறிக்கப்படுகிறார். தற்பொழுது கிருபாபுரீஸ்வரர் கோயில் என்றழைக்கப்படுகிறது இத்தலம் சுந்தரமூர்த்தியால் பாடப்பெற்றதாகும்.

காலம்

இக்கோயிலில் உத்தம சோழன் கல்வெட்டு காணப்படுவதிலிருந்து இவனுக்கு முன்பே இக்கோயில் கட்டப்பட்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. இவன் காலத்தில் இக்கோயில் புதுப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இவனுடைய பத்தாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு திருவெண்ணெய்நல்லூர் சபையாரிடமிருந்து, பெரும்பூரைச் சார்ந்த பரயிதன் உத்தம சோழ மாறாயன்-

என்பவன் நிலத்தை வாங்கி இக்கோயிலுக்கு கொடை கொடுத் துள்ளதைக் குறிக்கிறது.

உத்தம சோழனுக்குப் பிறகும் இக்கோயில் புதுப்பித்துக் கட்டப் பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கோயில் அமைப்பு

இக்கோயில் கிழக்குப் பார்த்து அமைந்துள்ளது. உண்ணாழி அர்த்த மண்டபம், மகாமண்டபம் ஆகிய பகுதிகளைப் பெற்று விளங்குகிறது. தேவகோட்டங்களை, பிச்சைபுகும் பெருமான், தென்திசைக் கடவுள், அடிமுடிகாணா அண்ணல், நான்முகன், துர்க்கை ஆகிய சிற்பங்கள் அழகு செய்கின்றன.

சுந்தரமூர்த்தி சந்நிதி

கூட்டுத் தூண்களால் கட்டப்பெற்றுள்ள மண்டபத்தின் கூரைப்பகுதியில் சுந்தரமூர்த்தி சந்நிதி அமைந்துள்ளது. இதன் மீது இரண்டு தள விமானம் அழகு செய்கிறது. இந்த மண்டபம் இரண்டாம் இராசராசனால் கட்டப்பெற்றதாகும்.

மெய்கண்டதேவர் சந்நிதி

இக்கோயிலில் மெய்கண்ட தேவருக்குத் தனிச் சந்நிதி உள்ளது. திருவாவடுதுறை ஆதீனத்தார் இவ்வூரில் மெய்கண்டார் பெயரில் மடம் ஒன்றினையும் நிறுவியுள்ளனர். மெய்கண்டார் பரஞ்சோதி முனிவரிடம் அருள் பெற்றதும் இவ்வூரிலேதான். மெய்கண்ட தேவர் கோயிலில் ஆண்டுதோறும் விஜயதசமியன்று திருவாவடுதுறை ஆதீனத்தார் சைவ சித்தாந்த மாநாடு நடத்தி அதில் சித்தாந்த சாத்திரங்களை உரையுடன் வெளியிட்டு வருகின்றனர்.

வழக்குரைத்த மண்டபம்

அருள்துறை நாயனார் கோயிலின் இரண்டாம் திருச்சுற்றில் வடகிழக்கு மூலையில் பெரிய அளவில் ஒரு நூற்றுக்கால் மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இந்த மண்டபம் வழக்குரைத்த மண்டபம் என்று அழைக்கப்படுகிறது. சுந்தர மூர்த்தியின் வழக்குத் தொடர் பாக இறைவனுக்கும் திருவெண்ணெய் நல்லூர் அந்தணர்களுக்கும் சொற்போர் நடைபெற்ற மண்டபமாகும்.

கிழக்குக் கோபுரம்

இக்கோயிலின் கிழக்குப் பக்க கோபுரத்தின் தென்பக்க ஜகதிப் படையில் பொறிக்கப்பட்டுள்ள மூன்றாம் குலோத்துங்கனின் மூன்றாம் ஆட்சியாண்டு கல்வெட்டு "திருவெண்ணெய் நல்லூர் உடையார் ஆட்கொண்ட தேவர்க்கு இத்திருக்கோபுர மொசல் செய்வித்தான் கூடல் மோகன் ஆளப்பிறந்தான் அரச நாராயணனான காடவராயன்" என்று குறிப்பதிலிருந்து இக்கோபுரம் மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்தில் பிற்கால பல்லவர்களின் குறுநில மன்னனான கூடல் மோகன் ஆளப்பிறந்தான் அரச நாராயண னாகிய காடவராயனால் கட்டப் பெற்றதாகும்.

சம்புவராயன் கோபுரம்

கோயிலின் வடக்குப் பக்கம் உள்ள கோபுரத்தின் நுழை வாயிலில் சம்புவராயனின் 32-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டும், மூன்றாம் குலோத்துங்கனின் 18-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளதிலிருந்து இக்கோபுரம் மூன்றாம் குலோத் துங்கனின் காலத்தில் சம்புவராயனால் எடுக்கப்பட்டதாகத் தெரி கிறது. ஆனால் எந்த சம்புவராயன் என்பது தெரியவில்லை.

நல்லூர்

பெண்ணையாற்றின் தென்கரையில் ஏனாதிமங்கலம் என்ற ஊர் உள்ளது. இந்த ஊருக்கு மேற்கே 'நல்லூர் என்ற ஒரு இடம் உள்ளது. இங்கு ஒரு கோயில் இருந்து அழித்துப்பட்டுள்ள தற்கு அடையாளமாக அதிஷ்டானப் பகுதி மட்டும் காணப்படு கிறது. இங்கு ஒரு கோயில் இருந்து அழிந்துபட்ட பிறகு, இன்று வழங்கும் திருவெண்ணெய் நல்லூர் கோயில் எடுக்கப்பட்டிருக்க லாமோ என்று எண்ணத் தோன்றுகிறது. சுந்தரமூர்த்தி தான் பாடிய தேவாரத்தில், "தென்பால் வெண்ணை 'நல்லூர்' அருட் துறையுள்" என்று பாடியுள்ளதிலிருந்து, இங்கு குறிப்பிடப்படு கின்ற 'நல்லூர்' பழமையான ஊராக இருக்கலாமோ என்று எண்ணத்தோன்றுகிறது. இந்தப்பகுதியில் மேலும் அகழாய்வினை மேற்கொள்வதின் மூலம், உண்மையான வரலாற்றினை அறிந்து கொள்வதற்கு ஏதுவாக அமையும்.

வியாக்ரபாதேஸ்வரர் கோயில்

சித்தலிங்கமடம்

இம்மாவட்டத்தில் திருக்கோயிலூர் வட்டத்தில் பண்ருட்டி திருக்கோயிலூர் நெடுஞ்சாலையில் சித்தலிங்கமடம் என்ற ஊர் அமைந்துள்ளது. கல்வெட்டுகளில் இவ்வூர் 'சிற்றிங்கூர்' என்று குறிக்கப்படுகிறது. சிற்றிங்கூரில் அமைந்திருந்த சித்தலிங்கம் என்ற அக்ரகாரத்தின் பெயரே காலப் போக்கில் ஊருக்கும் (சித்தலிங்க மடம்) வழங்கப்பட்டுள்ளது.

வியாக்ரபாதேஸ்வரர் கோயில்

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இக்கோயில் சோழ மன்னன் முதலாம் பராந்தகன், முதலாம் இராசராசன், இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணன், மற்றும் பாண்டிய மன்னர்கள் காலத்தில் சிறப்புற்று விளங்கியுள்ளது. ஆனால் இக்கோயில் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் அவனுடைய தளபதியும், அமைச்சனுமான சபாநர்த்தகன், காலிங்கராயன், மானாவதாரன் போன்ற பட்டங்கள் பூண்ட நரலோக வீரன், சித்தலிங்க அக்ர காரத்தில் வியாக்ரபாதரைப் பணிந்து போற்றிய சிவபிரானுக்கு விமானம், திருச்சுற்று, மண்டபம், ஆகியவற்றுடன் இக்கற்றளியை எடுத்துள்ளான். முன்னரே எடுக்கப்பட்ட இக்கோயில் நரலோக வீரனால் கற்றளியாக்கப்பட்டுள்ளது.

தானங்கள்

இக்கோயிலில் குறிப்பாக முதலாம் குலோத்துங்கன் காலத்தில் திருப்பணி மேற்கொள்ளப் பெற்று முதலாம் பராந்தகன், இராட்டிர கூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணன் ஆகிய மன்னர்களின் கல் வெட்டுகளை படிகளாக்கி மீண்டும் இக்கோயில் சுவரில் பொறிக்க ஏற்பாடு செய்தமை சிறப்புடையதாகும்.

முதலாம் பராந்தகன் காலத்தில் இக்கோயிலில் விளக்கெரிக்க வும், நித்திய வழிபாட்டின் போது இசைக் கருவிகள் வாசிக்கவும் கொடை கொடுக்கப்பட்டுள்ளதை ஒரு கல்வெட்டு குறிக்கிறது.

கச்சியும் தஞ்சையும் கொண்ட கன்னரத்தேவனாகிய மூன்றாம் கிருஷ்ணன் காலத்தில் இறைவன் உலா வரும்போது நாட்டியமாடு வதற்காக, ''திருப்புலிப்பகவர் நிருத்தவிடங்கி'' என்ற நாட்டியப்

பெண்ணிற்கும் அவளது சந்ததியினருக்கும் சிற்றிங்கூர் சபையினர் நிலங்கள் அளித்துள்ளனர். முதலாம் இராசராசன் காலத்தில் ஆடவல்லார்க்கு விளக்கெரிப்பதற்கும் வழிபாட்டிற்காகவும் பொன் தானமாக அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இராசராசப் பேரேரிக்கு அருகிலுள்ள நிலங்கள் திருப்புலிப்பகவர்க்கு வழிபாட்டிற்காக அளிக்கப்பட்டதை ஒரு கல்வெட்டு குறிக்கிறது

முதலாம் குலோத்துங்கன் காலத்தில் பிராமணன் ஒருவன் பிள்ளை வரம் வேண்டி, பிள்ளையும் கிடைத்ததனால் இக்கோயிலில் விளக்கெரிக்க 32 பசுக்களைத் தானமாகக் கொடுத்துள்ள சிறப்பான தொரு செய்தியை மற்றொரு கல்வெட்டு குறிக்கிறது.

சேத்ரபாலர் சந்நிதி

இரண்டாம் இராசராசன் காலத்தில் பிராமணப் பெண் ணொருத்தி இக்கோயிலில் சேத்ரபாலருக்குச் சந்நிதி அமைத்து அதற்கு கொடையும் கொடுத்துள்ளாள் என்ற செய்தினையும் கல்வெட்டு குறிக்கிறது. கி பி. 13-ஆம் நூற்றாண்டில் பாண்டியர் களும் இக்கோயிலுக்கு தானங்கள் வழங்கியுள்ளனர் என்பதை அறியமுடிகிறது. இக்கோயிலுக்கு அரசர்கள் மட்டுமல்லாமல் தனிப்பட்டவர்களும் ஏராளமான தானங்கள் கொடுத்துள்ளனர். இவை தவிர இக்கோயிலில் பொதுமக்களின் உடன்படிக்கைகளும் கல்வெட்டாக உள்ளமை சிறப்பிற்குரியதாகும்

கோயில் அமைப்பு

இக்கோயில் அமைப்பு திருநாவலூர், கிராமம், திருவெண்ணெய் நல்லூர் ஆகிய கோயில்களை ஒத்து காணப்படுகிறது. பராந்தகன் காலத்தில் எடுக்கப் பெற்ற இக்கோயில்கள் பராந்தகனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த பல்வேறு மன்னர்கள் காலத்தில் புதுபிக்கப் பட்டுள்ளது போன்று இக்கோயிலும் புதுபிக்கப்பட்டுள்ளது இக்கோயில் தற்பொழுது உண்ணாழி, விமானம், மண்டபம், திருச் சுற்று ஆகிய பகுதிகளை கொண்டு விளங்குகிறது.

வீரட்டானேஸ்வரர் கோயில்

திருக்கோயிலூர்

விழுப்புரம் - இராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில் ஒரு வட்டத்தின் தலைநகராக திருக்கோயிலூர் விளங்குகிறது. இவ்வூர்

சைவர்களுக்கு ஒரு புனிதத் தலமாகும். திருக்கோயிலூரின் கிழக்குப் பகுதியில் வீரட்டானேஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. இக் கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் கீழூர் கோவல் வீரட்டா னேஸ்வரர் என்று அழைக்கப்படுகிறார். அப்பர், சம்பந்தர் ஆகிய இருவரும் இக்கோயில் இறைவனைப் பாடியுள்ளனர் இது எட்டு வீரட்டானங்களில் ஒன்று.

பல்லவர்கள்

கீழூரில் உள்ள சிவன் கோயில் பிற்காலப் பல்லவர்களான மூன் றாம் நந்தி வர்மன் மற்றும் நிருபதுங்கன் ஆகிய மன்னர்களின் காலத் தில் சிறந்து விளங்கியிருக்கிறது. திரு வீரட்டானத்துப் பெருமாள் கோயில் மலைநாட்டின் ஒருபகுதியான குறுக்கைக் கூற்றத்தில் திருக் கோவலூர் அமைந்திருந்தது என்பதைக் கோவிஜய நந்திவிக்ரமனின் பதினேழாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் குறிக்கிறது. இக் கல்வெட்டு கோயிலில் விளக்கெரிக்க பதினைந்து கழஞ்சு பொன்னை மாணிக்கத்தார் மகளான கொன்னக்கண்ணர் என்றழைக்கப்பெற்ற வானகோவரையரின் போகியார் அவ்வூர் நகரத்தார் (வணிகக் குழு) வசம் கொடையளித்ததைக் குறிக்கிறது. திருக்கோவலூர் நகரம் பற்றி நிருபதுங்கன் கல்வெட்டும் குறிக்கிறது.

சோழர்கள்

பரகேசரி வர்மனுடைய ஐந்தாவது ஆட்சியாண்டு கல்வெட்டு (பரகேசரி விஜயாலயன்) ஒரு நுந்தா விளக்கு எரிப்பதற்கு பதினைந்து கழஞ்சு பொன்னை வானகோவரையரின் பட்டத்து ராணியும், ஈழத்தடிகள் மகளுமான நங்கை குல மாணிக்கத்தார் என்பவர் திருவீரட்டானத்து பெருமானடிகளுக்கு கொடை கொடுத்ததைக் குறிக்கிறது. நகரத்தார் விளக்கு எரிக்க சம்மதித்ததின் பெயரில் இந்த அறக்கொடை மாகேஸ்வரர் பொறுப்பில் விடப்பட்டது.

முதலாம் பராந்தகனின் கல்வெட்டு திருவீரட்டானத்துப் பெருமாளுக்கு விளக்கெரிக்க இரண்டு கொடை கொடுக்கப் பட்டுள்ளதைக் குறிக்கிறது. மிலாடைச் சார்ந்த கையிரூர் பெரு மானார் மகளான இராஜதேவி பெருமானார் என்பவரும் முதலாம் பராந்தகன் மகனான பிள்ளையார் அரிகுல கேசரியார் என்பவ

ருடைய படையில் பணியாற்றிய மலையாள சேவகரும் கொடை கொடுத்துள்ளனர். இக்கோயிலில் இராஷ்டரகூட மன்னன் கன்னர தேவனின் (மூன்றாம் கிருட்டிணன்) கல்வெட்டுகளும் காணப் படுகின்றன.

முதலாம் இராசராசனின் பட்டத்தரசியான உலோக மகாதேவி யாரின் தாயான குந்தவை அமிர்த வள்ளி ஆழ்வார் நலனுக்காக முதலாம் இராசராசன் இக்கோயிலுக்கு ஒரு விளக்கு கொடை கொடுத்தது குறிக்கப்படுகிறது. கீழுரில் தற்பொழுதுள்ள திருவீரட்டானேஸ்வரர் கோயில் முதலாம் பராந்தகன் காலத்தைச் சார்ந்ததாகும். பிற்காலத்தில் புதுபித்துக் கட்டப்பட்டுள்ளது.

கோயில் அமைப்பு

இக்கோயில் மேற்குப் பார்த்து அமைந்துள்ளது. அதிஷ்ட்டானப் பகுதி 5 அடி உயரம் உள்ளது. அதன் மீது யாளி வரியும் பத்மமும் காட்டப்பட்டுள்ளது. உண்ணாழி நீண்ட சதுரவடிவிலும், அர்த்த மண்டப நுழை வாயிலில் இரண்டு பக்கங்களிலும் துவார பாலகர் சிலைகளும் உள்ளன. கூரைப் பகுதியின் கீழ் பூதகணவரியும், யாளி மற்றும் மனித தலைகளுடன் கூடிய கூடுப் பகுதியும், காட்டப் பட்டுள்ளன.

தேவகோட்ட சிற்பங்கள்

பிரம்மா, லிங்கோத்பவர் ஆகிய சிற்பங்கள் தேவகோட்டங்களை அழகு செய்கின்றன. கோயிலின் வடக்குப் பக்க திருச்சுற்றில் துர்க்கைச் சிற்பம் உள்ளது. கணேசர், சுப்ரமணியர் ஆகிய இருவருக்கும் தனியாக சந்நிதிகள் உள்ளன.

ஒப்பிலாமணீஸ்வரர் கோயில்

அரகண்டநல்லூர்

இம்மாவட்டத்தில் திருக்கோயிலூர் வட்டத்தில் பெண்ணை யாற்றின் வடகரையில் அரகண்டநல்லூர் அமைந்துள்ளது. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இவ்வூரை திருஞானசம்பந்தர் அரையணிநல்லூர் என்று குறிக்கின்றார்.

ஒப்பொருவரும் இல்லாத நாயனார்

இங்குள்ள குன்றின் மீது ஒப்பிலாமணீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவனைக் கல்வெட்டுகள் 'ஒப்பொருவரும் இல்லாத நாயனார்' என்று குறிக்கின்றன.

பல்லவர் குடைவரைக் கோயில்

இதனருகில் கிழக்குப் பக்கத்தில் முழுமை பெறாத பல்லவர் காலத்தில் எடுக்கப்பெற்ற குடைவரைக் கோயில் ஒன்று உள்ளது. இதில் கல்வெட்டு ஏதும் காணப்படவில்லை.

முதலாம் இராசராசன்

இக்கோயில் முதலாம் இராசராசனின் ஆட்சிக்காலத்தில் இருந்து சிறப்புற்று விளங்கியுள்ளது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவனுக்கு விளக்கெரிக்க கொடை கொடுத்ததைக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

மூன்றாம் குலோத்துங்கன்

மூன்றாம் குலோத்துங்கனின் 32-வது ஆட்சியாண்டில் இக்கோயிலின் உண்ணாழிப் பகுதி பாண்டி மண்டலத்தைச் சார்ந்த பட்டினசாமி என்பவரால் புதுப்பிக்கப்பட்டுள்ளது, என்பதை இங்குள்ள கல்வெட்டு குறிக்கிறது. எனவே இப்போதுள்ள கோயில் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தைச் சார்ந்ததாகும். இவன் காலத்தில் இங்கு இறைவியின் உருவமும் எடுக்கப்பட்டுள்ளது.

மண்டபங்கள்

உண்ணாழியின் முன் உள்ள மண்டபமும் நவராத்திரி மண்டபமும் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் எடுக்கப்பட்டவை யாகும்.

இக்கோயில் நிருத்த மண்டபம் கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் வன்னியரையனான இராஜராஜ சேதிராயன் என்பவனால் எடுக்கப் பட்டுள்ளது.

அம்மன் சந்நிதி

திரிபுவனச் சக்கரவர்த்தி விஜய ராஜேந்திர தேவன் (மூன்றாம் இராஜேந்திரன்) தன்னுடைய 39-வது ஆட்சியாண்டில் அம்மன்

சந்நிதியை கட்டியுள்ளான். இங்குள்ள உற்சவ மண்டபம் கி.பி. 14ஆம் நூற்றாண்டில் மாறவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி சுந்தர பாண்டியனால் எடுக்கப்பட்டுள்ளது.

கோபுரம்

இக்கோயிலின் இரண்டாம் திருச்சுற்றிலுள்ள கோபுரம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் கட்டப்பெற்றதாகும். இதனைக் கட்டுவதற்கு ஒப்பு நாயகரையன் வலுநாயக பொம்மனார் பப்பு நாயகர் மற்றும் நாகம நாயகரையன் ஆகியோர் கொடை கொடுத்துள்ளனர்.

நடராசர் சந்நிதி

இக்கோயிலில் உள்ள நடராசர் சந்நிதியைப் பாண்டிய மண்டலத்தின் ஒரு பகுதியான கேரளசிங்க வளநாட்டிலுள்ள திருக் கோட்டியூரைச் சார்ந்த அலவன்குட்டன் ஜெயசிங்க தேவன் என்பவன் எடுத்துள்ளான் என்பதை விக்கிரம பாண்டியன் கல்வெட்டு குறிக்கிறது.

அகத்தீஸ்வரர் கோயில்

ஆனாங்கூர்

இம்மாவட்டத்தில் விழுப்புரம் வட்டத்தில் விழுப்புரத்திற்கு கிழக்கே ஆறு கிலோ மீட்டர் தொலைவில் ஆனாங்கூர் அமைந் துள்ளது. இவ்வூர் தொன்மைச் சிறப்பும் வரலாற்றுச் சிறப்பும் வாய்க்கப் பெற்றதாகும். பல்லவ மன்னன் தெள்ளாறு எரிந்த நந்திவர்மன் (கி.பி. 9ஆம் நூற்றாண்டு) காலந்தொட்டு ஆனாங்கூர் என்ற பெயர் வழங்கி வந்துள்ளது என்பதை இவனுடைய கல் வெட்டு மூலம் அறிய முடிகிறது. இவ்வூர் பனையூர் நாட்டில் அமைந்திருந்தது.

அகத்தீஸ்வரர் கோயில்

இவ்வூரின் தெற்கில் அகத்தீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் ஆனாங்கூர் உடையார் என்றும், "மகாதேவர்" என்றும் குறிக்கப்படுகின்றார். இக்கோயில் தெள்ளாறு எரிந்த நந்திவர்மன் காலத்தில் எடுக்கப்பெற்றதாகும். தற்பொழுது இக்கோயில் அகத்தீஸ்வரர் கோயில் என்று அழைக்கப்படுகிறது.

முதலாம் குலோத்துங்கன்

பல்லவர் காலத்தில் எடுக்கப் பெற்ற அகஸ்தீஸ்வரர் கோயில் சிதைந்த நிலையில், பின்னர் ஆட்சிக்கு வந்த சோழ மன்னன் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் புதுப்பித்து கட்டப்பட்டுள்ளது என்பதை அவனுடைய கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன. தற்பொழுது இக்கோயிலில் கிடைக்கின்ற கல்வெட்டுகளில், முதலாம் குலோத்துங்கன் கல்வெட்டே பழமையானதாகும்.

பல்லவர் காலச் சிற்பங்கள்

முருகன்

கோயிலுக்கு வடக்கில் பலகைக் கல்லில் யானை மீது அமர்ந்த நிலையில் முருகன் சிற்பம் அழகே உருவாக காட்சியளிக்கிறது. இச்சிற்பத்தின் உருவ அமைதியைக் கொண்டு பார்க்கும் பொழுது இது கி. பி. 6 அல்லது 7ம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

அன்னையர் எழுவர்

கோயிலுக்கு வடக்கே ஒரே கல்லில் அன்னையர் எழுவரின் சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. இவையும் பல்லவர் காலக் கலைப் பாணிக்கு சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

சண்டிகேஸ்வரர்

அகத்தீஸ்வரர் கோயிலின் முன் உள்ள சந்நிதியில் சண்டிகேஸ் வரர் அமர்ந்த நிலையில் காட்டப்பட்டுள்ளார். வலது கையில் கதையும் இடது கையினை இடுப்பில் வைத்தும், தலையில் ஜடா பாரமும், காதுகளில் குண்டலங்களும், இடையில் குறுவாளை தாங்கிய நிலை. கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இச்சிற்பம் பல்லவர் காலத்தைச் சார்ந்ததாகும்.

கஜலட்சுமி

தாமரைப் பீடத்தின் மீது அமர்ந்து இரு கைகளிலும் தாமரை மலரை ஏந்தியநிலை. தேவியின் இரண்டு பக்கங்களிலும் யானை காட்டப்பட்டுள்ளது.

மகிஷாசுரமர்த்தினி

இவ்வூரின் ஏரிக் கரையில் இரயில் பாதையை ஒட்டி ஸ்ரீமகா மாரியம்மன் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் எட்டுக்

கைகளுடன் கூடிய அன்னை மகிஷனின் தலையின் மீது கம்பீரமாக நின்ற நிலையில் காட்சியளிக்கின்றாள். அன்னையின் காலுக்குக் கீழே இடது பக்கம் ஓர் அரக்கனின் உருவம் காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பம் பல்லவர் கலைப் பாணிக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

திருமால்

மகிஷாசுரமர்த்தினிக்கு அருகில் தனிக் கல்லில் திருமால் நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றார். தலையில் கிரீட மகுடம் வலது முன் கையில் சக்கரமும், பின்கை அபயமும், இடது முன் கையில் சங்கும், இடது பின் கையினை தொடையின் மீது வைத்த நிலை. பல்லவர் காலத்தை சார்ந்தச் சிற்பங்களில் இதுவும் ஒன்றாகும்.

அபிராமேஸ்வரர் கோயில்

திருவாமாத்தூர்

விழுப்புரம் இராமசுவாமி படையாட்சியார் மாவட்டத்தில் விழுப்புரத்திற்கு மேற்கே செஞ்சி நெடுஞ்சாலையில் 3 கி.மீ. தொலைவில் திருவாமாத்தூர் அமைந்துள்ளது.

தலச்சிறப்பு

காமதேனு, நந்தி, பசுக்கள் ஆகியவை மற்ற விலங்குகளின் தாக்குதலை எதிர்க்க வேண்டி இறைவனை பல வருடங்கள் தவம் செய்து கொம்புகள் பெற்றன என்று தலபுராணம் கூறும். இதன் காரணமாக இந்தத் தலத்திற்கு தாயூர் என்றும் ஆமாத்தூர் என்றும் பெயர் வழங்கியிருக்கிறது. இதனையே கோமாதுருபுரம் என்றும் புராணம் குறிக்கிறது.

அபிராமேஸ்வரர் கோயில்

இங்குள்ள அபிராமேஸ்வரர் கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் அபிராமேஸ்வரர் அழகிய நாதர், ஆளுடைய அழகிய தேவர் பெருமானடிகள் ஆகிய பெயர்களில் அழைக்கப்படுகிறார். இறைவியின் பெயர் முத்தம்மன் என்பதாகும். ஆமாத்தூர் அம்மான் ஒரு சுயம்பு மூர்த்தியாகும் பசுக்கள் இறைவனை வழி பாடு செய்ததன் அடையாளமாகக் குளம்புச் சுவட்டைத் தம் தலையிலே தாங்கி நிற்கிறார். இது ஒரு பாடல் பெற்ற தல

மாகும். இங்கு எழுந்தருளியுள்ள இறைவனை இராமபிரான் இலங்கையிலிருந்து திரும்பும்போது வழிபாடு செய்த காரணத்தால் அப்பர் பெருமான் "இராமனும், வழிபாடு செய்யும் ஈசன் இவர்' என்று குறிப்பிடுகின்றார். திருஞானசம்பந்தரும் இங்கு எழுந்தருளி யுள்ள இறைவனைப் புகழ்ந்து பாடியுள்ளார். சுந்தரமூர்த்தி நாய னாரும் ஆமாத்தூர் ஐயனைப் பாடியுள்ளார்.

கோயிலின் காலம்

அபிராமேஸ்வரர் கோயில் முதலாம் பராந்தகன் காலத்தைச் சார்ந்ததாகும். இக்கோயிலை அருகூர் தச்சன் நாரணன், வேகண்டன் ஆகிய திருவாமாத்தூர் ஆசாரியன் கட்டுவித்ததை இக்கோயிலி லுள்ள பரகேசரிவர்மனின் (முதலாம் பராந்தகன்) ஆறாவது ஆட்சி யாண்டுக் கல்வெட்டு குறிக்கிறது.

திருவாமாத்தூர் பெருமாள் அடிகளுக்கு முதலாம் பராந்தகனின் மகனான கண்டராதித்தனின் அதிகாரியான கண்டராதித்ய பல்லவ ரையன் என்பவன் நுந்தா விளக்கு எரிக்க பத்து பொன் கொடை கொடுத்துள்ளான்.

கோயில் அமைப்பு

இக்கோயில் உண்ணாழிப்பகுதி சதுரமாக அமைந்துள்ளது. அதிஷ்ட்டானப்பகுதி சற்று உயர்ந்து அமைந்துள்ளது. உண்ணாழிக் கும் அர்த்தமண்டபத்திற்கும் இடையில் அந்தராளம் அமைந்துள்ளது. அர்த்த மண்டபத்திற்கும் முக மண்டபத்திற்கும் இடையே மற்று மொரு அந்தராளம் அமைந்துள்ளது. இது கோயில் கட்டட அமைப்பிற்கு மாறுபட்டதாக அமைந்துள்ளது. எனவே பிற்காலத் தில் இக்கோயில் புதுப்பித்துக் கட்டப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. முக மண்டபத்திற்கு எதிரே மகாமண்டபம் உள்ளது.

உண்ணாழியின் தேவகோட்டங்களில் பிக்ஷாடனர், தட்சிணா மூர்த்தி, லிங்கோத்பவர், பிரம்மா, துர்க்கை ஆகிய சிற்பங்கள் உள்ளன. இக்கோயில் விமானம் ஒரு நிலை விமானமாகும். சிகரப் பகுதி புதிதாக எடுக்கப்பட்டுள்ளது. இக்கோயில் கோபுரம் சிதைந்து காணப்படுகின்றது. தற்பொழுது கோபுரத்தின் சுவர் பகுதி வரை காணப்படுகின்றது. கோபுர நுழைவாயிலில் உயர்ந்த நிலைத்தூண்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

சிற்பங்கள்

இக்கோயிலில் மிகவும் அழகு வாய்ந்த பல்லவர் காலத்தைச் சார்ந்த மும்மூர்த்திகளின் சிற்பமும் சண்டிகேஸ்வரர் விநாயகர் சிற்பங்களும் உள்ளன.

முத்தம்மன் கோயில்

அபிராமேஸ்வரர் கோயிலுக்கு எதிரில் முத்தம்மன்கோயில் அமைந்துள்ளது. இங்கு எழுந்தருளியுள்ள அம்மன், ''முத்தை வென்ற முருவல் நாச்சியார்'' என்று அழைக்கப்படுகிறார்.

இராசநாராயண சம்புவராயரின் கல்வெட்டு, இக்கோயில் மண்டபத்தை ''மாமல்லபுரத்தைச் சார்ந்த மாப்பூதி செந்தாமரைக் கண்ணன் இராசநாராயண வானாதிராயன் என்பவன் செய்வித்தான்'' என்று குறிக்கிறது. இக்கோயிலில் விஜயநகர மன்னர்களின் கல்வெட்டுகளும் பொறிக்கப்பட்டுள்ளன. முத்தம்மன் சந்நிதிக்கு முன் உள்ள மண்டபம் நாயக்கர் காலத்தைச் சார்ந்ததாகும்.

பதியம்பாட பார்வையிழந்தோர்

அபிராமேஸ்வரர் கோயிலில் உள்ள சோழமன்னன் இரண்டாம் குலோத்துங்கனின் இரண்டாம் ஆட்சியாண்டு கல்வெட்டு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இக்கல்வெட்டு திருவாமாத்தூரில் எழுந்தருளியுள்ள இறைவனுக்கு திருப்பதியம் பாடியவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இக்கோயிலுக்குத் தனிச் சிறப்பு உண்டு. ஏனெனில் இங்கு திருப்பதியம் பாடியவர்கள் பிறவிக் குருடர்கள். பார்வை தெரியாத, மற்றவர் பார்வைக்குத் தென்படுகின்ற புறக் கண்கள் இவர்களுக்கு இருந்தும் அவைகள் பயன்படாது போகவே அகக் கண்களால் இறைவனை உணர்ந்தார்கள். இதன் காரணத் தாலோ என்னவோ திருப்பதியம் பாடும் பேறு பெற்றனர்.

பிறவிக்குருடர்கள்

திருப்பதியம் பாடும் பொறுப்பை பதினாறு குருடர்கள் வகித்து வந்தனர். இவர்களுக்கு வழிகாட்டும் பணிக்கு இருவர் அமர்த்தப் பட்டனர். திருப்பதியம் பாடுபவர்கள் குருடர்களாக இருந்த காரணத்தால், இவர்களுடைய உதவியாளர்களைக் கல்வெட்டு 'கண்காட்டுவார்' என்று குறிக்கிறது. எவ்வளவு பொருத்தமான

சொல் இது. கண் இழந்துள்ள அவர்களுக்குத் தங்கள் கண்களின் துணையால், அவர்களுக்குக் கண்ணாக இருந்து வழிகாட்டுவதால் 'கண்காட்டுவார்' என்று அழைக்கப்பட்டனர் போலும்.

கண் இல்லாதவர்கள் இவ்வுலகில் வாழத் தகுதி அற்றவர்கள் என்று கருதி புறக்கணிக்கப்பட்டார்கள். இவர்கள் வாழ்வில் இனி ஒளி இல்லை என்று கருதப்பட்டது. இந்த ஒளி இல்லாத விளக்கு களை சோழர் காலச் சமுதாயம் புறக்கணித்ததா? இல்லை, அப்பொழுது அமைந்திருந்த அரசும், அரசனும் இத்தகைய குருடர் களுக்கு வாழ்வளிக்கத் தவறவில்லை. திருப்பதியம் பாடுபவர்கள் குருடர்களாக இருந்தாலும் நன்கு கற்றறிந்தவர்கள் ஆதலால் அவர்களைப் புறக்கணிக்காமல் இறைவனுக்கு திருப்பதியம் பாடும் பேற்றை அவர்களுக்கு அளித்தனர்.

திருப்பதியம் பாடிவரும் குருடர்கள் பதினாறு பேர்களுக்கும், கண்காட்டுவார் இருவருக்கும் சேர்த்து பதினெட்டு பேர்களுக்கு உணவுக்காக நெல் அளிக்கப்பட்டுள்ளது.

புடவை முதல்

இது தவிர இவர்கள் அணிந்து கொள்வதற்கு ஆடையும் வழங்கப்பெற்றுள்ளது. இதைப் 'புடவை முதல்' என்று கல்வெட்டு குறிக்கிறது. 'புடவை முதல்' என்பது திருப்பதியம் பாடுபவர் களுக்கும், அவர்கள் உதவியாளர்களுக்கும், கட்டிக் கொள்ளும் துணிக்காகக் கொடுத்ததைக் குறிக்கிறது. 'புடவை' என்ற சொல் துணி அல்லது ஆடை என்ற பொருளில் வழங்கி வந்திருக்கின்றது. இதைச் சிதம்பரத்தில் உள்ள 'ஆடவல்லப் பெருமான்' கோயிலில் உள்ள முதலாம் இராசேந்திரனின் கல்வெட்டு குறிக்கிறது. சாலைமடையன் (சமையல்காரன்) ஒருவனுக்கு உணவுக்காக ஆறு நாழி நெல்லும், அவனுக்கே புடவைக்கு (ஆடைக்கு) தனியாக நெல்லும் அளிக்கப்பெற்றது. இதே போன்று கோயிலில் பணி செய்யும் பெண்டுகள் ஐந்து பேர்களுக்கு உணவுக்காக குறுணி நெல்லும், அவர்களுக்கு புடவைக்கு பத்து கலம் நெல்லும் அளிக்கப் பெற்றது என்பதை நோக்கும்பொழுது 'புடவை' என்ற சொல் ஆண், பெண் இருவரும் உடுத்திக் கொள்ளும் ஆடையைக் குறிப்ப தாகக் கொள்ளலாம். இதே பொருளில் இரண்டாம் குலோத்துங்கன் காலத்திலும் 'புடவை' என்ற சொல் வழங்கி வந்திருக்கின்றது. ஆனால் இப்பொழுது புடவை என்ற சொல் பெண்கள் கட்டிக் கொள்ளும் 'சேலையை' மட்டுமே குறிக்கிறது.

அப்பர் பெருமான் தமது திருவாமாத்தூர் திருப்பதிகத்தில்

"பண்ணிற்பாடல்கள் பத்திசெய் வித்தகர்க்(கு)
கண்ணித்தாகும் அமுதினை ஆமாத்தூர்
சண்ணிப் பானைத்த மர்க்கணித்தாயதோர்
கண்ணிற்பாவையன் னானவன் காண்மினே".

என்று ஆமாத்தூர் இறைவனைப் பாடுகின்றார். "பக்தியின் பெருக்கால் தன்னை வந்தடைந்து திருப்பதியம் பாடிய அடியவர் களுக்குக் கண்ணின் பாவையைப் போன்று விளங்குவான்" என்று குறிக்கப்படும் திருப்பதியம் பாடும் குருடர்களுக்கு இவ்விறைவனே பார்வை அளிக்கும் பரம்பொருளாக விளங்கினானோ என்ற ஐயத்தை இப்பதியம் உண்டாக்குவது நோக்கத்தக்கது.

சம்புவராயர் திருப்பணி

வென்று மண்கொண்ட சம்புவராயர் ஆட்சியை நிறுவியதும் முஸ்லீம் படை எடுப்பால் பெரிதும் சீர்குலைந்த திருவாமாத்தூர் சிவன் கோயிலை புதுப்பிப்பதற்கு வேண்டி அனைத்துப் பணி களையும் மேற்கொண்டான் என்பதை அவனுடைய 14-ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு (கி.பி.1336).

"முன்னால் துருக்கர் வந்து திருவாசல்களும்
நிரையல் குலைந்து தேசமும் அழிந்து கிடக்கையில்"

என்று குறிக்கிறது.

முஸ்லீம்கள் கோயில் சொத்துக்களைக் கொள்ளையடித்தது போக உள்ளூர் மக்கள் கோயில் நிலங்களை சொந்தமாக்கிக் கொண்டனர். இதனால் வருமானம் இன்றி பூசையின்றி கோயில் சீரழிந்து கிடந்தது. அப்பொழுது கோயில் அடியார் அய்யுற தீர்த்தான் பல்லவராயர் அரசனை சந்தித்து நிலைமையை கூற, கோயில் நிலங்களை மீண்டும் கோயிலுக்கே ஒப்படைப்பதற்கு ஆணை பிறப்பித்தான் என்பதைக் கல்வெட்டு குறிக்கிறது.

மடம்

திருவாமாத்தூரில் அமைந்திருந்த மடத்தை நிர்வகித்து வந்த, தலைவணங்கினார் என்பவருக்குத் தும்பையூரில் நமச்சிவாயதேவர் என்பவர் நிலம் கொடை கொடுத்ததை இராசநாராயண சம்புவ ராயர் கல்வெட்டுக் குறிக்கிறது. இப்போதும் இம்மடம் நல்ல நிலை யில் உள்ளது. இதில் கோயில் குருக்கள் குடியிருந்து வருகிறார்.

பரவை ஈஸ்வரம் உடைய மகாதேவர் கோயில்

பனையவரம்

இம்மாவட்டத்தில் விழுப்புரம் வட்டத்தில் விழுப்புரத்திற்கு வட மேற்கே பனையவரம் என்ற ஊர் உள்ளது. எசாலம், எண்ணாயிரம் பிரம்மதேசம், ஏமப்பேரூர், தாதாபுரம் ஆகிய வரலாற்றூர்களுடன் பனையவரமும் வரலாற்றுத் தொடர்புடைய ஊராகும். "இராஜ ராஜ வளநாட்டுப் பனையூர் நாட்டுப் பெ(ா)றையூர் நாட்டுத் தனியூர் பரவைபுரம்" என்றும், கங்கை கொண்ட சோழவளநாட்டு பரவைபுரம் என்றும் இவ்வூரை கல்வெட்டுகள் குறிக்கின்றன. முதலாம் இராசேந்திர சோழனது அன்பிற்குரிய அணுக்கியாரான பரவை நங்கையாரின் பெயரில் இவ்வூர் பரவைபுரம் என்று வழங்கி யுள்ளது.

சிபிச்சக்கரவர்த்தி ஒரு பறவைக்காக தனது தொடையின் சதையை அர்ப்பணித்ததால் இவ்வூர் பரவைபுரம் என்று வழங்கியதாக தலபுராணம் கூறும்.

எனவே பரவைபுரம் என்று வழங்கிய இவ்வூர் தற்பொழுது பனையவரம் என்று வழங்குகிறது.

கோயில்

இரண்டாம் இராசேந்திரன் கல்வெட்டு இக்கோயில் பரவை ஈஸ்வரம் உடைய மகாதேவர் கோயில் என்று வழங்கியதை குறிக் கிறது. இதன்மூலம் பரவை நங்கைக்கும் இக்கோயில் பெயருக்கும் உள்ள தொடர்பு வெளிப்படுகிறது. தற்பொழுது இக்கோயில் நேத்ரோதாரகசாமி கோயில் என்று வழங்குகிறது.

இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் பரவை ஈஸ்வரம் உடையார் என்றும் பரவை புறத்து திருப்பனங்காடுடைய மகாதேவர் என்றும் கல்வெட்டில் குறிக்கப்படுகின்றார். இறைவியின் பெயர் சத்தியாம் பிகை என்பதாகும். இக்கோயிலில் இராஜேந்திர சோழ தேவருக்கும் பரவை நாச்சியாருக்கும் செப்புத்திருமேனிகள், செய்தளிக்கப் பெற்ற விபரம் நமக்குத் தெரிகிறது. அவற்றின் வழிபாடுகளுக்காக நிவந் தங்கள் அளிக்கப்பட்டிருந்ததையும் அறிய முடிகிறது.

மதுராந்தக ஈஸ்வரம் உடையார் கோயில்

முதலாம் இராஜேந்திரனின் மற்றொரு கல்வெட்டு இராஜேந்திர சோழ வளநாட்டுப் பனையூர் நாட்டின் ஒருபிரிவான பொறையூர்

நாட்டின் பரவை புரத்திலுள்ள மதுராந்தக ஈஸ்வர முடையார் கோயிலைப் பற்றி குறிக்கிறது. இக்கோயில் இராசேந்திரன் பெயரால் அமைந்துள்ளது சிறப்புடையதாகும். இக்கோயில் தற்பொழுது எங்குள்ளது என்பது தெரியவில்லை.

இராஜேந்திர சோழ விண்ணகர் ஆழ்வார் கோயில்

இவ்வூரில் விஷ்ணுகோயில் ஒன்றும் இருந்துள்ளது. இக்கோயில் இராஜேந்திரசோழ விண்ணகர் ஆழ்வார்கோயில் என்று வழங்கியுள்ளதை மற்றொரு கல்வெட்டு குறிக்கிறது.

கண்ணமந்த நாயனார் கோயில்

இவ்வூரில் கண்ணமந்த நாயனார் கோயில் ஒன்றும் இருந்துள்ளது. இதனைக் கல்வெட்டு இராஜராஜ வளநாட்டுப் பனையூர் நாட்டுப் பெ(ா)றையூர் பனங்காட்டூர் உடையார் கண்ணமந்த நாயனார் கோயில் என்று குறிக்கின்றன. மாறவர்மன் விக்கிரம பாண்டியன் கல்வெட்டு பனையூர் புரவர் பனங்காட்டூரிலுள்ள கண்ணமந்த நாயனார் என்று குறிப்பிடுகிறது. விருப்பண உடையார் கல்வெட்டு பரவைபுரத்து உடையார் கண்ணமந்த நாயனார் திருப்பணிகளுக்கும், கோயில் வழி பாட்டிற்கும், திருவிழாக்களுக்கும் கோலியபுர நல்லூர் பற்றிலுள்ள குன்றலூர் என்ற ஊரை வரியிலியாக கொடை கொடுத்ததைக் குறிக்கிறது.

தன்மபள்ளி

பனையவரத்தில் தன்ம பள்ளி ஒன்று இருந்ததை கல்வெட்டுக் குறிக்கிறது. எண்ணாயிரத்தில் இருந்தது போன்று ஆதுலர் சாலை ஒன்று பனையவரத்தில் உள்ள தன்ம பள்ளியுடன் இணைக்கப் பட்டிருந்தமை தெரிய வருகிறது. இங்கு நாள்தோறும் 50 பிராமணர்களுக்கும் 10 சிவயோகிகளுக்கும் உணவு அளிக்கப்பட்ட துடன் அவர்கள் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்கும் வகை செய்யப் பட்டிருந்தது.

தண்ணீர் பந்தல்

இங்குள்ள தன்ம பள்ளிக்கு ஒரு ஆசிரியரை நியமிப்பதற்கும், பரவை ஈஸ்வரமுடையார், மதுராந்தக ஈஸ்வரமுடையார் ஆகிய கோயில்களுக்கு முன் தனித் தனியாக தண்ணீர்ப்பந்தல் வைப்பதற்கும், இராஜேந்திர சோழன் மண்டபத்தின் எதிரிலும் ஒரு தண்ணீர்ப்பந்தல் வைப்பதற்கும் நிவந்தங்கள் அளிக்கப் பெற்றிருந்தது என்பதை மற்றொரு கல்வெட்டு தெரிவிக்கிறது.

நிவந்தங்கள்

இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள மற்றொரு கல்வெட்டு இக் கோயிலில் சிவதர்மம் படிப்பதற்கும், திருப்பதிகம் ஓதுவதற்கும், வீணை வாசிப்பதற்கும், வழிபாட்டிற்கும், நிவந்தங்கள் கொடுக்கப் பட்டுள்ளதைக் குறிக்கிறது.

இங்குள்ள அதிராஜேந்திர தேவர் கல்வெட்டு, இராஜராஜப் பாண்டி நாட்டு மிழலைக் கூற்றத்து புங்கஞ்சேரியைச் சார்ந்த நபர் இக்கோயிலுக்கு நிலம் கொடை கொடுத்ததைக் குறிப்பிடுகிறது.

ஜெயங்கொண்ட சோழ மண்டலத்தில் உள்ள தண்டலம் என்ற ஊரைச் சார்ந்த் நபர் பரவை ஈஸ்வரம் உடைய மகாதேவர் கோயிலில் ஒரு விளக்கெரிக்க கொடை கொடுத்ததை இரண்டாம் இராஜேந்திரன் கல்வெட்டு குறிக்கிறது.

பொக்கண உடையாரின் மகனான கம்பண உடையாரும் இக்கோயிலுக்கு நிலம் கொடை கொடுத்திருக்கிறார் என்பது தெரிகிறது.

தாதாபுரம் கோயில்கள்

தாதாபுரம்

திண்டிவனம் வட்டத்தில் தாதாபுரம் என்னும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர் அமைந்துள்ளது. இவ்வூர் 'இராசராசபுரம்' என்று வழங்கியதை இராசராசனின் கல்வெட்டு குறிக்கிறது. இராசராசபுரம் வெண்குன்றக் கோட்டத்தின் ஒரு பிரிவான நல்லூர் நாட்டில் அமைந்திருந்தது என்பதும் தெரிகிறது. தற்பொழுது இவ்வூர் தாதாபுரம் என்று வழங்குகிறது.

கோயில்கள்

தாதாபுரத்தில் சோழப் பேரரசன் முதலாம் இராசராசனின் தமக்கையாரும் "ஆழ்வார் பராந்தகன் குந்தவை" என்று கல்வெட்டு களால் குறிக்கப்படுகின்ற குந்தவைப் பிராட்டியார்

1. இரவிகுல மாணிக்கேஸ்வரர் கோயில்
2. குந்தவை விண்ணகர் ஆழ்வார் கோயில்

3. ஜினாலயம் (சமணக் கோயில்)

ஆகிய மூன்று கோயில்களை தாதாபுரத்தில் எடுப்பித்துள்ளளார்.
இவ்வூரில் கல்லேரியம்மன் கோயில் ஒன்றும் உள்ளது.

இரவிகுல மாணிக்கேஸ்வரர் கோயில்

இக்கோயில் முதலாம் இராசராசனின் 19ஆம் ஆட்சியாண்டிற்கு முன்பு குந்தவை பிராட்டியாரால் எடுப்பிக்கப்பட்டுள்ளது என்பதை கல்வெட்டுகள் வாயிலாக அறிய முடிகிறது. இரவிகுல மாணிக் கேஸ்வரம் என்றும் மணிக்கண்டேஸ்வரம் என்றும் இக்கோயில் வழங்கியுள்ளது. கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் மாணிக் கேஸ்வரர் என்று அழைக்கப்படுகின்றார். இறைவியின் பெயர் காமாட்சியம்மன் என்பதாகும்.

கோயில் அமைப்பு

கோயிலின் உண்ணாழி பகுதியை அடுத்து அந்தராளம் எனும் இடைகழி அமைந்துள்ளது. இதனை அடுத்து அர்த்த மண்டபம் செவ்வக வடிவில் அமைந்துள்ளது. இதனை அடுத்து மகா மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இங்குள்ள தூண்கள் சோழரின் கட்டடக் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. மகாமண்டபத்திற்கு முன்பு முகமண்டபம் அழகாக அமைந்துள்ளது. இதற்கு முன்புறம் நந்தி மண்டபம் உள்ளது.

தேவகோட்டச் சிற்பங்கள்

கோயிலின் தென்பக்கச்சுவர் தேவகோட்டங்களில் விநாயகர், தட்சிணாமூர்த்தி ஆகிய சிற்பங்கள் பச்சை நிற கற்களால் செதுக்கப்பட்டுள்ளன. மேற்கில் திருமால் சங்கு சக்கரத்துடன் காட்சி அளிக்கிறார். வடக்கில் எட்டு கைகளுடன் கூடிய கொற்றவை காட்சியளிக்கிறாள். கோயில் திருச்சுற்றில் பரிவார தேவதைகளான சுப்பிரமணியர், மூத்ததேவி, பைரவர் ஆகிய உருவங்கள் சிதறுண்டு காணப்படுகின்றன.

விமானம்

இக்கோயில் விமானம் திராவிட கலைப்பாணியை ஒத்ததாகும். துணைப்பீடம், பீடம், கால், கூரை, கழுத்து, தலை, முடி ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகின்றது.

பண்டாரம்

பனையூரைச் சார்ந்த நிர்வாக அதிகாரி மணிக்கண்டேஸ்வரம் கோயிலில் அமைந்திருந்த பண்டாரத்தை ஆய்வு செய்து, அதில் இருந்த பல்வகை ஆபரணங்களுக்கு விவரப்பட்டியல் தயார் செய்துள்ளார். இதில் கோயிலுக்கு அளிக்கப் பெற்றுள்ள குடங்கள் பொன், வெள்ளி, முத்துக்கள் ஆகியவைகளினால் செய்யப்பெற்ற ஆபரணங்கள் இடம் பெற்றுள்ளன என்ற விவரம் அக்கோயில் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

குந்தவை விண்ணகர் ஆழ்வார் கோயில்

இக்கோயில் மணிக்கண்டேஸ்வரம் சிவன் கோயிலுக்கு தென் மேற்கே அமைந்துள்ளது. இது கல்வெட்டுகளில் 'பராந்தகன் குந்தவை விண்ணகர ஆழ்வார் கோயில், என்று குறிக்கப்படுகிறது. குந்தவை விண்ணகரம், குந்தவை பிராட்டியாரால், இராசராசனின் இருபதாவது ஆட்சியாண்டிற்கு முன்னரே எடுப்பிக்கப்பெற்றிருக்க வேண்டும். இதே கால கட்டத்தில் மணிக்கண்டேஸ்வரம் சிவன் கோயில் கட்டப்பெற்றிருக்கும் என்பது தெளிவு.

இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் கலிவரத பெருமாள் என்றும், கரிவரத பெருமாள் என்றும் அழைக்கப்படுகின்றார். நின்ற திருக்கோலத்தில் உள்ள திருமாலின் இருபுறத்திலும் திரு மகளும், பூமகளும் எழில் உருவமாக காட்சியளிக்கின்றனர். தேசி கரும், உடையவரும், யோக நரசிம்ம மூர்த்தியும் அழகே வடிவாக அமர்ந்துள்ளனர்.

கோயில் அமைப்பு

இக்கோயில் உண்ணாழிப் பகுதி சதுர வடிவுடையதாகவும் அர்த்த மண்டபம் செவ்வக வடிவிலும் இதற்கு முன்பு முக மண்ட பமும் முக மண்டபத்தின் முன்புறம் கருடாழ்வார் சந்நிதி பெருமாள் சந்நிதியை நோக்கி அமைந்துள்ளன. கோயில் விமானம் சிவன் கோயில் விமானத்தின் கட்டட அமைப்பினை ஒத்து காணப் படுகின்றது. இக்கோயிலின் தேவகோட்டங்களில் சிற்பங்கள் ஏதும் காணப்பெறவில்லை. ஆனால் மகர தோரணங்களும் கொடுங்கை யுடன் கூடிய யாளி வரியும் கலையழகுடன் காணப்படுகின்றன.

கல்வெட்டுகள்

இக்கோயிலில் முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், இரண்டாம் இராசேந்திரன், குலோத்துங்கன் ஆகிய மன்னர்கள் காலத்தைச் சார்ந்த கல்வெட்டுகள் பொறிக்கப் பெற்றுள்ளன.

குந்தவை பிராட்டியார் கொடை

இராசராசனின் 25-வது ஆட்சியாண்டு கல்வெட்டு பராந்தகன் குந்தவைப் பிராட்டியார், குந்தவை விண்ணகர் ஆழ்வார் கோயிலுக்கு ஒரு விளக்கு எரிப்பதற்கு ஆடுகள் கொடை கொடுத்ததைக் குறிக் கிறது. சேனாபதி மும்முடி சோழ பிரம்ம மாராயன் என்பவன் இந்த கோயில் நிர்வாகத்தைக் கவனித்து வந்தான் என்பது தெரி கிறது. இவனே முதலாம் இராசராசனுக்கு சேனாதிபதியாகவும், பெருந்தனமாகவும் விளங்கியவன். இவன் சோழ மண்டலத்தின் ஒரு பிரிவான வேணாட்டில் அமைந்திருந்த, கேரளாந்தகச் சதுர் வேதி மங்கலத்து அமண் குடியைச் சேர்ந்தவன். இவனே தஞ்சை பெருவுடையார் கோயில் திருச்சுற்று மாளிகையையும் கட்டியுள்ளான். இவன் அரசனுக்கும், அரசாங்க நம்பிக்கைக்கும் பாத்திரமான பணியாளாக விளங்கினான். இவனுடைய முக்கியத்துவம் கருதியே இவனை இராசராசன் தன்னுடைய தமக்கையின் சமயப் பணி களையும் கவனித்துவரும்படி செய்துள்ளான் என்பது போற்றுதற் குரிய ஒன்றாகும்.

கல்லேரி அம்மன்

இக்கோயில் ஊருக்கு வடகிழக்குத் திசையில் சிவன் கோயில் திருக்குளத்திற்கும் கல்லேரி அம்மன் குளத்திற்கும் இடையில் அமைந்துள்ளது. அன்னையர் எழுவரில் இளையவளாகிய சாமுண்டி இக்கோயிலில் முக்கிய தெய்வமாக கல்லேரி அம்மன் என்ற பெயரில் வணங்கப்படுகின்றாள். இவள் கிராம தேவதையாக மக்களால் வழிபடப்படுகிறாள். அன்னையர் எழுவரின் சிற்பங்களும், விநாயகர், யோகேஸ்வரர் ஆகியோரின் சிற்பங்களும் வழிபாட்டில் உள்ளன. கல்லேரி அம்மன் செப்புத் திருமேனியும் வழிபாட்டில் உளளது.

அம்மன் கோயில் அமைப்பு

கல்லேரி அம்மன் கோயில் உண்ணாழி, அர்த்த மண்டபம், முக மண்டபம், பலிபீடம், சூல பீடம் ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகின்றது. கோயிலின் முகமண்டபத்தில் தென் திசையில் அன்னைக்காக வேண்டிக்கொண்டு வீரன் ஒருவன் தன் கழுத்தை தானே அறிந்து பலி கொடுக்கும் நவகண்ட சிற்பம் ஒன்றும் புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது.

ஜினாலயம்

தாதாபுரம் திருமால் கோயிலுக்கு மேற்கே செங்கமேடு என்ற இடம் உள்ளது. இந்த இடத்தில்தான் குந்தவை ஜினாலயம் இருந்திருத்தல் வேண்டும். தற்பொழுது இக்கோயிலைப் பார்க்க முடியாது. இராசராசனைப் போன்று குந்தவைப் பிராட்டியாரும் எம்மதமும் சம்மதம் என்ற கொள்கையினை ஏற்று சைவ, வைணவ, சமண மதத்தை ஒன்றாகவே வளர்த்துள்ளார். இவர் எடுத்துள்ள மூன்று கோயில்களும் ஒரே காலத்தில் எடுக்கப் பெற்றுள்ளன. இச்சமணக் கோயிலுக்கும் பல்வேறு கொடைகளை இவர் அளித் துள்ளதை கல்வெட்டுகள் குறிக்கின்றன. இவ்வூரை அடுத்த செங் கேணிகுப்பம் என்ற இடத்தில் கிடைத்துள்ள சமண திருமேனி இக்கோயிலைச் சார்ந்ததாகும்.

வைணவத் தலங்கள்

ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற வைணவத் திருப்பதிகளும் இப்பகுதியில் உள்ளன. வைணவத் திருப்பதிகள் நூற்றெட்டில் இரண்டு திருப்பதிகள் நடுநாட்டில் உள்ளன. அவற்றுள் ஒன்று இம்மாவட்டத்தில் திருக்கோயிலூரில் அமைந் துள்ளது. இவ்வூரின் வளத்தையும் இங்கு எழுந்தருளியுள்ள இறை வனின் பெருமையினையும் திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி யில் பாடியுள்ளார். இவர் திருநெடுந்தாண்டகத்திலும் திருக்கோயி லூரைக் குறிப்பிடுகின்றார். இவர் மட்டுமல்லாமல் பொய்கையாழ் வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரும் திருவந்தாதியில் திருக்கோயிலூரைப் போற்றிப் பாடியுள்ளனர்.

திருக்கோயிலூர் மட்டுமல்லாமல் திருவரங்கம், ஆற்றூர், விழுப்புரம், செஞ்சி, பரிக்கல் ஆகிய இடங்களிலும் வைணவத் தலங்கள் அமைந்துள்ளன.

திருவிக்கிரம பெருமாள் கோயில்

திருக்கோயிலூர்

இம்மாவட்டத்தில் அமைந்துள்ள திருக்கோயிலூர் சங்க காலத் தில் மலையமான்களின் தலைநகராக 'கோவலூர்' என்ற பெயரில் வழங்கப் பெற்றுள்ளது. இவ்வூர் வைணவர்களுக்கு புனிதத் தலமாக

விளங்குகிறது. திருக்கோயிலூரின் மேற்குப் பகுதியில் தொன்மை வாய்ந்த விஷ்ணு கோயில் உள்ளது. இக்கோயில் திருவிக்கிரம பெருமாள் கோயில் என்று வழங்குகிறது.

இரண்டாம் இராசேந்திர சோழனின் 6-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு 'மதுராந்தக சதுர்வேதி மங்கலமாகிய திருக்கோவலூரி லுள்ள திருவிடைக்கழி ஆழ்வார் கோயில்' என இவ்வூரையும், இக் கோயில் இறைவனையும் குறிப்பிடுகின்றது. ''திருவிடைக்கழி என்கிற சித்திரமேழி விண்ணகர்'' என்றும் மற்றொரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. இக்கோயில் முதலாம் பராந்தகன் காலத்தில் செங்கல்லால் கட்டப்பெற்றதாகும். இது முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், இரண்டாம் இராசேந்திரன் ஆகிய மன்னர்கள் காலத்திலும் போற்றப்பட்டு வந்துள்ளது.

நரசிங்கவர்மன்

இரண்டாம் இராசேந்திர சோழனின் ஆட்சிக்காலத்தில் குறுநில மன்னனாக விளங்கிய மிலாடு இரண்டாயிரம் பகுதியைச் சார்ந்த பார்கவ குல முறையைச் சார்ந்த ஆளுனரான நரசிங்கவர்மனாகிய இரணகேசரி இராமன் என்பவன் செங்கல்லால் கட்டப்பட்டிருந்த இக்கோயிலை கருங்கல்லால் மாற்றி அமைத்துள்ளான். உண்ணாழி, மண்டபம், திருச்சுற்று மாளிகை ஆகிய பகுதிகளை அழகிய கருப்புநிற கருங்கல்லால் எடுப்பித்துள்ளான். இத்துடன் ஐந்து ஸ்தூபிகளும் அமைத்துள்ளான். இறைவனுக்கு முத்தங்கியும் வழங்கியுள்ளான்.

பெருமாள் சந்நிதி

இக்கோயிலில் உண்ணாழியில் நின்ற கோலத்தில் உலகளந்த திருவிக்ரமன் காட்சியளிக்கிறார். மூலவர் திருஉரு மரத்தால் ஆனதாகும். திருவிக்ரமனின் பத்தினி, மிருகண்டு, மகாபலி ஆகியோர் காலடியில் காட்டப்பட்டுள்ளனர். கோயிலின் முதல் திருச்சுற்றின் முகப்பில் துர்க்கை சிற்பம் உள்ளது. இந்த திருச் சுற்றில் இலக்குமி நாராயணன், இலக்குமி, வராகமூர்த்தி இலக்குமி நரசிம்மன் ஆகிய மூவருக்கும் தனித்தனியாக சந்நிதிகள் உள்ளன. இராமர், உடையவர், திருக்கச்சிநம்பி, ஆண்டாள், மணவாள மாமுனிகள் சந்நிதிகளும் உள்ளன.

பூங்கோயிலாள்

கோயிலின் இரண்டாவது திருச்சுற்றில் புஷ்பவல்லித் தாயார் சந்நிதி அமைந்துள்ளது. இது நாயக்கர் காலத்தில் எடுக்கப் பெற்ற தாகும். இதற்கு அடையாளமாக நாயக்க மன்னர்களின் சிற்பங்கள் இங்கு காணப்படுகின்றன. பூங்கோயிலாள் என்று அழைக்கப் பெறும் இவ்வம்மையின் சந்நிதிக்கு முன் உள்ள மண்டபம் மிகப் பெரிய அளவில் எடுக்கப்பட்டுள்ளது. இங்கு பெண்கள் நடனமாடும் காட்சியும் கோலாட்டமிடும் காட்சியும் புடைச் சிற்ப வரிசையில் மிகவும் அழகாக வடிக்கப்பட்டுள்ளன.

கோயில் திருப்பணி

திருமங்கை மன்னன், சோழர், பாண்டியர், விஜயநகர நாயக்கர் ஆகிய மன்னர்கள் காலத்தில் இக்கோயிலில் பல்வகைத் திருப்பணிகள் செய்யப் பெற்றுள்ளன.

கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் இக்கோயில் ஒரு போர்க் கோட்டையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. கி. பி. 1758-ல் ஆங்கிலேயர் இதனைக் கைப்பற்றினர். அதன்பின் கி.பி. 1760-ல் ஹைதர்அலியின் படைத் தாக்குதலிலிருந்து இக்கோயிலைக் காப்பாற்றி உள்ளனர்.

திருவரங்கம்

திருக்கோயிலூருக்கு மேற்கே 15 கி.மீ. தொலைவில் பெண்ணை யாற்றின் கரையில் திருவரங்கம் அமைந்துள்ளது. இவ்வூர்க் கோயிலில் எழுந்தருளியுள்ள அரங்கநாதர் தமிழ்நாட்டிலுள்ள சயனத் திருக்கோலங்களில் அளவில் பெரியவராவார். ஸ்ரீதேவியின் மடியில் தலையைச் சாய்த்தும் பூதேவி அடிவருடப் பள்ளிகொண் டுள்ளார். நான்முகனுக்கு உபதேசம் செய்யும் திருக்கோலத்துடன் திகழும் இவ்வரங்கர் சுதையினால் வடிக்கப்பட்டுள்ளார்.

ஆற்றூர்

திருக்கோயிலூருக்குத் தென்கிழக்கே 12 கி. மீ. தொலைவில் கெடிலத்தின் தென்கரையில் ஆற்றூர் அமைந்துள்ளது. ஆற்றங் கரையில் இவ்வூர் அமைந்துள்ளதால் ஆற்றூர் என்று வழங்கியது போலும். தற்பொழுது ஆத்தூர் என்று மருவி வழங்குகிறது. மேட்டு ஆத்தூர், பள்ள ஆத்தூர் என இரு பிரிவுகளாக இவ்வூர்

வழங்குகிறது. பள்ள ஆத்தூரில் பெருமாள் கோயில் உள்ளது. திருக்கோவலூர் நாட்டில் அமைந்திருந்த ஆற்றூரை தலைநகராகக் கொண்டு ஏகம்பவாணன் என்னும் சிற்றரசன் ஆண்டுள்ளான். அவனை ஆரையர் கோன், ஆரைநகர்க் காவலன் என்று இலக்கியங்கள் புகழ்ந்து கூறுகின்றன. அந்த ஆற்றூர் இந்த ஊராகத்தான் இருக்க வேண்டும்.

விழுப்புரம் கோயில்கள்

விழுப்புரம்

இவ்வூர், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்தின் தலைநகராக விளங்குகிறது. விழுப்புரம் தொன்மைச் சிறப்பும், வரலாற்றுச் சிறப்பும் வாய்ந்த ஓர் ஊராகும். இவ்வூர் பிற்காலப் பல்லவர் காலத்தில் நிருபதுங்கவர்மன் பெயரால் ''விஜய நிருபதுங்க ஜெயந்தாங்கி சதுர்வேதி மங்கலம்'' என்று வழங்கப் பட்டுள்ளது. பின்னர் முதலாம் இராசராசனின் பட்டப் பெயரால் ''ஜனநாதச் சதுர்வேதி மங்கலம்'' என்று இவ்வூரின் பெயர் வழங்கியுள்ளது.

பிற்காலச் சோழர்கள் காலத்தில் சிறந்த அரசியல் தலைவனாக இப்பகுதியில் செல்வாக்குப் பெற்று விளங்கிய விழுப் பரையன் என்பவன் பெயரால் 'விழுப்பரையபுரம்' என்ற பெயருடன் இவ்வூர் விளங்கியுள்ளது.

'பின்னர் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் காலந் தொட்டு இவ்வூர் விழுப்புரம் என்ற பெயரில் வழங்கி வந்ததை விழுப்புரம் கைலாசநாதர் கோயிற் கல்வெட்டு குறிக்கிறது.

விழுப்புரத்திலுள்ள வைகுந்தவாசப்பெருமாள் கோயில் கொடிக் கம்பத்தில் பதிக்கப் பெற்றிருந்த ஒரு செப்பேடு 'விழுப்புரம் என்று வழங்கும் சனகாபுரி' என்று இவ்வூரைக் குறிக்கிறது.

கோயில்கள்

விழுப்புரத்தில் வைகுந்தவாசப்பெருமாள் கோயிலும், வாலீஸ்வரர், கைலாசநாதர் கோயில்களும் உள்ளன.

வைகுந்தவாசப்பெருமாள் கோயில்

கோயில்

விழுப்புரம் நகர்ப்பகுதியில் நடுநாயகமாக வைகுந்தவாசப் பெருமாள் கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் முதல் ஆழ்வார்கள் மூவராலும், திருமங்கை ஆழ்வாராலும் தரிசிக்கப்பட்ட தலமாகும். ஆனால் ஆழ்வார்களால் பாடப்பெறவில்லை. இது ஒரு அபிமான ஸ்தலமாகும். நடுநாட்டின் வைகுந்தம் என்று இக் கோயிலை அழைக்கின்றனர்.

முதலாம் பராந்தகன்

சோழமன்னன் முதலாம் பராந்தகனின் 33-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு இக்கோயிலை ''விண்ணகர்ப் பெருமாள் கோயில்'' என்று குறிக்கிறது. இதே ஆண்டு இக்கோயில் கட்டப்பெற்றுத், திருப்பணி களுக்காக நிலம் கொடையளிக்கப் பெற்றதையும் இக்கல்வெட்டு குறிக்கிறது.

முதலாம் குலோத்துங்கனின் ஆட்சிக் காலத்தில் இக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் இராசேந்திர சோழ விண்ணகர் ஆழ்வார் என்ற பெயரில் வழங்கப் பெற்றுள்ளார்.

கோயில் அமைப்பு

கிழக்கு நோக்கியுள்ள இக்கோயிலின் நுழைவாயில் தென்புறம் அமைந்துள்ளது. கோயிலின் வெளிமண்டபத்தின் முன் வீர ஆஞ்சநேயர் பலகைக் கல்லில் வடிக்கப் பெற்றுள்ளார்.

கொடிக்கம்பம்

பெருமாள் கோயில் கொடிக்கம்பத்தைத் துளுவவேளாள மரபைச் சார்ந்த போத்தராசன் சேப்பெருமாப்பிள்ளை குமாரர் ரத்தினம் முத்துசாமிப் பிள்ளையும் மேற்படி நகரவாசியாகிய கருணீகமரபு சோமரசாமிப் பிள்ளை குமாரர் ரத்தினம் சதாசிவ பிள்ளையும், பாலுசெட்டி குமாரர் ரத்தினமாகிய சின்னசாமி செட்டி இம்மூவரும் சேர்ந்து இந்த கொடிக்கம்ப தருமத்தைச் செய்துள்ளனர் என்பதை இக்கொடிக் கம்பத்தில் பதிக்கப் பெற்றிருந்த செப்பேடு குறிக்கிறது. இது கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

மகாமண்டபம்

இக்கோயில் மகாமண்டபத்தில் பன்னிரு ஆழ்வார்கள், இலட்சுமி நாராயணர், உடையவர், தேசிகர் ஆகியோரின் சிற்பங்கள் உள்ளன.

அர்த்த மண்டபம்

மகாமண்டபத்தினை அடுத்துள்ள அர்த்த மண்டபப் பகுதியின் கிழக்குப் பக்கம் வரதராஜ பெருமாள் சந்நிதி உள்ளது. இது விஜய நகர மன்னர்கள் காலத்தில் எடுக்கப் பெற்றதாகும். வரதராஜ பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவியுடன் நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கின்றார்.

உண்ணாழி

கோயில் உண்ணாழிப் பகுதியில் வைகுந்தவாசப் பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவியருடன் அமர்ந்த நிலையில் அருள் ஆட்சி புரிகிறார். காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு.

கனகவல்லித் தாயார் சந்நிதி

இக்கோயிலை விழுப்புரம் நகரத்தில் வாழ்ந்த கிருஷ்ண வேங்கடராம நாயக்கர் ஸ்ரீமுக ஆண்டு மார்கழி மாதம் 2-ஆம் தேதி கட்டத் தொடங்கி கி.பி. 1874-ல் முடித்துள்ளார் என்பதை இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள ஒரு கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது.

ஆண்டாள் சந்நிதி

கோயிலின் வடக்குத் திருச்சுற்றில், வடமேற்கு மூலையில் ஆண்டாள் சந்நிதி உள்ளது. சக்கரத்தாழ்வார், பெரிய திருவடி, சிறிய திருவடி ஆகியோர்களுக்குத் தனி சந்நிதிகள் உள்ளன.

கொற்றவை

கனகவல்லித் தாயார் சந்நிதியின் நுழைவாயிலின் வடக்குப் பக்கத்தில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல்லவர் காலக் கொற்றவையின் சிற்பம் உள்ளது. மகிஷனின் தலை மீது தேவி நின்ற நிலை. எட்டு கைகளுடன் அன்னை காட்சியளிக்கின்றாள். தலையின் மீது காட்டப்பட்டுள்ள சடை ஒரு கவசமாகப் பல்லவர் களுக்கே உரிய கலைப்பாணியில் காட்டப் பெற்றுள்ளது.

கொடைகள்

விஜயநகர மன்னன் குமார கம்பண்ண உடையார் காலத்தில் விழுப்புரத்திற்குத் தெற்கே பெண்ணை ஆற்றங்கரையில் உள்ள பிடாகம் என்ற ஊரில் இக்கோயிலுக்காக 12 மா நிலம் கொடை அளிக்கப்பட்டுள்ளது எனத் தெரிகிறது. ஆண்டுதோறும் பொங்கல் திருநாளுக்குப் பிறகு வரும் ஆற்றுத்திருவிழாவின்போது விழுப்புரத் திலிருந்து வைகுந்தவாசப்பெருமாள் பிடாகம் வரை சென்று வருவது வழக்கத்தில் உள்ளது.

வெள்ளப்பாழ்

கி.பி 1470-71-ல் விழுப்புரத்திற்கு மேற்கே உள்ள ஏரி உடைந்து பெருவெள்ளத்தால் ஊரும், கோயில்களும், குளங்களும் அடியோடு பாழானதையும் மீண்டும் ஊரைப் புதுப்பித்து மக்களும் குடியேறிக் கோயில்களைக் கட்டியதையும் இக்கோயிற் கல்வெட்டு குறிக்கிறது. இதே செய்தியினை இவ்வூரில் உள்ள கைலாசநாதர் கோயிற் கல்வெட்டும் தெரிவிக்கிறது.

வாலீஸ்வரர் கோயில்

விழுப்புரத்தில் உள்ள பூந்தோட்டம் மேட்டுத்தெருவில் வாலீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் வாலீஸ்வரர் என்றும் ஸ்ரீ திருவாலீஸ்வரத்துப் பரமசாமி என்றும் அழைக்கப்படுகிறார். இக்கோயிலில் இறைவிக்கென்று தனியாகச் சந்நிதி இல்லை. கிழக்குப் பார்த்து அமைந்துள்ள இக் கோயிலில் கோபுரம், திருச்சுற்று ஏதும் இல்லை. மகாமண்டபம், முகமண்டபம் ஆகிய பகுதிகள் காணப்பெறவில்லை. கோயிலின் முன்பகுதியில் அண்மைக் காலத்தில் கட்டப்பெற்றுள்ள மண்டபம் உள்ளது. இதனை அடுத்துள்ள அர்த்த மண்டபம், உண்ணாழிப் பகுதிகள் சோழர்கள் காலத்தைச் சார்ந்தனவாகும்.

கோயில் அமைப்பு

உண்ணாழி, அர்த்த மண்டபம் ஆகிய பகுதிகளில், கோவி இராசகேசரி வன்மர், (முதலாம் ஆதித்தன்) முதலாம் இராசராசன் ஆகிய மன்னர்களின் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளதிலிருந்து, இப்பகுதிகள் இவர்களுடைய காலத்திற்கு முன்போ அல்லது அவர் கள் ஆட்சிக் காலத்திலோ கட்டப்பெற்றிருக்கலாம் எனத் தெரிகிறது.

அர்த்தமண்டபப் பகுதியில் தென்பக்கம் உள்ள தூணில் வாலியின் உருவம் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. தூணின் பலகைப் பகுதிக்கு மேல் போதிகை காட்டப்பட்டுள்ளது. அதற்கு மேல் உள்ள கூரைப் பகுதியில் குள்ளச்சிறு பூதங்களின் உருவங்கள் வடிக்கப்பட்டுள்ளன.

உண்ணாழி

உண்ணாழி சதுரவடிவில் அமைந்துள்ளது. இதன் மீது விமானப்பகுதி காணப்பெறவில்லை. இப்பகுதி அண்மைக் காலத்தில் கூடு போன்று செங்கல், சுண்ணாம்பைக் கொண்டு கட்டப் பெற்றுள்ளது. உண்ணாழியின் தேவ கோட்டங்களைத் தென்பக்கம் தென்திசைக் கடவுள், மேற்கே அடிமுடிகாணா அண்ணல், வடக்குப் பக்கம் நான்முகன் சிற்பங்களும் அழகு செய்கின்றன. இச்சிற்பங்களின் உருவ அமைதியைப் பார்க்கும் பொழுது, இவை முதலாம் ஆதித்தன் காலத்தைச் சார்ந்தவைகளாகக் கொள்ளலாம்.

சிற்பங்கள்

முருகன், சண்டிகேஸ்வரர் ஆகிய சிற்பங்கள் இக்கோயிலின் வடக்குப் பக்கத்தில் வைக்கப்பட்டுள்ளன. முருகன் சிலை கணுக்கால் பகுதிவரை உடைந்த நிலையிலும், வலது முன்கை உடைந்தும் காணப்படுகிறது. தலையின் பின்புறம் பிரபை காட்டப்பட்டுள்ளது. இதனுடைய காலம் கி.பி. 9—10ஆம் நூற்றாண்டாகும்.

சண்டிகேஸ்வரர் அமர்ந்த நிலையில், இடது கையினை இடது தொடையின் மீது வைத்தும், வலது கையில் மழுவை ஏந்தியும் காணப்படுகிறார். தலையில் ஜடாபாரம் காட்டப்பட்டுள்ளது. இது கி. பி. 8—9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

தலைமட்டும் உள்ள கி. பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தேவியின் உருவம் உள்ளது.

கல்வெட்டுகள்

கோவிராசகேசரி (முதலாம் ஆதித்தன்), முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், விக்கிரம சோழன் ஆகிய மன்னர்களின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

கைலாசநாதர் கோயில்

விழுப்புரம் திரு. வி. க. வீதி மீனாட்சி கல்யாண மண்டபத்திற்கு வடக்கே கைலாசநாதர் கோயில் அமைந்துள்ளது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் கைலாசநாதர் என்றும், இறைவி பெரிய நாயகி என்றும் அழைக்கப்படுகிறது. கிழக்குப் பார்த்து அமைந்துள்ள இக்கோயிலின் கிழக்குப் பக்க நுழைவாயில் மட்டும் உள்ளது. ஆனால் அதன் மீது கோபுரம் அமைக்கப்படவில்லை. மேற்குப் பக்கத்தில் அமைந்துள்ள நுழைவாயிலில் கோபுரம் அமைந்துள்ளது. இது பிற்காலத்தில் புதுப்பித்துக் கட்டப்பெற்றுள்ளது.

வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் இங்குள்ள விநாயகர், முருகர், கைலாசநாதர், அன்னை பெரியநாயகி மீது பதிகங்கள் பாடியுள்ளார். இப்பதிகங்களைத் திருவாமாத்தூரில் உள்ள கௌமார மடாலயத்தினர் விழுப்புரம் தோத்திரத்திரட்டு என்ற பெயரில் வெளியிட்டுள்ளனர்.

கைலாசநாதர் கோயில் சோழ மாமன்னன் முதலாம் இராச ராசன் காலந்தொட்டு வழிபாட்டில் இருந்து வந்துள்ளது என்பதைப் பார்க்கும் பொழுது இவன் காலத்திற்கு முன்பே இக்கோயில் கட்டப்பட்டிருக்க வேண்டும் எனலாம். இவனுக்குப் பின்னர்வந்த முதலாம் குலோத்துங்கன், கோப்பெருஞ்சிங்கன் இராச நாராயண சம்புவராயன், சடையவர்மன் சுந்தர பாண்டியன், விருப்பண்ண உடையார், சாளுவ நரசிங்கராச உடையார், நரசிங்க நாயகர், கிருஷ்ணதேவராயர் அச்சுத தேவ மகாராயர், சதாசிவ தேவராயர், இரண்டாம் ஸ்ரீரங்கதேவர் முதலான அரசர்கள் காலத்தில் கைலாசநாதர் கோயிலில் திருப்பணிகள் நடைபெற்றுள்ளன.

வெள்ளப்பாழ்

கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் விழுப்புரத்தில் வெள்ளம் புகுந்து பெருத்த சேதத்தை விளைவித்துள்ளது. இதனால் பெரிதும் பாதிக்கப்பட்ட இக்கோயில் விஜயநகர மன்னர்கள் காலத்தில் மீண்டும் புதுப்பித்துக் கட்டப்பட்டுள்ளது. இதனால் சோழர்கள் காலத்தில் எடுக்கப் பெற்ற இக்கோயில் பெரிய அளவில் மாற்றிக் கட்டப்பெற்றுள்ளது என்பது தெரிகிறது.

நிலக்கொடைகள்

இக்கோயிலுக்கு, விழுப்புரத்தை சுற்றி அமைந்துள்ள சேந்த னூர், கண்டியத்தேவன் குப்பம், வழுதலம்பட்டு, காக்கைக்குப்பம், ஆனாங்கூர், சாலாமேடு, சிறுவந்தாடு, எறம்பாம்பட்டி, சித்தராய னூர், வளவநல்லூர் (வளவனூர்) கப்பூர், ஒழுக்கை (மரகதபுரம்) வழுதரெட்டி, திருவாமாத்தூர் ஆகிய ஊர்களில் நிலம் தானமாக அளிக்கப்பட்டுள்ளது.

சாதி ஒருமைப்பாடு

விஜயநகர மன்னர்கள் காலத்தில் விழுப்புரத்தில் வாழ்ந்த பல்வேறு சாதியினர், தங்களுக்குள் வகுப்பு வித்தியாசம் பார்க்காமல் சண்டை சச்சரவு இன்றி ஒற்றுமையாக அனைவரும் ஒன்று சேர்ந்து கோயிற் திருவிழாவை 10 நாட்கள் சிறப்பாகக் கொண்டாடி யுள்ளனர் என்பதை இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கல் வெட்டுகள் வாயிலாக அறிய முடிகிறது.

இந்தத் திருவிழாவை ஒவ்வொரு சாதியினரும் ஒவ்வொரு நாள் சிறப்பாக நடத்தியுள்ளனர் என்பது தெரிகிறது. முதல் நாள் திருவிழா கோயில் உபயமாகச் செய்யப்பட்டுள்ளது. இரண்டாம் நாள் திருவிழாவைத் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட கோமுட்டிச் செட்டிகளும், சேடர்கள் என்ற இனத்தவரும் சேர்ந்து செய்துள்ளனர். மூன்றாம் நாள் திருவிழாவைப் பெரிய நாட்டாரும் நான்காம் நாள் திருவிழாவைப் பள்ளிகளும் (படையாட்சிகளும்) ஐந்தாம் நாள் திருவிழாவை மன்றாடிகளும் (தமிழ் யாதவர்கள்) நடத்தியுள்ளனர். இடையில் கல்வெட்டு சிதைந்துள்ளதால் ஆறாம் நாள் திருவிழாவை யார் நடத்தினார்கள் என்பது தெரியவில்லை. ஏழாம் நாள் திருவிழாவைச் சிவன் படையர், பட்டினவர் என்று சிறப்பாகக் கூறப்பெறும் சிவன் பட்டரும், எட்டாம் நாள் திருவிழாவைக் கணக்குப் பிள்ளைகளும் (கருணீகரும்), ஒன்பதாம் நாள் திருவிழாவை வியாபாரிகளும், பத்தாம் நாள் திருவிழாவைத் தமிழ் பேசும் செக்கு வாணியரும், கைக்கோளரும் செய்ததை அறிய முடிகிறது.

குயவர்கள்

ஊருக்குப் பொதுவான கோயிலுக்குச் சொந்தமான இலுப்பை மரங்களைக் குத்தகைக்கு எடுத்திருந்த ஊர்க் குயவர்கள் பத்து

நாள் விழாவுக்கும் தீவட்டிகளுக்கு இலுப்பை எண்ணெய் கொடுத் துள்ளனர் என்பதைக் கல்வெட்டுகள் ாயிலாக அறிய முடிகிறது.

பெரிய நாயகி கோயில்

கி.பி. 1866-ல் விழுப்புரத்தில் வாழ்ந்த தொண்டை மண்டல முதலியார் சோமசுந்தர சரவண முதலியார் என்பவர் பெரிய நாயகி கோயிலைப் புதுப்பித்து கட்டியுள்ளார். இக்கோயில் கைலாசநாதர் கோயிலுக்கு வடபுறத்தில் மேற்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது.

கைலாசநாதர் கோயில்

பலிபீடத்தை அடுத்து விஜயநகர மன்னர்கள் காலத்தைச் சார்ந்த நந்தி மண்டபம் உள்ளது. நந்தி மண்டபத்திற்கு முன்பு மகாமண்டபம் உள்ளது. இந்த மண்டபத்திற்கு தென்பகுதியில் முருகன் சந்நிதி அமைந்துள்ளது. மேற்பகுதியில், படிகளின் மூலம் மேலே சென்றால் நடராஜர் மண்டபத்தை அடையலாம். இந்த மண்டபத்திற்குத் தென்பக்கமும் ஒருவழி உள்ளது. இங்கு சோமாஸ்கந்தர் மண்டபம் உள்ளது. நடராஜர் மண்டபத்திலிருந்து மேற்கே சென்றால் அர்த்த மண்டபத்தை அடையலாம்; அதனை அடுத்து உண்ணாழி அமைந்துள்ளது.

மகாமண்டபம்

இம்மண்டபம் நாயக்கர் காலத்தில் எடுக்கப் பெற்றதாகும். எந்த நாயக்க மன்னர் காலத்தில் எடுக்கப் பெற்றது என்பது தெரியவில்லை. ஆனால் அரசன் அவனுடைய மனைவி, தளபதி ஆகியோரின் உருவங்கள் இந்த மண்டபத் தூண்களில் சிற்பங்க ளாக வடிக்கப்பட்டுள்ளன. சிற்பங்களின் உருவ அமைதியைப் பார்க்கும் பொழுது இவை நாயக்கர் காலத்தைச் சார்ந்தவை என்பது தெரிகிறது.

அர்த்தமண்டபம்

அர்த்த மண்டபம் உருளைத் தூண்களால் கட்டப் பெற்றுள்ளது. இது சோழர்கள் காலத்தைச் சார்ந்ததாகும்.

உண்ணாழி

இக்கோயில் உண்ணாழிப் பகுதியும் புதுப்பித்துக் கட்டப் பெற்றுள்ளது. உண்ணாழியின் அதிட்டானப் பகுதிக்கு மேல் சற்று உயர்ந்த பீடம், பீடத்திற்கு மேல் பத்மம் காட்டப்பட்டுள்ளன.

பத்மத்திற்கு மேல் வியாழவரி, கண்டம், சுவர்ப் பகுதியில், தூண்கள் காட்டப்பட்டுள்ளன. கோட்ட பஞ்சரம் இரண்டு தூண்களுக்கு இடையில் காட்டப்பட்டுள்ளது. தூணின் மேற் பகுதியில் உள்ள பலகையின் மீது போதிகை, போதிகையின் மீது கொடுங்கை காட்டப் பட்டுள்ளது அதற்கு மேல் உள்ள விமானப்பகுதி செங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. விமானம் இரண்டு நிலைகளையுடையது. இது வேசர சிகரமாகும். உண்ணாழிப் பகுதியின் தென்பக்க தேவ கோட்டங்களில், விநாயகர், தென்திசைக் கடவுள் சிற்பங்கள் உள்ளன. மேற்குப் பக்கம் அடிமுடிகாணா அண்ணல் வடக்குப்பக்கம் பிற்காலத்தைச் சார்ந்த நான்முகன் ஆகிய சிற்பங்கள் உள்ளன. வடக்குப்பக்க அர்த்த மண்டபத் தேவகோட்டத்தில் துர்க்கையின் சிற்பம் உள்ளது இது சோழர்கள் காலத்தைச் சார்ந்ததாகும்.

சிற்பங்கள்

இக்கோயிலில் உள்ள சிற்பங்களில் காலத்தால் முந்தியது பிச்சைபுகும் பெருமானின் சிற்பமாகும். இது கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். இச்சிற்பம் விழுப்புரத்தில் உள்ள வாலீஸ்வரர் கோயிலைச் சார்ந்ததாகும். அங்குள்ள சிற்பங்களின் சாயலை ஒத்துள்ளதால் இச்சிற்பம் முதலாம் ஆதித்தன் காலத்தைச் சார்ந்ததாகக் கருதலாம். அழகு வாய்ந்த இச்சிற்பம் புன்முறுவல் பூத்த முகத்துடன், இடது பின்கையில் உள்ள சாமரத்தை தோளின் மீது சாய்த்து கம்பீரமாகக் காட்சியளிக்கும் அழகே தனி. இதனருகில் கி.பி. 13-14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மற்றுமொரு பிச்சை புகும் பெருமானின் சிற்பம் உள்ளது.

இதனருகில் சோழர்கள் காலத்தைச் சார்ந்த சண்டிகேஸ்வரர் சிற்பம் ஒன்றும் உள்ளது.

கி. பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சங்கநிதி சிற்பம் தற் பொழுது இக்கோயிலின் வடக்குப் பக்கத்தில் கோமுகத்தின் கீழ் வைத்துக் கட்டப்பெற்றுள்ளது கோயிலின் நுழைவாயிலில் இருக்க வேண்டிய சிற்பம் இங்கு வைக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம் நகர்ச் சத்திரங்கள்

ஹேமாபாய் சத்திரம்

கைலாசநாதர் கோயிலுக்கு எதிரில் வலது பக்கத்தில் தெற்குப் பார்த்து ஹேமாபாய் சத்திரம் அமைந்துள்ளது. செஞ்சிப் பகுதியை

ஆண்ட 'ராஜா தேசிங்கு' என்ற தலைவனின் வழி வந்தவர்களுள் ஒருவரான ஹேமாபாய் என்பவர் பெயரில் இச்சத்திரம் வழங்கி வந்துள்ளது. ஹேமாபாயின் மகள் தாராபாய் என்பவர் ஆவார். இவர் காலத்தில் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு யாத்திரிகர் களுக்கும் பைராகிகளுக்கும் இச்சத்திரத்தில் உணவு வழங்கப் பெற்றுள்ளது. பைராகிகளுக்குக் கோதுமை மாவும் நெய்யும் வெல்லக்கட்டி ஒன்றும் உணவு சமைப்பதற்கு வேண்டிய விறகும் அளிக்கப்பட்டுள்ளது. இச்சத்திரம் செங்கல், சுண்ணாம்பைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. தெற்குப் பார்த்து அமைந்துள்ள இச்சத்திரத்திற்கு மூன்று பக்கங்களிலும் பெரிய திண்ணைகள் உள்ளன. தெற்குப் பக்கத்திலிருந்த கிணறு மூடப்பட்டுள்ளது.

சத்திரத் தூண்கள் வட்டமாக அமைக்கப்பட்டுள்ளன. செங்கல் சுண்ணாம்பைக் கொண்டு கட்டப்பட்டதாகும். அதன்மீது மரத் திராவி போடப்பட்டுள்ளது. திராவியின் மீது செங்கல் தளம் அமைந் துள்ளது. இச்சத்திரத்திற்குத் தோகப்பாடி என்ற ஊரில் உள்ள சத்திரத்திற்கு வடப்புறம் 6 காணி நிலம் வழங்கப் பெற்றுள்ளது

விழுப்புரத்தில் உள்ள பிற சத்திரங்கள்

பாவாடபத்தர் சத்திரம் : விழுப்புரம் திரு. வி. க. சாலையில் பொற்கொல்லர்களால் அமைக்கப்பட்டுள்ள இச்சத்திரத்தில் ஏழை எளிய மக்களுக்கு உணவளிக்கப்படுகிறது.

பாபுராவ் சத்திரம் : இச்சத்திரம் விழுப்புரம் மேல் அணைமார் கோயில் தெருவில் அமைந்துள்ளது.

கோமுட்டி சத்திரம் : இச்சத்திரம் தெலுங்கு செட்டியார்களால் பராமரிக்கப்படுகிறது. இத்துடன் இணைத்து கன்னிகா பரமேஸ்வரி கோயிலும் கட்டப்பெற்றுள்ளது. தற்பொழுது தெலுங்கு செட்டியார் சமூகத்தினர் திருமணத்திற்கு இச்சத்திரம் வாடகைக்குவிடப்படுகிறது.

விழுப்புரத்தில் சத்திரங்கள் மட்டுமல்லாமல் மடங்களும் உள்ளன.

சங்கர மடம் : இங்கு ஒரு வேத பாடசாலை உள்ளது; இங்கு கல்வியுடன் உணவும் அளிக்கப்படுகிறது.

இராமலிங்கசாமி மடம் : மீனாட்சி கல்யாண மண்டபத்தில் இம்மடம் அமைந்துள்ளது. இங்கு ஒரு பிள்ளையார் கோயிலும் உள்ளது

திண்டிவனம் கோயில்கள்

திண்டிவனம்

சங்க காலத்தில் ஓய்மான்களின் தலைநகராகக் கிடங்கில் விளங்கியுள்ளது. ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து ஓய்மா நாட்டுக் கிடங்கில் நாட்டுக் கிடங்கில் என்று கல்வெட்டுக் குறிக்கிறது. கிடங்கில் கோமான் என்ற குறுநில மன்னன் கிடங்கில் பகுதியை ஆண்டு வந்தான். இது இன்று திண்டிவனத்தின் ஒரு பகுதியாக விளங்குகிறது. தற்பொழுது திண்டிவனத்தின் தென் பகுதியில் உள்ள குளம் 'கிடங்கிலேரி' என்று அழைக்கப்படுகிறது.

திருத்திண்டீசுவர தேவர் கோயில்

கிடங்கில் என்ற பகுதியில் திருத்திண்டீசுவர தேவர் கோயில் அமைந்துள்ளது. இறைவன் பெயரே இவ்வூருக்கும் 'திண்டிவனம்' என்ற பெயரில் வழங்குகிறது. கிடங்கில் என்று வழங்கிய இவ்வூரின் பெயர் விக்கிரம சோழன் காலத்தில் திண்டிவனம் என்ற பெயரில் மாறி வழங்கியுள்ளது. திண்டீசுவரர் கோயில் என்று வழங்கிய இக்கோயில் முதலாம் இராசராசன் காலத்தில் 'திருத்திண்டீசுவர தேவர் கோயில்' என அழைக்கப்பட்டுள்ளது. மகாதேவர் எனவும் திருத்திண்டிவன முடையார் கோயில் எனவும் வழங்கப் பெற்றது.

திருநாவுக்கரசர், சேத்திரக் கோவையில் இதனை வைப்புத் தலமாகப் பாடியுள்ளார். இக்கோயில் இராசகேசரிவர்மன் சுந்தர சோழனாகிய இரண்டாம் பராந்தகன் காலத்தைச் சார்ந்த தாகும். பின்னர் முதலாம் இராசராசன் முதல் விஜயநகர் அரசர் வேங்கடபதிராயர் காலம் வரை இக்கோயில் சிறப்புற்று விளங்கியது.

கோயில் அமைப்பு

இக்கோயில் உண்ணாழி, அர்த்த மண்டபம், மகாமண்டபம் ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. உண்ணாழியின் தேவகோட்டங்களை விநாயகர், தட்சிணாமூர்த்தி, திருமால், நான்முகன், துர்க்கை ஆகிய சிற்பங்கள் அழகு செய்கின்றன.

கொடைகள்

முதலாம் இராசராசனின் 10-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டு கோயிலில் வீணை வாசிப்பவனுக்கும் உடன் பாடுவான் ஒருவனுக்

கும் 'கிடங்கில் வாழ்ந்த கடம்புழான் தீர்த்தன் ஆதித்தன்' என்பவன் முருங்கைப்பாக்கத்திலிருந்து நிலம் கொடை கொடுத்ததைக் குறிக் கிறது. தான் பிறந்த (மகத்து) நாளைக் கொண்டாடுவதற்குச் சோழ நாட்டுத் தென்கரை ஆர்க்காட்டுக் கூற்றத்துப் பேரரசுருடையான் ஆருரன் அருமொழி மூவேந்த வேளான் பாப்பனப்பட்டியில் நிலம் கொடுத்துள்ளான். அந்நிலத்தை 'உண்ணாழிகைச் சபையினர்' பெற்று ஆண்டு முழுவதும் விழாவைக் கொண்டாடியுள்ளனர். இதிலிருந்து கோயில் திருவிழாக்களை உண்ணாழிகைச் சபையினர் கவனித்து வந்துள்ளனர் என்பது தெரிகிறது.

சோழ நாட்டு இங்கண் நாட்டுப் பன்னூர்க் கிழவன் நட்டன் பொற்காரி என்பவனின் மணவாட்டியான கலி என்பவள் இக் கோயிலில் விளக்கு எரிப்பதற்கு ஆடுகள் கொடை கொடுத்துள்ளாள். முதலாம் குலோத்துங்கன் கல்வெட்டு இக்கோயிலுக்கு விளக்கெரிக்கப் பசுக்கள் கொடை கொடுத்ததைக் குறிக்கிறது.

கல் மண்டபம்

இவ்வூர் புத்தன் இராஜசிங்கன், ஆணைப்படி இக்கோயிலில் கல் மண்டபம் கட்டிய செய்தியை மற்றொரு கல்வெட்டு குறிக் கிறது. பிள்ளையார், சண்டிகேஸ்வரர் வழிபாட்டிற்கும் அமுது படிக்கும் திருமஞ்சனம், மெய்ப் பூச்சு ஆகியவைகளுக்கு நிலமும், நற் காசுகளும் கொடுத்தது குறிக்கப்படுகின்றது.

அன்பநாயக ஈசுவரர் கோயில்

அதிராஜேந்திரன் காலத்தில் திருக்கௌரீசுவர முடைய மகாதேவர் கோயில் என்றும், முதல் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்தில் திருவிறையான் மகாதேவர் கோயில் என்றும் வழங்கிய இக்கோயில் தற்பொழுது அன்பநாயக ஈசுவரர் கோயில் என்று வழங்கப்படுகிறது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவியின் பெயர் அறம் வளர்த்த நாயகி என்பதாகும். அதிராஜேந்திரன் முதலாம் குலோத்துங்கன், விக்ரம சோழன், இராச நாராயண சம்புவராயன் ஆகிய மன்னர்கள் இக்கோயிலில் பல்வகைத் திருப் பணிகளைச் செய்துள்ளனர்.

ஏரி உடைப்பு

கி. பி. 1418ல் விஜயபூபதி உடையார் ஆட்சியின் போது கிடங்கில் ஏரி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுப் பெரிய மடை உடைந்து போயிற்று என்ற செய்தியினையும் கல்வெட்டு தெரிவிக்கிறது.

ஆதண்டன் கோட்டை

திண்டிவனத்தை அடுத்த மாவிலங்கையைத் தலைநகராகக் கொண்டும் கிடங்கிலைக் கோட்டையாகக் கொண்டும் நல்லியக் கோடன் இப்பகுதியை ஆண்டுள்ளான். உறையூர், மதுரை, வஞ்சி ஆகிய தலைநகரங்களை விடச் செல்வச் செழிப்புடையநாடு, அவனுடைய நாடு என்று இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் என்ற புலவர் சிறுபாணாற்றுப் படையில் குறிக்கின்றார். காவிதிப் பெருங்கொற்றனார், காவிதி கீரங்கண்ணனார், ஆகிய இருவரும் இங்கு வாழ்ந்துள்ளனர். கிடங்கில் குலபதி நக்கண்ணனார் இங்கு பிறந்து வாழ்ந்தவராவார். இப்பகுதியில் செங்கல்லால் கட்டப் பெற்ற கோட்டை ஒன்று 'ஆதண்டன் கோட்டை' என்ற பெயரில் வழங்கியுள்ளது. நல்லியக்கோடன் மரபினரான வில்லி ஆதன், நல்லி ஆதன் ஆகிய இருவரும் இப்பகுதியை ஆண்டனர். அவர்கள் பெயரை நினைவூட்டுவதாக வில்லி மேடு, (வெள்ளிமேடு பேட்டை) மேல் ஆதனூர், கீழ் ஆதனூர் என்ற ஊர்கள் உள்ளன. இவர்கள் பெயரில் விளங்கிய 'ஆதன் தன்' கோட்டையே பின்னர் ஆதண்டன் கோட்டை என்று மருவியிருக்கலாம்.

செஞ்சிக் கோட்டையும் கோயில்களும்

செஞ்சி

இராமசாமி படையாட்சியார் மாவட்டத்தின் வடமேற்குப் பகுதியில் திண்டிவனம்-திருவண்ணாமலை நெடுஞ்சாலையில் செஞ்சி அமைந்துள்ளது. சிருங்கி என்றால் சமஸ்கிருதத்தில் மலை என்பது பொருள். சிருங்கி என்பது மருவி செஞ்சி என்று வழங்குவதாகச் சொல்வர். இங்குள்ள செஞ்சி அம்மன் பெயரே இங்கு அமைந் துள்ள கோட்டைக்கும் ஊருக்கும் வழங்கியுள்ளது என்றும் கூறுவர்.

செஞ்சிக் கோட்டையிலிருந்து 4 கி.மீ. தொலைவில் சிங்கவரம் என்ற ஊர் உள்ளது. இங்கு பல்லவர் காலத்தைச் சார்ந்த குடை வரைக் கோயில் ஒன்று உள்ளது. சிங்கவரத்தை விஷ்ணு செஞ்சி என்றும். இதன் அருகில் உள்ள மேலைச்சேரி என்ற ஊரைப் பழைய செஞ்சி என்றும், கோட்டைப் பகுதியை சிவசெஞ்சி என்றும் கூறுவர். செஞ்சி நாயக்கர்களின் தலைநகராக விளங்கியுள்ளது.

கோட்டை

யாதவ குலத்தைச் சார்ந்த முதலாம் ஆனந்தகோன் என்பவன் கி. பி. 1200-ல், இராஜகிரிக்கோட்டையை நிறுவியுள்ளான் இவ

னுக்குப் பின்னர் வந்த கிருஷ்ணகோன் என்பவன் கி.பி. 1240-ல் கிருஷ்ணகிரி மலைக்கோட்டையை கட்டியுள்ளான். இங்குள்ள மற்ற கட்டடப் பகுதிகளை இவர்களுக்குப் பின்னர் செஞ்சியை ஆண்ட விஜயநகர, நாயக்க, மராட்டிய, முகமதிய, கர்நாடக நவாப்புகள், பிரெஞ்சு மற்றும் ஆங்கிலேயர் வம்சத்தில் வந்தவர்கள் கி.பி. 1383 முதல் 1780 வரை கட்டியுள்ளனர்.

கிருஷ்ணகிரி, சந்திரகிரி, இராஜகிரி (Great mountain) ஆகிய மூன்று மலைகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட கோட்டை இவ் வூருக்கு அரணாக அமைந்துள்ளது. மேற்கில் உள்ள இராஜகிரி (800 அடி உயரம்) என்னும் மலை அரண்வலி கொண்டது. வடக்கில் உள்ளது கிருஷ்ணகிரி என்றும், தெற்கில் உள்ளது சந்திரகிரி என்றும் பெயர் பெறும். இம்மூன்று மலைகளையும் இணைத்து, 60 அடி அகலம் உள்ள உயரமான அலங்கம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. அதன் வெளிப்புறத்தில் 80 அடி அகல முள்ள அகழியும் இருக்கிறது இந்தக் கோட்டையின் சுற்றளவு 5 மைல் ஆகும். கீழ்க்கோட்டைக்கு இரண்டு முக்கிய வாசல்கள் உள்ளன. வடபுறம் உள்ளது வேலூர் வாசல் அல்லது ஆர்க்காட்டு வாசல் என்றும், கிழக்கே உள்ளது புதுச்சேரி வாசல் என்றும் அழைக்கப்படுகிறது, மலையுச்சிக்கு செல்வதற்கு படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. இராஜகிரியின் உச்சியை அடைய ஏழு வாயில்களைக் கடக்க வேண்டும். இந்தக் கோட்டையில் கோடை யிலும் வற்றாத தண்ணீர்ச் சுனைகள் உள்ளன. சந்திரகிரி மலையின் உச்சியிலும் ஒரு சிறிய கோட்டை உள்ளது.

கட்டடப் பகுதிகள்

செஞ்சிக் கோட்டையில் கோயில்களும், குளங்களும், மேடைப் பகுதிகளும், மற்றும் கல்யாண மகால், நாட்டிய சாலை, தர்பார் மண்டபம், யூசுதி ஆகிய கட்டடப் பகுதிசளும் அமைந்துள்ளன.

வைணவக் கோயில்கள்

கோட்டைப் பகுதியில் அரங்கநாதர் கோயில், வேணுகோபால சாமி கோயில், வெங்கடரமணசாமி கோயில், பட்டாபி இராமசாமி கோயில் ஆகிய கோயில்கள் அமைந்துள்ளன.

அரங்கநாதர் கோயில்

இராஜகிரியின் உச்சியில் அரங்கநாதர் கோயில் உள்ளது. கோயில் உண்ணாழியில் அரங்கநாதர் உருவம் ஏதும் இல்லை. இக்கோயில் விஜயநகர மன்னர்கள் காலத்தில் கட்டப் பெற்ற தாகும். இங்கு ஒரு மண்டபமும் உள்ளது.

வேணுகோபாலசாமி கோயில்

உட்க்கோட்டையின் மேற்குப்பக்க நுழைவாயிலின் அருகில் வேணுகோபாலசாமி கோயில் உள்ளது. இக்கோயிலில் ஒரு பலகைக் கல்லில் சிற்பங்கள் வடிக்கப் பெற்றுள்ளன. இங்கு குழல் ஊதும் கிருஷ்ணன், ருக்மணி, சத்திய பாமாவுடன் இரண்டு பெண் உருவங்களும் புடைச் சிற்ப வரிசையில் வடிக்கப் பெற்றுள்ளன.

இந்தக் கோயிலைப் பற்றி கி. பி. 1599-ல் செஞ்சிக்கு வந்த தந்தை பிமெந்தா என்ற ஜேசுயித் பயணி தன்னுடைய குறிப்பில் குறிப்பிடுகின்றார்.

வெங்கடரமணசாமி கோயில்

கீழ்க்கோட்டையில், சிதைந்த நிலையில் இக்கோயில் காணப் படுகிறது. இக்கோயில் முத்தையாலு நாயக்கன் காலத்தில் கட்டப் பெற்றதாகும். பிரெஞ்சுக்காரர்கள் ஆட்சியின் போது, டூப்ளக்ஸ் சிலையின் பீடத்தை அமைப்பதற்காக இக்கோயிலிலிருந்து உயர்ந்த ஒற்றைத் தூண்களை பாண்டிச்சேரிக்கு எடுத்துச் சென்றுள்ளனர் என்பது தெரிகிறது. இக்கோயிலிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட கருங்கற்களைக் கொண்டு மேல் சித்தாமூரிலுள்ள தேர்முட்டு கட்டப்பெற்றுள்ளது. கி. பி. 1860-ல் சென்னை மாகாணப் பணியில் பணிபுரிந்த ஸ்ரீ பாலய்யா என்ற சமண சமயத்தைச் சார்ந்த அலுவலர் செஞ்சியிலிருந்து கருங்கல் துண்டுகளை மேல்சித்தா மூருக்கு எடுத்துச் சென்றுள்ளார். இவற்றுள் கருங்கல் யானை முக்கியமானதாகும். இது தற்பொழுது மேல்சித்தாமூரிலுள்ள தேர்முட்டின் கீழ் வைக்கப்பட்டுள்ளது. வெங்கடரமணசாமி கோயிலில் இராமாயணக் காட்சிகளை சித்தரிக்கின்ற சிற்பங்களும், விஷ்ணுவின் அவதாரங்களும், புராணக் காட்சிகளும் புடைச் சிற்ப வரிசையில் நுழைவாயிலின் இரண்டு பக்கங்களிலும் வடிக்கப் பட்டுள்ளன. தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து பாற்கடலைக் கடையும் காட்சியும் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன.

STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
9438
LIBRARY.
MADRAS-28.

பட்டாபி இராமசாமி கோயில்

இக்கோயிலும் வெங்கடரமணசாமி கோயிலைப் போன்று. கட்டடக் கலையில் சிறப்புற்று விளங்குகிறது. இதிலுள்ள 12 தூண்களுடன் கூடிய மண்டபம் சிறப்புடையதாகும். கி.பி. 1858-இல் தென்னார்க்காடு மாவட்ட ஆட்சியர் இந்த மண்டபத் தூண்களைச் சென்னைக்கு எடுத்துச் சென்று "ஜெனரல் நெயில்" என்பவருடைய சிலைக்கு அடிப்பீடம் அமைப்பதற்குப் பயன்படுத்திக் கொள்ளும்படி ஆணையிட்டுள்ளார் என்று தெரிகிறது.

குளங்கள்

வெங்கடரமணசாமி கோயிலுக்கு மேற்கே யானைகளைக் குளிப்பாட்டுவதற்காக எடுக்கப் பெற்ற ஆனைக்குளம் உள்ளது ஆனைக் குளத்திற்கு மேற்கே. புகழ்மிக்க சக்கரக் குளமும், செட்டிக் குளமும் உள்ளன. கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆட்சி செய்த மராட்டிய மன்னன் இராஜாராம் காலத்தில் இராம ஷெட்டி என்பவர் இக்குளத்தை வெட்டுவித்துள்ளார்.

செட்டிக் குளத்திற்கு அருகில் ஒரு மேடை உள்ளது. இங்குதான் இராஜாதேசிங்கின் உடல் நவாப்பின் ஆணையின்படி இந்து வைதீக முறையில், முழு அரசு மரியாதையுடன் எரியூட்டப் பெற்றுள்ளது.

இந்த இரண்டு குளங்களுக்கும் இடையில் ஒரு பெரிய கருங்கல்லால் செய்யப் பெற்ற அனுமன் உருவம் மண்டபத்தில் வைக்கப் பெற்றுள்ளது. உட்கோட்டையில் செங்கல்லால் கட்டப் பெற்றுள்ள தானியக் களஞ்சியங்களும், உடற்பயிற்சிக் கூடமும் அமைந்துள்ளன.

குளிக்கும் மேடை

இதன் கிழக்குப்பக்கம், வழவழப்பான இரண்டு கருங்கற் பலகைகள் பாவப்பெற்றுள்ள குளிக்கும் மேடை உள்ளது. இது இராஜாதேசிங்கும் அவருடைய இராணியும் குளிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட மேடை என்று கூறுகின்றனர்.

கல்யாண மகால்

குளிக்கும் மேடைக்குக் கிழக்கே 'கல்யாண மகால்' அமைந்துள்ளது. அழகு வாய்ந்த இதன் கட்டட அமைப்பு காண்பவர்

கருத்தைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளது. இது விஜயநகரக் கட்டடக்கலையின் கருவூலமாக விளங்குகிறது. இந்த மகாலில் சதுரமான முற்றமும், அதைச் சுற்றி அறைகளும் உள்ளன. இந்த அறைகள் பெண்களுக்கும், அரசர்கள் மற்றும் ஆளுநர்களுக்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தன. மத்தியில் அமைந்துள்ள அறைகளின் மீது சதுரமான எட்டு அடுக்குகளில் பிரமிடு போன்ற கூரை அமைப்புக் காணப்படுகிறது. ஒவ்வொரு அடுக்கிலும், 8 அடி சதுரத்தில் ஓர் அறை உள்ளது. இதைச் சுற்றி நடந்து வரும் வகையில் வளைவு களுடன் கூடிய திண்ணை போன்ற அமைப்பு உள்ளது. இதிலிருந்து மேலும் கீழுமாகப் படிகள் செல்லுகின்றன.

தந்தை பிமென்தா என்பவர் நாயக்க மன்னர்கள் தம்மையும், தம்முடைய தோழர்களையும், இந்த மகாலில் தங்க வைத்தனர் என்று குறிப்பிடுகின்றார். கல்யாண மகால் விஜய நகரக் கலைப்பாணியை ஒத்துள்ளது என்றும் குறிப்பிடுகின்றார். இந்த மகாலுக்குச் சுடுமண் குழாய்கள் மூலம் சக்கரக் குளத்திலிருந்து தண்ணீர் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்பது தெரிகிறது.

நாட்டிய சாலை - தர்பார் மண்டபம்

அண்மையில் மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறையினர் கல்யாண மகால் அருகில் அகழாய்வினை மேற்கொண்டு நாட்டிய சாலை, தர்பார் மண்டபம் ஆகிய கட்டடப் பகுதிகளை வெளிக் கொணர்ந்துள்ளனர். இப்பகுதிகள் விஜய நகரக் காலத்தைச் சார்ந்த வையாகும்.

சமணம்

பல்லவர் ஆட்சியின்போது பர சமயமான சமணம் இம்மாவட்டத்தில் சிறந்து விளங்கியுள்ளது. இம்மாவட்டத்தில் சமண சமயம் பரவியிருந்ததற்கு அடையாளமாகக் குகைப் பள்ளிகளும், சமணக் கோயில்களும் உருவெடுத்தன. சமண சமயத்தைப் பரப்புவதற்குச் சமண மடங்களும் அமைந்திருந்தன என்பது தெரிய வருகிறது.

சமணக் குகைப் பள்ளிகள்

தொண்டூர், ஜம்பை, பறையன்பட்டு, தளவானூர், திருநறுங்கொண்டை, மேல்கூடலூர், சோழபாண்டிபுரம் ஆகிய இடங்களில் குகைப் பள்ளிகளைக் காண முடிகிறது. இவ்வகைக் குகைப் பள்ளிகள் ஊருக்கு வெளியே இயற்கையாக அமைந்துள்ள மலைப் பகுதியில், பாறைகளுக்கு இடையே அமைக்கப்பட்டுள்ளது.

தொண்டூர்

செஞ்சி வட்டத்தில், செஞ்சியிலிருந்து 15 கி.மீ. தூரத்தில் சின்னகரம், சோழகுணம் ஆகிய சிற்றூர்களை அடுத்துத் தொண்டூர் அமைந்துள்ளது. இவ்வூர் சமணத் தலமாகத் திகழ்ந்திருக்கிறது. இங்கு இயற்கையாக அமைந்துள்ள குன்றுப் பகுதியில் மூன்று கற்படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்படுக்கைகளுக்குக் கீழ்ப் பகுதியில்

"ஸங்காயிபன் ஏவ அகள் ஊரறம்
மோசி செயித அதிடானம்"

என்று இரண்டு வரிகளில் 'தமிழி' கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

ஸங்காயிபன் என்னும் துறவியின் ஏவலின் படி அகள் ஊரைச் சார்ந்த அறம் மோசி என்பவர் படுக்கைகளைச் செய்வித்துள்ளார். இக்கல்வெட்டு கி.மு. 100-க்கும் கி.பி. 100-க்கும் இடைப்பட்ட காலத்தைச் சார்ந்ததாகும். இக்கல்வெட்டு தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் கண்டு பிடிக்கப் பெற்றதாகும். இக்குகையை அடுத்துள்ள பாறையில் பார்சுவநாதர் புடைச் சிற்பம் உள்ளது. இது கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

வழுவாமொழிப் பெரும் பள்ளி

தொண்டூரில் சேரிப் பகுதியிலுள்ள பாறையில் உள்ள கோப் பரகேசரி என்று பட்டம் பூண்ட சோழ மன்னனுடைய கல்வெட்டு இங்குள்ள குகைப்பள்ளியை வழுவா மொழிப் பெரும்பள்ளி எனக் குறிக்கிறது. இதனைப் பறம்பூரைச் சார்ந்த வஜ்ரசிங்க இளம் பெருமானடிகள் என்னும் துறவி நிர்வகித்து வந்த செய்தியினையும் குறிக்கிறது. சோழ மன்னனின் ஆட்சியின் போது, விண்ண கோவரையன் வைரிமலையன் என்னும் வாணர் குலத்துச் சிற்றரசன் இந்த பள்ளிக்குக் குணதேரிமங்கலம் என்ற ஊரையும், தொண்டூரில் சில தோட்டங்களை உருவாக்கி கிணறுகளையும் வெட்டுவித்துக் கொடையளித்துள்ளான்.

ஜம்பை

திருக்கோயிலூர் வட்டத்தில், திருக்கோயிலூரிலிருந்து 30 கி.மீ. தொலைவில் ஜம்பை என்ற ஊர் உள்ளது. இங்கு சமணப் பள்ளி ஒன்று அமைந்திருந்தது. இப்பள்ளி அமைந்துள்ள மலைப் பகுதியில் உள்ள பாறையில், பொறிக்கப்பட்டுள்ள தமிழிக் கல்வெட்டு,

''சதியபுதோ அதியமாந்
நெடுமானஞ்சி ஈத்த பாழி

என்று குறிக்கிறது.

இக்கல்வெட்டு தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையால் கண்டுபிடிக்கப் பெற்றதாகும். சதிய (அதிய) புத்திரனான அதியமான் நெடுமானஞ்சி என்பவன் இப்பாழி (பள்ளி) அளித்ததை கல்வெட்டுக் குறிக்கிறது. இக்கல்வெட்டு கி.பி. முதல் நூற்றாண் டைச் சார்ந்ததாகும். கடையேழு வள்ளல்களுள் ஒருவனான அதியமான் நெடுமானஞ்சி, திருக்கோயிலூர் பகுதியை ஆண்ட மலையமான் திருமுடிக்காரியைப் போரில் வென்று, அவனது நாட்டைத் தன்னுடைய ஆட்சியின் கீழ் கொண்டு வந்தான் என்று இலக்கியங்கள் கூறுகின்றன. இந்த செய்திக்கு அரண் சேர்ப்ப தாகக் காரியின் நாட்டுப் பகுதியில் கிடைத்த அதியமானின் இக்கல்வெட்டு அமைகிறது. திருக்கோயிலூர் பகுதி இவனுடைய ஆட்சிக்கு உட்பட்டு இருந்ததால், ஜம்பையில் சமணத் துறவி களுக்குப் பள்ளியமைத்து கொடுத்துள்ளதிலிருந்து இவனுடைய சமயப்பொறை வெளிப்படுகிறது.

இக்கல்வெட்டு தமிழக வரலாற்றுக்குப் பெரிதும் துணை புரிகிறது. மௌரிய மன்னன் அசோகனுடைய கல்வெட்டு சோழர், பாண்டியர், கேரள புத்திரர், சத்திய புத்திரர் ஆகிய தென்னிந்திய அரச பரம்பரையினரைக் குறிக்கிறது. இவர்களுள் சத்திய புத்திரர் யார் என்பதில் கருத்து வேறுபாடு நிலவி வந்தது. ஆனால் தற்பொழுது புதிதாகக் கிடைத்துள்ள இக்கல்வெட்டு அதியமான் மரபினரே சத்தியபுத்திரர் ஆவார்கள், என்பதைத் தெளிவுப்படுத்தியுள்ளது.

பறையன்பட்டு

இம்மாவட்டத்தில் செஞ்சியிலிருந்து வடக்கே 32 கி. மீ. தொலைவில் பறையன்பட்டு என்ற ஊர் அமைந்துள்ளது. இங்குள்ள 'சுனைப் பாறை' என்று அழைக்கப்படுகின்ற மலைப் பகுதியில் இயற்கையாக அமைந்த குகையும், கற்படுக்கையும் உள்ளன. குகையின் பாறையின் மேற்பகுதியில் ஐந்து வரிகளில் பொறிக்கப் பட்டுள்ள வட்டெழுத்துக் கல்வெட்டுப் பாண நாட்டைச் சார்ந்த வச்சிரநந்தி ஆச்சாரியரின் மாணாக்கராகிய ஆராதன் என்பவர் உண்ணா நோன்பு இருந்து உயிர் நீத்தார் என்பதைக் குறிக்கிறது. இக்கல்வெட்டு கி.பி. 5-6-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

தளவானூர்

செஞ்சி-விழுப்புரம் நெடுஞ்சாலையில் 15 கி. மீ. தொலைவில் கிழக்கே செல்லும் சாலையில் 6-ஆவது கி. மீட்டரில் தளவானூர் அமைந்துள்ளது. இவ்வூரையடுத்துள்ள, பஞ்ச பாண்டவர் மலையில் இயற்கையாக அமைந்த குகைப்பள்ளி ஒன்று உள்ளது. இது கி. பி. 5-6-ஆம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்டதாகும். தள வானூர் மலையின் கிழக்குப் பகுதியிலுள்ள பாறையில் பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனால் எடுக்கப் பெற்ற சைவ சமயக் குடைவரைக் கோயில் ஒன்றும் உள்ளது.

திருநறுங்கொண்டை

உளுந்தூர்ப்பேட்டை வட்டத்தில், திருநறுங்கொண்டை என்ற ஊர் அமைந்துள்ளது. இவ்வூர் மலையின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள குகையும் அதனையடுத்து அப்பாண்டை நாதர் கோயிலும் உள்ளது. இந்தக் குகையில் சமணத் துறவிகளைக் கொண்ட வீரசங்கம் நிறுவப்பட்டுள்ளது. இவ்வூரில் உள்ள

குகையின் முகப்பு பகுதியில் கி. பி. 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இரண்டு கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. ஒரு கல்வெட்டு குகையை அடுத்துள்ள கீழைப் பள்ளியாகிய சந்திரநாதர் கோயிலை விசயநல்லுழான் குமரதேவன் என்பவர் கட்டியதைக் குறிக்கிறது. இரண்டாவது கல்வெட்டு சிதைந்த நிலையில் உள்ளதால் வாணகோவரையன் என்னும் சிற்றரசன் பெயர் மட்டும் அறியப் படுகிறது. அருகில் உள்ள பாறையில் பார்சுவநாதர் சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது.

மேல்கூடலூர்

செஞ்சியிலிருந்து 30 கி.மீ. தென்கிழக்கில் மேல்கூடலூர் என்னும் ஊர் உள்ளது. இவ்வூரையடுத்துள்ள மலை பஞ்ச பாண்டவர் மலை எனவும், ஐவர் மலை எனவும் அழைக்கப்படுகிறது. மேல்கூடலூர் மலையில் இயற்கையாக அமைந்துள்ள குகை ஒன்று உள்ளது. இங்கு சமண சமயத் துறவிகள் வாழ்ந்த பள்ளிகள் அமைந்துள்ளன.

இந்தக் குகையின் வடக்கில் உள்ள பாறையின் முகப்பில் பார்சுவநாதர் சிற்பம் உள்ளது. இதனுடைய காலம் கி.பி. 8-9ஆம் நூற்றாண்டாகும்.

இங்குள்ள 5 கல்வெட்டுகள் பல்லவ மன்னன் நிருபதுங்கவர்மன், சோழ மன்னன் முதலாம் பராந்தகன் ஆகியோர் காலத்தைச் சார்ந்தவைகளாகும். நிருபத்துங்கவர்மனது இரண்டாவது ஆட்சி யாண்டில் பொறிக்கப்பட்டுள்ள ஒரு கல்வெட்டில் சேந்தமங்கலத்தி லுள்ள மூலஸ்தானத்துத் தேவற்கு விளக்கெரிக்க ஓணங்காரி குடையார் என்னும் அதிகாரி 750 ஆடுகள் கொடை கொடுத் துள்ளமை குறிக்கப்படுகிறது. இங்குக் குறிக்கப்படுகின்ற சேந்தமங்கலம் எது என்பதைத் தெளிவாகக் கூற முடியவில்லை. இங்குக் குறிக்கப்படுகின்ற "திருமூலஸ்தானத்து தேவர்" என்பது இக்குகையில் செதுக்கப்பட்டுள்ள பார்சுவநாதரைக் குறிப்பதாகக் கொள்வதற்கு இல்லை.

முதலாம் பராந்தகன் காலத்தைச் சார்ந்த கல்வெட்டுகள் சேந்தமங்கலத்தில் உள்ள அவனிதிலகத்துதேவர், பிடாரியார், திருமணிக்கோயிற் தேவர் ஆகிய தெய்வங்களுக்கு விளக்கெரிக்க ஆடுகள் கொடை கொடுத்ததைக் குறிக்கிறது.

மேல்கூடலூரின் பண்டைய பெயர் சேந்தமங்கலம் என்று கொள்வதற்கான குறிப்புகள் ஏதும் கல்வெட்டில் இல்லை. அது போல மேல்கூடலூர் மலையில் உள்ள பார்சுவநாதரையே 'மூலஸ்தானத்து தேவர்' என்று இங்குள்ள கல்வெட்டுப் பெயர் குறித்தது என்றும் முடிவாகக் கொள்வதற்கில்லை. இந்த நிலையில் இங்கு குறிக்கப்படுகின்ற கோயில்கள் அனைத்தும் இந்து சமய கோயில்களே என்று கொள்வதே பொருத்தமாக அமையும். எனவே, இங்கு பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளுக்கும் இங்குள்ள சமண சிற்பங்களுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை எனலாம்.

சோழபாண்டிபுரம்

திருக்கோயிலூர் வட்டத்தில் சோழபாண்டிபுரம் அமைந் துள்ளது. இவ்வூரை ஒட்டியுள்ள மலை ஆண்டிமலை என்று அழைக்கப்படுகிறது. இதில் இயற்கையாக அமைந்த குகைகள் உள்ளன. இங்குச் சமணத் துறவிகளுக்காகக் கற்படுக்கைகள் செதுக்கப்பட்டுள்ளன. இதனை இவ்வூர் மக்கள் ''பஞ்சபாண்டவர்'' படுக்கை என்று அழைக்கின்றனர். இந்தச் சமணப் பள்ளியை அடுத்து இரண்டு பாறைகள் உள்ளன. இவற்றின் உட்பகுதியில் கோமதீஸ்வரர், பார்சுவநாதர் சிற்பங்கள் உள்ளன, இதன் பின் புறத்தில் அம்பிகா இயக்கியின் சிற்பம் உள்ளது. இச்சிற்பங்கள் கி.பி. பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்தவை ஆகும்.

திருநாதர்குன்று

செஞ்சிக்கு அருகில் செஞ்சி மேலச்சேரி வழியில் திருநாதர் குன்று அமைந்துள்ளது. இங்குச் சமணத் துறவிகள் வாழ்ந்துள்ளனர். இருபத்துநான்கு தீர்த்தங்கரர்களின் உருவங்களும் சிற்பமாக வடிக்கப் பெற்றுள்ளன. இங்குள்ள பாறைப்பகுதியில் பொறிக்கப் பட்டுள்ள கல்வெட்டு,

''சந்திரநந்தி என்னும் சமணப் பெரியார் 57 நாட்கள் உண்ணா நோன்பு இருந்து உயிர் நீத்ததைக் குறிக்கிறது. கல் வெட்டின் எழுத்தமைதியை நோக்கும் பொழுது இது கி.பி. 6-7-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கொள்ளலாம். வட்டெழுத்தும் தமிழ் எழுத்தும் கலந்த எழுத்துகளில், எழுதப்பட்டுள்ளது. வட்டெழுத்தின் வளர்ச்சியை அறிந்து கொள்வதற்கு இக்கல்வெட்டு

உதவுகிறது. இங்குக் கி. பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மற்றொரு கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளது. இளைய பட்டாரர் என்னும் துறவி இங்கு 30 நாட்கள் உண்ணா நோன்பு நோற்று உயிர் நீத்ததை அது குறிக்கிறது.

ஆட்சிப்பாக்கம்

திண்டிவனத்திலிருந்து 19 கி.மீ. தொலைவில் வடகிழக்கில் ஆட்சிப்பாக்கம் என்ற ஊர் அமைந்துள்ளது. இவ்வூருக்கு அருகில் அமைந்துள்ள குன்றின் பாறைப் பகுதியில் பார்சுவதேவரின் சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. பார்சுவதேவரின் இடதுபுறம் பத்மாவதி இயக்கியின் சிற்பம் உள்ளது. வலது புறம் தரணேந்திர இயக்கன் சிற்பம் உள்ளது. சிற்ப அமைதியைப் பார்க்கும் பொழுது இச்சிற்பங்களைக் கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கொள்ளலாம்.

அனந்தமங்கலம்

திண்டிவனம் வட்டத்தில் அனந்தமங்கலம் என்ற ஊர் உள்ளது. இவ்வூரை அரங்கமங்கலம் என்று இவ்வூரில் உள்ள சிவன் கோயிற் கல்வெட்டுக் குறிக்கிறது. இவ்வூரிலிருந்து ஒருகி.மீ. தூரத்தில் உள்ள மலையில் மூன்று தீர்த்தங்கரர் சிற்பங்களும், அம்பிகா இயக்கி, பார்சுவநாதர் சிற்பங்களும் பத்மாவதி இயக்கி, தரணேந்திரன் சிற்பங்களும் காணப்படுகின்றன. இதற்கு அடுத்துள்ள பாறையில் அமர்ந்த நிலையில் வடிக்கப்பட்டுள்ள அருகக் கடவுளின் உருவம் 14வது தீர்த்தங்கரராகிய அனந்தநாதரைக் குறிப்பதாகும். இத்தீர்த்தங்கரரது பெயர் அடிப்படையில் இந்த ஊருக்கு அனந்த மங்கலம் என்ற பெயர் ஏற்பட்டதாகக் கூறுவர். அனந்தநாதருக்கு அருகில் நேமிநாதரும் பார்சுவநாதரும் வடிக்கப்பட்டுள்ளனர். இச்சிற்பங்கள் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும். இப்பாறையில் பொறிக்கப்பட்டுள்ள முதலாம் பராந்தகன் கல்வெட்டு அனந்தமங்கலத்திலுள்ள பள்ளியை ஜினகிரி பள்ளி என்று குறிக்கிறது.

சமணக் கோயில்கள்

மலையம்மன் கோயில்

கள்ளக்குறிச்சி வட்டத்தில் தியாகதுர்க்கம் என்ற ஊர் உள்ளது. இவ்வூரை அடுத்துள்ள மலையில் உள்ள குகைத் தளத்தில் தீர்த்தங்

கரர், இயக்கி ஆகிய சிற்பங்கள் பலகைக் கல்லில் புடைச் சிற்பங்களாக வடிக்கப் பெற்றுள்ளன. இச்சிற்பங்கள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

அப்பாண்டை நாதர் கோயில்

உளுந்தூர்ப்பேட்டை வட்டத்தில் திருநறுங்கொண்டை என்ற ஊர் உள்ளது. இங்கு அப்பாண்டைநாதர் என்று போற்றப்படும் பார்சுவநாதர் கோயிலும், சந்திரநாதர் கோயிலும் உள்ளன. இவைகள் மேலைப் பள்ளி எனவும், கீழைப் பள்ளி எனவும் அழைக்கப்படுகின்றன. இப்பள்ளிகளுக்குச் சோழ மன்னர்களும் வாணர், மலையமான், காடவராயர், பாண்டிய அரசர்களும் கொடை அளித்துள்ளனர்.

பார்சுவநாதர் கோயில்

இவ்வூர் மலையின் மேற்பரப்பில் கிழக்கு மேற்காக அமைந்துள்ள இரு பாறைகளுக்கு இடைப்பட்ட பகுதியினை மண்டபமாக அமைத்து இக்கோயிலை எடுத்துள்ளனர். கிழக்கில் உள்ள பாறையின் முகப்பில் புடைச் சிற்பமாகப் பார்சுவநாதர் வடிக்கப் பெற்றுள்ளார். இது கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். இம்மண்டபம் பிற்காலத்தில் பலமுறை இடித்து கட்டப்பட்டுள்ளது.

சந்திரநாதர் கோயில்

பார்சுவநாதர் சந்நிதியை அடுத்து சந்திரநாதர் கோயில் அமைந்துள்ளது. இது சதுர்முகத் திருக்கோயில் என்று கல்வெட்டுகளில் குறிக்கப்பெறுகிறது. கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் காவிரியின் தென்கரையில் உள்ள தழக்குடி என்னும் ஊரைச் சார்ந்த விசயநல்லுழான் குமரன்தேவன் என்பவர் இக்கோயிலைக் கட்டியுள்ளார் என்பது தெரிகிறது. இக்கோயில் உண்ணாழி, அர்த்த மண்டபம், ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. உண்ணாழியில் உள்ள சந்திரநாதர் திருஉருவம் சுதையினால் வடிக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் திருச்சுற்று, மகா மண்டபம், ஆகிய பகுதிகள் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் கட்டப் பெற்றதாகும். சித்திரக் கூட மண்டபம், முக மண்டபம் ஆகிய மண்டபங்கள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் கட்டப்பெற்றுள்ளது. இப்பகுதியில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் இயக்கிக்காக ஒரு மண்டபம் எடுக்கப்பட்டுள்ளது. இம்மண்டபம் அழகம்மை மண்டபம் என்று வழங்குகிறது.

இக்கோயிலில் ரிஷபநாதர், மல்லிநாதர், மகாவீரர், தருமதேவி மகாசாத்தன் ஆகியோர் சிற்பங்களும் உள்ளன. இங்குச் செப்புத் திருமேனிகளும் உள்ளன. இவற்றுள் தருமதேவி திருமேனி மிகவும் அழகு வாய்ந்தது.

மலைநாதர், பார்சுவநாதர் கோயில்கள்

செஞ்சியிலிருந்து 10 கி.மீ. கிழக்கே மேல்சித்தாமூர் அமைந் துள்ளது. இவ்வூரில் திகம்பரப் பிரிவு சமணர்களுக்குத் தலைமைப் பீடமான மடம் உள்ளது. இங்கு மலைநாதர், பார்சுவநாதர் ஆகியோருக்குக் கோயில்கள் எடுக்கப்பட்டுள்ளன. இது கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டுகளில் கட்டப்படதாகத் தெரிகிறது.

மலைநாதர் கோயில்

இக்கோயில் உண்ணாழி, மண்டபம், திருச்சுற்று, கோபுரம் ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. உண்ணாழியின் பாறை முகப்பில், பார்சுவநாதர், பாகுபலி, நேமிநாதர், ஆதிநாதர் ஆகிய நான்கு தீர்த்தங்கரர்களின் உருவங்கள் பொறிக்கப் பட்டுள்ளன.

பார்சுவநாதர் கோயில்

இக்கோயிலில் நேமிநாதர் சந்நிதி, தரும தேவி சந்நிதியும், இதற்கு வடபகுதியில் பிரம்மதேவர், கணதரர், சரஸ்வதி, பத்மாவதி, சுவாலமாலினி ஆகியோரது சந்நிதிகள் காணப்படுகின்றன.

நேமிநாதர் சந்நிதியை ஒட்டி சித்திரக்கூட மண்டபமும் அலங்கார மண்டபமும் கட்டப்பட்டுள்ளன. இதைச் சுற்றித் திருச்சுற்றும், கிழக்குப் பகுதியில் கோபுரமும் அமைந்துள்ளன. இவை கி. பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தனவாகும். இவை பின்னர் புதுப்பிக்கப்பட்டுள்ளன. கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் உண்ணாழி, அர்த்த மண்டபம், முகமண்டபம் ஆகியவை புதுப் பித்து கட்டப்பட்டுள்ளன.

இக்கோயிலில் உள்ள பார்சுவநாதர் சிற்பம் மிக அழகாக வடிக்கப்பட்டுள்ளது. இதனைச் சுற்றியுள்ள பிரபையில் 23 தீர்த்தங்கரரின் உருவங்கள் வடிக்கப்பட்டுள்ளன. இக்கோயிலுக்குச் சோழர், விஜயநகர மன்னர்கள் பல்வகைக் கொடைகளை வழங்கி யுள்ளதைக் கல்வெட்டுகள் குறிக்கின்றன.

ஆதிநாதர் கோயில்

திண்டிவனம் - விழுப்புரம் நெடுஞ்சாலையில் வீடூர் அமைந் துள்ளது. இங்கு முதலாவது தீர்த்தங்கரர் ஆகிய ஆதிநாதருக்குக் கி.பி. 10ஆம் நூற்றாண்டில் கோயில் எடுக்கப்பட்டுள்ளது. இக் கோயில் பின்னர் பலமுறை புதுப்பிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது இக்கோயில் பழமையை இழந்து காணப்படுகிறது. கோயில் உண்ணாழியில் அமர்ந்த நிலையில் ஆதிநாதர் உள்ளார். இங்கு தீர்த்தங்கரர்களின் செப்புத் திருமேனிகளும் உள்ளன.

இரவிகுல சுந்தரப்பள்ளி

திண்டிவனத்திலிருந்து 12 கிலோ மீட்டர் தென்மேற்கே பெரு மண்டூர் அமைந்துள்ளது. இவ்வூர் பெருமடை, பெருமாண்டை, பெரு மாண்டைப் பாற்புத்தூர் என்ற பெயர்களில் வழங்கி உள்ளது. தற்பொழுது இவ்வூர் பெருமண்டூர் என்று அழைக்கப்படுகின்றது. இங்கு ஆதிநாதருக்கும் சந்திரபிரபா தீர்த்தங்கரருக்கும் தனித் தனியாகக் கோயில்கள் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் தொன்மை வாய்ந்தது ஆதிநாதர் கோயிலாகும். இக்கோயில் இரவிகுலப் பெரும் பள்ளி என வழங்குகின்றது.

ஆதிநாதர் கோயில்

செஞ்சியிலிருந்து திண்டிவனம் செல்லும் நெடுஞ்சாலையில் நாட்டார் மங்கலம் என்ற ஊர் உள்ளது. இவ்வூரிலிருந்து 12 கி.மீ. வடகிழக்கே அகலூர் என்ற ஊர் உள்ளது. இங்கு கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் ஆதிநாதருக்கு கோயில் எடுக்கப்பட்டுள்ளது. அகலூரில் பல்லவர் காலத்தில் சமணக் கோயில் ஒன்று இருந் துள்ளதைக் கல்வெட்டு வாயிலாக அறிய முடிகிறது. இக்கோயில் கி.பி.16ஆம் நூற்றாண்டில் மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

திண்டிவனம், உப்புவேலூர், கீழ் இடையாலம், மேல் மலைய னூர், விழுக்கம் ஆகிய ஊர்களிலும் சமணக் கோயில்கள் எடுக்கப் பட்டுள்ளன என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

சமண ஓவியங்கள்

இம்மாவட்டத்தில் பெருமண்டூர், வீடூர் ஆகிய ஊர்களிலுள்ள சமணக் கோயில்களில் ஓவியங்கள் தீட்டப்பெற்றுள்ளன.

பெருமண்டூர் சந்திரநாதர் கோயில் உண்ணாழிப் பகுதியில் தீட்டப்பெற்றுள்ள ஓவியங்கள் சித்தாமூரில் வீரசேனாச்சாரியார் சமண மடம் நிறுவியதைச் சித்தரிக்கின்ற வகையில் அமைந்துள்ளன. இவ்வோவியம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

வீடூர் ஆதிநாதர் கோயில் மண்டபத்தின் விதானப் பகுதியில் சமண சமய புராணக் காட்சிகளும், ரிஷபநாதர், மகாவீரர் ஆகியோருடைய வாழ்க்கை வரலாறும், இவர்கள் துறவறம் மேற் கொண்ட நிகழ்ச்சிகளையும் ஓவியமாகத் தீட்டியுள்ளனர். ஓவியத்தின் கீழ்ப்பகுதியில், தமிழில் குறிப்புக்கள் எழுதப்பட்டுள்ளன. இந்த ஓவியம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

சமண மடங்கள்

இம்மாவட்டத்தில் திருநறுங்கொண்டை, தாயனூர், சித்தாமூர் ஆகிய இடங்களில் சமண மடங்கள் அமைந்துள்ளன.

திருநறுங்கொண்டை மடம்

விக்ரமசோழன் ஆட்சியின் போது இவ்வூரில் உள்ள அப்பாண்டை நாதர் கோயில் திருவிழாவுக்கென்று நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிலங்கள் மடாதிபதியின் பொறுப்பில் இருந்துள்ளது என்பது தெரிகிறது. இதிலிருந்து இவ்வூரில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் மடம் ஒன்று இருந்ததைக் கல்வெட்டுகள் வாயிலாக அறிய முடிகிறது.

மூன்றாம் குலோத்துங்கன் இக்கோயிலுக்குச் சிறுசாத்தநல்லூர் என்ற ஊரைக் கொடை கொடுத்து அதனை மடாதிபதியின் பொறுப்பில் கொடுத்துள்ளதைக் கல்வெட்டு குறிக்கிறது.

மெக்கன்சி சுவடிகள் இந்த மடத்தைப் பற்றித் தெரிவிக்கின்றன. திருநறுங்கொண்டை மடத்தின் தலைமைப் பொறுப்பினை வகித்த வர்களின் பெயர்களையும் குறிக்கிறது. குணபத்திராச்சாரியார் பெயரும் குறிக்கப்படுவதிலிருந்து இம்மடம் கி. பி. 16-ஆம் நூற்றாண்டு வரை இருந்துள்ளது தெரிய வருகிறது.

தாயனூர் மடம்

செஞ்சியை அடுத்த தாயனூரிலும் சமண மடம் இருந்திருக் கிறது என்பதை மெக்கன்சித் தொகுப்பிலுள்ள சுவடியொன்றின் மூலம் அறிய முடிகிறது. செஞ்சியை ஆண்ட வேங்கட கிருஷ்ணப்ப நாயக்கர் காலத்தில் வர்த்தமானாச்சாரியார் என்பவர் தாயனூர்

மடாதிபதியாகத் திகழ்ந்துள்ளார் என்பது தெரிகிறது. செஞ்சி மன்னர் சமணர்களைத் துன்புறுத்தியதால் சமணர்கள் தாயனூரிலிருந்து சித்தாமூருக்குச் சென்று குடியேறினர் என்று சுவடி குறிப்பிடுகின்றது. இதனால் இங்கிருந்த மடமும் அழியலாயிற்று. இதன் பிறகு சித்தாமூரில் உள்ள மடம் தோற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது தெரிகிறது.

சித்தாமூர் மடம்

திகம்பரப் பிரிவைச் சார்ந்த சமணப் பெருமக்களுக்குத் தலைமை பீடமாக அமைந்துள்ள மேல் சித்தாமூரிலும் மடம் உள்ளது. இந்த மடம் 'ஜின கஞ்சி' மடம் என்று அழைக்கப் படுகிறது. ஜின காஞ்சியாகிய திருப்பருத்திக்குன்றத்திலிருந்த மடம் அழிந்து பட்டதால், இந்த பெயரைப் பெற்று இம்மடம் விளங்குகிறது.

உப்பு வேலூரைச் சார்ந்த பெரியார் ஒருவர் சிரவண பெல கோலாவிற்குச் சென்று சமண சாத்திரங்களைக் கற்று வீரசேனாச் சாரியார் என்னும் பெயர் பூண்டு, செஞ்சிக்கு வந்து சித்தாமூரில் மடத்தினை நிறுவியுள்ளார் என்பது தெரிகிறது.

இந்த மடம் சமயத் தொண்டினை மட்டும் மேற்கொள்ளாமல் கல்வி, மருத்துவம், விவசாய முன்னேற்றம் ஆகியவைகளையும் கவனித்துள்ளது. சித்தாமூர் மடத்தில் வடமொழி, தமிழ் நூல் களும், பல சுவடிகளும் உள்ளன.

இசுலாமும் - கிறித்துவமும்

பீஜப்பூர் சுல்தான் இம்மாவட்டத்தில் உள்ள செஞ்சிப் பகுதியைக் கைப்பற்றிய போது செஞ்சி, தேவனூர், மலையனூர், உளுந்தூர்ப்பேட்டை, ராவுத்த நல்லூர் ஆகிய ஊர்களில் இசுலாமியர்கள் குடியேற்றப்பட்டனர், இதன் வாயிலாக இசுலாமிய சமயமும் இம்மாவட்டத்தில் பரவியது.

ஆர்க்காடு நவாபாக இருந்த சாதுல்லாகான் என்பவர் செஞ்சியில் ஒரு மசூதியைக் கட்டியுள்ளார். இம்மசூதி கி.பி. 1717-18-இல் கட்டப்பட்டது என்பதை இங்கு பொறிக்கப்பட்டுள்ள பெர்சிய மொழிக் கல்வெட்டு குறிக்கிறது. இசுலாமியர்களின் முக்கிய பண்டிகையின் பொழுது தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து இசுலாமிய மக்கள் செஞ்சிக்கு வந்து வழிபட்டுள்ளனர். மகாபுக்கான் மசூதியும் இங்குள்ளது. பிற்காலத்தில் இம்மாவட்டத்தின் பல பகுதிகளில் வழிபாட்டிற்காக மசூதிகள் கட்டப்பெற்றன.

கிறித்துவம்

கிறித்துவ மதமும் இம்மாவட்டத்தில் வளர்ந்து வந்துள்ளது, கிறித்துவர்களில் கத்தோலிக்கர், பிராடஸ்டண்டு என்று இரு பிரிவினரும், இம்மாவட்டத்தில் வாழ்கின்றனர். தென்னிந்தியத் திருச்சபை திண்டிவனம், திருக்கோயிலூர் பகுதிகளில் அமைந்திருந்தது. திண்டிவனம், திருக்கோயிலூர், விழுப்புரம் ஆகிய ஊர்களில் 18-ஆம் நூற்றாண்டில் கிறித்துவம் நன்கு வேருன்றியது. இதன் அடையாளமாக இவ்வூர்களில் தேவாலயங்களும் அமைந்தன.

மலைகளும்-கோட்டைகளும்

இம்மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி, செஞ்சி, திண்டிவனம், திருக் கோயிலூர், சங்கராபுரம் ஆகிய வட்டங்களில் மலைகள் உள்ளன. விழுப்புரம், வானூர், உளுந்தூர்ப்பேட்டை வட்டங்கள் சமவெளிப் பகுதியில் அமைந்துள்ளன. கல்வராயன் மலைத் தொடர், சேலம் மாவட்டத்தை விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டத் தினின்றும் பிரிக்கிறது. கல்வராயன் மலை இம்மாவட்டத்தில், கள்ளக்குறிச்சி வட்டத்தில், மேற்குப் பகுதியில் வடக்கிலிருந்து தெற்கு முகமாகப் பரவியுள்ளது. இக்குறிஞ்சி நிலப்பகுதியே இம் மாவட்டத்தில் நாகரிக மக்கள் வாழ்ந்த பழமையான இடமாகும்.

செஞ்சிமலை செஞ்சி வட்டத்தில், செஞ்சிக்குத் தென்மேற்கே 22 கி.மீ. தூரத்திற்குப் பரவியுள்ளது. இம்மலை, சிறு சிறு மலை களாக அமைந்துள்ளது. நெல்லிகிரிமலை, செஞ்சி மலை ஆகிய இரண்டு மலைகள் குறிப்பிடத்தக்கன. இம்மலைப் பகுதியில்தான் வரலாற்றுச் சிறப்புமிக்க செஞ்சிக் கோட்டை அமைந்துள்ளது.

இம்மாவட்டத்தில் மற்ற வட்டங்களில் அமைந்துள்ள மலைகள் சிறு சிறு குன்றுகளாகப் பரவிக் கிடக்கின்றன.

கோட்டைகள்

இம்மாவட்டத்திற்கு வடக்கே செஞ்சிக் கோட்டையும்,* தெற்கே தியாகதுருகக் கோட்டையும் அரணாக அமைந்துள்ளன. கள்ளக் குறிச்சியிலும் ஒரு கோட்டை உள்ளது. உளுந்தூர்ப்பேட்டை வட்டத்தில் எலவானாசூரிலும் கோட்டை இருந்துள்ளது. இதன் அடிப்படையில் இவ்வூர் எலவானாசூர் கோட்டை என்ற பெயரில் வழங்குகிறது.**

கள்ளக்குறிச்சிக் கோட்டை

இம்மாவட்டத்தில் கள்ளக்குறிச்சியிலும் ஒருகோட்டை அமைந் துள்ளது. இவ்வூரின் வடபுறத்தில் சிதைந்த நிலையில் ஒரு மண்

---

* செஞ்சிக் கோட்டை பக்கம் 98-இல் காண்க.

** எலவானாசூர் கோட்டை பக்கம் 59-இல் காண்க.

கோட்டை உள்ளது. நட்சத்திர வடிவில் இக்கோட்டை அமைந் துள்ளது. எட்டு முனைகளுடன் கூடிய இக்கோட்டை கான் சாகிப் கோட்டை என்று வழங்குகிறது. செஞ்சியை ஆண்ட தேசிங்குராஜன் வரலாற்றோடு தொடர்புடையவன் கான்சாகிப் என்பது குறிப்பிடத் தக்கது. கல்வராயன் மலையை இக்கோட்டைப் பகுதியிலிருந்து காண்பது கவினுறு காட்சியாகும். இங்கு சையத்மிர்சாகிப் என்பவர் ஒரு சத்திரத்தைக் கட்டியுள்ளார். கள்ளக்குறிச்சியில் டேனிஷ் லூதெரன்மிஷன் ஒன்றும் இருந்துள்ளது.

தியாகதுருகக் கோட்டை

கள்ளக்குறிச்சிக்குக் கிழக்கே 12 கி.மீ. தூரத்தில் தியாகதுருகம் உள்ளது, துருகம் என்றால் மலை, தியாகதுருகம் சுமார் 800 அடி உயரமுடையது. அருநிலைத்தியாகன் என்ற தலைவனின் பெயர் இம்மலைக்கு ஏற்பட்டதாகக் கூறுவர். தியாகதுருகத்தின் தெற்குப் பகுதியில் ஓர் உயர்ந்த மலையின் மேல் கற்களால் சுவர் எழுப்பப் பட்டுக் கோட்டை ஒன்று கட்டப்பட்டிருந்தது.

18-ஆம் நூற்றாண்டில் தியாகதுருகக் கோட்டை இராணுவச் சிறப்புப் பெற்றிருந்தது. அக்கோட்டையின் சில அடையாளங்கள் மட்டுமே இப்போது எஞ்சி உள்ளன. 1756-இல் பிரெஞ்சுக்காரரும் 1760-இல் ஹைதர் அலியும் அடுத்த ஆண்டில் ஆங்கிலேயரும் தியாக துருகத்தைக் கைப்பற்றினர். 1790-இல் திப்புசுல்தான் இங்கு ஆங்கிலேயருடன் போர் புரிந்தார். 1801-இல் பிரிட்டிஷ் ஆட்சி உறுதிப்பட்டதும், இராணுவத் தளம் என்ற நிலை மாறியது.

கோயில் கோட்டைகள்

இந்த மாவட்டத்தில் சேந்தமங்கலம் என்ற ஊரில் எடுக்கப்பட் டுள்ள ஆபத்சகாயேச்சுரர் கோயில் போர்க்காலத்தில் பாதுகாப் பினையொட்டிக் கோட்டையாகவும் பயன்பட்டுள்ளது.* இது போன்று திருக்கோயிலூரில் அமைந்துள்ள திருவிக்கிரம பெருமாள் கோயிலும் போர்க்காலத்தில் கோட்டையாகப் பயன்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.** திண்டிவனத்தை அடுத்து 'ஆதண்டன் கோட்டை' என்ற ஒரு கோட்டையும் இருந்துள்ளது தெரிகிறது.***

---

* பக்கம் 38 காண்க.
** பக்கம் 85 காண்க.
*** பக்கம் 98 காண்க.

ஆறுகள்

உலகில் மனித நாகரிகங்கள் ஆற்றங்கரைகளில்தான் தோன்றி யுள்ளன என்பதை வரலாறு நமக்கு உணர்த்துகிறது. சீனா, எகிப்து, மெசபடோமியா ஆகிய நாகரிகங்கள் ஆற்றங்கரையில் தான் உருவெடுத்துள்ளன. இந்தியாவில் சிந்து நதிக்கரையிலும், தமிழ் நாட்டில் பழைய கற்கால மனிதன் கோர்த்தலை ஆற்றங்கரையிலும் வாழ்ந்துள்ளான்.

தாமிரபரணி, வைகை, காவிரி, தென்பெண்ணை, பாலாறு, கெடிலம் ஆகிய நதிக்கரைகளில் தமிழர் நாகரிகம் தோன்றிச் சிறப்புற்று விளங்கியுள்ளது.

இம்மாவட்டத்தில் தென்பெண்ணையாறு, கெடிலம் ஆறு, உப்பனாறு, மணிமுத்தாறு, துரிஞ்சல் ஆறு, செஞ்சி ஆறு, மயூரநதி, தொண்டை ஆறு, ஓங்கூர் ஆறு, தொண்டாமூர் ஆறு, பம்பை ஆறு ஆகிய ஆறுகள் பாய்வதால் இப்பகுதி நீர்வளம் பெற்று விளங்குகின்றது. இவற்றுள் மிகவும் முக்கியமானவை தென் பெண்ணை, கெடிலம் ஆகிய ஆறுகளாகும்.

தென்பெண்ணை

இதே பெயரில் சங்க இலக்கியங்களிலும் பெண்ணையாறு குறிக்கப்படுகிறது. பாரதியார், "காவிரி தென்பெண்ணை பாலாறு" என்று குறிக்கும்போது காவிரியை அடுத்து தென்பெண்ணையைக் குறிப்பதிலிருந்து இதனுடைய சிறப்பு வெளிப்படுகிறது. தென் பெண்ணையில் திடீரென்று வெள்ளம் வரும் இயல்பு உண்டு. எனவே "வெண்ணை உருகு முன் பெண்ணை திரண்டு வரும்" என்ற ஒரு பழமொழி இம்மாவட்டத்தில் வழங்குகிறது. தமிழகத் தில் பாயும் ஆறுகளில் நீளமானது காவிரி ஆறு. அதற்கு அடுத்தது தென்பெண்ணையாறே ஆகும். இது 420 கி.மீ. நீளமுடையது. இது மைசூரில் உள்ள கோலார் வட்டத்தில் தோன்றி, சேலம், வடார்க்காடு அம்பேத்கார் மாவட்டங்கள் வழியே ஓடி குறிப்பாக இம்மாவட்டத்தில் திருக்கோயிலூர், விழுப்புரம் ஆகிய வட்டங் களுக்கு நீர்ப்பாசனம் அளித்துக் கடலூருக்கு அருகில் கடலில் கலக்கிறது. இதன் கரைகளில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பல ஊர்களும் பாடல் பெற்ற தலங்களும் அமைந்துள்ளன.

கெடிலம்

தென்பெண்ணையை அடுத்து கெடிலநதி இப்பகுதியினை வளமுடையதாக்குகிறது. 'கெடிலம்' என்பது "ஆழமான ஊற்று களுள்ள ஓடை" என்று பொருள்படும். கெடிலஆறு கள்ளக் குறிச்சி வட்டத்தில் 'மையனூர்' என்னும் ஊருக்கு அருகில் தோன்றுகிறது. மையனூர் கள்ளக்குறிச்சிக்கு வடகிழக்கே 16 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூருக்கு அருகில் தென்புறத்தில் உள்ள மலை 'மையனூர் மலை' என்று வழங்குகிறது. இம்மலையின் அடிவாரத்தில் கிழக்குப் பகுதியில் உள்ள பாறை 'கருடன் பாறை' என்று வழங்குகிறது. இப்பாறையின் கீழ்ப் பகுதியில் ஒரு சுனை உள்ளது. இந்தச் சுனையிலிருந்து தண்ணீர் தரைக்குக் கீழே உள் ஊற்றாகச் சரிவை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறது. இந்தச் சுனை தான் கெடிலத்தின் தோற்றமாகும். சரிவை நோக்கி ஓடும் தண்ணீர், அப்பகுதிக்கு வடக்கே அமைந்துள்ள ஏரியில் கலக்கிறது. அந்த ஏரி 'மையனூர் ஏரி' என்று அழைக்கப்படுகிறது. அந்த ஏரியிலிருந்து வாய்க்கால் வடிவத்தில் பிரிந்து செல்லும் நீரோட்டமே கெடிலஆறு ஆகும்.

கெடிலம் கள்ளக்குறிச்சி வட்டத்திலும், திருக்கோயிலூர் வட்டத்திலும் பாறைகளிடையே ஓடிவருகிறது. பின்னர் வளர்ந்து விரிவடைகிறது. கடலூருக்கு அருகில் மூன்று பிரிவாகப் பிரிந்து மூன்று இடங்களில் கடலில் கலக்கிறது.

இலக்கியத்தில் கெடிலம்

நாயன்மார்களாலும், ஆழ்வார்களாலும் பாடப்பெற்ற பதிகள் தமிழ்நாட்டில் பல உண்டு ஊர்கள் மட்டுமின்றி ஆறுகளுக்கும் பாடல் பெற்ற பெருமை உண்டு. தேவாரப் பாடல்களில் கெடிலத்தின் பெருமை பேசப்படுகிறது.

அப்பர் பெருமான் திருவதிகைமேல் பாடியுள்ள பதிகங்களில் 'கெடிலம்' என்னும் பெயரை குறிக்கின்றார். நாவுக்கரசர் கெடிலத் தின் புகழைப் பாடும் பொழுது "கெடிலம் திதன்திசைக் கங்கை" என்றும் குறிப்பிடுகின்றார். சம்பந்தர் பெருமான் திருவதிகைப் பதிகத்தில் கெடிலத்தின் புகழினையும், நீர்வளத்தையும் சிறப்பித்துப் பாடி உள்ளார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது தேவாரத்தில் "ஏந்து நீர் ஏறி கெடிலம்" என்று கெடிலத்தின் நீர் வளத்தினைச் சிறப்பித்துள்ளார்:

திருமங்கையாழ்வார் திருவயிந்திரபுரம் பற்றிய பெரிய திருமொழியில், கெடிலத்தின் வளத்தினைச் சிறப்பிக்கின்ற வகையில் 'செழுநதி' என்று குறிப்பிடுகின்றார். தொல்காப்பியத் தேவர் தமது திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகத்தில் திருக்கெடிலம் என்று போற்றியுள்ளார். சேக்கிழார் பெரிய புராணத்தில் கெடிலத்தின் சிறப்பினைப் புகழ்ந்துள்ளார். அருணகிரிநாதர் தன்னுடைய திருப்புகழில் கெடிலத்தின் வளத்தினைப் பாடியுள்ளார். திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம், கரையேறவிட்ட நகர்ப்புராணம், திருவதிகைப் புராணம், திருவதிகை மான்மியம், திருவதிகை உலா, திருநாவலூர்ப் புராணம், திருவாமூர்ப் புராணம், திருமாணிகுழிப் புராணம் முதலிய நூல்களில் கெடிலத்தின் சிறப்பு பேசப்படுகிறது.

ஏரிகள்

இம்மாவட்டத்தில் ஆறுகள் மட்டுமல்லாமல் நீர்ப்பாசன வசதிக் காக பல ஏரிகளும், கால்வாய்களும், குளங்களும் எடுக்கப்பட்டுள்ளன. குழாய்க்கிணறுகள் மற்றும் கிணறுகள் மூலம் நீர்ப்பாசனம் நடை பெற்று வருகின்றன. நீர்ப்பாசன வசதியைப் பெருக்குகின்ற வகை யில் பல்லவர்கள், சோழர்கள் மற்றும் இவர்களுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த பிற மன்னர்களும் இம்மாவட்டத்தில் பல ஏரிகளை வெட்டுவித்தும், மதகுகளைக் கட்டுவித்தும் உள்ளனர்.

இம்மாவட்டத்தில் குறிப்பாக, திருக்கோயிலூர், உளுந்தூர்ப் பேட்டை, திண்டிவனம், செஞ்சி ஆகிய வட்டங்களில் பல ஏரிகளும் மதகுகளும் எடுக்கப்பட்டுள்ளதைக் கல்வெட்டுகள் வாயிலாக அறிய முடிகிறது.

திருக்கோயிலூர் வட்டம்

இவ்வட்டத்தில் ஆமூர், ஆயந்தூர், ஆலூர், தி. கொளத்தூர், நந்தமேடு, பழங்கூர், மேல்வாலை ஆகிய ஊர்களில் உள்ள ஏரிகளில் தூம்பினைக் (மதகுகளை) கட்டுவித்ததைக் கல்வெட்டுகள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

ஆமூர்ப் பெரிய ஏரி

ஸ்ரீதிரிபுவனவீரதேவரின் (மூன்றாம் குலோத்துங்கன்) 36 ஆவது ஆட்சியாண்டில் ஆமூர் பெரிய ஏரியின் தூம்பினை (மதகு) நம்பு கணவர் என்பார் அமைத்துள்ளதைக் கல்வெட்டுக் குறிக்கிறது. இதே கல்வெட்டு இரண்டாவது குறும்பேரித் தூம்பினை இவ்வூர்க் கரணத்தார் செய்வித்ததைக் குறிக்கிறது.

ஆயந்தூர் ஏரி

வக்கரன் பாக்கமுடையான் கொங்கராயன் என்பவன் ஆயந்தூர் ஏரி மதகினை அமைத்துக் கொடுத்ததை இங்குப் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு குறிக்கிறது. கி. பி. 13ஆம் நூற்றாண்டில் இவ்வேரிக்குச் சகரவிசாதரப் பெண் எனும் அதிகாரி மேலும் ஒரு மதகு அமைத்துக் கொடுத்துள்ளார்.

ஆலூர்ப் பெரிய ஏரி

இவ்வூரிலுள்ள பெரிய ஏரி மதகினை, ''பாவடங்குடயாந் மகன் கண்டந் வாளராயந்'' என்பவன் அமைத்ததைக் கல்வெட்டுக் குறிக்கிறது. கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டு பார்க்கையில் இது கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கொள்ளலாம்.

தி. கொளத்தூர் பெரட்டேரி

இந்த ஏரி மதகில் பொறிக்கப்பட்டுள்ள கி. பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டு பெரிய பிராட்டி, ஏரியையும் மதகினையும், கோயிலையும் எடுப்பித்ததைக் குறிக்கிறது. பெரிய பிராட்டி என்பவர் காடவமன்னன் கோப்பெருஞ்சிங்கனின் தாயார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஏரி இவர் பெயரில் வெட்டப் பெற்றுள்ளது என்பது தெரிகிறது. பெரிய பிராட்டி ஏரி என்பது தற்பொழுது பெரட்டேரி என்று மருவியுள்ளது.

நத்தமேட்டு ஏரி

கி. பி. 13ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இந்த ஏரிக் கல்வெட்டு, அவனி ஆளப்பிறந்தான் தூம்பினையும், குன்றமுடையான் மலைய குலராயன் கலிங்கினையும் எடுப்பித்ததைக் குறிக்கிறது.

பழங்கூர் ஏரி

இவ்வூர் ஏரி மதகினை, மலையந் மலையநாந குலோத்துங்க சோழக் கோவலராஜன் என்பவன் எடுப்பித்துள்ளதைக் கல்வெட்டு குறிக்கிறது. கல்வெட்டின் எழுத்தமைதியைப் பார்க்கும்பொழுது இது கி. பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கொள்ளலாம்.

மேல்வாலை ஏரி

விழுப்புரம் - திருவண்ணாமலை நெடுஞ்சாலையில் மேல்வாலை என்ற ஊரில் உள்ள ஏரியின் மதகில் பொறிக்கப்பட்டுள்ள மதிரை கொண்ட கோவிராஜ கேசரியின் 15-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு கற்பூண்டி நாட்டைச் சார்ந்த . . . . . பன்மற் மகன் லடாம்பி என்பவன் சேதிப்பற்றான இவ்வேரியும், இத்தூம்புங் கண்டுள்ளான் என்று குறிக்கிறது.

திண்டிவனம் வட்டம்

திண்டிவனம் வட்டத்தில் ஓங்கூர், கிடங்கில் ஆகிய ஊர்களில் உள்ள ஏரியின் மதகினைக் கட்டுவித்ததை கல்வெட்டுகள் குறிக்கின்றன.

ஓங்கூர் ஏரி

ஓங்கூர் ஏரியில் ஒரு மதகு அமைத்துக் கொடுத்ததை பல்லவ மன்னன் இரண்டாம் நந்திவர்மன் (கி. பி. 8-ஆம் நூற்றாண்டு) கல்வெட்டு "கோவிசைய நந்தி விக்ரம பருமருக்கு யாண்டு பதினான்காவது ஸ்ரீராஜ்ய கம்பீரம் ஓங்கியூர் தராதுடை யார்ங்கிழார் மக்ன்றாழன் செய்கை" என்று குறிக்கிறது. அதாவது ஓங்கியூரைச் சார்ந்த தராதுடையாங் கிழார் மகன் தாழன் என்பவன் இந்த மதகினைக் கட்டிக் கொடுத்தைக் கல்வெட்டுக் குறிக்கிறது. ஓங்கியூர் என்று கல்வெட்டில் குறிக்கப்பட்ட இவ்வூர் தற்பொழுது ஓங்கூர் என வழங்குகிறது.

கிடங்கில் ஏரி

இவ்வேரி மதகில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு கிடங்கில் ஏரியின் மதகினைக் கட்டுவித்ததை "மடையும் அடைத்துத் தூம்பும் செய்தான் பனய்புங்கிழர் தம்பி குமரன்" என்று குறிக்கிறது.

செஞ்சி வட்டம்

மேல்மலையனூர் ஏரி

செஞ்சிவட்டம், செஞ்சியிலிருந்து 19 கி.மீ. தொலைவில் மேல் மலையனூர் அமைந்துள்ளது. இவ்வூருக்கருகில், செஞ்சியை ஆண்ட தேசிங்குராஜன் காலத்தில் வெட்டப்பட்டதாகக் கருதப்படும் பெரிய ஏரி ஒன்று உள்ளது. இது 7 ஊர்களுக்குப் பாசன வசதி அளிக்கிறது. செஞ்சி வட்டத்தில் அமைந்துள்ள பெரிய ஏரி இதுவேயாகும்.

உளுந்தூர்பேட்டை வட்டம்

உளுந்தூர்பேட்டை வட்டத்தில் காட்டிடையார், செங்குறிச்சி ஆகிய ஊர்களில் உள்ள ஏரி மதகுகளைக் கட்டுவித்ததைக் கல்வெட்டுகள் வாயிலாக அறிய முடிகிறது.

காட்டிடையார் ஏரி

இவ்வேரி மதகில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு மூலம் கிளியூர் மலையமாந். பெரிய உடையாந் சேதிராயந் செங்கண் என்பவன் ஏரி மதகினை எடுப்பித்ததை அறிகிறோம். இக்கல்வெட்டு கி. பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கொள்ளலாம்.

செங்குறிச்சி ஏரி

விக்கிரமசோழனின் 9-வது ஆட்சியாண்டில் (கி. பி. 1127) இவ்வேரி மதகினை, மோகந் ஆண்டாந் என்பவன் எடுப்பித்ததை இம்மதகில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக் குறிக்கிறது.

இத்தலைப்பில் உள்ள செய்திகள், கொடுமுடி சண்முகப் பிரகதம் அவர்களின் 'மலையமான் நாட்டுக் கல்வெட்டுகள்' என்ற வெளியீட்டின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளன.

வரலாற்றுச் சின்னங்கள்


இம்மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் பாதுகாப்பில் கீழ்க்கண்ட இடங்களில் வரலாற்றுச் சின்னங்கள் அமைந்துள்ளன.

கபிலர் குன்று (இடைச்சிக் கல்)


விழுப்புரம் காட்பாடி புகைவண்டித் தடத்தில் திருக்கோயிலூர் அமைந்துள்ளது. விழுப்புரத்திலிருந்து பேருந்து மூலமும் இவ்வூரை அடையலாம். இவ்வூரின் கிழக்குப் பகுதியாகிய கீழையூர் என்று அழைக்கப்படும் பகுதியையொட்டித் தென்பெண்ணை ஆற்றின் நடுவில் இவ்வூர் மக்களால் இடைச்சிக் குன்று என அழைக்கப்படும் ''கபிலக்கல்'' உள்ளது.

சங்கப்புலவர் கபிலரின் நெருங்கிய நண்பரான பாரி, கடையேழு வள்ளல்களில் ஒருவராவார். முடியுடை மூவேந்தரும் முற்றுகை யிட்டுப் பாரியையும் அவனது பறம்பு நாட்டையும் அழித்துவிட பாரி அங்கவை, சங்கவை எனும் தன் பெண் மக்கள் இருவரையும் கபிலரிடம் அடைக்கலப்படுத்தி இறந்து விடுகிறான். கபிலர் பல்வேறு குறுநில மன்னர்களையும் அணுகி, அப்பெண்களைத் திருமணம் செய்து கொள்ளும்படி வேண்டினார். எல்லோரும் முடியுடை மூவேந்தருக்கு அஞ்சி மறுத்துவிடவே இறுதியாகத் திருக்கோயிலூர் மலையமான் திருமுடிக்காரியிடம் அப்பெண்களை ஒப்படைத்துவிட்டுக் கபிலர் உயிர் நீத்தார் என்பன சங்க நூல்களில் இருந்து பெறும் வரலாற்றுச் செய்திகள் ஆகும். சங்ககாலத்தில் திருக்கோயிலூர்ப் பகுதியை மலையமான்கள் ஆண்டு வந்தனர். இவர்கள் வழியில் வந்தவர்தான் ''புலியைப் பயந்த பொன்மான்'' என்று திருக்கோயிலூர்க் கல்வெட்டு புகழ்ந்துரைக்கும் சோழமாமன்னன் முதலாம் இராசராசனின் தாயாவார்.


திருக்கோயிலூர் வீரட்டானேஸ்வரர் கோயிலில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட முதலாம் இராசராசனின் கல்வெட்டு ஒன்று உள்ளது. அதில் கபிலர் இங்கு வந்து மலையமானிடம் பாரியின் பெண்களை அடைக்கலப் படுத்தி விட்டு இங்குள்ள கல்லொன்றில் தீ வளர்த்து உயிர் நீத்தார் என்ற செய்தி கீழ்க் கண்டவாறு குறிக்கப்படுகிறது.




கபிலர் குன்று, கீழையூர், திருக்கோயிலூர்.



குடைவரைக் கோயில், மண்டகப்பட்டு,
காலம் : கி.பி. 7-ஆம் நூற்றாண்டு, பக்கம் : 9-10,



கல்யாண மகால் உள்ளடக்கியப் பகுதி, செஞ்சிக் கோட்டை, காலம் : கி.பி. 15-ஆம் நூற்றாண்டு.



இயக்கியம்மன், ஆலக்கிராமம்,
காலம் : கி.பி. 7-8- ஆம் நூற்றாண்டு,
பக்கம் : 133.



துர்க்கை, சிங்கபுரம்,

காலம் : கி.பி. 7-ஆம் நூற்றாண்டு,

பக்கம் : *131.*



துர்க்கை, சிங்கபுரம் (மலைப் பகுதி),
காலம் : கி.பி. 8-ஆம் நூற்றாண்டு.



துர்க்கை, சிங்கபுரம் (மலைப் பகுதி),
காலம்: கி.பி. 8-ஆம் நூற்றாண்டு.



முருகன், ஆனாங்கூர்,
காலம் : கி.பி 7-ஆம் நூற்றாண்டு, பக்கம் : 133.



சண்டி, கண்டம்பாக்கம்,

காலம் : கி.பி. 7-8-ஆம் நூற்றாண்டு,

பக்கம் : 132



விநாயகர், கண்டம்பாக்கம், காலம் : கி.பி. 8-ஆம் நூற்றாண்டு,
பக்கம் : 132.




மானேந்திய வினாயகர், திருமூலஸ்தானமுடையார் கோயில்,
பேரங்கியூர், காலம் : கி பி. 10-ஆம் நூற்றாண்டு,
பக்கம் : 61.

விஷ்ணு, திருத்தொண்டீசுவரம் கோயில், திருநாவலூர்,
காலம் : கி பி. 7-8-ஆம் நூற்றாண்டு.




சண்டி, திருத்தொண்டீசுவரம், திருநாவலூர்,
காலம் : கி.பி. 7-8-ஆம் நூற்றாண்டு,
பக்கம் : 132.



சண்டி, அகத்தீஸ்வரர் கோயில், ஆனாங்கூர்,
காலம் : கி.பி. 7-ஆம் நூற்றாண்டு,
பக்கம் : 71.




நான்முகன், திருத்தொண்டீஸ்வரம் கோயில், திருநாவலூர்,
காலம் : கி.பி. 7-8-ஆம் நூற்றாண்டு.



2. காளி - கி.பி. 11-12-ஆம் நூற்றாண்டு, 1. காளி - கி.பி. 8-9-ஆம் நூற்றாண்டு,
பொன்னியம்மன் கோயில், முடியனூர், பக்கம்: 138.



பிச்சைபுகும் பெருமான், கைலாசநாதர் கோயில், விழுப்புரம்,
காலம் : கி.பி. 9-ஆம் நூற்றாண்டு,
பக்கம் : 135.



ரிஷபாந்திக தட்சிணாமூர்த்தி,
திருத்தொண்டீசுவரம், திருநாவலூர்,
காலம் : கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டு, பக்கம் : 136.

தெய்வக் கவிதைச் செஞ்சொற் கபிலன்
மூரிவண் தடக்கை பாரிதன டைக்கலப்
பெண்ணை மலையற் குதவிப் பெண்ணை
அலைபுனல் அழுவத்து அந்தரி ட்சம்செல
மினல்புகும் விசும்பின் வீடு பேறெண்ணி
கனல் புகும் கபிலக் கல்லது.

என்று குறிக்கிறது.

திருக்கோயிலூர் அருகே ஓடும் பெண்ணையாற்றின் நடுவே ஒரு சிறு பாறையும், அப்பாறையின் மீது ஒரு கோயிலும், அக்கோயிலைச் சுற்றிவர வழியும் உள்ளன. இப்பாறையைக் 'கபிலக்கல்' என்று இவ்வூரார் இன்றும் அழைக்கின்றனர். இந்தப் பாறையில் கபிலர் உயிர் நீத்ததால், இதற்குக் 'கபிலக்கல்' என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

இடைச்சி ஒருத்தி தென்பெண்ணையைக் கடந்து சென்ற போது ''வெண்ணை உருகும் முன் பெண்ணை திரளும்'' எனும் சொல்லுக்கேற்ப திடீரென்று ஆற்றில் வெள்ளம் வந்ததாகவும், அவள் உடனே இப்பாறையில் ஏறிக்கொண்டதாகவும் வெள்ளம் ஓய்ந்தபின் அவன் அக்கரைக்குச் சென்றதாகவும் இவ்வூரில் ஒரு செவிவழிச் செய்தி நிலவுகிறது. இதை அடிப்படையாக வைத்து இக்கபிலக்கல்லை இவ்வூர் மக்கள் இடைச்சிகுன்று என்றும் அழைக்கின்றனர்.

கண்டமங்கலம்

இம்மாவட்டத்தில், விழுப்புரம் வட்டத்தில் விழுப்புரம்—பாண்டிச்சேரி நெடுஞ்சாலையில் விழுப்புரத்திலிருந்து 22 கி. மீ. தொலைவில் கண்டமங்கலம் என்ற ஊர் அமைந்துள்ளது.

கண்டமங்கலம் எனும் இவ்வூரின் பெயர், ஸ்ரீகண்டராதித்த மதுராந்தக மங்கலம் எனும் சோழர் காலத்துப் பெயரின் திரிபாகும். ஸ்ரீகண்டராதித்த மதுராந்தக தேவரின் பெயரை கல்வெட்டுகள் குறிக்கின்றன.

திருநாரீஸ்வரம்

இவ்வூரில் மூன்று கோயில்கள் இருந்திருக்கின்றன. சிவன் கோயில் ஒன்றும், வைணவக்கோயில்கள் இரண்டுமாகும்.

திருநாரீஸ்வரம் என்று போற்றப்பட்டுள்ள சிவன்கோயில் ஊரின் தென்மேற்கே அமைந்துள்ளது. தற்பொழுது மிகுந்த இடிபாடு களுடன் காணப்படுகின்றது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவனை திருநாரீஸ்வரத்து மகாதேவர் என்று கல்வெட்டுகள் குறிக்கின்றன. இக்கோயில் கல்வெட்டுகள் வாயிலாகப் பல் அரிய செய்திகளை அறிந்து கொள்ள முடிகிறது.

கன்னரதேவனின் ஆட்சிக்காலத்தில் சங்கரப் பாடியைச் சேர்ந்த மாதேவன் என்பவன் இங்கு எழுந்தருளியுள்ள இறைவனுக்கு விளக்கெரிக்க ஆடுகள் தானமளித்துள்ளான்.

சடையன் என்பவன் இக்கோயிலுக்கு கைமணி ஒன்றும், காளம் இரண்டும் வழங்கிய செய்தியினைக் கல்வெட்டுக் குறிக்கிறது.

அரசன் அளித்த கொடை

ஸ்ரீகண்டராதித்த மதுராந்தகத் தேவன் (சோழமன்னன் முதலாம் பராந்தகனின் மகன்) ஊர்ச் சபையாரிடம் 58 காசுகளுக்குச் சில நிலங்களை விலைக்குப் பெற்று அவற்றைச் திருச்சென்னடைத் தேவைக்காக இம்மாதேவர்க்கு தானமளித்துள்ளான். அரசர் ஒருவர் நேரடியாக இக்கோயிலுக்கு கொடையளித்துள்ளது சிறப்புடையதாகும்.

செயந்தாங்கி விண்ணகர் ஆழ்வார்கோயில்

இவ்வூரில் உள்ள இரண்டு வைணவத் தலங்களில் ஒன்று இக்கோயிலாகும். இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் செயந்தாங்கி விண்ணகர் எம்பெருமான் என்றும், செயந்தாங்கி விண்ணகரப் பரமசுவாமி என்றும் அழைக்கப்படுகிறார்.

கி.பி. 10-ஆம் நூற்றாண்டில், திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலத்துச் சபை இவ்வாழ்வார்க்குத் திருச்சென்னடை திருவிளக்கு, உகச்சபோகம் உள்ளிட்ட தேவைகளுக்காக ஆறு காணி நிலங் களைத் தானமாக வழங்கியுள்ளது.

புத்தகன்களவன் என்னும் மன்றாடி நுந்தாவிளக்கு ஒன்று எரிக்க 90 ஆடுகளை மூலதனமாகக் கொடுத்தது குறிக்கப்படுகிறது.

செயந்தாங்கி ஆசாரியன் என்னும் கல்தச்சன் சபையின் முடிவுகளை இக்கோயிலில் கல்வெட்டுகளாக வெட்டுவித்துள்ளான்.

இராசராசன் கல்வெட்டு, திருவாய்ப்பாடி ஆழ்வார்க்கு நித்த நிவேதனங்கள் செய்யும் பொருட்டு ஊர்ச் சபையிடம் நிலங்கள் வாங்கப் பெற்றதும் இவ்வூரைச் சார்ந்த ஸ்ரீபாதக்கிரமவித்தன் மகன் சீராளன் என்பவன் இக்கோயிலில் விளக்கு எரிக்க ஆடுகள் வழங்கியுள்ளமையும் கல்வெட்டுகள் வாயிலாக அறிய முடிகிறது.

தியாகதுருகக் கோட்டை

இந்த மலைக்கோட்டையின் உள்ளே உச்சிக்கோட்டை என்னும் பகுதியில் மாட்டுப்பட்டி, பணக்கொட்டடி, பொன் கொட்டடி, இராமன்பாறை, கோட்டை அறை, பீரங்கி, செங்கல் அறை என்பன உள்ளன. சாமியார் கொட்டடி என்னுமிடத்தில் சுப்பிரமணியர், மலையம்மன் கோயில்கள், ஒரு கிணறு ஆகியவை காணப்படுகின்றன.

அரிய சிற்பங்கள்

இம்மாவட்டத்தில் சிற்பக்கலையின் வரலாறு பெருங்கற்காலம் தொட்டு வளர்ச்சி பெற்று வந்துள்ளது. இதன் பின்னர் பல்லவர் காலத்திலிருந்து நன்கு வளர்ச்சி பெறத் தொடங்கி, சோழர் காலத்தில் சிறந்த இடத்தைப் பெற்றது. பின்னர் கிளியூர் மலைய மான்கள், காடவராயர், சம்புவராயர், பாண்டியர், விசயநகர, நாயக்கர், மராட்டியர், செஞ்சி சிங்குகள் ஆட்சிக் காலத்திலும் சிற்பக்கலை வளர்ந்து வந்துள்ளது.

சிற்பக் கலையின் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக இம்மாவட் டத்தில் கிடைத்துள்ள அரிய சிற்பங்களைப் பற்றிக் காண்போம்.

பெருங்கற்காலம்

இம்மாவட்டத்தில், திருக்கோயிலூர் வட்டத்தில் உடையா நத்தம் என்ற ஊரின் வடமேற்கே 10 அடி உயரமுள்ள பறவை போன்ற அமைப்பினை உடைய உருவம் ஒன்றினைத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை கண்டுபிடித்துள்ளது. இதனை இப்பகுதி மக்கள் 'விசிறிப் பாறை' என்று வழங்குகின்றனர். பெருங்கற்கால மக்கள் வழிபாடு செய்த இறை உருவாக இது இருக்கலாம் அல்லது அப்பகுதியில் ஆட்சி செய்த தலைவனின் ஈமச் சின்னமாக இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். சில அறிஞர்கள் இதனைத் 'தாய் தெய்வம்' எனக் கருதுகின்றனர். இத்தாய் தெய்வம் கி.பி. 6-வது நூற்றாண்டில் பல்லவர்கள் வழி பட்ட 'ஸ்ரீவஸ்தம்' அதாவது பெண் தெய்வ வழிபாட்டின் முன்னோடி யாக இருத்தல் வேண்டும் என்றும் கருதுகின்றனர்.

இவ்வுருவத்தைச் சுற்றி வட்ட வடிவமான கல்திட்டைகள் காணப்படுகின்றன. இவ்விடத்தைச் சுற்றிப்பெருங்கற்கால ஈமச் சின்னங்களான கற்பதுக்கைகள் காணப்படுகின்றன. இதிலிருந்து இத்தாய் தெய்வம் பெருங்கற்காலத்தைச் சார்ந்த நினைவுச் சின்னம் என்று உறுதியாகக் கூறலாம்.

இது போன்ற அமைப்புடைய தாய்தெய்வம் வடார்க்காடு மாவட்டம் மோட்டூர் என்ற ஊரிலும் காணப்படுகிறது.

ஆந்திர மாநிலத்தில், கோதாவரி ஆற்றங்கரையிலும் இது போன்ற இரண்டு தாய் தெய்வ உருவங்கள் காணப்படுகின்றன.

பல்லவர் காலம்

இப்பகுதி பல்லவர்கள் ஆட்சிக்குட்பட்டிருந்தது. இக்காரணத்தினால் அவர்கள் பல கோயில்களை இப்பகுதியில் எடுத்துள்ளனர். பல்லவர்கள் குடைவரைக் கோயில்களையும், கருங்கல்லினால் கட்டப்பெற்ற கட்டடக் கோயில்களையும், செங்கற் கோயில்களையும் கட்டியுள்ளனர் என்பது தெரிகிறது. இவற்றில் இறைவுருவங்களைக் கருங்கல்லில் வடித்துள்ளனர்.

செங்கற்களால் கட்டப்பெற்ற கோயில்களின் சுவர்ப் பகுதியில் பலகைக் கல்லில் புடைச் சிற்பங்களாக இறையுருவங்களை வடித்து அதில் பதித்துள்ளனர். இதைத் தவிர தனிச் சிற்பங்களாகப் பலகைக் கல்லில் புடைச் சிற்பங்களாக வடிக்கப்பெற்ற இறை உருவங்களும் வழிபாட்டில் இருந்துள்ளதை இம்மாவட்டத்தில் இன்றும் காண முடிகிறது.

இம்மாவட்டத்தில் பல்லவர் காலத்தைச் சார்ந்த லிங்கம், சேட்டை, துர்க்கை, மும்மூர்த்தி, வினாயகர், சண்டிகேசு, வரர், முருகன். திருமால், நான்முகன் ஆகிய சிற்பங்கள் காணப்படுகின்றன.

முஞ்ஞூர் ஆடவல்லீஸ்வரர் கோயில்

முஞ்ஞூர் ஆடவல்லீஸ்வரர் கோயிலில் உள்ள லிங்கம், சேட்டை ஆகிய புடைச்சிற்பங்கள் கி.பி. 5—6-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும். இம்மாவட்டத்தில் கிடைத்துள்ள பல்லவர் காலச் சிற்பங்களில் இவை காலத்தால் முற்பட்டவை.*

திருவாமாத்தூர் திரிமூர்த்தி

இம்மாவட்டத்தில் விழுப்புரத்தைச் சுற்றியுள்ள ஊர்களில் உள்ள பல்லவர் காலத்தினைச் சார்ந்த பல சிற்பங்களைத் தமிழ் நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை கண்டறிந்துள்ளது. அவற்றுள் குறிப்பிடத்தக்கது 'லிங்கோத்பவர்' அல்லது 'திரிமூர்த்தி' எனும் சிற்பம் ஆகும்.

திருக்கோயிலூருக்கு அருகே பெண்ணையாற்றிலிருந்து பிரிந்து செல்லும் பம்பையாற்றின் வடகரையில் அமைந்துள்ளது திருவா

மாத்தூர் எனும் சிற்றூர். இவ்வூரில் உள்ள அபிராம ஈசுவரர் கோயிலின் வெளித் திருச்சுற்றில் நடப்பட்டுள்ள பலகைக் கல்லில் திரிமூர்த்தியின் உருவங்கள் புடைச் சிற்பங்களாகச் செதுக்கப் பட்டுள்ளன. நடுவில் லிங்க உருவமும், இடப்புறம் திருமாலும், வலப்புறம் பிரம்மனுமாக வடிக்கப்பட்டுள்ளன. சிவனுக்குச் சிறப்புத் தந்து லிங்கோத்பவராகக் காட்டப்பட்டிருக்கிறது என்று கருதத் தோன்றுகிறது. பிற்காலங்களில் லிங்கோத்பவர் உருவங்களில் லிங்கத்தின் வடிவம் மிகப் பெரியதாகவும், பிரம்மனும், திருமாலும் அவருக்கு அடங்கியவர்கள் போலச் சிறிய உருவங்களாக நின்ற நிலையிலும் காட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இந்தச் சிற்பத்தில் படைத்து, காத்து, அழிக்கும் தொழில் புரியும் பிரம்மன், திருமால், ஈசுவரன் ஆகியோரைச் சமமாக வடித்திருப்பதாகத் தெரிகிறது. எனவே, இச்சிற்பத்தினைத் 'திரிமூர்த்தி' என்று கூறுவதும் பொருத்தமுடையதாக இருக்கும் போல் தோன்றுகிறது. இதே மாவட்டத்திலுள்ள மண்டகப்பட்டு குடைவரைக் கோயிலில் காணப்பெறும் மகேந்திரவர்மனின் கல்வெட்டு ஈண்டுகுறிப்பிடத்தக்கது. பிரம்மன், சிவன், திருமால் ஆகியோருக்கு அக்கோயிலை எடுத்ததாக (பிரம்மேஸ்வர விஷ்ணு லஷிதாயதனம்) அம்மன்னன் குறிப்பிடுகிறான். அக்கல்வெட்டு குறிக்கும் பிரம்மன், ஈசுவரர், திருமால் என்ற முறைவைப்பின் படியே இச்சிற்பத்திலும் காணப்படுகிறது. ஆதலால் இச்சிற்பம் 'திரிமூர்த்தி' வடிவமாகவே இருக்கலாம் என்று எண்ண வைக்கிறது.

சிற்ப அமைதியைக் கொண்டு பார்க்கும் பொழுது இச்சிற்பம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கூறலாம். பிரம்மா நான்கு கரங்களுடன், கமண்டலமும் அக்கமாலையும் மேற்கைகளில் ஏந்தியிருக்க, திருமால் மேற்கைகளில் சக்கரமும், சங்கும் தாங்கி யுள்ளார். பிரம்மனின் இடக்கீழ் கையில் ஓலைச்சுவடி இருப்பது குறிப்பிடத்தக்கது. சிவன் லிங்க வடிவிலேயே உள்ளார்.

இதன் மூலம் முற்கால பல்லவர்கள் காலத்தில் திரிமூர்த்தி வழிபாடு சிறந்து விளங்கி உள்ளது என்பது தெரிகிறது.

துர்க்கைச் சிற்பங்கள்

பரவலாக மிகுந்த அளவில் துர்க்கைச் சிற்பங்கள் காணப் படுகின்றன. இச்சிற்பங்கள் பெரும்பாலும் ஏரிகளிலும், ஆற்றங் கரைகளிலும் காணப்படுவதிலிருந்து, துர்க்கையை நீர் நிலைக் கடவுளாகப் போற்றி உள்ளனர் என்பது தெரிகிறது.

இம்மாவட்டத்தில், ஏரளூர் (ப. 13), பனை மலை (ப. 14) விழுப்புரம் (வைகுந்தவாசப் பெருமாள் கோயில்) (ப. 88), விக்கர வாண்டி, கோலியனூர், மேலமங்கலம், கிராமம், ஆனாங்கூர்(ப.71) ஆகிய ஊர்களில் அழகு வாய்ந்த துர்க்கை சிற்பங்கள் உள்ளன.

சிங்கபுரம் துர்க்கை

இம்மாவட்டத்தில், செஞ்சி வட்டத்தில் சிங்கபுரம் எனும் ஊரின் வயல்வெளியில் கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த துர்க்கையின் அரிய சிற்பம் ஒன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இடது காலை எருமைத் தலையின் மீது ஊன்றி திரிபங்க நிலையில் நிற்கும் துர்க்கை வலது கைகளில் சக்கரம், நீண்ட வாள், குறுவாள், அம்பு ஆகியவற்றையும், இடது கைகளில் சங்கு, கேடயம், கத்தி, வில் ஆகியவற்றை ஏந்திய நிலையிலும் தோற்றம் அளிக்கிறாள். தேவியின் தலைக்கு வலப்புறம் மானும், இடப்புறம் சிம்மமும் காட்டப்பட்டுள்ளன. காலுக்கு அருகில் இருபுறமும் இரு அடியவர் கள் வணங்கிய நிலையில் அமர்ந்துள்ளனர். தன் வாகனமாகிய சிம்மத்தையும், மானையும் ஒருங்கே கொண்டு விளங்கும் இச்சிலை அற்புதப் படைப்பாகும். தமிழ் இலக்கியங்களில் துர்க்கை சிங்க வாகினி என்றும், பாய்கலைப் பாவை என்றும் வருணிக்கப்படுவதற்கு ஏற்ப இச்சிற்பம் காணப்படுகிறது. செவ்வக வடிவிலான பலகைக் கல்லில் இச்சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. பல்லவர் காலச் சிற்பங் களின் அனைத்துக் கலையம்சங்களையும் இச்சிலை பெற்று விளங்கு கிறது. இத்தகையதொரு சிலை இதுவரை இம்மாவட்டத்தில் கண்டு பிடிக்கப்படவில்லை எனலாம். இச்சிற்பம் புலவர் மு. எத்திராசன் உதவியுடன் இந்நூல் ஆசிரியராலும், திரு. வெ. இராமமூர்த்தி, கல்வெட்டு ஆய்வாளராலும் கண்டுபிடிக்கப்பெற்றதாகும்.

விநாயகர்

பல்லவர் காலத்தைச் சார்ந்த விநாயகர் சிற்பங்களை இம் மாவட்டத்தில் திருவாமாத்தூர், திருநாவலூர், கண்டம்பாக்கம் ஆகிய இடங்களில் காணலாம். இவை அனைத்தும் கோயிலில் வழிபாட்டில் உள்ளன. இவற்றுள் கண்டம்பாக்கம் விநாயகர் மட்டும், கோயில் இடிந்துவிட்ட காரணத்தால் தனிச் சிற்பமாக வைத்து வணங்கப்படுகிறது. இவை அனைத்தும் வலம்புரி விநாயகர் சிற்பங்களாகும்.

கண்டம்பாக்கம் - விநாயகர்

இம்மாவட்டத்தில், விழுப்புரம் வட்டத்தில் விழுப்புரம்-திருச்சி செல்லும் நெடுஞ்சாலையில் ஜானகிபுரத்திற்கு மேற்கே ஒரு கிலோ மீட்டர் தொலைவில் கண்டம்பாக்கம் என்ற ஊர் அமைந்துள்ளது. இவ்வூரில் ஒரு சிவன் கோயில் இருந்து அழிந்துள்ளது. தற்பொழுது குளம் மட்டும் உள்ளது. இதன் கரையில் நந்தி, இலிங்கம், சூலம் (கருங்கல்) ஆகிய சிற்பங்கள் உள்ளன. இங்கு நீண்ட பலகைக் கல்லில் விநாயகர் சிற்பம் அழகே உருவாகக்காட்சி அளிக்கிறது. இது வலம்புரி விநாயகர் ஆகும். நான்கு கைகளுடன் கூடிய இச்சிற்பத் தின் வலது மேல் கையில் சுவடியும் இடது மேல் கையில் எழுத்தாணி யும், வலது முன் கையில் தாமரை மொட்டும் உள்ளன. இடது முன் கையினைத் தொடையின் மீது ஊன்றிய நிலை. சிற்பத்தின் முன் பகுதியில் படையல் இடப்பட்டுள்ளது. தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம் ஆகியவை செதுக்கப்பட்டுள்ளன. இச்சிற்பம் பல்லவர் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இச்சிற்பம் இந்நூல் ஆசிரியரால் கண்டுபிடிக்கப்பெற்றதாகும்.

சண்டிகேசுவரர்

பல்லவர் காலத்தைச் சார்ந்த சண்டிகேசுவரர் சிற்பங்களும் இப்பகுதியில் மிகுதியாகக் கிடைக்கின்றன. திருநாவலூர், திருவா மாத்தூர், ஆனாங்கூர், விழுப்புரம், கண்டம்பாக்கம் ஆகிய இடங் களில் சண்டிகேசுவரர் சிற்பங்கள் வழிபாட்டில் உள்ளன. இவற்றுள் திருநாவலூர்த் திருத்தொண்டீசுவரம் கோயிலில் உள்ள சண்டிகேசு வரர் சிற்பமே காலத்தால் முந்தியதாகும். இது கி.பி. 7—8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். விழுப்புரம் வாலீசுவரர் கோயில் சண்டியும் ஏறக்குறைய இதே காலத்தைச் சார்ந்ததாகும். திருவா மாத்தூர், ஆனாங்கூர் ஆகிய இடங்களிலுள்ள சண்டியும் அழகு வாய்ந்தவை.

கண்டம்பாக்கம் சண்டிகேசுவரர்

கண்டம்பாக்கம் குளக்கரையில் ஒரு சிறு குடிசையில் சண்டிகேசு வரர் சிற்பம் ஒன்று வழிபாட்டில் உள்ளது. இடது காலை மடக்கி வைத்து, வலது காலைச் சற்றுக் குத்திட்டு வைத்து, இடது கையினைத் தொடையின் மீது ஊன்றியும், வலது கையில் கதையினை ஏந்தியும் அமர்ந்த நிலை. கழுத்தில் பூட்டையான அணி, தலையில் சடாபாரம். இச்சிற்பத்தின் உருவ அமைதியைப்

பார்க்கும்பொழுது இதனை முற்காலப் பல்லவர் காலத்தைச் சார்ந்த தாகக் கொள்ளலாம். (கி.பி. 7—8-ஆம் நூற்றாண்டு) இச்சிற்பம் இந்நூல் ஆசிரியரால் கண்டுபிடிக்கப்பெற்றது.

ஆனாங்கூர் - முருகன் (இந்திரன்)

ஆனாங்கூர் என்னும் கிராமத்தில் இருந்து தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த முருகன் அல்லது இந்திரன் என்று கருதப்படும் அரிய சிற்பம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முருகப்பிரான் அல்லது இந்திரன் பெரிய அளவில் பலகைக் கல்லில் புடைச்சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. இறைவன் யானை மீது அமர்ந்த நிலையில் காட்சியளிக்கின்றார். தலையில் ஜடா மகுடம். வலது மேற்கையில் சக்திப்படையும், இடது மேற்கையில் அக்கமாலையும் உள்ளன. வலது கீழ்க்கை கீழே தொங்கிய நிலையிலும் இடது கீழ்க்கையைத் தொடை மீது வைத்தும் காணப்படுகிறது. தடித்த கழுத்தணியும், கைகளில் வளையும் இச்சிற்பத்தின் பழமையை உறுதி செய்கின்றன. யானையின் முகப் பகுதியை மட்டும் காண முடிகிறது. தந்தங்கள் குட்டை யாகவும், காதுப்பகுதி மிக விரிந்தும் காணப்படுகின்றன. இதனை இத்துறை கல்வெட்டு ஆய்வாளர் திரு. கோ. முத்துசாமி கள ஆய்வின் போது கண்டுபிடித்தார்.

இயக்கியம்மன் - ஆலக்கிராமம்

திண்டிவனம் வட்டம், கூட்டேரிப்பட்டிலிருந்து மேற்கே 4 கி.மீ. தொலைவில் ஆலக்கிராமம் உள்ளது. இவ்வூருக்கு கிழக்கேயுள்ள செல்லியம்மன் கோயிலுக்கு வடக்கே புதைந்த நிலையில் உள்ள பலகைக் கல்லில் புடைச் சிற்பமாகப் பெண் உருவம் ஒன்று வடிக்கப்பட்டுள்ளது. இது இரண்டு கைகளுடனும் பக்கங்களில் பணிப் பெண்களுடனும் காணப்படுகிறது. முகம் நீண்ட சதுரமாக வும், மூக்கு, கண், வாய் யாவும் தேய்ந்து அடையாளம் காண முடியாதவாறு உள்ளது. இது அவ்வையார் சிலை என அண்மை யில் கூறப்பட்டது. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை யினர் இச்சிற்பத்தினை ஆய்வு செய்து இது சமண சமயத்தைச் சார்ந்த இயக்கியம்மனின் சிற்பமாக இருத்தல் வேண்டும் என தெரிவித்துள்ளனர், இதன் காலம் கி.பி. 7-8 - ஆம் நூற்றாண்டு. இப்பகுதியில் கிடைத்துள்ள இயக்கியின் சமணச் சிற்பங்களில் இதுவே பழமையானது.**

பல்லவர் காலம் - திருக்கோயிலூர் வீரட்டத்து சிவன் - பார்வதி

திருக்கோவலூர் வீரட்டானம் சிவன் கோயிலின், வடக்குத் திருச்சுற்றில், திண்ணை போன்ற அமைப்புடைய பீடத்தின் மீதுள்ள திண்டு போன்ற அமைப்புள்ள ஆசனத்தில் ஆண், பெண் உருவங்கள் வடிக்கப்பெற்றுள்ளன. இந்தச் சிற்பம் பல்லவ அரசன்-அரசியைக் குறிப்பதாகவும் எந்த அரசன் என்று தெளிவாகக் கூற முடியவில்லை எனவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உருவ அமைதியைப் பார்க்கும் பொழுது இச்சிற்பம் இறை உருவமாக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. இது திருச்சிக் குடைவரையில் உள்ள சிற்பங்களை ஒத்துக் காணப்படுகிறது. இறைவன் வலது கையில் மலரை ஏந்தியும் இடது கையின்னை தொடையின் மீது வைத்தும், வலது காலை மடக்கி வைத்து இடது காலை தொங்கவிட்டு அமர்ந்த நிலையில் உள்ளது தலையில் தலைப்பாகை, காதுகளில் குண்டலங்களும் அழகு செய்கின்றன. முகம் சிதைந்துள்ளது.

பெண் சிற்பம் (தேவி) இடது காலைக் குத்திட்டு வைத்து, வலது காலைத் தொங்கவிட்டு இடது பக்கம் சற்று சாய்ந்து அமர்ந்த நிலை. இடது கையில் மலரை ஏந்தியும், வலது கையினை ஊன்றிய நிலை, தலையில் கரண்ட மகுடம், காதுகளில் அணி, கழுத்தில் பதக்கமும், மார்பில் கச்சு இல்லை, இடுப்பில் ஆடை, பாதங்களில் பாதச் சங்கிலி இதன் முகமும் சிதைந்த நிலையில் உள்ளது.

இச்சிற்பம் சிவன், பார்வதியாகவே இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. இறைவன் மலரை ஏந்திய நிலையில் காட்டப்பட்டுள்ளது சிறப்புடையதாகும்- கி.பி. 8-9 நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கொள்ளலாம்.

சோழர்காலம்

சோழர்கள் ஆட்சிக் காலத்தில் செங்கற் கோயில்கள் கற்றளிகளாக மாற்றிக் கட்டப்பெற்றன. ஆதித்தன், முதலாம் பராந்தகன் உத்தம சோழன் (செம்பியன்மாதேவி) ஆகிய சோழ மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் இம்மாவட்டத்தில் திருநாவலூர், கிராமம், சித்த லிங்க மடம், திருவாமாத்தூர், விழுப்புரம், திருவக்கரை, ஆனாங்கூர் திருவெண்ணைநல்லூர் ஆகிய ஊர்களில் கற்றளிகள் எடுக்கப் பெற்றன. அப்பொழுது செங்கற் சுவரில் பதித்துக் கட்டப் பெற்றிருந்த கருங்கற் சிற்பங்கள் எடுக்கப்பெற்று, அக்கோயில்களின் திருச்சுற்றில் வழிபாட்டில் வைக்கப்பெற்றுள்ளன. (இச்சிற்பங்கள் பல்லவர் காலத்தைச் சார்ந்தவைகளாகும்.)

விழுப்புரம் - வாலீஸ்வரர் கோயில்

இம்மாவட்டத்தில் சோழ மன்னன் விசயாலயன் காலத்தில் எடுக்கப்பெற்ற கோயில்கள், இருந்ததற்கான சான்றுகள் ஏதும் இதுகாறும் கிடைக்கவில்லை. இப்பகுதியில் முதலாம் ஆதித்தன் காலத்தில் பெருமளவு கோயில்கள் எடுக்கப்பெறவில்லை என்றாலும் ஒரு சில கோயில்களை எடுத்துள்ளான். விழுப்புரம் வாலீஸ்வரர் கோயிலின் கட்டடக் கலையையும், கோயிலின் தேவ கோட்டங்களில் வைக்கப்பெற்றுள்ள தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், பிரம்மா ஆகிய சிற்பங்களின் உருவ அமைதியினையும், கலைப்பாணியையும் கொண்டும், இங்குப் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டின் துணை கொண்டும் இக்கோயில் முதலாம் ஆதித்தன் காலத்தில் கட்டப் பெற்றதாகக் கொள்ளலாம்.

பிச்சைபுகும் பெருமான்

இவ்வூரில் உள்ள கைலாசநாதர் கோயிலில் பிச்சைபுகும் பெருமானின் சிற்பமொன்று உள்ளது. இச்சிற்பம் வாலீஸ்வரர் கோயிலுக்கு உரியதாதல் வேண்டும். எழில் வாய்ந்த பிச்சாடனரின் இவ்வுருவம் ஆடையற்ற திருவுருவாய் நான்கு கரங்களுடன் நின்ற கோலத்தில் காணப்படுகிறது. சிவனது மேல் வலக்கரம் ஒலிக்கும் உடுக்கையை பற்றியுள்ளது. இடக்கரம் வனப்புடன் விரிந்த சாமரைத் தண்டை பற்றியுள்ளது. கீழ் இடக்கரம் கபாலக் கிண்ணத்தை தாங்கியுள்ளது. கீழ் வலக்கரம் துள்ளிக் குதிக்கும் மானுக்கு துளிர் கொடுக்கும் கரமாக அமைந்து அழகு செய்கிறது. வேலைப்பாடு மிக்க ஜடாமகுடம் தலையிலும் முத்துப் பட்டங்கள் நெற்றியிலும், மகரக் குழைகள் காதிலும், கண்டசரம், முத்துவடம் மணிவடம் போன்ற அணிகள் கழுத்திலும், முத்துத்தரித்த புரிநூல் மார்பிலும், பட்டையான உதிரக்கச்சை மேல் வயிற்றிலும், ஆடும் அரவம் அரைஞாணாக இடையிலும் அலங்கரிக்க, முகத்தில் எழில் சிந்தும் இவ்வுருவம் ஆதித்த சோழன் காலத்திய அற்புதப் படைப் பாகத் திகழ்கிறது, சோழர்காலச் சிற்பியின் சிற்றுளி ஆற்றலை வெளிப்படுத்தும் இச்சிற்பம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டின் முற் பகுதியைச் சார்ந்தது.

முதலாம் பராந்தகன் காலத்தில் எடுக்கப்பெற்ற திருநாவலூர்த் திருத்தொண்டீஸ்வரத்தில் அன்னையர் எழுவர், சண்டிகேசுவரர், சூரியன், ரிஷபாந்தக தட்சிணாமூர்த்தி ஆகிய சிற்பங்கள் அழகு

செய்கின்றன. இவற்றுள் தட்சிணாமூர்த்தியின் சிற்பம், சோழர் களின் சிற்பக் கலைக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

ரிஷபாந்திக தட்சிணாமூர்த்தி

திருத்தொண்டீசுவரம் கோயில் உண்ணாழியின் தென்பக்கத் தேவக்கோட்டத்தில் ரிஷபாந்திக தட்சிணாமூர்த்தி நின்ற நிலையில் ரிஷபத்துடன் காட்டப்பட்டுள்ளது சிறப்புடையதாகும். தட்சிணா மூர்த்தி சிற்பம் பெரும்பாலும் ஆலமர்ச் செல்வராகக் காட்டப் பட்டிருக்கும். ஆனால் இங்கு நின்ற நிலையில் காட்டப்பட் டுள்ளார். வீணாதர தட்சிணாமூர்த்தியே பொதுவாக நின்ற நிலை யில் காட்டப்பட்டிருப்பார். நான்கு கைகளுடன் காட்டப்பட்டு உள்ளார். இடது முன்கையில் சுவடியும், பின்கையில் தீ (அ) மலர் காட்டப்பட்டுள்ளது. வலது முன் கை ரிஷபத்தை நோக்கிக் காட்டப்பட்டுள்ளது. பின்கையில் அக்கமாலை அணி செய்கிறது. தலையில் சடாபாரம். சடைகள் சுருள் முடியுடன் தனித்தனியாகக் காட்டப்பட்டுள்ளது தனி அழகாகும். வலது காது தொள்ளைக் காதாகவும் இடது காதில் பத்ரகுண்டலமும் அணி செய்கிறது. யோக நிலையில், மனதை ஒருநிலைப்படுத்தி, கண்களைச் சற்று மூடிய நிலையில் மூக்கினை காண்பது போன்று வடிக்கப்பெற்றுள்ளது. கழுத்தில் பதக்கமும், முத்துமாலையும் அணி செய்கின்றன. ஒவ்வொரு கையிலும் மூன்று வளைகள் காட்டப்பட்டுள்ளன. பட்டையான புரிநூலும் கயிறு போன்ற உதரபந்தமும் காட்டப் பட்டுள்ளது. இரண்டு கால்களிலும் பாதச்சங்கிலியும் இடுப்பில் கீர்த்திமுகக்கச்சும், தொடைகளின் முன் பகுதியில் ஆடையின் கட்டு தொங்குவது போன்றும் காட்டப்பட்டுள்ளது. இங்கு முயலகன் உருவத்தைக் காணமுடியவில்லை. இந்த சிற்பத்தின் உருவ அமைதியையும், ஆடை அணிகலன்களையும் பார்க்கும் பொழுது இது முதலாம் பராந்தகனின் காலத்தைச் சார்ந்தது என்பதை உறுதியாகக் கூறலாம்.

முதலாம் இராசராசன்

முதலாம் இராசராசன், ஆட்சிக்காலத்தில் இப்பகுதியில் கோயில்கள் எடுக்கப்பெற்றுள்ளன. இவற்றுள் அழகு வாய்ந்த சிற்பங்கள் எடுக்கப்பெற்றுள்ளன. இவன் காலத்தில் எண்ணா யிரத்தில் சப்தமாதர்களுக்குக் கோயில் எடுக்கப்பெற்றுள்ளதை அங்குள்ள கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது. பிரம்ம தேசத்தில்

இரண்டு கோயில்களை எடுத்துள்ளான். அவற்றில் உள்ள நந்திகளின் அழகே தனி.

முதலாம் இராசேந்திரன்

முதலாம் இராசேந்திரன் காலத்தில் எண்ணாயிரத்தில் கோயில்கள் எடுக்கப்பெற்று, அதில் சிற்பங்களும் அழகு செய்கின்றன. எசாலத்தில் இவன் காலத்தில் எடுக்கப்பெற்ற இராம நாதீஸ்வரர் கோயில் சிற்பங்களும், செப்புத் திருமேனிகளும் அழகு வாய்ந்தவை. உண்ணாழியின் தேவ கோட்டங்களில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, திருமால், பிரம்மா, துர்க்கை சிற்பங்கள் உள்ளன. விமானப் பகுதியிலும் தட்சிணாமூர்த்தி, திருமால், பிரம்மா ஆகிய சிற்பங்களும் உள்ளன. (இக்கோயிலினருகில் கி.பி. 8—9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருமால் சிற்பம் உள்ளது. இதன் தலைப் பகுதி காணப்பெறவில்லை.)

முடியனூர்

கள்ளக்குறிச்சி வட்டத்தில் தியாகதுர்க்கத்திற்கு தெற்கே மணி முத்தாறு நதியின் வடகரையில் வெங்கனூர் எல்லையில் முடியனூர் அமைந்துள்ளது. இவ்வூர் 'முடியன்' என்ற சங்ககாலத் தலைவனின் ஊராகக் கருதப்படுகிறது, முடியனூர் மலையமான் நாட்டில் அமைந்திருந்தது. இராசராசனின் ஆட்சியில் இப்பகுதியை உத்தம சோழ மிலாடுடையார் என்பவர் குறுநில மன்னராக ஆட்சி புரிந்துள்ளார்.

பொன்னியம்மன் கோயில்

இந்துப் பொன்னியம்மனுக்கு கோயில் எடுக்கப் பெற்றுள்ளது. கல்வெட்டுகள் 'பொன்னாய் அமர்ந்தாள்' என்று இவ்வம்மனைக் குறிக்கின்றன. முதலாம் இராசராசன் தன்னுடைய மூன்றாவது ஆட்சியாண்டில் இங்குள்ள பொன்னியம்மனை வழிபாடு செய்துள்ளான் என்பதைக் கல்வெட்டு உறுதிப்படுத்துகிறது. இவளுக்கு விளக்கெரிக்க நாள்தோறும் ஆழாக்கு நெய் அளிக்க பெருவுச்சன் என்பானிடம் 96 ஆடுகளை நிவந்தமாக வழங்கியதையும் கல்வெட்டு குறிக்கிறது.

முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் ஆகியோர் பிடாரி கோயிலுக்கு நித்திய வழிபாட்டிற்காக நிலமும், பொற் காசுகளும் கொடை அளித்ததைக் கல்வெட்டுக் குறிக்கிறது. பிடாரி

கோயில் என்பது பொன்னியம்மனுக்கு எடுக்கப்பெற்ற கோயிலையே குறிப்பதாகும். இக்கோயில் இராசராசன் காலத்திற்கு முன்பே எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

பொன்னி அம்மன் என்று அழைக்கப்படுகின்ற இக்கோயிலில் உள்ள இரு சிற்பங்களும் உருவ அமைதியில் காளியின் உருவங்களாகவே உள்ளன.

முதல் உருவம்

இவ் உருவம் எட்டு கைகளுடன் காட்சியளிக்கிறது. வலது கைகளில் மேல் கை உடைந்துள்ளது. இரண்டாவது கையில் வாள் (உடைந்துள்ளது) மூன்றாவது கையில் உடுக்கை, நான்காவது கையில் குறுவாள், இடது கைகளில், மேல் கை விஸ்மயம், இரண்டாவது கையில் கேடயம், மூன்றாவது கையில் மணி, நான்காவது கையில் கபாலம், சுவாலை மகுடம், வலது காதில் பிரேதகுண்டலம், இடது காதில் பத்தரகுண்டலம், மார்பில் நாகக் கச்சு, கபாலமாலை, நாகபுரிநூல், வலது காலைக் குத்திட்டு வைத்து இடது கால் தொங்கிய நிலை. வீராசனத்தில் அமர்ந்த நிலை. காலின் கீழ் பீடத்தில் ஆண் உருவம் மண்டியிட்டு வணங்கும் நிலை. உருண்டமுகம், தடித்த உதடு, திறந்த வாய், திறந்த கண்கள், பருத்த வரி, உயர்ந்த உருவம். இது கி.பி. 8—9 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

இரண்டாவது உருவம்

எட்டு கைகளுடன் காட்சியளிக்கும் இக்காளியின் வலது மேல் கையில் சூலம், இரண்டாவது கையில் வாள், மூன்றாவது கை உடுக்கை, நான்காவது கையில் குறுவாள், இடது மேல் கை விஸ்மயம், இரண்டாவது கை கேடயம், மூன்றாவது கை மணி, நான்காவது கை கபாலம், வலது காதில் நரகுண்டலம் இடது காதில் பத்திர குண்டலம், திருவாசி உள்ளது: வலது காலைக் குத்திட்டு வைத்து இடது கால் தொங்கிய நிலை. சுவாலை மகுடம், கண்டமாலை, கபால மாலை, அரவகச்சு, கொடிகளின் முகப்புடைய தோள் வளை, உருண்டையான மூன்று கைவளை, காலில் ஒற்றைச் சிலம்பு; நீண்ட சதுர முகம், அகன்ற புருவம், விரிந்த கண்கள், உடைந்த நாசி, பிரிந்த வாய், கோரைப்பற்கள், இடுப்பிலிருந்து முழங்கால் வரை ஆடை, மேடையில் அமர்ந்த நிலை. இது கி.பி. 11—12 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

அழவாத்தாள் - கரடிப்பாக்கம்

திருக்கோயிலூர் வட்டத்தில், பேரைங்கியூருக்கு மேற்கே பெண்ணையாற்றின் தென்கரையில் கரடிப்பாக்கம் என்ற ஊர் அமைந்துள்ளது. இவ்வூரின் வடமேற்கே அன்னையர் எழுவருக்கும் ஒரு கோயில் எடுக்கப்பட்டுள்ளது. இக்கோயில் 'அழவாத்தாள்' கோயில் என்று வழங்குகிறது. இங்குள்ள அன்னையரின் அழகினைச் சிறப்பிக்கின்ற வகையில் இவ்வூர் மக்கள் அழவாத்தாள் என்று அழைக்கின்றனர் போலும். காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு.

முதலாம் குலோத்துங்கன்

இவர்களுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த முதலாம் குலோத்துங்கன் இம்மாவட்டத்தில் நெய்வணை, அரகண்டநல்லூர், சிந்தாமணி அகரம் ஆகிய ஊர்களில் கோயில்களை எடுத்துள்ளான். சிந்தாமணி அகரத்திலுள்ள வைத்தீஸ்வரர் கோயிலிலுள்ள சிற்பங்கள்- சிற்பக் கலையின் வளர்ச்சிக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. முதலாம் குலோத்துங்கன் காலத்துக்கு முன்பு தேவகோட்டங்களில் வினாயகர், தட்சிணாமூர்த்தி, திருமால், நான்முகன் ஆகிய சிற்பங்கள் வைக்கப் பெற்றன. ஆனால் இவன் காலத்தில் ஊர்த்துவ தாண்டவமூர்த்தி, உமா ஆலிங்கனமூர்த்தி, பைரவர் ஆகிய சிற்பங்கள் கோட்டங்களில் வைக்கப் பெற்றுள்ளமை சிறப்புடையதாகும்.

கிளியூர் மலையமான்கள்

முதலாம் குலோத்துங்கன் காலத்தில் இறை உருவங்கள் மட்டும் வடிக்கப் பெறவில்லை. இவன் மைய ஆட்சியில் குறுநில மன்னர்களாக விளங்கியவர்களுக்கும் சிலை வடிக்க பெற்றுள்ளது. இம்மாவட்டத்திலுள்ள நெய்வணை (நெல்வணை) கிளியூர் மலையமான்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. இவர்கள் வழியில் வந்த நானூற்றுவன் மலையனான இராசேந்திர சோழச் சேதிராயன், விக்கிரம சோழச் சேதிராயன் ஆகியோர் நெய் வெண்ணெயப்பருக்குப் பல கொடைகளைக் கொடுத்துள்ளனர். இவர்கள் இக்கோயிலை நன்கு போற்றி உள்ளனர். இவர்களுடைய உருவங்களும் இங்கு சிற்பங்களாக வடிக்கப் பெற்றுள்ளன.

இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன், இரண்டாம் இராசாதிராசன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம்

இராசராசன் ஆகிய மன்னர்கள் காலத்திலும் கோயில்கள் எடுக்கப் பெற்று, அதில் அழகு வாய்ந்த சிற்பங்கள் வழிபாட்டிற்கு வைக்கப் பெற்றன.

நானூற்றுவன் மலையனான இராசேந்திர சோழ சேதிராயன்

இம்மன்னன் உத்தர நாளில் பிறந்தவன் என்று அரையணி நல்லூர் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. மலையமான் நானூற்றுவன், மலையமான் நானூற்றுவன் மலையன், மலையன் நானூற்றுவன் அத்திமல்லன் என்ற சிறப்புப்பெயர்களால் கல்வெட்டில் குறிக்கப் படுகிறான். முதலாம் குலோத்துங்கன், விக்கிரமசோழன் ஆகிய சோழ மன்னர்களின் காலத்தில் வாழ்ந்தவன் இம்மலையமான் ஆவான். இவனது தந்தை ஆகாரசூரன் என்னும் பெயருடைய மலையமான் ஆவான்.

இச்சேதிராயன் தன் மகள் ஆளவந்தாள் என்பவளை இராமன் சூரியனான இராசேந்திர சோழ மலைய குலராயன் என்பவனுக்கு மணம் செய்து கொடுத்தான். இவன் சித்தலிங்க மடம் கல்வெட்டில் ஒரு அரசு அதிகாரியாகக் குறிக்கப்படுகிறான்.

இச்சேதிராயன் சிறந்த சிவபக்தன் ஆவான். இவன் சிவன் கோயில்களுக்கும் திருமால் கோயிலுக்கும் வேறுபாடின்றி பல அறக்கட்டளைகள் ஏற்படுத்தியுள்ளான். இவன் கி. பி. 1115-இல் நெய்வணையிலுள்ள பொற்குடம் கொண்ட பெரியநாயனார் கோயிலில் நடராசப் பெருமானின் திருமேனியை நிறுவி நிவேதனங் களுக்கும் ஏற்பாடு செய்தான். கி பி. 1116-இல் அறையணிநல்லூர் ஒப்பொருவருமில்லா நாயனார் கோயிலில் ஆலமர்ச் செல்வரின் திருமேனியை நிறுவி, தான் பிறந்த உத்தர நாளில் அமுது படைக்கவும், விளக்கு எரிக்கவும், தானம் வழங்கியமை கல்வெட்டால் புலனாகிறது.

விக்கிரமசோழச் சேதிராயன்

பெரிய உடையான் என்னும் அடைமொழியுடன் இவன் குறிக் கப்படுகிறான். விக்கிரமசோழன், அவன் மகன் இரண்டாம் குலோத்துங்கன் ஆகியோர் காலங்களில் இம்மலையன் ஆட்சிபுரிந் துள்ளான். இவனது பட்டத்தரசி உத்தமசோழி என்று குறிக்கப் படுகிறாள். இவருக்கு விக்கிரசோழன் கோவலராயன் என்ற மகன் உண்டு.

இச்சேதிராயன் கோவலூர் வீரட்டானத்துக்கு நந்தா விளக் கெரிக்கவும், நெய்வணை அம்மனுக்கு இறையிலியாகவும் நிலம் தான மாக வழங்கியுள்ளான்.

காடவர்கள்

இவர்கள் காலத்தில், குறிப்பாகக் கோப்பெருஞ்சிங்கன் ஆட்சிக் காலத்தில் கோயிற் கட்டடக் கலை சிறந்து விளங்கியது. கோயிலை மிகப்பெரிய அளவில் அமைத்து, பல்வேறு மண்டபங்களை எடுத்தும் உண்ணாழி, முகமண்டபப் பகுதிகளில் மூன்று எண்பட்டைத் தூண்களை இணைத்துக் கூட்டுத் தூண்களாக அமைத்துள்ளது இவர்களுக்கே உரிய சிறப்பாகும், கோயில் தேவ கோட்டத்திற்கு எதிரில் (தட்சிணாமூர்த்தி) கோட்ட மண்டபம் அமைக்கும் பணி இவர்களுக்கே உரியதாகும். இதற்கு எடுத்துக்காட்டாகச் சேந்த மங்கலம் ஆபத்சகாயேச்சுரர் கோயில் அமைந்துள்ளது.

சிற்பங்கள்

இக்கோயிலில் நந்தி, இலிங்கோத்பவர், விநாயகர், தட்சிணா மூர்த்தி, பிரம்மா, உமா மகேஸ்வரர், சண்டிகேஸ்வரர், பைரவர், சூரியன் ஆகிய சிற்பங்கள் உள்ளன. நாச்சியார் சிற்பமும் மிகவும் அழகு வாய்ந்ததாகும். இவர்கள் காலத்தில் துர்க்கைக்குத் தனியாகக் கோயில் எடுக்கப்பெற்றுள்ளது. சம்புவராயர், விசயநகர், செஞ்சி சிங்குகள் ஆகியோர் ஆட்சியின் பொழுதும் சிற்பக் கலை சிறந்து உள்ளது.

சம்புவராயர்

கோலியனூர், திருவாலீசுவரமுடையார் கோயில், தேவ கோட்டங்களை அழகு செய்கின்ற வினாயகர், தட்சிணாமூர்த்தி, திருமால், பிரம்மா, துர்க்கை ஆகிய சிற்பங்கள் சம்புவராயர் கலைப் பாணிக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. திருவக்கரை கோயிலில் எடுக்கப் பெற்றுள்ள சம்புவராயர் காலத்தைச் சார்ந்த மண்டபச் சிற்பங்களும் அழகு வாய்ந்தவை. கண்டாச்சிபுரம், திருவிராமேசுவரமுடையார் கோயிலில் உள்ள நந்தியின் சிற்பமும், தேவனூர் திருநாகீசுவரமுடைய நாயனார் கோயில் சிற்பங்கள், திருவாமாத்தூர் முத்தை வென்ற முறுவல் நாச்சியார் கோயில் சிற்பங்கள் மற்றும் மாரங்கியூர் கோயிலில் உள்ள சிற்பங்களும் சம்புவராயர் காலத்தைச் சார்ந்தவைகளாகும்.

** திரு. மா. சந்திரமூர்த்தி அவர்களால் ஆய்வு செய்யப்பட்டது.
(ப. 133)

அரிய கல்வெட்டுகள்

கல்வெட்டின் வரலாறு

இம்மாவட்டத்தில் கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 18 ஆம் நூற்றாண்டு வரையிலான கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இக்கல்வெட்டுகளில் மிகவும் பழமையானவை தமிழிக் கல்வெட்டு களாகும். இவை ஜம்பை, தொண்டூர் ஆகிய ஊர்களிலிருந்து கண்டுபிடிக்கப் பெற்றுள்ளன.

இதனை அடுத்துத் தமிழி எழுத்திலிருந்து வட்டெழுத்து வளர்ச்சி பெற்றதனை விளக்குகின்ற வகையில் பெருமுக்கல், நெகனூர்ப்பட்டி, திருநாதர்குன்று ஆகிய இடங்களில் உள்ள வட்டெழுத்துக் கல்வெட்டுகள் அமைந்துள்ளன.

பல்லவர்கள் காலத்தில் வடமொழி சிறந்து விளங்கியுள்ளதை விளக்கும் வகையில் அமைந்தவை இம்மாவட்டத்திலுள்ள முதலாம் மகேந்திரவர்மனின் மண்டகப்பட்டு கல்வெட்டு, இராஜசிம்மனின் பனைமலை, தாளகிரீஸ்வரர் கோயிலின் கீழ்ப்பகுதியில் உள்ள குகை யில் பொறிக்கப்பட்டுள்ள வடமொழிக் கல்வெட்டுகள் ஆகியவை யாகும்.

இவர்கள் காலத்தில் தமிழ்க் கல்வெட்டுகளும் பொறிக்கப் பட்டுள்ளன என்பதற்கு உதாரணமாக அண்மையில் எண்ணாயிரத் திற்கு வடமேற்கே அமைந்துள்ள மேல்கூடலூர் மலையில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ள பல்லவ மன்னன் நிருபதுங்கனின் கல்வெட் டையும், ஆனாங்கூரில் கிடைத்துள்ள தெள்ளாற்றெறிந்த நந்தி போத்தரையனின் கல்வெட்டுகள் ஆகியவைகளையும் கூறலாம்.

இம்மாவட்டத்தில் சோழர்களின் கல்வெட்டுகள் விசயாலயன் காலந்தொட்டுக் கிடைக்கின்றன. எண்ணாயிரத்திற்கு வடமேற்கே அமைந்துள்ள மேல்கூடலூர் மலையில் இருந்து கோப்பரகேசரி பன்மரின் கல்வெட்டு ஒன்று கண்டுபிடிக்கப்பெற்றுள்ளது. கல்வெட் டின் எழுத்தமைதியைக் கொண்டு, இக்கல்வெட்டு தஞ்சை கொண்ட கோப்பரகேசரியான விசயாலயன் காலத்தது என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை.

இதே இடத்திலிருந்து முதலாம் பராந்தகனின் கல்வெட்டுகள் மூன்று கண்டறியப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுகள் பாண்டிச்சேரி வரலாற்றுப் பேரவையினரால் கண்டறியப்பட்டதாகும்.

எண்ணாயிரத்தில் உள்ள சப்தமாதர்கள் கோயிலுக்கு அருகில் ஒரு பலகைக்கல்லில் முதலாம் இராசராசன் கல்வெட்டு பொறிக்கப் பட்டுள்ளது. இக்கல்வெட்டு இப்பகுதியின் வரலாற்று முக்கியத் துவத்தை அறிந்து கொள்ள பெரிதும் உதவுகிறது. இக்கல்வெட்டு மத்திய அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை கல்வெட்டுப்பிரிவில் பணியாற்றும் திரு. எஸ். இராசவேலு அவர்களால் கண்டறியப் பட்டதாகும்.

இம்மாவட்டத்தில் ஒரு சில பாடல் கல்வெட்டுகளும் கிடைத் துள்ளன. திருக்கோயிலூர், வீரட்டானேசுவரர் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள முதலாம் இராசராசனின் பாடல் கல்வெட்டு சிறப்புடையதாகும்

திருக்கோயிலூருக்கு அருகில் உள்ள சோழ பாண்டியபுரம் ஆண்டிமலையில் மற்றுமொரு பாடல் கல்வெட்டுப் பொறிக்கப் பட்டுள்ளது.

எண்ணாயிரத்தைச் சார்ந்த கவிகாளமேகத்தைக் குறிப்பதாகக் கூறப்படும் பாடல் கல்வெட்டு ஒன்று காஞ்சி காமாட்சியம்மன் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளது.

திருக்கோயிலூர் வட்டத்தில் அமைந்துள்ள எரளூலிருந்து கிளியூர் மலையமான் கல்வெட்டு ஒன்றும் அண்மையில் இந்நூல் ஆசிரியரால் கண்டு பிடிக்கப்பெற்றுள்ளது.

இது தவிர பாண்டியர், காடவராயர், சம்புவராயர், விசயநகர், நாயக்கர், மராட்டியர் காலத்தைச் சார்ந்த கல்வெட்டுகளும் இம்மாவட்டத்தில் காணக்கிடக்கின்றன.

இம்மாவட்டத்தில் உள்ள ஏரிகளின் மதகுகளில் பொறிக்கப் பட்டுள்ள சில முக்கிய கல்வெட்டுகளின் குறிப்புகள் மட்டும் இந் நூலில் ஏரிகள் என்ற தலைப்பில் கொடுக்கப்பெற்றுள்ளன.

தமிழிக் கல்வெட்டுக்கள்

ஜம்பைக் கல்வெட்டு:

"சதியபுதோ அதியமாந்
நெடுமானஞ்சி ஈத்த பாழி"

சதிய புத்திரனான அதியமான் நெடுமானஞ்சி என்பவன் இப்பாழி (பள்ளி) அளித்ததை இக்கல்வெட்டுக் குறிக்கிறது.

காலம் : கி.மு. 3-ஆம் நூற்றாண்டு

கண்டுபிடித்தவர்: திரு. கா. செல்வராசு

(பக்கம் 104 பார்க்க)

தொண்டூர்க் கல்வெட்டு

"ஸங்காயிபன் ஏவ அகள் ஊரறம்
மோசி செயித அதிடானம்"

ஸங்காயிபன் என்னும் துறவியின் ஏவலின்படி அகள் ஊரைச் சார்ந்த அறம் மோசி என்பவர் படுக்கைகளைச் செய்வித்துள்ளதைக் கல்வெட்டுக் குறிக்கிறது.

கண்டுபிடித்தவர் : திரு. மா. சந்திரமூர்த்தி

(பக்கம் 103 பார்க்க)

வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள்

நெகனூர்ப்பட்டிக் கல்வெட்டு

இம்மாவட்டத்தில், செஞ்சிவட்டத்தில் செஞ்சி - அவியூர் சாலையில் நெகனூர்ப்பட்டி அமைந்துள்ளது. இவ்வூரின் மேற்கே 'அருக்கங்கல்' என்றழைக்கப்படும் சிறு குன்று உள்ளது. இங்குள்ள பாறையின் குகைத்தளத்து முகப்பின் மேற்கு நெற்றியில் செவ்வகக் கட்டத்தில் நான்கு வரிகளில் வட்டெழுத்துக் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது.

"பெரும் பொதன்
செக்கந்தி தாயியரு
செக்கந் திணண் செ
யிவித்த பள்ளி"

பெரும் பொதன் செக்கந்தி தாயியரு செக்கந்திணன் என்பவன் இப்பள்ளியைச் செய்வித்ததைக் கல்வெட்டு குறிக்கிறது.

இக்கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டு இது கி.பி. 3 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியைச் சார்ந்ததாகக் கொள்ளலாம். எழுத்தமைதியில் அரச்சலூர்க் கல்வெட்டுக்குப் பிற்பட்டதாகவும் திருநாதர்குன்றுக் கல்வெட்டுக்கு முற்பட்டதாகவும் உள்ளது.

திருநாதர் குன்றுக்கல்வெட்டு

''ஐம்பத் தேழன
சனந் நோற்ற
சந்திர நந்தி ஆ
சரிகர் நிசீதிகை

சந்திரநந்தி என்னும் சமணப் பெரியார் 57 நாட்கள் உண்ணா நோன்பு இருந்து உயிர் நீத்ததைக் குறிக்கிறது.

காலம் : கி.பி. 6—7-ஆம் நூற்றாண்டு

கண்டுபிடித்தவர் : திரு. கோபிநாதராவ்

(பக்கம் : 107)

பெருமுக்கல் கல்வெட்டு

திண்டிவனம்-மரக்காணம் நெடுஞ்சாலையில் திண்டிவனத்திலிருந்து 11 கி.மீ. தூரத்தில் பெருமுக்கல் கிராமம் உள்ளது. இங்கு மலைக்கோயில் உள்ளது. மலைக்கோயிலுக்கு மேலே செல்லும் வழியில் கிழக்குப் புறத்தே உள்ள ஒரு குகையில் கீரல் உருவங்கள் உள்ளன. அவற்றிற்கிடையே வட்டெழுத்துக் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது.

''பொந்சரன்''

பொந்சரன் என்பது ஒருவரின் பெயராக இருக்கலாம்.

இக்கல்வெட்டின் எழுத்தமைதியைப் பார்க்கும் பொழுது இது கி.பி. 6-7 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கொள்ளலாம்.

கண்டுப்பிடித்தவர்கள் : திருமதி வசந்தகல்யாணி
மே. சீனிவாசன்

வடமொழிக் கல்வெட்டுகள்

மண்டகப்பட்டு முதலாம் மகேந்திரவர்மன் கல்வெட்டு

ஏதத் அனிஷ்டகம் அத்ருமம் அலோகம்
அஸுதம் விசித்ரசித்தேதன
நிர்மாபிதம் ந்ருபேண
ப்ரும்மேஸ்வர விஷ்ணு லக்ஷிதாயதனம்

(பக்கம் : 10)

பனைமலை இராஜசிம்மன் கல்வெட்டு

ராஜஸிம்ஹோ ரணஜய:
ஸ்ரீ பரஸ் சித்ர கார்முக:
ஏகவீர ஸ்சிரம் பாது
சிவ சூடாமணி; மஹீம்

(பக்கம்: 13)

ஆனாங்கூர் கல்வெட்டு

1 ஸ்ரீ தெள்ளாற் றெறிந்த நந்தி பொத்த
2 ரையர்க்கு யாண்டு பந்நிரண்டாவது நய
3 தீரப் பல்லவரையர் தெவியார் மாரத்தி
4 யார் ஆனாங்கூர் மஹாதேவர்க்கு நந்
5 தா விளக்கெரிப்பதற்குக் குடுத்த பொ
6 ன் இருபத்துநாற்கழஞ்சு இ
7 தன் பலிசெயால் நாள் வாய்
8 உரிய் நெய் அட்டிப்பதற்கு அ
9 மைந்தொம் [காக்க]ச் சொமாசியார் ம
10 கன் திருவடி ஏம்ம [. . ம] நாராயணப் பூதி
11 சர்ம்மனும் சுத் . வாய் வடுகன்
12 மகன் பி . . . .

கல்வெட்டுச் செய்தி


கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த பல்லவ மன்னன் தெள்ளாறு எறிந்த நந்திவர்மனின் கல்வெட்டொன்று தனிப் பலகைக்கல்லில் ஆனாங்கூரின் கரும்படி வாய்க்காலில் கிடைத்துள்ளது.

இம்மன்னனின் 12-ஆவது ஆட்சியாண்டில் அவனது தேவியார் ஆனாங்கூர் இறைவனுக்கு நந்தா விளக்கு எரிப்பதற்கு 24 கழஞ்சு பொன் பரிசாக அளித்துள்ளார். இதன்மூலம் கிடைக்கின்ற வருவாயினை வைத்துக் கொண்டு நாள் தோறும் உழக்கு நெய் கோயிலுக்கு அளிப்பதற்குச் சோமாசியார் மகன் திருவடி ஏம நாராயணப்பூதி சர்மனும் வடுகன் மகன் ஒருவனும் நியமிக்கப் பட்டதை இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது.


எண்ணாயிரம் முதலாம் இராசராசன் கல்வெட்டு

1 ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் போலப் பெரு
2 நிலச் செல்வியுந் தனக்கே உரிமை
3 பூண்டமை மனக்கொளக் காந்தளூர்
4 சாலை கலமருத்தருளி வேங்கை
5 நாடுங் கெங்கபாடியு நுளம்ப
6 பாடியுங் தடிகைப்பாடியுந் குடம
7 லை நாடுங் கொல்லமுங் கலிங்கமு
8 ம் எண்டிசை புகழ்தர ஈழ ம
9 ண்டலமும் இரட்டை டாடியப் ஏழரை
10 இலக்கமுங் திண்டிரல் வென்றித் த
11 ண்டாற் கொண்ட தன்னெழில் வள
12 ர் உளழியுள் எல்லா யாண்டுங் தொ
13 முதக விளங்கும் யாண்டேய் செ
14 ழியரைத் தேசுகொள் ஸ்ரீ கோரா
15 ஜ கேசரி வர்மரான ஸ்ரீ ராஜராஜ
16 தேவர்க்கு யாண்டு 23-வது நா
17 ள் 67 ஜெயங் கொண்ட சோழ ம
18 ண்டலத்து பிரம்ம தேயம் தனி
19 யூர் ஸ்ரீராஜராஜ சதுர்வேதி மங்
20 கலத்து இவ்வாட்டைச் சிங்க நா
21 யறு முதல் சம்வத்சரம் ஸ்ரம கார்ய


22 திருத்துகின்ற நூற்றிருபதின்மர்
23 கூட்டப் பெருமக்களோம் இற்றை நா
24 ளால் நம் பிரம்ம ஸ்தானத்து ஸ்ரீ
25 ராஜராஜன் தண்ணீர்ப் பந்தலிலே
26 கூட்டமால் இருந்து நம்மையுடைய ச
27 க்ரவத்தி உடையார் ஸ்ரீ ராஜராஜ
28 தேவர் திருவாய் மொழிந்தருள நம்மூ
29 ர் பரிபாலிக்கின்ற சிறுதனத்துப்
30 பெருந்தரம் சோழ மண்டலத்து அ
31 ரு மொழி தேவர் வளநாட்டு மங்கல நாட்
32 டு புதுக்குடை புதுக்குடியான்
33 கூவாகன் வேளான் ஆரூரன்
34 ருக்கப் பணித்த வெழுத்து நம்மூர்
35 சப்த மாத்திருக்களுக்குத் திருநொந்தா
36 விளக்கு ஒன்றுக்கும் சந்தி விளக்
37 கு ஒருபொழுது ஒன்றுக்கும் சந்திரா
38 தித்தவல் சாவாமூவாப் பேராடுக்
39 கு இவ்வூர் வடகீழ் சோமன்
40 மோடவியும் கடம்பூர் நாகந்தை
41 யும் ஆக இவ்வூரவர் வசமும்
42 நொந்தா விளக்கு ஒன்றுக்கு ஆட
43 றுபதும் சந்தி விளக்கு ஒன்றுக்கு ஒரு பொழு
44 து ஒன்றுக்கு ஆடு எட்டும் ஆக ஆ
45 டு அறுபத் தெட்டுங் கொண்ட இவ்வூ
46 ர் இராஜராஜ சோழியோ டொக்கும்
47 உழக்கால் நித்தபடி உழக்கேய்
48 செவிடரை நெய்யும் சந்திராதித்தவ
49 ல் சப்தமாத்திருக்களை ஆராதன படி
50 வார் வசம் அட்டக் கடவார்கள் ஆகவும்
51 இந்நெய் முன்பு நின்று அட்டாது
52 போகில் இந்நெய் நித்தல் படி
53 அடுவதற்கு புணை இச்சேரி ம
54 ன்றாடி கடம்பூரன் குணவனும் ம
55 லையர் மாதேவனும் இவ்விருவரு
56 ம் புணை ஆக இப்பரிசு பணித்து சி
57 லா லேகை செய்வித்தோம் நூற்றி




தமிழி கல்வெட்டு, ஜம்பை, காலம் : கி.மு. 3-ஆம் நூற்றாண்டு, பக்கம் : 104.



பொந்சரன், வட்டெழுத்துக் கல்வெட்டு, பெருமுக்கல்,
காலம் : கி.பி. 6-7 ஆம் நூற்றாண்டு



செப்பேடு, எசாலம், காலம் : கி.பி. 11-ஆம் நூற்றாண்டு.



ரோமானியர் காசு, திருக்கோயிலூர், காலம் : கி.பி. 1-2-ஆம் நூற்றாண்டு.

58 ருபதி
59 ன்மர்
60 கூட்ட
61 ப் பெ
62 ருமக்க
63 ளோம்
64 பணித்
65 . . . .
66 சோழ
67 மகா
68 தேவிச்
69 சேரி ம
70 ணலு
71 அஞ்சா
72 ன் கண்ட
73 னாகப்
74 னை யா
75 ள் ஸ்ரீ
76 சோழ கு
77 லசுந்தர
78 ச்சேரி ம
79 த்யஸ்த
80 ன் . . யகய்ய
81 ன் பட்ட
82 னான எ
83 ண்ணா
84 யிரபிர
85 ம்மபுரிய
86 ன் னெழு
87 த்து.

[பக்கம் 21]

கல்வெட்டுச் செய்தி

முதலாம் இராசராசன் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டு. இம்மன்னனின் 23 - ஆம் ஆட்சியாண்டில் (கி. பி. 1008) இராசராச சதுர்வேதிமங்கலத்தில் சம்வத்சரகாரியம் செய்கின்ற நூற்றுபதின்மர், அவ்வூர் பிரம்மஸ்தானத்திலுள்ள ஸ்ரீ ராசராசன் தண்ணீர்ப்பந்தல் என்ற இடத்திலே கூடியிருந்து, மன்னனிடமிருந்து வந்த ஆணையைச் செயல்படுத்துவது பற்றிப் பேசியதைத் தெரிவிக்கிறது இக்கல்வெட்டு. மன்னனின் ஆணையை இவ்வூருக்குக் கொண்டுவந்து ஊர்க்காரியம் செய்கின்ற நூற்றுப்பதின்மரை பணித்தவன் கூவாகன் வேளான் ஆருரன் என்பவன். இவன் சோழ மண்டலத்தைச் சேர்ந்த அருமொழி தேவவளநாட்டு புதுக்குடியைச் சேர்ந்தவன். இவன் இராசராச சதுர்வேதிமங்கலத்தைப் பரிபாலிக்கின்றவன். அவன் சிறுதனத்துப் பெருந்தரம் என்ற பதவியை வகித்தான். ஸ்ரீ ராசராச சதுர்வேதிமங்கலத்திலுள்ள சப்தமாதர்களுக்கு திருநொந்தாவிளக்கு ஒன்றும், சந்தி விளக்கு ஒன்றும் எரிப்பதற்கு ஆடு கொடுக்கப்பட்டிருந்தது. நொந்தா விளக்கெரிக்க ஆடு அறுபதும் சந்தி விளக்கெரிக்க ஆடு எட்டும் கொடுக்கப் பட்டிருந்தன. இவ்வாடுகளை அவ்வூரைச் சேர்ந்த சோமன் மோடவி, கடம்பூர் நாகந்தை ஆகிய இருவர் வசமும் கொடுத்து நித்தம் உழக்கேய் செவிடரை நெய் கொடுக்க ஏற்பாடு செய்து அதுகொண்டு

சப்தமாதர்களை ஆராதிக்கும்படி பணிக்கப்பட்டது. இவ்வாறு நித்தம் நெய் அட்டுவதற்குப் புணையாக இருவர் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்களின் பெயர்கள்: மன்றாடி கடம்பூரன் குணவன், மலையூர் மாதேவன். இவ்வூர் மத்தியஸ்தன் இறுதியில் கையெழுத்திட்ட செய்தியும் காணப்படுகிறது.

எரஞூர் கிளியூர் மலையமான் கல்வெட்டு

இம்மாவட்டம், திருக்கோயிலூர் வட்டத்தில் பெண்ணையாற்றின் தென்கரையில் இவ்வூர் அமைந்துள்ளது. இங்குள்ள திரௌபதி அம்மன் கோயில் நுழைவாயிலின் தென்பக்கம் வினாயகரின் சந்நிதி உள்ளது இதன் முன்தரையில் பாவப்பட்டுள்ள பலகைக் கல்லில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு:

ஸ்ரீ கிளியூர் மலையமான் மலையன்
பெரிய உடையான் பேரால் செய்
வித்தான் பெரிய உடையான்
அத்திமல்லன் குலோத்துங்க
சோழச் சேதியராயன்"

இங்குள்ள விநாயகர் சிற்பத்தினைக் கிளியூர் மலையமான், மலையன் பெரிய உடையான் பேரால், பெரிய உடையான் அத்திமல்லன் குலோத்துங்கச் சோழச் சேதிராயன் என்பவன் செய்வித்ததை இக்கல்வெட்டு குறிக்கிறது. விநாயகரின் சிற்ப அமைதியும் இது கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக அமைந்து இக்கருத்துக்கு வலுவூட்டுகிறது.

குலோத்துங்க சோழச் சேதிராயன் கல்வெட்டுகள்

விக்கிரமச் சோழ சேதிராயனுக்குபின் குலோத்துங்க சோழச் சேதிராயன், பெரியான், பெரிய உடையான் எனும் பட்டத்துடன் சிறப்பாக விளங்கினான். இவனது மகன் அத்திமல்லன் எதிரிலி சோழ வாணகோவரையன் என்பவனாவான். அவன் அறையணி நல்லூர், ஒப்பொருவருமில்லா நாயனார் கோயில் பள்ளியறை நாச்சியாரைச் செய்தளித்துள்ளான். தனியே கற்றளி ஒன்றும் எடுப்பித்துள்ளான். இங்குள்ள சிவன், மெருமாள் கோயில்களுக்கு இவனும் நிலக்கொடைகள் அளித்துள்ளான். கோயில் திருவிழாக்களுக்குக் கட்டளை ஏற்படுத்தி நன்றாக நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்துள்ளதைக் கல்வெட்டுகள் குறிக்கின்றன.

DEPARTMENT OF ARCHAEOLOGY
9438
LIBRARY,
MADRAS 28.

ஓவியங்கள்

நெகனூர்ப்பட்டி ஓவியங்கள்

சென்ஞி-அவியூர் சாலையில் நெகனூர் செல்லும் வழியில் 6 கி. மீ. தொலைவில் நெகனூர்ப்பட்டி அமைந்துள்ளது. இவ்வூரின் மேற்கே அருக்கங்கல் என்றழைக்கப்படும் சிறு குன்று உள்ளது. இக்குன்றின் கீழ்ப்பகுதியில் தரையை ஒட்டி $\frac{1}{2}$ மீ. உயரத்தில் குகைத்தளம் அமைந்துள்ளது. இப்பாறையின் தரைப்பகுதி படுக்கை போன்று சமமாகச் செதுக்கப்பட்டுள்ளது. படுக்கைக்கு மேலுள்ள சரிவான விதானத்தில் வெள்ளைக் கோட்டுருவங்கள் தீட்டப்பட்டுள்ளன. இங்குக் கிழக்கு மேற்காக ஐந்து உருவங்கள் நின்ற நிலையில் காணப்படுகின்றன. இவற்றிற்கு வடக்கில் மற்றொரு கோட்டுருவம் அமர்ந்த நிலையில் காட்டப்பட்டுள்ளது. ஐந்து கோட்டுருவங்களில் மூன்று வடதிசை நோக்கி விரைந்து செல்வது போல் காணப்படுகின்றன. இவற்றின் கைகள் மேலே தூக்கி விரிந்த நிலையிலும், கீழே விரித்துத் தொங்கவிட்ட நிலையிலும் காணப்படுகின்றன.

மேற்திசையிலுள்ள உருவம் இடதுகையில் வாளும் வலது கையில் கேடயமும் பற்றிய நிலையிலுள்ளது. இதன் தலைமுடி பின்புறம் காற்றில் பறப்பது போன்று நீண்டுள்ளது. இங்குள்ள உருவங்களின் கால்களைக் காட்டும்போதெல்லாம் இடுப்புக்குக் கீழே நடுவே செங்குத்துக் கோடு காணப்படுகிறது. இது இடைக் கச்சையிலிருந்து வெளிப்பட்டுச் செல்லும் ஆடைக்கட்டாக இருக்கலாம். இங்குள்ள ஐந்து உருவங்களில் நடுவிலுள்ள பெரிய உருவத்தின் இடையிலுள்ள கச்சை விரிந்து காணப்படுவது மேற் சொன்ன கருத்தை உறுதிப்படுத்துகிறது. இங்குள்ள உருவங்கள் பெரும்பாலும் தலையுடனும், ஒரு சில தலை இல்லாமலும் காணப் படுகின்றன.

இக்குகைத்தளத்தின் வடமேற்குப் பகுதியில் மற்றொரு படுக் கைப் பகுதியைக் காணலாம். இங்குள்ள விதானத்தில் சதுரக் கட்டங்களும், சதுர வடிவ மனித உருவங்களும் தீட்டப்பட்டுள்ளன. நான்கு புள்ளிகள் வைத்துச் சதுரக் கோலம் போட்டது போன்று உள்ளது. ஆனால் புள்ளியின்றிக் காணப்படும் கோடுகள் உள்ளன.

இந்த இடத்தில் நான்காவதாக உள்ள ஓவியம் குறிப்பிடத்தக்கது. 'ப' வடிவில் உள்ள திரிசூலம் போன்று இக்கோட்டு ஓவியம் வெள்ளை வண்ணத்தில் உள்ளது. இன்றும் இதுபோன்ற ஓவியத்தை இப்பகுதிவாழ் மக்கள் காலரா போன்ற தொற்று நோய்கள் பரவும் போது அவற்றைத் தடுத்து நிறுத்த வீட்டின் முன்புறம் அல்லது சுவரில் வரைவதையும் பொங்கல் திருநாளின் மறுநாள் மாட்டுச் சாணத்தில் இந்தக் குறியீடுகளை வீடுகளில் தீட்டுவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளனர். பொது மக்களின் நம்பிக்கையை வெளிப்படுத்தும் இதுபோன்ற ஓவியங்கள் பெருங்கற்காலம் முதல் தொடர்ந்து இன்றுவரை இருந்துவருவது பண்டையப் பண்பாட்டுக் கூறுகளை அடையாளங் காண உதவுகிறது. இவ்வோவியங்கள் பெருங்கற் பண்பாட்டுக் காலத்தைச் சார்ந்தவை.

நாயனூர் பெருங்கற்கால ஓவியங்கள்

திருக்கோயிலூர் வட்டத்தில் திருக்கோயிலூர்—வேட்டவலம் சாலையில் தேவனூரை அடுத்து நாயனூர் உள்ளது. இவ்வூரில் உள்ள அய்யனார் கோயிலுக்கு அருகில் உள்ள மலையின் பாறைகளில் பெருங்கற்கால ஓவியங்கள் செங்காவி வண்ணத்தில் தீட்டப்பெற்றுள்ளன.

ஆட்டின் உருவம் ஓவியமாகத் தீட்டப்பெற்றுள்ளது. இதனைக் காட்டுக் குறும்பாடு எனலாம். மிகப்பெரிய அளவில் இந்த ஆட்டின் உருவம் சிகப்பு வரிக்கோட்டில் வரையப்பட்டுள்ளது. நீண்ட உடல் வாகும், உடலுக்கு ஏற்ப கால்களும் அமைந்துள்ளன. முகத்தை முன்னுக்கு நீட்டி, விழிக்கண்மணி கருப்பாகவும். இதைச் சுற்றிய கண் பகுதி வெள்ளை வண்ணத்தில் வட்டமாகவும் தீட்டப் பெற்றுள்ளது. காதுகள் மேலே தூக்கிய நிலை; வால் குட்டையாகக் காட்டப்பட்டுள்ளது. இவ்வோவியம் மா. சந்திரமூர்த்தி அவர்களால் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

செப்பேடு

எசாலம்

1987-ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு திங்கள் 11-ஆம் நாள் விழுப்புரம் இராமசாமிப் படையாட்சியார் மாவட்டம், விழுப்புரம் வட்டத்தில் எசாலம் என்ற ஊரில் உள்ள இராமநாத ஈச்வரம் என்ற கோயிலில் திருப்பணியினை மேற்கொண்ட பொழுது ஒரு வளையத்தில் கோர்க்கப்பட்ட 15 செப்புத்தகடுகளும், செப்புத்திருமேனிகளும் (24) பூசைப்பாத்திரங்களும் கிடைத்தன.

பாதுகாப்புக் கருதி ஒரு குழிபறித்து அதில் ஆற்று மணலை நிரப்பி அம்மணலில் செப்புத்திருமேனிகளை முகம் கீழே பார்த்த நிலையில் வரிசையாக அடுக்கி அதன்மீது மணல் போட்டு மேலே ஒரு கல்லை வைத்து மூடியிருக்கின்றனர்.

இதைப்பற்றிய செய்தி தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. அப்பொழுது இத்துறையின் இயக்குநராகப் பணி ஆற்றிய டாக்டர்.இரா. நாகசாமி அவர்கள் தலைமையில் திரு. ஸ்ரீதரன் பதிவு அலுவலர் மற்றும் இத்துறை தொழில் நுட்ப அலுவலர்கள் அடங்கிய குழு ஒன்று மேற்கண்ட பொருள்களை ஆய்வு செய்தது.

முதலாம் இராசேந்திரனின் செப்பேடு

இச்செப்பேடு 15 தகடுகளைக் கொண்டது. ஒவ்வொரு தகடும் 34 செ.மீ. நீளமும், 16.5 செ.மீ. அகலமும் கொண்டது. இத்தகடுகள் அரச முத்திரையுடன் (இலச்சினை) கூடிய பெரிய வளையத்தில் கோர்க்கப்பட்டுள்ளது. ஒரு குடையின் கீழ் வில், புலி, இரண்டு மீன்கள், சாமரம், ஸ்வஸ்திகம், சக்கரம் ஆகியவை பொறிக்கப் பட்டுள்ளன. தனி அதிகாரம் பெற்ற முழு ராஜ்யத்திற்கும் சக்கர வர்த்தியாக விளங்கிய காரணத்தால் 'சக்கரம்' பொறிக்கப் பட்டுள்ளது போலும்.

முத்திரையின் விளிம்பில் கிரந்த எழுத்துகளில், சமஸ்கிருத மொழியில் இராசேந்திர சோழனின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செப்பேடும், மற்ற செப்பேடுகளைப் போன்று இரண்டு பகுதிகளாக வரையப்பட்டுள்ளது. முதல்பகுதி கிரந்த எழுத்துக்களில், சமஸ்கிருத மொழியிலும், இரண்டாம் பகுதி தமிழ் எழுத்துக்களில், தமிழ் மொழியிலும் பொறிக்கப்பட்டுள்ளன.

சமஸ்கிருதப் பகுதி 4 தகடுகளில் எழுதப்பெற்றுள்ளது. எஞ்சி உள்ள 11 தகடுகளில் தமிழில் பொறிக்கப்பட்டுள்ளது. அனைத்து தகடுகளிலும் இரண்டு பக்கங்களில் எழுதப் பெற்றுள்ளது. இராசேந்திர சோழனின் பட்டப் பெயர்களும், எய்தார் என்ற இடத்தில் இராமேஸ்வரர் கோயிலைச் சர்வசிவபண்டிதர் எடுப்பித்ததையும் குறிக்கிறது.

தமிழ்ப்பகுதி 344 வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. அரசன் காஞ்சிபுரத்தில் இருந்தபொழுது எந்த சூழ்நிலையில் இந்த அறக் கொடைக்கு ஆணை இட்டான் என்ற செய்தியினையும் குறிப்பிடுகிறது.

இந்தச் செப்பேட்டில் உள்ள தமிழ்ப் பகுதியின் அமைப்பு இதே மன்னனுடைய கரந்தைச் செப்பேட்டை ஒத்துள்ளது. தமிழ்ப்பகுதி "கோ நேரின்மை" கொண்டான் என்றே தொடங்குகிறது. இக்கொடை இவனுடைய 24ஆவது ஆட்சிளாண்டு 10 ஆவது நாள் கொடுக்கப்பட்டுள்ளது. இக்கொடை நாட்டார்க்கும் பிரமதேயக் கிழவர்கக்கும் மற்றும் தேவதானம், பள்ளிச் சந்தம், கணிமுற்றூட்டு வெட்டப்பேறு, சாலா போகம் உள்ளிட்ட ஊர்களில் உள்ளவருக்கும் நகரங்களில் உள்ளவருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது.

இதன் சமஸ்கிருப்பகுதியில் இராசேந்திர சோழனின் அருஞ் செயல்களுள் ஒன்றாகக் கங்கை கொண்ட சோழபுரத்தில் 'கங்கை கொண்ட சோழீச்வரம்" கோயிலைக் கட்டியதை இச்செப்பேடு குறிக்கிறது.

இந்த அறக்கொடை சயங்கொண்ட சோழ மண்டலத்து எயிற்கோட்டத்துநகரமான காஞ்சிபுரத்தில் உள்ள அரண்மனையின் குளிக்கும் இடத்தில் இருந்து கொண்டு கொடுக்கப்பட்டதாகக் குறிக்கப்படுகிறது.

பனையூர் நாட்டுத் தனியூரான ஸ்ரீராஜராஜச் சருப்பேதி மங்கலத்தில் உள்ள நிலம் அளக்கப் பெற்றது. அரசனின் 15-ஆவது ஆட்சியாண்டிலிருந்து நன்னாடு, எரப்பாக்கம் ஆகிய விக்கிரம

சோழ நல்லூர் ஆகிய ஊரைச் சேர்ந்த நிலங்களிலிருந்து 3400 கலம் நெல் நிரந்தர நில வரியாக வசூலிக்கப் பெற்று பனையூர் நாட்டு, இராஜராஜ சருப்பேதி மங்கலமான தனியூரான எய்தாரில் சர்வசிவபண்டிதர் கட்டிய கற்றளியான திருவீராமீஸ்வரம் கோயில் இறைவனுக்கு நித்திய வழிபாட்டிற்கான தேவதானமாக அளித்தது குறிக்கப்படுகிறது.

அரசனுடைய வாய்மொழி ஆணை இவனுடைய 24-ஆவது ஆட்சியாண்டு, 76-வது நாளில் இடப்பெற்றது. எல்லா விதிமுறை களும் நிறைவு செய்து, அரசு அதிகாரிகளின் இசைவுடன், அரசு ஆணையான 'திருமுகம்' வெளியிடப்பட்டது.

ஓலை எழுதும்
ஓலை நாயகம் நடுவிருக்கும்
கருமமாராயும்
புரவுவரித்திணைக்களம்
புரவுவரித்திணை
களத்துக்கண்காணி
வரிப்பொத்தகம்,
முகவெட்டி
வரிப்பொத்தகக் கணக்கு

பட்டோலை - ஆகிய அதிகாரிகள் சம்மதித்து இசைவு அளித் துள்ளனர்.

பின்னர் அரசின் வருவாய் அலுவலர்களைக் கொண்டு கொடை அளிக்கப்பட்ட நிலத்தின் எல்லைக் கற்கள் போடப்பட்டன.

இறுதியாக 25-ஆவது ஆட்சியாண்டு 55-ஆவது நாளில் கொடை அளிக்கப்பட்ட நிலத்தின் எல்லைகள் தெளிவாக எழுதப் பட்டுள்ளன. நிலத்தின் விவரம், தானம் கொடுக்கப் பெற்ற நிலத்தின் நான்கு எல்லைகள், கரந்தை செப்பேட்டில் கூறி உள்ள படி குறிக்கப்படுகின்றன.

இந்த அறக்கொடை நான்கு கட்டமாக நிறைதவற்றப் பட்டுள்ளது. முதல் கட்டமாக அரசனுடைய வாய்மொழி ஆணை. அலுவலக விதிமுறைப்படி ஆவணம் தயாரித்தலும், சரிபார்த்தலும். வருவாய் ஆவணத்தில் எழுதப்பெற்று அரசு அதிகாரியின் ஒப்புதலை பெறுதல்.

திருமுகம் வெளியிடுதல்; அதாவது அரசு ஆணை முத்திரையுடன் ஒரு அதிகாரி மூலம் தானம் கொடுக்கப்பட்ட நாட்டு நாட்டார் களுக்கு அனுப்புதலும் அதை அவர்கள் தலைவணங்கி ஏற்றுக் கொள்ளுதலும்.

கடைசி கட்டமாக, தானம் கொடுக்கப்பெற்ற நிலத்திற்கு, வருவாய்த்துறை அலுவலர்கள் உதவியுடன் நாட்டார் எல்லையைக் குறித்தல் ('அறை ஓலை' வெளியிடுதல்).

கொடை அளிக்கப்பட்ட நிலத்தின் எல்லைகளைக் குறிக்கும் ஆவணத்தில், முக்கிய அதிகாரிகளுக்கும் நாட்டார்களும், மற்ற ஊர்மக்களும் சாட்சிக் கையெழுத்திட்டுள்ளனர். அரசனின் 15-ஆவது ஆட்சியாண்டில் வெளியிட்ட வாய் மொழி ஆணை, 10 ஆண்டு களுக்குப் பிறகு 25-ஆவது ஆட்சியாண்டில் அனைத்து அரசு விதிமுறைகளும் நிறைவு செய்யப் பெற்று வெளியிடப்பட்டுள்ளது. எனவே இக்கோயில் இவனுடைய 15-ஆவது ஆட்சியாண்டிலே கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது புலப்படுகிறது (கி.பி. 1027).

கங்கைகொண்ட சோழபுரம் கோயிலை இராஜேந்திரன் கட்டினான் என்பதற்கு எந்தவித சான்றும் இதுவரை கிடைக்காமல் இருந்தது. ஆனால் இந்த செப்பேட்டில் கங்கை கொண்ட சோழ புரம் கோயிலைக் கட்டியவன் தானே என்று இராஜேந்திரன் எழுதி யிருப்பதிலிருந்து உண்மை வெளிப்படுகிறது.

கையாளப்பெற்ற நூல்கள்

1 Avvai. Natarajan, Dr. Kasinathan, Natana, M.A. — Art Panorama of Tamils

2 ஏகாம்பரநாதன், ஏ. முனைவர் 'தொண்டை மண்டலத்தில் சமணம்'

3 காசிநாதன், நடன. எம்.ஏ., 'காலச்சுவடுகள்'

4 கிருட்டிணமூர்த்தி, கோ. கல்வராயன் மலை மக்கள் (வரலாறு)

5 குப்புசாமி, சு. புலவர், பாகூர். 'மலையமான்கள்'

6 Gazetteer of the South Arcot District

7 சண்முகப்பிரகதம், கொடுமுடி. 'மலையமான் நாட்டுக் கல்வெட்டுக்கள்'

8 சந்தரமூர்த்தி, மா. முத்து எத்திராசன் புலவர். — குந்தவையின் கலைக்கோயில்கள்

9 சம்பத், கே. எஸ். 'தமிழகத்தில் பெருங்கற்கால ஓவியங்கள்' — தொல்லியல் ஆய்வுத் தொகுதி

10 சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'தேவாரம்'

11 சுந்தர சண்முகனார், புலவர், 'கெடிலக்கரை நாகரிகம்'

12 Srinivasachari, C.S. Rao Bahadur, 'A History of Gingee and its Rulers'

13 'சோமலெ' தென் ஆர்க்காடு மாவட்டம்

14 தங்கவேலு, கோ. தியாகராசன், இல. — சம்புவராயர் வரலாறு

15 நாகசாமி, இரா. முனைவர், 'திருக்கோயிலூர்ப் பாட்டு'

16 நீலகண்ட சாஸ்திரி, கே. ஏ. தமிழாக்கம் பெருமாள் முதலியார், மு. ரா. 'தென்னிந்திய வரலாறு'

17 பாலசுப்பிரமணியம், எஸ். ஆர். 'பேணு செந்தமிழ் வாழப் பிறந்த காடவன் கோப்பெருஞ்சிங்கன்'

18 Balasubramanyam, S.R.
1) Early Chola Art Part-I
2) Early Chola Temples
3) Middle Chola Temples
4) Late Chola Temples

19 பாஸ்கரத் தொண்டைமான், தொ. மு. 'வேங்கடம் முதல் குமரி வரை' டொன்னியின் மடியிலே

20 வேங்கடேசன், ந. புலவர், 'பல்லவன் கண்ட பனைமலைக் கோயில்'

கட்டுரைகள்

1 Kasinathan, Natana. 'Esalam Copper Plates of Rajendra Chola I, Kalvettu, No. 37

2 தாமரைக்கண்ணன், 'கிடங்கில் அன்பநாயக ஈசுவரர்' தமிழ் அரசி, 1993 பிப்ரவரி 28, மார்ச் 6

3 முத்துசாமி, கோ. 'ஆனாங்கூர் அகத்தீஸ்வரர் கோயில் — தமிழ் அரசி 1993-சூலை

4 Rajavelu, S. 'Ennayiram inscription of Rajaraja I' XVIII Annual Congress of the Epigraphical Society held at Thanjavur-*1992*

5 Rajavelu, S. 'New light on Ennayiram and its surroundings as cleaned from recent discoveries' presented in K.A.N. Sastri Birthday celebrations, Seminor held at Madras-*1993*

6 ஸ்ரீதரன், கி. பேரங்கியூர் திருமூலஸ்தானமுடையார் கோயில் கல்வெட்டு இதழ் எண் : 30

பிழைத்திருத்தம்

பிழை	திருத்தம்	பக்கம்
மிமாம்சம்	மீமாம்சம்	23
தட்சின	தட்சிண	30, 33
சண்டிகேஸ்வர்	சண்டிகேஸ்வரர்	36
தஷ்ணாமூர்த்தி	தக்ஷ்ணாமூர்த்தி	36
திருச்சூழல்	திருச்சாழல்	58
ஆளுநகராக	ஆளுநராக	60
வலது முன் கையில் சக்கரம்	வலது முன் கைஅபயம்	72
பின் கை அபயமும்	வலது பின் கையில் சக்கரம்	72
இடது முன் கையில் சங்கும்	இடது முன் கையினைத் தொடையின் மீது	72
இடது பின் கையினைத் தொடையின் மீது	இடது பின் கையில் சங்கும்	72
கி பி. 9—10	கி. பி. 9	94
கி. பி. முதல்	கி. மு. மூன்றாம்	104
அருக்கங்கல்	அடுக்கங்கல்	144, 151
சதியபுதோ அதியமாந்	சதியபுதோ அதியந்	144